கனவுகளைப் பாதுகாத்தலும் வாழ்க்கையை மேம்படுத்தலும்



வருடாந்த அறிக்கை **2020**

HDFC BANK
The Bank for your Home

இலங்கை HDFC வங்கி

வாழ்க்கையின்
இடைவிடாத
சவால்களுக்கு மத்தியில்,
எமது வாடிக்கையாளர்களுடன்
மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக,
அவர்களின் ஆசைகளை நிறைவேற்றுவதிலும்,
வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் துணை
நிற்கின்றோம். தற்போது, நாம், நிலைமாற்றமடைந்து வரும்
பயணத்தை நோக்கி வந்திருப்பதனால், வாடிக்கையாளர்களின்
எதிர்பார்ப்புகள், கைத்தொழில் துறையின் மாற்றங்கள்
என்பவற்றுக்கு அமைவாக, பல்வேறுபட்ட வாய்ப்புகளையும்,
புதுமையான தொழில்நுட்பங்களையும் தழுவியிருக்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களைத்
தொடர்ந்து பாதுகாப்பதையும், அவர்களின் எதிர்பார்ப்புகளை
மேம்படுத்துவதையும் உறுதிப்படுத்தும் வகையில், HDFC
வங்கி, தொடர்ந்தும் பன்முகப்படுத்தப்பட்ட நிதித் தீர்வுகளை
நன்கு பிரிக்கப்பட்ட போட்போலியோவைக் கட்டளையிடும்
நோக்கில் கட்டியெழுப்புகின்றது.

கனவுகளைப் பாதுகாத்தலும்
வாழ்க்கையை மேம்படுத்தலும்

உள்ளே



HDFC வங்கியின் 2020 ஆம் ஆண்டுக்கான
வருடாந்த அறிக்கையின் நிகழ்நிலை பதிப்புக்கு
https://www.hdfc.lk/

அட்டைப் படம் 1
அறிக்கை பற்றி 3
பொருள் 6
நிதிச் சுருக்கம் 8
செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள் 10

11 - 28
உபாய நூட்பக் கட்டமைப்பு

பணி, பணிநோக்கு மற்றும் பெறுமதிகள் 12
HDFC ஒரே பார்வையில் 13
எமது பயணம் 14
பெறுமதி சேர்க்கை மாதிரி 15
நிலைத்தன்மை மீதான கவனம் 18
பங்குதாரர் ஈடுபாடு 20
வியாபார அலகுகள் 22
கிளை விபரங்கள் 27
உபாய நுட்ப நோக்கு (2021-2025) 28

29 - 57
கூட்டுறவு செயன்முகமை

தலைவரின் செய்தி 30
பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளரின் கருத்து 34
பணிப்பாளர் சபை 38
கூட்டுறவு முகாமைத்துவம் 48
பிரிவுத் தலைவர்கள் 54
பிராந்திய மற்றும் கிளை முகாமையாளர்கள் 56

58 - 141
முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

செயற்பாட்டுச் சூழல் 59
மூலதன அறிக்கைகள்
- நிதி மூலதனம் 61
- சமூக மற்றும் தொடர்பாடல் மூலதனம் 65
- மனித மூலதனம் 73
- புலமைச் சொத்து மூலதனம் 81
- தயாரிக்கப்பட்ட மூலதனம் 84
- இயற்கை மூலதனம் 86

கூட்டுறவு ஆளுகை மற்றும் இடர்
- இணக்கம் தொடர்பான தலைவரின் கூற்று 88
- கூட்டுறவு ஆளுகை 89
- இடர் முகாமைத்துவ அறிக்கை 119

பணிப்பாளர்களின் அறிக்கை 124
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று 128
உள்ளகக் கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிமாழிக் கூற்று 130
கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிமாழிக் கூற்று 132
சபை உப குழு அறிக்கைகள் 134

142 - 191
நிதிக் கூற்றுகள்

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளரின் பொறுப்பு 143
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 145
வருமானக் கூற்று 152
விரிவான வருமானக் கூற்று 153
நிதிநிலைமைக் கூற்று 154
நிதிப் பாய்ச்சல் கூற்று 155
பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்று 156
கணக்கியல் கொள்கைகள் 157
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 167

192 - 202
துணைநிலைத் தகவல்கள்

நிதிக் கருவிகள் அளவீடு 193
மூலதன போதுமான தன்மை 195
ஐந்தொகையில் சீராக்கப்பட்ட இடர் இடர் வெளிப்பாடு - ரூபா 000' 196
பங்கீட்டுத் தகவல்கள் 198
பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்றுகள் 201
10 வருட சராம்சம் 202
கூட்டுறவுத் தகவல்கள் பின் உள் அட்டை

அறிக்கை பற்றி

முக்கிய நோக்கம் (Core Purpose)

முன்னைய ஆண்டின் அறிக்கைகளைப் போன்றே, 2020 ஆம் ஆண்டின் அறிக்கை, வங்கிச் செயற்பாடுகளுக்காக ஆக்கத் திறன் கொண்ட மூலதனத்தை ஒதுக்கீடு செய்வதில், விசேடமாக பங்குதாரர்களுக்கு உதவும் வகையில், அனைத்துப் பங்குதாரர்களுக்கும் விரிவான தகவல்களை இவ்வறிக்கை கொண்டுள்ள அதேவேளை, ஒருசீரான விரிவான அறிக்கையிடலை நோக்கமாகவும் கொண்டுள்ளது.

தற்போதைய ஒருங்கிணைந்த இவ்வறிக்கை, தரம் மற்றும் அளவீட்டு அடிப்படையில் விளக்கமான தகவல்களை வழங்குகின்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதோடு, நிதித் தகவல்ககள் 2020 ஆம் ஆண்டின் செயற்திறன் தொடர்பான வரலாறற்றுத் தரவுகளையும் உள்ளடக்குகிறது.

ஒருங்கிணைந்த அணுகுமுறை (Integrated Approach)

வங்கியின் அறிக்கையிடும் செயற்பாடு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் வங்கி பட்டியல் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. HDFC வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் 'தேசத்தை பாதுகாத்தல்' என்ற தலைப்புடன் 2010 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பித்தது. அப்போதிலிருந்து, வங்கி அதன் வருடாந்த அறிக்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனையை உள்வாங்கியுள்ளது. விசேடமாக, வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு அபிவிருத்தி தொடர்பான தகவல்களை வெளியிடுதல் மற்றும் தொடர்பாடலோடு முக்கியத்துவம் பெறுகிறது.

எல்லை மற்றும் வரையறை (Scope and Boundary)

ஜனவரி 01ஆந் திகதியில் இருந்து டிசம்பர் 31ஆந் திகதி வரை, 12 மாத காலப் பகுதியை உள்வாங்கிய இந்த வருடாந்த அறிக்கை, வங்கியின் நிதி மற்றும் நிதி அல்லாத செயற்பாடுகளை ஒருங்கிணைந்த மற்றும் ஒத்திசைவான வகையில் சமர்ப்பிக்கிறது. இவ்வறிக்கை, 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகளுக்கு மாத்திரம் கவனம் செலுத்தாது, எதிர்கால நோக்கு பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் தருகிறது. இவ்வறிக்கை, முக்கியமாக, பெறுமதி சேர்க்கை, செயற்பாட்டுச் செயற்திறன், வெளிப்புறச் சூழல், வங்கியின் ஆளுகை உட்பட இடர் முகாமைத்துவம் மற்றும் 2020 ஆம் ஆண்டின் நிதிச் செயற்திறன் ஆகியவற்றுக்கு முக்கிய கவனம் செலுத்துகிறது.

காலப் போக்கில், பங்குதாரர்களின் பெறுமதி உருவாக்கத்தைப் பாதிக்கும் முக்கியமான அம்சங்களை வங்கி இனங்கண்டுள்ளது. எனவே, அறிக்கையில் உள்ள தகவல்கள் இவ்விடயங்களுடனும், பங்குதாரர்களுடனும் நேரடியாகத் தொடர்புபடுகிறது.

2019 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக, கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக ஒரு முழுமையான நோக்கைத் தருகின்ற வகையில், மேலதிகத் தகவல்களை உள்ளடக்குவதற்கு வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், அறிக்கையிடலில் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பேணுகின்ற வகையில், வங்கி இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்ட முதலீடு தொடர்பான அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கிறது. கடந்த வருட அறிக்கையுடன் ஒப்பிடுகையில், வங்கி, அதே துறைகளில் விரிவான மற்றும் மேலதிகத் தரவுகளையும், தகவல்களையும், பொருத்தமான இடங்களில் வழங்கியிருக்கின்றது. இவை, மேலதிக அளவீட்டுத் தகவல் மற்றும் மனித மூலதனப் பிரிவில் இருக்கின்ற பகுப்பாய்வு என்பவற்றை உள்ளடக்கும்.

மூலதனங்கள் (The Capitals)

இவ்வறிக்கை வங்கி அதன் முக்கியமான மூலதனங்களை எவ்வாறு கையாள்கிறது என்பது தொடர்பான ஒரு ஒத்திசைவான கணக்கை வழங்குகிறது. இது, 'நிதி மூலதனங்கள்' என்ற தலைப்பின் கீழ் நிதிப் பெறுபேறுகளையும், அதனைத் தொடர்ந்து மனித மூலதனம், சமூக மற்றும் தொடர்பாடல் மூலதனம், புலமைச் சொத்து மூலதனம், தயாரிக்கப்பட்ட மற்றும் இயற்கை மூலதனம் என்பனவற்றின் கீழ் கணக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

தரவுறுதி (Quality Assurance)

ஒவ்வொரு வருடமும் HDFC வங்கி, பங்குதாரர்களிடம் இருந்து பெறப்படுகின்ற பின்னூட்டல்களைக் கருத்திற் கொள்வதன் மூலமும், அறிக்கையிடல் நடபடி முறைகள் தொடர்பான சிறந்த அறிவினைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக அறிக்கையின் தரத்தை உயர்த்துகிறது. இவ்வறிக்கை, தரப்பட்ட விபரங்களில் கவனம் செலுத்துவதுடன், எழுத்தாக்கம் மற்றும் வரைபட அம்சங்கள் ஆகிய இரண்டின் தரத்தினை மதிப்பீடு செய்வதிலும் கவனம் செலுத்தியுள்ளது.

தயாரித்தலுக்கான அடிப்படையும் வரையறையும் (Basis of Preparation and Scope)

இவ்வறிக்கை, பொருத்தமான சர்வதேச <IR> கட்டமைப்பின் எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், வங்கி, அறிக்கையைத் தயாரிப்பதிலும், அதன் நிதி உள்ளடக்கங்களிலும், பொருத்தமான நியதிச் சட்ட மற்றும் ஆளுகை ஒழுங்கு விதிகளுடன் இணங்கித் தயாரித்துள்ளது.

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கி என்ற அடிப்படையில், HDFC இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான வழிகாட்டிகள் மற்றும் நெறிமுறைகளினால் ஆளப்படுகின்றது. இதனைவிட, HDFC வங்கி, கீழே தரப்பட்டுள்ள ஆளுகை, இணக்கம் உட்பட இடர் அடிப்படையிலான கட்டமைப்புகள் மற்றும் ஒழுங்கு விதிகளையும் பின்பற்றியுள்ளது.

அறிக்கை பற்றி

1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிச் சட்டத்தின் கீழ் கம்பனி உருவாக்கப்பட்டு, அதன் செயற்பாடுகள் அச்சட்டத்தினால் ஆளப்படுகின்றன. இச்சட்டம், வங்கியை வீடமைப்பு சார்ந்த நிதித் தேவைகளை வழங்குவதங்கான ஒரு அதிகார சபையாக அங்கீகரித்துள்ளதோடு, வங்கி செயற்படும் எல்லைகளையும், வரையறைகளையும் உருவாக்குகின்றது.

பிரதான அறிக்கையிடும் கட்டமைப்பு (Principal Reporting Framework)

- சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் பேரவையின் (IIRC) சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பு
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையிடும் வழிகாட்டிகள்

நிதி அறிக்கையிடும் கட்டமைப்புகள் (Financial Reporting Frameworks)

1. இலங்கை கணக்கியல் நியமங்கள்
2. 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தமும்
3. 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
4. 2006 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி நடவடிக்கைகள் அறிக்கையிடல் சட்டம்
5. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்
6. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்

இணக்கம், ஆளுகை, இடர் வழிகாட்டிக் கட்டமைப்புகள் (Compliance, Governance and Risk Guiding Frameworks)

1. இலங்கையின் 1997 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டம் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 இலக்க திருத்தச் சட்டம்).
2. இலங்கை கணக்காய்வாளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணயங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை.
3. இலங்கை மத்திய வங்கியின் கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடுகள்.
4. உரிமமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்குப் பொருத்தமான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டி மற்றும் அதனையடுத்த திருத்தங்கள்.
5. Basel III மற்றும் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டியுடன் தொடர்புடைய திருத்தங்களினால் தேவைப்படுத்தப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகள்.
6. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல் படுத்தப்படும் விதிகள்.
7. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்.
8. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம், 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உள்ள பட்டியல்படுத்தப்படும் விதிகள்.

இணக்கம் (Compliance)

இங்கு தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தினால் சரிபார்க்கப் பட்டிருப்பதோடு, தர மற்றும் அளவீட்டு அடிப்படையிலான தகவல்களையும் வழங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. அத்தகைய தகவல்கள், தகவல்களின் சரியான தன்மை, நம்பகத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்திய, பொருத்தமான சிரேஷ்ட முகாமையாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் (Deriving Information)

இவ்வறிக்கையில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், உயர்மட்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவங்களிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் மூலம் ஒன்று திரட்டப்பட்டுள்ளது. அத்துடன், வங்கியின் அறிக்கைகள் மற்றும் பொருத்தமான ஆவணங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்திகள் மீதான தகவல்கள் மற்றும் வங்கித் துறை தொடர்பான தகவல்கள் என்பன இலங்கை மத்திய வங்கி மற்றும் சர்வதேச பொருளாதார மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நம்பகத்தன்மை வாய்ந்த வெளியக ஆவணங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்டது.

முன்நோக்கிய கூற்றுக்கள் (Forward-Looking Statements)

இவ்வறிக்கை வங்கியின் செயற்பாடுகள் மற்றும் நிதிப் பெறுபேறுகள் தொடர்பான பல முன்நோக்கிச் செல்லும் கூற்றுக்களை உள்ளடக்கி இருக்கிறது. அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கான உபாய நுட்பத் திட்டம் இதில் ஒரு வகையாகும். அது, எதிர்காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலக்குகள் மீது கவனம் செலுத்துகிறது. அத்தகைய கூற்றுகள் மற்றும் எதிர்வுகூறல்கள் தொடர்பான அம்சங்கள் எதிர்கால சூழ்நிலைகள் மீது தங்கியிருப்பதனால் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருக்கலாம். அத்தகைய நிச்சயமற்ற சூழ்நிலைகளும், செயற்பாடுகளும், பெறுபேறுகளை அடைவதற்கு வழிவகுக்கலாம் அல்லது கூற்றுகள் மற்றும் அவற்றின் வெளிப்படையதான மற்றும் அல்லது உட்கிடையான எதிர்பார்ப்புகளில் இருந்து விலகிச் செல்லலுக்கு வழிவகுக்கலாம்.

அத்தகைய முன்நோக்கிய கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் பெறுபேறுகள், வெளிப்புறக் காரணிகள் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அவை, பொருளாதார அடிப்படையிலான அபிவிருத்திகள், வட்டி விகிதங்கள், பரிமாற்ற விகிதங்கள், நிதிச் சந்தை விகிதங்கள், ஒழுங்குபடுத்தல் அம்சங்கள், மாற்றமடைகின்ற கைத்தொழில்துறை என்பவற்றை உள்ளடக்கும். கடன் வழங்குதல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பான இடர்கள் மற்றும் போட்டித்தன்மைக் காரணிகள் என்பனவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பெறுபேறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

தொற்று நோய்கள் மற்றும் எதிர்பாராமல் ஏற்படுகின்ற திடீர் மாற்றங்கள் போன்ற எதிர்பாராத காரணிகள், வங்கியின் செயற்பாடுகளிலும், வணிக நடவடிக்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இதன் காரணமாக, மாறுபடுகின்ற பெறுபேறுகளும், எதிர்பார்ப்புகளும், அத்தகைய முன்நோக்கிய கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, வங்கி கணக்காய்வாளர், அத்தகைய அனைத்து முன்நோக்கிய கூற்றுக்களையும் மீளாய்வு செய்யவில்லை.

அறிக்கையிடும் மொழி மூலங்கள் (Report Mediums)

வங்கியின் பங்குதாரர்கள் மற்றும் ஒட்டுமொத்த பங்குதாரர் குழுமங்களுடன் முதன்மை தொடர்பாடல் கருவியாக ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கை, சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை, அரசாங்க அமைச்சகங்கள் இடையே பங்கிடப்பட்டிருப்பதுடன், ஆங்கிலப் பிரதி இலகுவான அணுகலுக்காக HDFC யின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பின்னூட்டல்கள் (Feedback)

2020 ஆம் ஆண்டின் ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பை முன்னேற்றுவதற்கான தமது கருத்துக்களையும், அக்கறைகளையும், அனைவரிடம் இருந்து HDFC வரவேற்கின்றது. இவ்வறிக்கை தொடர்பான பின்னூட்டல்கள் பின்வருவனவற்றுக்கு அனுப்பி வைக்கப்படலாம்.

பிரதம நிதி அதிகாரி
அனுர ஹெட்டியராச்சி
மின்னஞ்சல் : anura.h@hdfc.lk
தொலைபேசி: +94 11 2356802, 2446241, 2447354

அறிக்கையை எமது நிறுவன வலைத்தளமான *https://www.hdfc.lk/pages/abt_us/annual_reports.jsp* மூலமாகவும் அணுகலாம்

கடந்த கால அறிக்கைகளுக்கு எமது வலைத்தளமான *www.hdfc.lk to refer* ஐப் பார்க்கவும்.

பொருள் விடயங்கள்

பொருள் விடயங்கள் என்பது, வங்கியின் பங்குதாரர்களுக்கு எந்தக் காலப்பகுதியிலும் பெறுமதியை உருவாக்குகின்ற வங்கியின் தகைமையில் கணிசமான அளவு பாதிப்பை அல்லது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்களாகும். அத்தகைய விடயங்களைக் கிரமமாக மதிப்பீடு செய்தலானது, எமக்கு தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான விடயங்களை இனங்காணுவதற்கும், மீளாய்வு செய்வதற்கும் உதவும். அத்துடன், அத்தகைய அம்சங்கள் தொடர்ந்தும் நிலைத்திருக்கும். கடந்த வருடத்தில் மாத்திரம் உள்ளக மற்றும் வெளியக சூழல்களில் கணிசமான அளவு மாற்றங்கள் ஏற்பட்டன. பெறுமதி உருவாக்கத்தின் மீது நிச்சயமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் அத்தகைய மாற்றங்கள் இடம்பெற்றன. அதன் காரணமாக, அவை அனைத்து தொடர்பான முழுமையான பார்வையை எமது அனைத்துப் பங்குதாரர்களுக்கும், ஏனைய பங்குதாரர்களின் கவனத்திற்கும் கொண்டு வருவது எமது பொறுப்பாகும்.

அம்சங்களைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செயன்முறை

இத்தகைய விடயங்களை மீளாய்வு செய்வதற்கு முகாமைத்துவம் வழிவகுத்ததோடு, COVID-19 தொற்று நோயின் விளைவாக ஏற்பட்ட முக்கியமான புதிய பல விடயங்களையும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டது.

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சங்கள் தொடர்பாகவும், எமது செயற்பாடுகள் மீது அவை ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களுக்கு HDFC வங்கி உயரிய முக்கியத்துவத்தை வழங்கியது. ஒவ்வொரு காரணியும் இடையூறற்ற வியாபாரச் செயற்பாடுகள், வியாபார வளர்ச்சி மற்றும் சந்தை நிலைமை ஆகியவற்றுக்கு பங்களிப்பு செய்வதனால், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் தாக்கத்தின் மட்டத்தை இனங்காண்பதற்கு தர அடிப்படையிலும், அளவீட்டு அடிப்படையிலும் மதிப்பீ செய்யப்பட்டது.

HDFC BANK
The Bank for your Home

இனங்காணுதல் (Identify) → மதிப்பீடு செய்தல் (Evaluate) → முன்னுரிமை அளித்தல் (Prioritise) → ஒருங்கிணைத்தல Integrate

பொருள் அம்சம் மீதான கவனம் (Materiality Focus)	அறிக்கையிலுள்ள பொருத்தமான பகுதிகள் பற்றிய குறிப்பு (Reference to relevant areas in the report)
வருவாய் மற்றும் இலாபத் தன்மை	நிதித் தகவல்கள்
செயற்பாட்டுச் செலவைக் குறைத்தல்	நிதி மூலதன அறிக்கை
பங்குதாரர் பங்குலாபங்கள்	நிதிக் கூற்றுகளும் தொடர்புடைய குறிப்புகளும்
நிதி நேர்மைத்திறன்	
வலுவான நிதி முகாமைத்துவம்	
இடர் முகாமைத்துவம்	இடர் முகாமைத்துவ அறிக்கை
NPL விகிதம் மற்றும் கடன் தரம்	
கடன் முகாமைத்துவம் மற்றும் கடன் மதிப்பீடு	
ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள் மற்றும் கட்டமைப்புகள்	கூட்டுறவு ஆளுகை அறிக்கை
ஆளுகை	கூட்டுறவு ஆளுகை அறிக்கை
உபாயநுட்பத் திட்ட அபிவிருத்தி மற்றும் அமுல்படுத்துகை	உபாயநுட்ப நோக்கு
நிலைத்தன்மை நடைமுறைகள்	நிலைத்தன்மை மீதான கவனம்
COVID-19 க்கு எதிரான ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு	மனித மூலதன அறிக்கை
தொலைவேலை	
ஆட்சேர்ப்பு மற்றும் தக்கவைப்பு	
பயிற்சி மற்றும் அபிவிருத்தி	
மேம்படுத்தல் மற்றும் வெற்றியடைதல்	
செயற்திறனை அங்கீகரித்தலும் வெகுமதியளித்தலும்	
கொடுப்பனவு மற்றும் சம்பளங்கள்	
ஊக்குவிப்பு அளிக்கும் வேலைத்தளம்	
சம வாய்ப்புகள்	
நேர்மைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை	
பணியாட்கள் ஈடுபாடு	
நலன்புரி	
தொழிற்சங்கங்களுடனான தொடர்புகள்	


பொருள் அம்சம் மீதான கவனம் (Materiality Focus)	அறிக்கையிலுள்ள பொருத்தமான பகுதிகள் பற்றிய குறிப்பு (Reference to relevant areas in the report)
சுகாதார வழிகாட்டிகளும் வாடிக்கையாளர் பாதுகாப்பும்	சமூக மற்றும் தொடர்பு மூலதன அறிக்கை
நிதி ரீதியாக குறைந்த மட்டத்தில் உள்ளவர்களுக்கான சேமிப்புகளும் கடன்களும்	
நிதி உள்ளீடுகள்	
உற்பத்தி பன்முகப்படுத்தல்	
சில்லறை ஊடகங்கள்	
டிஜிட்டல் ஊடகங்கள்	
உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பன்முகப்படுத்தல்	
சந்தை அபிவிருத்தி	
வாடிக்கையாளர் சேவை	
சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் ஊடகங்கள்	
வியாபரத் தொடர்ச்சி	
பங்குதாரர்கள் மற்றும் விநியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்	
பங்குதாரர் மற்றும் விநியோகத்தருடனான உறவுகள்	
அபிவிருத்தியடைந்து வரும் சமூகங்கள்	
அபிவிருத்தியடைந்து வரும் வர்த்தகங்களும் கைத்தொழில் துறைகளும்	
நவீன தகவல் தொழில்நுட்ப முறைமைகளும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களும்	புலமைச்சொத்து மூலதன அறிக்கை
செயற்பாடுகளை இலகுவாக்கும் பௌதீக சொத்துக்கள்	உற்பத்தி செய்யப்பட்ட மூலதன அறிக்கை
கவனத்துடனான சக்தி நுகர்வு	இயற்கை மூலதன அறிக்கை
சுற்றுச் சூழலை வளர்த்தல்	
புதுப்பிக்கத்தக்க சக்தி	

நிதிச் சுருக்கம்

	2020 ரூ. மில்.	2019 ரூ. மில்.	மாற்றம் %
வருடத்திற்கான பெறுபேறுகள் (Results for the year)			
வருமானம்	7,856	8,090	(3)
வரிக்கு முன்னரான இலாபம்	1,381	1,244	11
வரிக்கான ஏற்பாடு	673	769	(12)
வரிக்குப் பின்னரான இலாபம்	708	476	49
அரசாங்கத்திற்கான வருவாய்	679	774	(12)
மொத்த பங்குலாபங்கள்			
வருட இறுதியில் (At the year end)			
பங்குதாரர்களுக்கான நிதியம்	5,782	5,119	13
வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புகள்	47,947	42,504	13
மொத்தக் கடன்களும், வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்களும்	42,637	42,360	1
மொத்த சொத்துக்கள	61,030	55,955	9
சாதாரண பங்கிற்கான தகவல் (Information per Ordinary share)			
சம்பாத்தியங்கள் (அடிப்படை) (ரூபா)	10.94	7.35	49
நிதி விகிதங்கள் (Financial Ratios)			
சராசரி பங்குதாரர் நிதியத்தின் மீதான திரும்பல் (%)	12.99	9.63	3.36
சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல்	1.21	0.90	0.31
மொத்த சொத்துக்களுக்கான பங்குதாரர் பங்குரிமை	9.47	9.15	0.32
நியதிச்சட்ட விகிதங்கள் (Statutory Ratios)			
திரவச் சொத்துக்கள் (%)*	37.20	26.07	11.13
பொது பங்குரிமை அடுக்கு 1 மூலதனம் - குறைந்தபட்ச தேவைப்படுத்துகை 7.00%	19.34%	18.21%	1.13
மொத்த அடுக்கு 1 மூலதன விகிதம்-குறைந்தபட்ச தேவைப்படுத்துகை - 8.50 %	20.20%	19.14%	1.06
மொத்த மூலதன விகிதம் குறைந்தபட்ச தேவைப்படுத்துகை - 12.50 %	20.67%	19.14%	1.53
ஏனைய தகவல்கள் (Other Information)			
கிளைகள்	39	39	-
பணியாட்கள் (பணியாட் தொகுதியின் எண்ணிக்கை)	633	647	(2)
கடன் விகிதம் - பிற்ஸ்/லங்கா விகிதம்	BB+(lka) நிலையான	BB+(lka) நிலையான	


மொத்த வருமானம்

ரூ. 7,856 மில்.




நிகர இலாபம்

ரூ. 708 மில்.




மொத்த சொத்துக்கள்

ரூ 61,030 மில்.



மொத்த வைப்புகள்

ரூ. 47,947 மில்.



மொத்த வருமானம் குறைவடைதல்

3%

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருட காலப்பகுதியின் போதான பதிவு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூ.7.86 பில்லியன்

நிகர இலாபத்தின் மொத்த விகிதம்

49%

இலாபத்திற்கு பின்னரான வருடத்தின் போதான வரி ரூ. 708 மில்லியன்

மொத்த சொத்துக்களின் வளர்ச்சி

5 பில்லியன்

நிதி வருட இறுதியில் உள்ளவாறு மொத்த சொத்துக்கள் ரூ. 5 பில்லியனால் அதிகரித்து 61 பில்லியனை அடைந்தது. இது, 9.07% வளர்ச்சியாகும்.

மொத்த வைப்புகளின் வளர்ச்சி

13%

2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிறுவனம் ரூ.47.95 பில்லியன் மொத்த வைப்புத் தளத்தை அடைந்தது.

செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

வாடிக்கையாளர்கள்

550,000+

HDFC யின் பன்முகப்படுத்தப்பட்ட போட்போலியோவினால் சேவை வழங்கப்பட்டது.

மொத்த வைப்புகளுக்கான அதிகரிப்பு

13%

வைப்புத் திரட்டல் ரூ. 48 பில்லியனாக அதிகரித்தது.

கூட்டுறவு நிலையான வைப்புகளில் ஏற்பட்ட குறைவு

3%

சில்லறை நிலையான வைப்புகளின் அதிகரிப்பு

39%

மொத்த சொத்துக்களின் அதிகரிப்பு

ரூ.5.0 பில்.

இலங்கையின் நுகர்வோர் வியாபாரப் பெயர்களில்

100

ஒரு முன்னணி நிறுவனம்

உபாயநுட்பம் (STRATEGIC)

- 2021-2025 வருடத்திற்கான 5 வருட உபாய நுட்பத் திட்டத்தை வகுப்பதற்கு கலந்துரையாடல்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.
- வீடு கொள்வனவாளர்களுக்கும், சிறிய நடுத்தர தொழில் முனைவோருக்கும் நிதி ரீதியாக உதவுவதற்கான உபாயநுட்ப பங்குடைமைகள்.

டிஜிட்டல் (DIGITAL)

- மேம்படுத்தப்பட்ட இலத்திரனியல் வங்கிச் சேவைகளுடனான முன்னேற்றமடைந்த டிஜிட்டல் இருப்பு.
- பணம் அல்லாத மற்றும் உராய்வு அல்லாத நடமாடும் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கான JustPay உடனான கூட்டுமுயற்சி.
- HDFC கடன் அட்டை மீதான POS நடவடிக்கைகளை எளிதாக்குவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஜப்பான் JCB லங்கா கிளியர் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் HDFC யின் சர்வதேச EMV சிப் அடிப்படையிலான ATM அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

வைப்புகள் (DEPOSIT)

- அதிகரித்த சில்லறை வைப்புத் திரட்டலுடன் வங்கி வைப்புத் தளம் பாராட்டத்தக்க வளர்ச்சி கண்டது.

கடன்களும் முற்பணங்களும் (LOANS AND ADVANCES)

- COVID-19 இனால் பாதிப்படைந்த வியாபாரங்களுக்காக ரூ. 56 மில். தொழிற்பாட்டு மூலதனக் கடன்கள் பங்கிடப்பட்டன.
- தொற்று நோயினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு எதிராக நிதி நிவாரணம் வழங்கும் பொருட்டு (சுமார்) 24,000 வாடிக்கையாளர்களுக்கு கடன் தவணை உரிமை வழங்கப்பட்டது.

செயற்பாடு (OPERATIONAL)

- அனைத்துக் கிளைகளையும் ஒன்றிணைக்கும் மேம்படுத்தப்பட்ட நிகழ்நிலை முறைகள் ஊடாக, கடன் தோற்றம் மற்றும் கடன் செயன்முறைச் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரித்தல் மூலமாக மீள்வரும் நேரத்தைக் குறைத்தல்.
- வங்கியின் கடன் செயற்பாடுகளுக்காக அதிகூடிய பயனுள்ள மற்றும் வினைத்திறனான காப்புறுதிச் செயன்முறைக்காக கிளை ஆட்கள் கடனுடன் தொடர்புபட்ட காப்புறுதிக் காப்பீடுகளைப் பெற்றுக் கொள்வத்றகாக நிகழ்நிலை ஊடாக கூட்டாண்மைக் காப்புறுதிக் கம்பனிகளை அணுகுவதற்கான தகைமையை ஏற்படுத்திக் கொடுத்தல்.



உபாய நூட்பக் கட்டமைப்பு

நோக்கு

நிலையான வீட்டு வசதி மற்றும் வாழ்க்கைத் தரங்களை உறுதிப்படுத்துவதில் முதன்மையான நிதிப் பங்காளராக இருத்தல்.

பணிநோக்கு

நிலையான வாழ்க்கைத் தரத்திற்காக நிதித் தீர்வுகளை வழங்குவதற்கு, தொழில்முனைவோரின் பெறுமதி சேர்க்கையில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.

நோக்கு

- நெறிமுறைத் தன்மை
- சுறுசுறுப்பு
- நெகிழ்வுத் தன்மை
- பன்முகத் தன்மைக்கு மதிப்பளித்தல்
- வெளிப்படைத்தன்மை

HDFC ஒரே பார்வையில்

இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட, இலங்கையில் உரிமம் அளிக்கப்பட்ட 06 விசேட வங்கிகளுள் HDFC (LSB) யும் ஒன்றாகும். ஏனைய LSB களுடன் ஒப்பிடுகையில், வீடமைப்பு நிதி வழங்கலில் அதன் கவனத்தைச் செலுத்துவதன் மூலம், வங்கி, தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. 51% பெரும்பான்மை பங்குகளுடன் இலங்கை அரசாங்கம் HDFC யின் முக்கிய மற்றும் மிகப்பெரிய பங்குதாரராக இருக்கும் அதேவேளை, எஞ்சிய 49% பங்குகளை தனியார் துறை கொண்டுள்ளது.

HDFC வங்கியின் முக்கிய கவனம், இலங்கையர்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிதித் தேவைகளில் தங்கியுள்ளது. அரசினால் பெரும்பான்மை உரிமையைக் கொண்டுள்ள விசேட வங்கி என்ற அடிப்படையில் நாம் கிராமிய மற்றும் கீழ்மட்ட சமூகங்களின் குறைந்த நிதித் தகைமைகளை மேம்படுத்துவதையும் ஒரு தனித்துவமான இலக்காகக் கொண்டுள்ளோம். இவை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபடுவோர் ஆகியோரை உள்ளடக்குவதோடு, குறைந்த வருமானம் தொடக்கம் நடுத்தர வருமானம் பெறுவோரின் வாழ்க்கையையும் மேம்படுத்துகிறது.

வீடமைப்புக் கடன்களில் 70% கடன் திட்டங்களை வழங்குதலுடன், இலங்கையின் வீடமைப்புச் சந்தை பற்றி அதன் அனுபவம், தகைமைகள் மற்றும் விளக்கம் என்பவற்றில் வங்கியின் முக்கியமான வலிமை தங்கியுள்ளது. 1984 ஆம் ஆண்டு வங்கி தோற்றம் பெற்றதிலிருந்து, ஒரு தலைமுறை முழுவதும் HDFC வங்கி ஆயிரக் கணக்கான இலங்கையர்களுக்கு வீடமைப்புக் கடன்களை வழங்குவதன் மூலம் அவர்களின் கனவுகளை நனவாக்கி, வாழ்க்கைக்கான நம்பிக்கையை வளர்க்கவும் உதவியுள்ளது. அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் தொழில் வல்லுநர்களுக்கு, அவர்களின் ஊழியர் சேமலாப நிதியை அடிப்படையாகக் கொண்டு கடன்களை வழங்கும் சிறப்பம்சத்தைக் கொண்ட நான்கு வங்கிகளுள் இதுவும் ஒன்றாகும்.

வங்கி தனது 37 வருட கால வரலாற்றில், இலங்கையின் கிராமிய சமூகத்துடன் வலுவான உறவுகளைக் கட்டியெழுப்பியுள்ளது. அத்துடன், குறைந்த மட்டம் தொடக்கம் நடுத்தர வருமானம் பெறும் தனிப்பட்ட மற்றும் குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைத்தன்மை மீது கவனம் செலுத்தும் ஒரு பகுதியாக அதன் வாடிக்கையாளர்களுடன் உறவுகளைத் தொடர்ந்து பேணி வருகிறது. வங்கி, தகுதிபெறும் தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு, அவர்களுக்கு ஏற்படும் மட்டுப்பாடு மற்றும் சவால்களுக்கு அப்பால் சென்று உதவி வழங்கும் முகமாக வினைத்திறனான, தாங்கிக் கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்குவதில் வங்கி கவனம் செலுத்தி வருகிறது. அதன் முயற்சிகளுள் ஒரு பகுதியாக, வங்கி, பல சவால்கள் இருந்த போதிலும், அவற்றை மிஞ்சி, தொடர்ந்து அதன் சில்லறைத் தடத்தை விரிவாக்கி வருகின்றது. தற்போது வங்கி, 39 கிளைகளை உருவாக்கியிருப்பதோடு, 100 க்கும் மேற்பட்ட நடமாடும் வங்கி அலுவலர் குழுமத்தை ஏற்படுத்தி, சேவை அதிகமாகத் தேவைப்படுவோருக்கு இலகுவானதும், அணுகக்கூடியதுமான நிதிச் சேவைகளை வழங்கி வருகிறது. வங்கியின் நடமாடும் வங்கி அலுவலர்கள் அல்லது 'கையகக் கணிப்பொறி வங்கி அலுவலர்கள்' (Palmtop Banking Officials) கிராமிய மற்றும் நகரப் பிரதேசங்களில் உள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வீட்டு வாசல் சேவைகளை வழங்கி வருகிறது. வங்கி, குறைந்த மட்டம் தொடக்கம் நடுத்தர வருமானம் பெறுவோரின் வீடமைப்புக் கடன் தேவைகளுக்கு பிரதான கவனம் செலுத்தி வரும் அதேவேளை, படிப்படியாக வங்கி அதன் நிதி போட்போலியோ மற்றும் சந்தைத் துறைகளை விரிவாக்கி வருகிறது. இது, தனியார் துறையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உள்ளடங்கலாக கூட்டுறவுத்துறை மீதான அதிகரித்து வரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

நிதி உதவிகளை வளர்ப்பதோடு, தேசத்தின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும் HDFC வங்கி, ஒரு தொகுதி நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தொடர்ந்து பன்முகப்படுத்தப்பட்ட போட்போலியோவை ஊக்குவிக்கின்றது. தங்கக் கடன், ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான வீடமைப்புக் கடன்கள், வாழ்க்கை முறைக் கடன்கள், கல்வி மற்றும் சிறிய - நடுத்தர தொழில் முனைவு அபிவிருத்திக் கடன் திட்டங்கள் மற்றும் கூட்டுறவு நிதி என்பன அதன் தனித்துவமான கடன் போட்போலியோவின் ஒரு பகுதியாகும். வங்கியின் சேமிப்பு போட்போலியோ அனைத்து வயது எல்லையைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கும், மாறுபட்ட சமூகத் தேவைகளுக்குமாக இருக்கக்கூடிய சேமிப்புக் கணக்குகளின் தெரிவுகளையும், முதலீட்டுத் திட்டங்களையும் உள்ளடக்குகிறது. HDFC யின் கவனம், உபாயநூட்ப நோக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், 2021 - 2025 க்கான மூலோபாயத் திட்டத்தில் அதன் இலக்குகளும், குறிக்கோள்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. செயற்திறனை உச்ச அளவில் பெறுவதற்கான தேவையை உணர்ந்து, வங்கி செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கும், நேரத்தைச் சிக்கனப்படுத்துவதற்கும், அதன் உபாய நூட்ப நோக்கை அடையும் பொருட்டு, வங்கிச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், தொடர்ந்து புதிய டிஜிட்டல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பத் தளங்களில் முதலீடு செய்து வருகிறது. தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சி, ஒரு முக்கியமான உபாயநூட்பமாக இருப்பதோடு, அது, வினைத்திறனான மற்றும் உயர் ஆக்கத் திறன் கொண்ட தொழில் சூழலை உருவாக்குவதற்கு படிப்படியாக வங்கியின் செயற்பாடுகளையும், தேவைகளையும் மேம்படுத்துகிறது.

2005 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியல்படுத்தப்பட்டு வருவதோடு, HDFC வங்கி, தற்போது ரூபா 6.0 பில்லியன் மூலதன தளத்தைக் கொண்டுள்ளது.

எமது பயணம்

HDFC வங்கி, பல வருடங்களாக, பல மாற்றங்களை ஏற்படுத்தியமையினால், இன்றைய வடிவத்தில் தோற்றம் பெறுகிறது. முற்றிலும் அரசுக்குச் சொந்தமான வங்கியாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இன்று அரச மற்றும் தனியார்துறைகள் இரண்டும் நிறுவனத்தை உரிமை கொள்கின்றன. எமது வர்த்தகம் மற்றும் செயற்பாட்டுக் கவனம் தொடர்ந்து புதிய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட திசைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

1984

தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டட அமைப்பாக பதிவு செய்யப்பட்டு கூட்டிணைக்கப்படட்து.

1997

இலங்கை பாராளுமன்றத்தின், 1997 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் உருவாக்கப்பட்டு, வீடமைப்பு சார்ந்த நிதிச் சேவைகளை வழங்கும் தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் பொது மக்களின் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்காக பொதுக் கூட்டுத்தாபனமாக உருவாக்கப்பட்டது.

2000

இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தை உருவாக்கும் வகையில், 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

2003

விசேட வங்கியாக உருவாக்குவதற்காக 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் திருத்தப்பட்டது. அப்போது, கம்பனியின் பெயர் 'இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி' எனப் பெயரிடப்பட்டது. (இதனகத்துப் பின்னர் 'இலங்கையின் HDFC வங்கி' எனக் குறிப்பிடப்படும்.

2005

தனியார் துறையின் முதலீடுகள் பெறப்பட்டதன் விளைவாக, HDFC வங்கி கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியல்படுத்தப்பட்டது.

2011

வர்த்தக நடவடிக்கைகளின் எல்லைகளை விஸ்தரிக்கும் நோக்கில் HDFC சட்டம் மேலும் திருத்தப்பட்டது. இத்திருத்தம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் அட்டவணை 4 இல் குறித்துரைக்கப்பட்ட வியாபார வடிவங்களை நடத்துவதற்கு அதிகாரமளிக்கிறது.

2012

எமது சேவைகளை அடைவதற்காக, திறக்கப்படாத சந்தைப் பிரிவுகளை நோக்கி, வங்கி அதன் தயாரிப்புகளையும், சேவைகளையும் பன்முகப்படுத்தியது.

2015

நிதி உள்ளீடுகளை வலுப்படுத்தும் நோக்கில், கூட்டுறவுகளுக்கு சேவை வழங்கும் வகையில், 'கூட்டுறவு நிதி' என்ற விடயத்திற்குள் HDFC காலடி வைத்து அதற்கென பிரத்தியேகமான ஒரு பிரிவையும் ஸ்தாபித்தது.

2017

டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்கள் என்ற திசையை நோக்கிச் சென்று முக்கிய வங்கி முறைமையை அமுல்படுத்தியது.

பெறுமதி சேர்க்கை மாதிரி

சகல பங்குதாரர்களுக்கும் பெறுமதியை உருவாக்குதல்

நிதி அடிப்படையில் தகுதியானவர்களுக்கு ஆதரவளித்தல்

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கி என்ற வகையில், HDFC வங்கி ஒப்பீட்டளவில் சிறிய, சராசரி கடன் அளவுடன் கூடிய வீடமைப்புக் கடன் ஏற்பாடுகளில் 75% ஐக் கொண்டு வங்கியில் இருந்து கடன் பெறுபவர்களுக்கு குறைந்த இடரை உறுதிப்படுத்துகிறது. வங்கி இதனைவிட, சிறிய, நடுத்தர தொழில் முனைவோர் மற்றும் நுண் கிராமிய தொழில் முனைவோருக்கு, அவர்களின் வியாபார இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில், சரியான முறையில் நிதி வசதி அளிப்பதன் மூலம் ஆயிரக் கணக்கானோரை நிதி ரீதியாக மேம்படுத்தி வருகிறது. காப்புறுதி போன்ற பெறுமதி சேர்க்கை சேவைகள், டிஜிட்டல் வங்கி முறைமைகள் என்பவற்றைப் படிப்படியாக அதிகரிப்பதற்கு மேலதிகமாக, கடன்கள், முற்பணங்கள், வைப்புகள், சேமிப்புத் திட்டங்கள் என்பன வங்கி வழங்கி வரும் சேவைகளில் ஒரு பகுதியாகும். மேலும், ஊழியர் சேமலாப நிதியை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் வீடமைப்புக் கடன்களை வழங்குகின்ற நான்கு வங்கிகளில் இதுவும் ஒன்றாகும். வுங்கியின் போட்போலியோ குத்தகை, தங்கக் கடன்கள் மற்றும் போரில் ஈடுபட்ட படை வீரர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்கள் ஆகியோருக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட திட்டங்களையும் வங்கி கொண்டுள்ளது.

ஆதரவளிக்கும் வர்த்தகங்களும் கைத்தொழிற் துறைகளும்

சிறிய அளவிலான உள்நாட்டு வர்த்தகத் துறையில் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் உள்ளடங்கலாக, பல்வேறுபட்ட கைத்தொழிற் துறைகளுக்கு நிதிச் சேவைகளை வழங்கும் வசதியை வங்கி விஸ்தரித்துள்ளது. நாம், அவர்களின் வாழ்வாதாரங்களை நிலைப்படுத்துவதற்கும், சிறிய அளவிலான தேசியக் கைத்தொழில்கள், ஏனைய உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றோம். வங்கியின் போட்போலியோவின் கீழ் வருகின்ற கைத்தொழில் துறைகளின் பகுதிகள், பால் உற்பத்தியாளர்கள், விவசாயிகள், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகள், சுயதொழிலுக்கான தொழில்நுட்ப ரீதியான தகுதிவாய்ந்த இளைஞர்கள், வர்த்தக ஸ்டார்ட்அப்ஸ் (start-ups), சிறிய நடுத்தர தொழில்முனைவோர், ஏற்றுமதி வர்த்தகத் துறை, பசுமை மற்றும் நிலையாதாரத் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது.

நிதிச் சேர்க்கை

HDFC வங்கி, குறைந்த மற்றும் நடுத்தர வருமான வகுதிகள் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி என்பவற்றில் முக்கிய கவனத்தைச் செலுத்துகிறது. மேலும், வங்கி, கிராமிய சமூகங்கள் தொடர்பாகவும், பரந்தளவிலான அணுகலைக் கொண்டுள்ளது. மேலும், கடந்த பல வருடங்களாக வங்கி, பொருளாதார நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஊடாக அனைவருக்கும் நிதிச் சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில், வியாபாரக் கடன்களை கூட்டுறவுத் துறைக்கு வழங்கி, கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிதிச் சேவைகளை விரிவாக்கியது.

பெறுமதியை உருவாக்குதல்

வங்கி, மூலதனங்களைக் கையாள்வதன் மூலம், ஒவ்வொரு வருடமும் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், பணியாட்கள், ஒழுங்குபடுத்துநர்கள், விநியோகத்தர்கள், பங்குடமையாளர்கள், சமூகம் மற்றும் சுற்றாடலுக்குப் பெறுமதியை உருவாக்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை வழங்குகிறது.

பெறுமதி உருவாக்கல் மாதிரி

வெளியக மற்றும்

உள்ளீடுகள்

நிதி மூலதனம்

- பங்குதாரர் நிதியம்
- வைப்புத் தளம்
- மொத்த சொத்துக்கள்
- கடன் பெறுவனவுகளும் தொகுதிக் கடன்களும்
- முதலீடுகள்

மனித மூலதனம்

- கொள்கைக் கட்டமைப்பு
- செயற்திறன் மதிப்பீடு
- ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் முன்னேற்றம்
- போட்டி ரீதியான அனுகூலங்களும் சம்பளங்களும்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி

புலமைச்சொத்து மூலதனம்

- நிறுவன ரீதியான அறிவு
- வீடமைப்பு நிதி அறிவு மற்றும் செயன்முறைகள்
- வாசற்படி வங்கிச் சேவை
- தனித்துவமான தயாரிப்புகள்
- வடிவமைக்கப்பட்ட தகவல் அமைப்புகள்

சமூக மற்றும் தொடர்பு மூலம்

- பலதரப்பட்ட ஊடக டிஜிட்டல் தொடுகை முனைவுகள்
- புவியியல் ரீதியாக பன்முகப்படுத்தப்பட்ட வலையமைப்பு
- சில்லறை மற்றும் கையகக் கணிப்பொறி வங்கி
- பலதரப்பட்ட கடன் மற்றும் வைப்புத் தயாரிப்புகள்
- வளர்ந்து வரும் பங்குடமையாளர்கள்
- பலதரப்பட்ட விநியோகத்தர்கள்
- சமூக அடிப்படையில் நிறுவனங்களுடனான பங்குடமை
- சிறு உரிமையாளர் மற்றும் சிறிய, நடுத்த தொழில்முனைவோரை விருத்தி செய்தல் மீதான கவனம்
- கிரமமான உறவுகள்
- ஆதரவளிக்கும் சமூகங்கள்.சிறிய, நடுத்தர தொழில்முனைவோர்
- அபிவிருத்தித் திட்டங்கள்
- கூட்டுறவு சமூகப் பொறுப்புகள்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்


- கிளைகள்
- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- தொழிலநுட்ப உட்கட்டமைப்பு
- தன்னியக்க இயந்திர வலையமைப்பு

இயற்கை மூலதனம்

- பொருள் மீள் சுழற்சி
- புதுப்பிக்கத்தக்க சக்தி
- பயன்பாட்டு நுகர்வு
- இயற்கையைப் பேணுதல்

உள்ளீடுகள்

நோக்கு




வெளியீடுகள்

- வீடமைப்புக் கடன்கள் - அடகு வைக்கப்பட்ட
- வீடமைப்புக் கடன்கள் - ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான
- வீடமைப்புக் கடன்கள் - உத்தரவாதமளிக்கப்படுபவர்
- தங்கக் கடன்கள்
- சிறிய நடுத்தர தொழில் முயற்சி வியாபாரக் கடன்கள்

ஒழுங்குபடுத்தும் சூழல்

பெறுமதி உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் நடவடிக்கைகள்



விரும்பத்தக்க பெறுபேறுகள்

நிதி மூலதனம்

- தொடர்ச்சியான இலாபத்தன்மை
- இலங்கை அரசாங்கத்திற்கான வரி வருமானம்
- பங்குதாரர்களுக்குரிய பங்குலாபம்
- போதுமான மூலதன தளம்
- சிறந்த சொத்து தரம்
- சிறந்த கடன் தரம்

மனித மூலதனம்

- அனைத்துப் பணியாட்களுக்குமான பயிற்சி
- தொழில்முறை வளர்ச்சி
- முன்னேற்றங்களும் வெற்றியளிப்புகளும்
- பன்முகப்படுத்தப்பட்ட திறன்கள்
- அதிகரிக்கப்பட்ட ஆக்கத்திறன்
- உயரிய தக்கவைப்பு விகிதம்
- சுயமாக உருவாக்கப்பட்ட முயற்சிகள்
- ஆக்கத்திறனுடைய சிந்தனை
- வங்கிச் செயற்பாடு மற்றும் தொழில்நுட்பத்தில் அதிகரித்த அறிவு
- ஒழுங்கு விதிகளுடனான இணக்கம்
- HDFC யின் பெறுமதிகளுடன் பணிபுரிதல்
- உபாய நுட்ப இலக்குகள் மீதான கவனம்
- இலக்குகளை அடைதல்

புலமைச் சொத்து மூலதனம்

- புதிய தொழில்நுட்பத் தீர்வுகள்
- பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்புகள்
- கையக கணிப்பொறி வங்கி
- முக்கிய வங்கி அமைப்பு
- கடன் மற்றும் சேகரிப்பு முகாமைத்துவத் தீர்வுகள்
- வியாபாரப் பெயர் பெறுமதி
- உபாய நுட்பத் திட்டம்

சமூக மற்றும் தொடர்பு மூலதனம்

- கையக கணிப்பொறி வங்கிச் சேவை ஊடாக நிதிச் சேர்க்கை
- பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்பாடுகள்
- புதிய நிதிக் கருவிகள்
- டிஜிட்டல் வங்கி மற்றும் நடமாடும் சேவைகள்
- நிதி உதவி
- பங்குதாரர்களும் சேவை வழங்குநர்களும்

தயாரிக்கப்பட்ட மூலதனம்

- அதிகரித்து வரும் சொத்துக்களும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும்
- வளர்ந்து வரும் கிளைகளும் ATM களும்
- அதிகரித்து வரும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

இயற்கை மூலதனம்

- காகித மீள் சுழற்சி மற்றும் மீள் பயன்பாடு
- சூரிய சக்தி உருவாக்கம்
- வினைத்திறனான சக்தி நுகர்வு
- நடப்பட்ட மரங்கள்

நிலைத்தன்மை மீதான கவனம்

வங்கியின் செயற்பாட்டுக் கட்டமைப்புக்குள் நிலைத்தன்மை மற்றும் நிலையான வங்கிச் சேவைகள் நடைபெற்று வருவதுடன், அவை தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்படும் அம்சங்களாகும். நிலைத்தன்மை மீதான வங்கியின் கவனம், நிதி, சமூக மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சுற்றாடல் மீது கவனம் செலுத்தி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, ஒரு நிதி இடைத் தரகர் என்ற அடிப்படையில் HDFC வங்கி, இலங்கையில் உள்ள குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவதற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புகளை மேற்கொண்டுள்ளதுடன், நிலையான தீர்மானம் மேற்கொள்ளல் மீது அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. வாடிக்கையாளர் மற்றும் ஏனைய பங்குதாரர்களோடு தொடர்புகளைப் பேணும் வகையில், சிறந்த நடத்தையை மேற்பார்வை செய்யும் அதேவேளை, வங்கி, அதன் நடவடிக்கைகள், முதலீடுகள் தொடர்பான தீர்மானங்கள் மீது நல்லாட்சியை உறுதிப்படுத்துகிறது.

நிதிச் சேர்க்கை

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்ற வகையில் HDFC வங்கி, நிலையான வீடமைப்பு மற்றும் வாழ்க்கைத் தரங்களை ஏற்படுத்தும் நிதித் தீர்வுகளை வழங்குதலை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தச் செய்தி, வங்கியின் திருத்தப்பட்ட நோக்குக் கூற்றில் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது - நிலையான வீட்டு வசதி மற்றும் வாழ்க்கைத் தரங்களை உறுதிப்படுத்துவதில் முதன்மையான நிதிப் பங்காளராக இருத்தல். இது, தனிப்பட்டவர்களுக்கும், வியாபார உரிமையாளர்களுக்கும் சேர்க்கை உடனான நிதித் தீர்வுகளை, பிரதானமாக குறைந்த - நடுத்தர வருமான மட்டங்களில் உள்ளவர்களுக்கு வழங்குகின்ற வங்கியின் பணியினை நன்கு பிரதிபலிக்கிறது. வங்கியினால் வழங்கப்படும் தீர்வுகள் கீழ் மட்டத்திலுள்ள கடன் பெறுநர்களை பலதரப்பட்ட நிதி தேவைப்பாடுகளைச் சூழவுள்ள கடன்களுக்கு மேலதிகமாக, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அடகு அடிப்படையிலான வீட்டுக் கடன் என்பனவற்றைப் பெற இயலச் செய்கிறது.

அனைத்து வயதுப் பிரிவினருக்கும் சேவை வழங்கும் அடிப்படையில், வங்கியின் தயாரிப்பு போட்போலியோ (Portfolio), வரையறையுடைய நிதித் தகைமைகளைக் கொண்டவர்களுக்கு நிலையாதார வாழ்க்கையை நன்கு சமப்படுத்துகிறது. இதனைவிட, வங்கி தனது சேவைகளை நேரடியாக சமூகங்களுக்கு எடுத்துச் செல்கிறது. அதி உயரிய வருமானம் கொண்டவர்களுக்கும் / நகர்ப்புற மக்களுக்கும் சேவை வழங்கும் நோக்கம் திரும்பியுள்ள போதிலும், கிராமிய மட்டங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதி அறிவு கொண்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குதலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், வங்கியின் கையகக் கணிப்பொறி வங்கி அலகு அதன் வாடிக்கையாளர்களுக்கு அளவிட முடியாத மற்றும் ஒப்பிடப்பட முடியாத சேவைகளை வழங்கி வருகிறது. அவர்கள், பயன்பாட்டுக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, சேமிப்புகளையும், கடன் கொடுப்பனவுகளையும் ஏற்றுக்கொள்வதற்கு நகர்ப்புற மற்றும் தொலைதூர இடங்களுக்குப் பிரயாணம் செய்கின்றனர். நிதிச் சேர்க்கை முன்னேற்றுவதைப் பூர்த்தி செய்வதற்கு, வங்கியின் நடமாடும் வங்கிக் குழு முக்கிய வகிபங்கைக் கொண்டுள்ளது என்பதை வங்கி பெருமையுடன் எடுத்துரைக்கிறது.

நிலைத்தன்மை வங்கி

நிலைத்தன்மையுடைய மற்றும் பொறுப்பு வாய்ந்த தீர்மானம் மேற்கொள்ளலை எய்தும் முகமாக, ஒரு கொள்கைக் கட்டமைப்பைக் கையாள்வதற்கு HDFC வங்கி, இலங்கை வங்கியாளர் (SLBA) அமைப்பினால் உருவாக்கப்பட்ட நிலைத்தன்மை வங்கி எண்ணக்கருக்களில் கையொப்பமிட்டுள்ளது. ஆளுகை நடைமுறைகளை வலுப்படுத்தும் அதேவேளை, சுற்றாடல் மற்றும் சமூக இடர் முகாமைத்துவத்தின் மீது கவனம் செலுத்துகின்ற திசையை நோக்கி இருக்கக்கூடிய SLBA யின் நிலைத்தன்மையுடைய வங்கிக் கொள்கைகளின் முக்கியமான பெறுமதிகள் மீது தங்கியிருந்து வங்கி தற்போது அதன் வியாபார உபாய நுட்பத்தை மீளமைத்து மறுசீரமைத்துள்ளது. சமூகத்திற்கு சாதகமான நிதி நடவடிக்கைகளையும், நிலைத்தன்மை வாய்ந்த வங்கி முறைமையையும் மேலும் மேம்படுத்துவதற்காக வங்கியின் கொள்கைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு, திருத்தப்பட்டு வருவதோடு, வங்கியின் நடவடிக்கைகள் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் முன்னோக்கு விடயங்களில் இருந்து நிலையான அபிவிருத்தி மீது தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையாதார அபிவிருத்தி இலக்குகள்

2015 இல் ஐநா வின் உறுப்பு நாடுகள், நிலையாதார அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலை உருவாக்கியது. இந்த நிகழ்ச்சி நிரல், முக்கியமாக கவனம் செலுத்தக்கூடிய ஒன்றோடு ஒன்று தொடர்புடைய 17 இலக்குகளை உள்ளடக்கியுள்ளது. காலநிலை தொடர்பான நடவடிக்கையுடன் இணைந்து, வறுமை ஒழிப்பு முன்னிலை கவனத்தைப் பெறுகின்றது. இந்த 17 இலக்குகளும், 169 அடைவுகளைச் சூழ்ந்திருப்பதோடு, அவை, மக்கள் மற்றும் பூகோள வளர்ச்சிக்கான நிலையாதார அபிவிருத்திக்கான ஒரு செயற்திட்டமாகும். அரசாங்கம் மற்றும் வர்த்தகர்களின் தீர்மானங்களும், கொள்கைகளும், மக்களின் நிலையாதார வாழ்க்கைத்தரம் மற்றும் பூகோளத்தின் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதனால், அவர்கள் இந்த நிலையாதார அபிவிருத்தி இலக்குகளை முழுமையாக அடைந்து கொள்வதில் முக்கியமான பொறுப்பைக் கொண்டுள்ளனர். அரசாங்கங்கள் மற்றும் வர்த்தகர்கள் 2030 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த இலக்குகளை அடைவதன் பொருட்டு, உரிய நடவடிக்கை எடுப்பதில் தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உலகளாவிய இலக்குகளை அமுல்படுத்துவதில், இந்தக் கட்டமைப்பை உண்மையாக வெற்றியளிக்கச் செய்வதை நோக்கி பணி புரியக்கூடிய சமூகத்தில் சாத்தியமான வளங்களைக் கொண்ட முக்கிய பங்குதாரர்களான அனைத்து நிறுவனங்களும், தலைவர்களும், அர்ப்பணிப்புடனும், உரிமையோடும் தமது கடமைகளைப் பூர்த்தி செய்வது தேவைப்படுத்தப்படுகிறது.

ஐநா வின் நிலையாதார அபிவிருத்தி இலக்குகளைக் கௌரவிப்பதில் HDFC வங்கி தற்போது அதன் வங்கி நடவடிக்கைகளில் பொருத்தமான தன்மை, பிரயோகம் என்பவற்றின் அடிப்படையில் அந்த இலக்குகள் மீது பங்களிப்புச் செய்வதில் கவனம் செலுத்துகிறது. எவ்வாறாயினும், பல வருடங்களாக வங்கி, நாட்டின் அபிவிருத்திக்காக வாடிக்கையாளர்களின் சமூகத் தரங்களை உயர்த்துவதில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. எனவே, ஒரு வங்கி என்ற அடிப்படையில், வறுமையைக் குறைப்பதற்கும், வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கும் நேரடியான பங்களிப்பை வழங்குவதுடன், HDFC வங்கி, அதன் நிகழ்ச்சி நிரலில் பலதரப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

COVID-19 இனால் நாட்டிலுள்ள வறியவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை பற்றி வங்கி அறிந்திருப்பதுடன், அதனை நிவர்த்தி செய்யும் முகமாக வறுமை ஒழிப்பு ஐநா வின் நிலையாதார இலக்குகளோடு ஒன்றிணைந்து செல்கிறது. இந்தத் தொற்று நோய் 2020 இல் 71 மில்லியன் மக்களை மோசமான வறுமை நிலைக்குத் தள்ளியுள்ளது. இது, உலகம் பூராகவும் பெருந்தொகையான மக்களின் தொழில் இழப்பையும் உள்ளடக்குகிறது.

இலக்கு 1 - வறுமை அற்ற

HDFC அதன் ஆரம்பத்தில் இருந்து நிதி ரீதியாக வறுமையில் இருக்கும் பல ஆயிரக்கணக்கான தனிப்பட்டவர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்கி வருகிறது. தொழில் முனைவோரின் வாழ்வாதாரங்களைப் பேணுவதை இயலுமாக்கும் பொருட்டு வங்கி, ஆயிரக்கணக்கான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதில் உதவி வருகிறது. வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதன் மூலம், நிதி ரீதியாக அவர்கள் நிலையான அபிவிருத்தியைப் பெறுவதோடு, ஏதேனும் முக்கிய கடன் பொறுப்பு இன்றி, தமது கடன்களை தமது தகைமைக்குள் இருந்து மீளச் செலுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

இலக்கு 1 இன் அடைவுகள் மற்றும் குறிகாட்டிகளுக்கு அமைய, வறிய மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள், பொருளாதார வளங்களை சம அளவில் அணுகக் கூடியவர்களாகவும், காணி மற்றும் ஆதனங்களுக்கு உரிமை மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டவர்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. தேசத்தின் வீடமைப்பு வங்கி என்ற வகையில், HDFC யின் சராசரி நுழைவுச் சீட்டின் அளவு, ரூபா 400,000 ஆகும். இது, வருமானக் கும்பகத்தின் கீழ் மட்டத்தை நோக்கிய, வங்கியின் அர்ப்பணிப்பை போதுமான அளவில் எடுத்துக் காட்டுகிறது. நிதி இடைத்தரகர் என்ற வகையில், HDFC வங்கி நிதிச் சேவைகள் மற்றும் நுண் தொழில் முயற்சிளுக்கான நிதியை வழங்குவதில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, வங்கியின் கையகக் கணிப்பொறி வங்கிக் குழுமம் ஊடாக அத்தகைய ஆட்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், வங்கி எதிர்காலத்தில் 64 புதிய கிளைகளைத் திறந்து அதன் சில்லறை வியாபாரத்தை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இலக்கு 2 - பட்டினியை முடிவுறுத்தல்

கிராமிய அபிவிருத்தி மற்றும் நிலையாதார விவசாயம் என்பன இலக்கு 2 உடன் தொடர்புபடுகிறது. இவ்விலக்கு தொடர்பில் HDFC வங்கி கிராமிய உற்பத்தியாளர் சமூகங்கள் மற்றும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கு நிதி வசதி வழங்குவதன் மூலம், அவர்களின் வியாபாரத்தை ஆரம்பிக்க அல்லது விருத்தி செய்ய உதவுகிறது. வங்கி, கிராமிய அபிவிருத்தியை ஊக்குவிப்பதில் பங்களிப்புச் செய்வதன் மூலம், விவசாய நடவடிக்கைகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களுடன் பல்வேறு திட்டங்களில் ஈடுபட்டு வருகிறது.

மேலும், 2019 ஆம் ஆண்டு பிற்பகுதியில் HDFC வங்கி, பால் உற்பத்திப் பெறுமதி சங்கிலியின் தரத்தையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதில் கவனம் செலுத்தும் முகமாக IESE உடன் இணைந்து பால் உற்பத்தியாளர்களுக்கு தூய பாலை உற்பத்தி செய்வதில் மேம்படுத்தல்களை ஏற்படுத்த உதவியது. சந்தை சார்ந்த பால் உற்பத்தி (MOD) என்ற திட்டம், ஐக்கிய அமெரிக்காவின் விவசாய திணைக்களத்தினால் நிதியளிக்கப்பட்ட ஒன்றாகும். இது, IESE இனால் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக MOD பகிரங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.

இலக்கு 5 - பால் சமத்துவம்

HDFC வங்கி, பால் நிலை சார்ந்த சகல பணியாட்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குகிறது. உண்மையில், வங்கியின் உயரிய மற்றும் கூட்டுறவுத் தலைமைத்துவம், பெண் தொழில் வல்லுநர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதோடு, முக்கியமான பணிகளைக் கண்காணிக்கும் பதவிகளிலும் அவர்கள் உள்ளனர்.

இலக்கு 7 - சுத்தமான மற்றும் தாங்கும் சக்தி

வங்கி, தொடர்ந்தும் சூரிய சக்தியில் முதலீடு செய்து வருகிறது. இது தொடர்பான முதலாவது திட்டம் ஹைட்பாட் கோணரிலுள்ள கிளையில் சோலார் இடைப்பலகம் (power grid) பொருத்தப்பட்டதோடு ஆரம்பிக்கப்பட்டது. அதிகப்படியான சக்தி, தேசிய சக்தி கட்டுப்பாட்டு வலையமைப்புக்கு ஊட்டப்படுவதுடன், நிலையாதார சக்தியைத் தயாரிக்க பங்களிப்பு செய்யப்படுகிறது.

இலக்கு 8 - கௌரவமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்

வங்கியின் கையகக் கணிப்பொறி அல்லது நடமாடும் வங்கி அலகு பல்வேறுபட்ட மாவட்டங்களையும் சேர்ந்த வெவ்வேறு கிராமியக் குடியிருப்புகளில் இருந்து வரும் பணியாட்களை உள்ளடக்குகிறது. இப்பணியாட்களில் பலர், அவர்கள் சேவை வழங்கும் அதே சமூகத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள், நிதிச் சேர்க்கையின் இயக்கிகளாக மாத்திரம் அல்லாது, நிலையாதார தொழில் மாதிரி ஊடாக மேம்படுத்தபடுகின்றனர். இந்தக் குழு, 104 தனிப்பட்ட நபர்களுடன் உருவாக்கப்பட்டது. அதில், 2020 இல் 12 பணியாட்கள் உட்சேர்க்கப்பட்டனர்.

பொறுப்பு வாய்ந்த மற்றும் ஒழுக்க முறையான தொழில் தருநர் என்ற அடிப்படையில் HDFC வங்கி, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைக் கடுமையாக எதிர்க்கிறது. மேலும் வங்கி, அதன் பணியாட்களுக்கு சமமான நடத்துகையையும், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலையும் உறுதிப்படுத்துகிறது. இதனைவிட, வங்கி ஒரே மாதிரியான தொழில் தகைமையில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம கொடுப்பனவை மேற்கொள்கின்றது.

வைப்புகள் மற்றும் கடன் வசதிகள் என்பவற்றுக்கு தகுதியான ஆட்களுக்கு வங்கி சேவைகளை வழங்குவது மாத்திரமன்றி, கௌரவமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு HDFC வங்கி துடிப்புடன் செயற்படுகிறது. வங்கி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி மற்றும் கூட்டுறவு நிதிக் கடன் என்பவற்றை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோருக்கும், சுயதொழிலில் ஈடுபடும் தனிப்பட்ட ஆட்களுக்கும் வழங்குவதன் மூலம் அவர்கள் தமது வியாபாரத்தை ஆரம்பிக்க அல்லது அபிவிருத்தி செய்ய உதவுகிறது. அதேசமயம், இவ்வாய்ப்புகள் அவர்களுக்கு ஒரு கௌரவமான வருமானத்தை ஈட்டுவதற்கான தகைமைகளை அளிப்பதன் ஊடாக, தம்மையும் தமது குடும்பத்தையும் வழிநடத்த கௌரவமான வருமானத்தை ஈட்டித் தருகிறது.

இலக்கு 9 - கைத்தொழில், கண்டுபிடிப்பு மற்றும் உட்கட்டமைப்பு

இலக்கு இரண்டின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு, வங்கி நிதிச் சேவைகளுக்கு அணுகுதல் வழங்குவதோடு, இலக்கு 9 இல் குறிப்பிடப்பட்ட அடைவுகளுக்காக சந்தைகள் மற்றும் பெறுமதி சங்கிலிகளை அடைவதற்குரிய பொறுத்துக் கொள்ளக்கூடிய கடன்களையும் வழங்குகிறது. அது, தொடர்ந்து துறை சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும், சிறிய அளவிலான அபிவிருத்திகளுக்கும் பங்களிப்புச் செய்து வருகிறது. நிலையாதார வீடு மற்றும் வாழ்க்கைக்கு ஆதரவு அளிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் வங்கி, தொழில் முயற்சிகள் மற்றும் சிறிய அளவிலான கைத்தொழில் துறை சார்ந்தவர்களுக்கும் நிதிப் பங்களிப்பு வழங்குவதை அதிகரித்து வருகிறது.

வங்கி, 2020 இல் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து, நிதிக் கல்வியை தோற்பொருள் மற்றும் காலணி துறையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு வழங்கிய அதேவேளை, தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு, கைத்தொழில் அபிவிருத்தி சபையிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறவும் ஆற்றுப்படுத்தியது.

இலக்கு 10-சமத்துவமின்மைகளைக் குறைத்தல்

SDG 10வது இலக்கின் கீழ் 10.3.1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட குறிகாட்டிக்கு அமைவாக, 2020 இல் 12 மாத காலப்பகுதியின் போது பாரபட்சம் தொடர்பான எவ்விதமான முறைப்பாடுகளோ அல்லது குறைகளோ அறிக்கையிடப்படவில்லை என்பதை HDFC வங்கி பொறுப்புடன் உறுதிப்படுத்துகிறது.

இலக்கு 11-நிலையாதார நகரங்களும் சமூகங்களும்

குறைந்த நிதி வழிவகைகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு வீடமைப்பு அபிவிருத்திக்காக தாங்கிக் கொள்ளக்கூடிய கடன்களை வழங்குதலுடன், தொடர்புடைய வங்கியின் பணியுடன் இலக்கு 11 தொடர்புபடுகிறது. வங்கியின் பணி SDG 11 இன் 11.1 அடைவுக்கு அமைவாக, போதுமான, பாதுகாப்பான மற்றும் திருப்திச் செலுத்தக்கூடிய வீடமைப்பு மற்றும் கடன் சேவைகளை வழங்குதலை நோக்கி பங்களிப்புச் செய்கிறது. நிலையான வீடமைப்புத் தீர்வுகளுக்கான அரசாங்கத் திட்டங்களை எளிதாக்குவதுடன், வாடிக்கையாளர் திருப்திச் செலுத்தக்கூடிய கடன்கள் ஊடாக நகர வீடமைப்புக்கான கடன்களைப் பெற்றுக்கொள்ள வங்கி வழிவகுக்கிறது.

இலக்கு 16 - சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்

வங்கி சட்டமுரணான நிதிப் பாய்ச்சல்களைக் கண்காணிப்பதோடு, பயங்கரவாத நிதியுடன் தொடர்புடைய, வழமைக்கு மாறான நடவடிக்கைகளையும் கண்காணிக்கின்றது. வங்கி, 2006 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பண தூய்தாக்கல் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியிடலை ஒடுக்குகின்ற சட்டம் மீதான சமவாயம் என்பனவற்றுடன் இணங்கி நடக்கிறது.


பங்குதாரர் ஈடுபாடு

வியாபாரம் தொடர்ந்து அபிவிருத்தியடைவதனாலும், வங்கிச் செயற்பாடு தொடர்ந்து விரிவாக்கப்படுவதனாலும், பல்வேறுபட்ட பங்குதாரர்களுடனான எமது ஈடுபாடு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலான எமது பயணத்தில், ஒவ்வொரு குழுமம் மற்றும் தனிப்பட்ட பங்குதாரருடனான எமது ஈடுபாடு மற்றும் ஊடாட்டங்கள் சந்தேகமின்றி எமது உபாய நுட்ப இலக்குகளை வடிவமைத்துக் கூர்மையாக்கியுள்ளது. இது, எமது அனைத்து வியாபார நடவடிக்கைகள், செயற்பாட்டு நடைமுறைகள் என்பவற்றை வளர்ப்பதற்கும், அவற்றில் புதுமைகளைக் கண்டுபிடிப்பதற்கும் தூண்டுகையாக இருந்துள்ளது.

எமது தீர்மானங்கள், செயற்பாடுகள், உபாய நுட்பத் திட்டங்கள் என்பன தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருவதால், அத்தகைய மாற்றங்களையும், உபாய நுட்பத் தீர்மானங்களையும், ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் எவ்வாறு இருந்த போதிலும் எமது அனைத்துப் பங்குதாரர்களுக்கும் அவற்றை தெரியப்படுத்துவது எமது கடமையாகும். செயற்பாட்டுச் சூழலும், எதிர்பாராத வகையில் மாறுபடும் சூழ்நிலைக்கு மாற்றப்படுவதனால், காலத்திற்குக் காலம் வங்கி செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மீது அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்ற போது நாம் புதிய அபிவிருத்திகளையும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் பல்வேறுபட்ட தொடர்பாடல் வழிவகைகள் ஊடாக தெளிவான மற்றும் நேரடியான ஊடகங்கள் மூலம் தெரியப்படுத்த முயற்சிக்கின்றோம்.

வங்கியின் பங்குதாரர்கள் எமது செயற்பாடுகள், நிதி அடைவுகள், தீர்மானங்கள், செயற்திறன் மற்றும் சேவைகள் என்பனவற்றினால் நேரடியாகத் தாக்கமடையக்கூடிய தனிப்பட்டவர்களையும், பிரிக்கப்பட்ட குழுமங்களையும் உள்ளடக்குகிறது. இதன் விளைவாக, பங்குதாரர்களோடு ஈடுபட நாம் பயன்படுத்தும் பொறிமுறைகள் எண்ணற்ற ஊடகங்களையும் முறைகளையும் உள்ளடக்குகின்றன.

மேலும், அவர்களுடனான எமது ஈடுபாடு, அவர்களின் அக்கறைகள், அத்தகைய அக்கறைகளில் ஏற்படும் மாற்றங்கள், அவர்களின் உணர்வுகள் என்பனவற்றை இனங்காண உதவுவதோடு, மேலும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலங்களில் எவ்வாறு அவர்களுக்கு பெறுமதியான சேவை வழங்குதலை அதிகரிப்பதையும் அங்கீகரிக்கிறது. மேலும், கிரமமான அடிப்படையில் அவர்கள் ஈடுபட்டு வருவதானது, உபாய நுட்பத்துடன் முக்கியமாகத் தொடர்புபடுகின்ற விடயங்களில் அவர்களின் அறிவு மற்றும் நிபுணத்துவத்தைப் பெற்று பயனடைய உதவுகிறது.



எமது பங்குதாரர்களின் ஈடுபாடு

	பங்குதாரர்களும் முதலீட்டாளர்களும்	வாடிக்கையாளர்கள்	பணியாட்கள்	பங்குடமையாளர்களும் சேவை வழங்குநர்களும்	சமூகங்களும் சுற்றாடலும்	ஒழுங்குபடுத்துநர்கள்
பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள்	• வங்கியின் நிதிநிலைமை • காலாந்தர மற்றும் வருடாந்த நிதி மற்றும் செயற்பாட்டுச் செயற்திறன் • இணக்கம் மற்றும் ஆளுகை • இடர் முகாமைத்துவம் • உபாயநுட்பத் திட்டங்கள் • பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஒழுங்கு நடத்தை,	• வீடமைப்பு நிதியைப் பூர்த்தி செய்வதற்கான நிதித் தயாரிப்புகள் • நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க நிதித் தயாரிப்புகள் • நட்புடன் கூடிய சேவை • நிதிச் சேர்க்கை • சேவைகளுக்கும் அணுகக்கூடிய தன்மைக்குமான அணுகல் • சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஆதரவு மற்றும் அபிவிருத்தி • சேவைகள் மீதான தகவல்கள் • நிதி ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை மேம்படுத்தல • நிதி அறிவுக் கல்வி	• கொடுப்பனவும் சம்பளமும் • வெகுமதியும் அங்கீகாரமும் • பயிற்சி மற்றும் அபிவிருத்தி • ஆதரவளிக்கும் பணி கலாசாரம் • முன்னேற்றமும் வெற்றியளிப்புகளும்	• ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் • உரிய நேரத்தில் கொடுப்பனவுகள், தரகுகளைச் செலுத்துதல் • இலகு தொடர்பாடல்கள் • சிநேகபூர்வ உறவுகள் • அதிகாரித்து வரும் வியாபார வாய்ப்புகள்	• குறைந்த சேவை பெறும் சமூகங்களுக்கு உதவுதல் • சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆதரவளித்தல் • வீடமைப்புடன் தொடர்புடைய நிதி வழங்கல • சமூகங்கள் சிறிய அளவிலான வர்த்தகர்கள் மற்றும் வியாபாரத் துறைக்கு ஆதரவளித்தல் • சுற்றாடல் மீது ஏற்படும் சாதகமான தாக்கம்	• சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் சரியான நேரத்தில் இணங்கி நடத்தல் • தேசிய வீடமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளித்தல் • சிறந்த மற்றும் நேர்மையான வெளிப்படுத்தல்கள் • தேவை ஏற்படும் போது வழங்குவதற்குப் பொருத்தமான ான ஆவணப்படுத்துகையை தயார் நிலையில் வைத்திருத்தல்
ஈடுபாடும் எதிர்வெண்ணும்	வருடாந்தப் பொதுக் பொதுக்கூட்டம் (AGM) மற்றும் வருடாந்த அறிக்கை (ஆண்டு தோறும்) ஒன்றின் மீது ஒன்றாக விவாதங்கள் (தேவையேற்படின்) அறிக்கைகளுக்கும் கூற்றுக்களுக்குமான இணைய தளம் (தொடர்ச்சியான) இணைய தளத்தில் பங்குதாரருக்கான பக்கம் (தொடர்ச்சியாக) அச்சு மற்றும் ஊடகத் தொடர்பு (தேவையேற்படின்) கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்திற்கான அறிவிப்புகள் (தேவையேற்படின்) கம்பனிச் செயலாளர் (தேவையேற்படின்)	கிளைகள் (கிளை செயற்பாட்டு நேரத்தின் போது) கையக கணிப்பொறி வங்கி அலுவலர்கள் மற்றும் வருகைகள் (வாயிற்படி வருகைகளின் போது) அழைப்பு மையம் (24/7) தலைமைக் காரியாலயம் (தேவையேற்படின்) சமூக ஊடகம் (தொடர்ச்சியாக) சமூக ஊடகம் (தொடர்ச்சியாக) விளம்பரங்கள் (தொடர்ச்சியாக) சந்தைப்படுத்தல் துணை ஈடுகள் (தொடர்ச்சியாக) திருப்தியுறும் மதிப்பாய்வுகள் (ஆண்டு தோறும்)	சிறந்த வாயிற்படிக் கொள்கை (தொடர்ச்சியாக) மின்னஞ்சல்கள் (தொடர்ச்சியாக) கூட்டங்கள் (மாந்தம் மற்றும் தேவைப்படும் போது) செயற்திறன் மதிப்பீடுகள் (ஆண்டு தோறும்) வருடாந்த விருது வைபவம் (ஆண்டு தோறும்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் பயிற்சிப் பட்டறைகளும் (தொடர்ச்சியாக) குறைகளை கையாளும் நடபடி முறை (தொடர்ச்சியாக) இடித்துரைப்புக் கொள்கை (தொடர்ச்சியாக) நலன்புரி மற்றும் விளையாட்டு செயற்பாடுகள் (தொடர்ச்சியாக)	கூட்டங்கள் (தேவை ஏற்படும் போது) மின்னஞ்சல்கள் (தொடர்ச்சியாக) தொலைபேசி அழைப்புகள் (தேவை ஏற்படும் போது) உள்ளிருப்பு அல்லது அலுவலக மேற்பார்வைகள் (தேவை ஏற்படும் போது) கேள்விப்பத்திர அறிவித்தல்கள் மற்றும் விநியோகத்தர் / சேவை வழங்குநர் தெரிவு செயன்முறை (தேவை ஏற்படும் போது)	ஊடகத் தொடர்பாடல் மற்றும் ஊடக வெளியீடுகள் (தேவை ஏற்படும் போது) இணைய தள அறிவித்தல்கள் (தேவை ஏற்படும் போது) சமூகம் சார்ந்த நிகழ்வுகள் (எப்போதாவது)	அறிவித்தல்களும் அறிவிப்புகளும் (தேவை ஏற்படும் போது) மகாநாடுகள், மன்றங்கள் மற்றும் கூட்டங்கள் (தேவை ஏற்படும் போது) கட்டாயமாக்கப்பட்ட இணக்கம் மற்றும் கணக்கியல் சமாப்பிப்புகள் (காலாந்தர அடிப்படையில்) காலாந்தர கணக்காய்வுகள் (காலாந்தர அடிப்படையில்) SEC அறிவிப்புகள் (தேவை ஏற்படும் போது)

வர்த்தகப் பிரிவுகள்

சில்லறை மற்றும் நிறுவன ரீதியான வைப்புகள்


நாட்டில் முடக்கம் ஆரம்பிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் போது, அது நிச்சயமற்ற தன்மையைத் தோற்றுவித்தது. எனினும், அது, நிலையாதார வளர்ச்சியை உச்ச அளவில் ஏற்படுத்துவதற்கான சூழலையும் உருவாக்கியது. ஏற்பட்ட சூழ்நிலைகளுக்கு அமைய, வங்கியின் வைப்புத் தளத்தில் நிறுவன ரீதியாக வைப்புகளில் இறக்கம் ஏற்பட்டது. எனினும், இவ்வருடத்தின் போது சில்லறை வைப்புகளில் அதிகரிப்பு காணப்பட்டன. நிறுவன ரீதியான, அரச சார்பு நிதியங்களின் மீள் எடுப்பு, சில்லறை வைப்புகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கியன. சில்லறை வைப்புகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த அதிகரிப்பு, ஏப்ரல், மே மற்றும் நவம்பர் மாதங்களில் எடுக்கப்பட்ட மீள் எடுப்புகளினால் ஏற்பட்ட இடைவெளியை ஈடு செய்வதற்கு பங்களிப்புச் செய்தன. இந்த மூன்று மாதங்களும் முடக்கங்கள், பயண மற்றும் சமூக நடவடிக்கைகளில் வரையறைகள் விதிக்கப்பட்டிருந்தன.

2020 ஆம் ஆண்டின் நிதியாண்டில், நிலையான வைப்புகள் ரூபா 40.50 பில்லியனுக்கும் அதிகமாக இருந்து 12.72% வளர்ச்சியை காட்டியது. மொத்த வைப்பு போட்போலியோவில் இந்த வைப்பு 84%ஐ பங்களிப்பு செய்கிறது. பொது சேமிப்புகள் 16% வைப்புகளுக்கு பங்களிப்புச் செய்ததோடு, மொத்த சேமிப்புத் தளத்தை ரூபா 48 பில்லியனாக உருவாக்கியது.

ஏப்ரல் மற்றும் மே மாத காலப் பகுதிகளில் நிறுவன வைப்புகளில் ஏற்பட்ட மீள் எடுப்புகளின் தாக்கத்தினால் நிலையான வைப்புகளில் சரிவு காணப்பட்டது. எனினும், உடனடியான மேம்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் வாடிக்கையாளருக்கு அளிக்கப்பட்ட வெகுமதிகள் காரணமாக, சில்லறை வைப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்த வைப்புத் தளத்தைப் பேணக்கூடியதாக இருந்தது. மேலும், பரந்தளவிலான நிச்சயமற்ற தன்மை காரணமாக, வைப்புகளை நோக்கி மக்களின் உணர்வு சரிவடைந்தது.


2020 இல் சில்லறை வாடிக்கையாளர் வைப்புகள் 39% அதிகரிப்பை ஏற்படுத்தி, கூட்டுறவு வைப்புகளில் 3மு வீழ்ச்சி ஏற்பட்டு, மொத்த வைப்பு நகர்வு 13% ஆல் வளர்சியடைந்தது.

வைப்பு போட்போலியோ




வைப்புத் தளத்தின் பெரும்பகுதியை சில்லறை வாடிக்கையாளர் வைப்புத் தொகை கொண்டுள்ளது. அதேசமயம், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி வைப்புகள் மற்றும் கூட்டுறவு வங்கி அடிப்படையிலான வைப்புகள், வாடிக்கையாளர் பிரிவுகள் தொடர்பாக அடுத்து இடம் பெறுகிறது.

LCR-அடிப்படையிலான வாடிக்கையாளர் பிரிவு



வைப்பு வாடிக்கையாளர் பிரிவு 2020



உபாயநுட்ப இலக்குகள்


வங்கி தற்போது, தயாரிப்பு பன்முகப்படுத்தல் மற்றும் தயாரிப்பு அடிப்படையிலான பெறுமதி சேர்க்கைகள் என்பவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் வைப்பு நகர்வை அதிகரிக்க எண்ணியுள்ளது. நிதி வருடத்தின் போது, நிலையான வைப்புகள், சிறுவர் சேமிப்புகள் மற்றும் பொது சேமிப்புகளில் ஏற்பட்ட வளர்ச்சி என்பன அதிகரித்து வரும் வைப்பு நகர்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் தயாரிப்புகளாகும்.

வங்கி, அதிகரித்து வரும் வருமானத் தகைமைகள் மற்றும் வைப்பு நகர்வு வாய்ப்புகள் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் அதிகரித்து வரும் தொழில் விகிதம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு சம்பள அடிப்படையிலான சேமிப்புத் திட்டங்களை புதிதாக அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறது.

சில்லறை மற்றும் நிறுவன ரீதியான கடன்கள்

HDFC வங்கியின் மொத்த கடன் போட்போலியோ, அடகு அடிப்படையிலான வீடமைப்புக் கடன்களில் ஓரளவு சரிவையும், ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான வீடமைப்புக் கடன்களில் ஓரளவு அதிகரிப்பையும் உள்ளடக்குகிறது. உத்தரவாதம் அளிக்கப்படுபவர்களினால் ஏற்படுத்தப்பட்ட வீட்டுக் கடன்கள், இவ்வருடத்தின் போது ரூபா 483 மில்லியனால் குறைவடைந்துள்ளது. மேலும், இவ்வருட காலப்பகுதியின் போது, தங்கக் கடன்கள் மற்றும் நிதிக் கடன் வசதிகளைப் பெறும் வாடிக்கையாளர்களின் தொகையில் ஓரளவு அதிகரிப்பு காணப்பட்டது.


இணை வாரியான பங்கீடு



செயலூக்கமற்ற கடன்கள் (NPLs)

வங்கித் துறைக்குள் செயலூக்கமற்ற கடன்களின் (NPL) அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் HDFC வங்கியின் செயற்திறன் சாரா கடன் விகிதம் 2019 ஆம் ஆண்டில் 25.25% இல் இருந்து இவ்வருடத்திற்குள் 33.04% ஆக அதிகரித்துள்ளது. தங்கக் கடன்கள் போட்போலியோவில் உள்ள NPL தொடர்புடைய காலப்பகுதியில் 3.85% இல் இருந்து மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் 3.33% ஆகக் குறைவடைந்தது.

கடன் போட்போலியோவின் பிரிவு %



கடன் தவணை உரிமை மற்றும் தொழிற்பாட்டு மூலதனக் கடன்கள்

2020 ஆம் ஆண்டில் வங்கியின் சேவைகள் ஆயிரக் கணக்கானோருக்கு உயிர் நாடியாக வந்துள்ள போது, வங்கி அதன் சிறந்த சேவையை வழங்கியது. HDFC யின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கும், கூட்டுறவு வாடிக்கையாளர்களுக்கும், நிதி நிலைத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு நிதி இடைத்தரகர் என்ற வகையில், வங்கி இலங்கை மத்திய வங்கியின் 'சௌபாக்கிய' தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் கீழ் நிதிகளை விநியோகித்தது. வங்கி, மேலும் 2020 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட முன்னர் நிலுவையாக இருந்த கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்த கடன் பெறுநர்களுக்கு கடன் செலுத்தத் தவறியமைக்கான கட்டணத்தை விடுவித்து, அவர்களின் கடன்களை மீளமைக்க ஏற்பாடு செய்து, சீர்திருத்தங்களையும் மேற்கொண்டது.

வாடிக்கையாளர்களை வியாபாரத் தடங்கல்களிலும், வருமான இழப்புகளிலும் இருந்து மீட்பதற்காக தொற்று நோயினாலும், முடக்கல் நிலைகளினாலும் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு ஆதரவளிக்கும் வகையில், வங்கி ரூபா 56 மில்லியன் தொகையைக் கடனாகவும் தொழிற்படு மூலதனக் கடனாகவும் வழங்கியது.

உபாயநுட்ப இலக்குகள்

வங்கியின் நிலையாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வரும் வங்கி, கடன் போட்போலியோவின் வளர்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை முன்னேற்றுவதிலும் அக்கறை செலுத்துகிறது.

நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், மொத்த சுழற்சி நேரத்தைக் குறைக்கவும், பணிப்பாய்வுகளை மறுசீரமைக்கவும், தற்போது கடன் செயன்முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வங்கி முன் இறுதி மற்றும் பின் இறுதிக் கடன் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தும் அதேவேளை, வரையறுக்கப்பட்ட வீடமைப்பு நிதி பன்முகப்படுத்தலுக்கு மேலதிகமாக கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக் கடன்கள், தங்க அடிப்படையிலான கடன்கள், தனியார்துறை ஊழியர்களுக்கான பணியாளர் கடன்கள் ஆகிய புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு வங்கி திட்டமிட்டு வருகிறது. வியாபார வளர்ச்சிக்காக அதி உயர் வருமானம் பெறும் வாடிக்கையாளர்களை இடர் அடிப்படையிலான விலையிடல் சூத்திரங்களின் மீது கவர்வதற்கு நடவடிக்கை எடுப்பதிலும் வங்கி கவனம் செலுத்தி வரும் அதேவேளை, தற்போதுள்ள மற்றும் புதிய தயாரிப்புகள், மிதக்கும் வட்டி வீதங்களுடன் பூர்த்தி செய்யப்படும்.

கடன் செயற்பாட்டை முன்னேற்றுவதிலும், கடன் தரத்திலும், புதிய நெறி பிறழ்வு முகாமைத்துவ முறைமை பற்றியும், கடன் மதிப்பீடு பற்றியும் பணியாட்களுக்கு பயிற்சி அளிப்பது முக்கிய அங்கமாகும். வங்கியின் செயற்பாடுகள் உண்மையாக வெற்றியளிப்பதற்கு கடன் செயன்முறைகளில் ஆக்கத்திறனை உறுதிப்படுத்த, இவ் உபாய நுட்பங்கள் தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது.

வர்த்தகப் பிரிவு

அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிதி

தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட வருடத்துக்கான திட்டங்களுடன் வங்கியின் கூட்டுறவு நிதி மற்றும் அபிவிருத்தி அலகு, வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும், கூட்டுறவு வாடிக்கையாளர்களுக்கும் நிதி நிவாரணத்தையும், கடன்களையும் வழங்குவதில் கவனம் செலுத்தியது.

தற்போது, அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'சௌபாக்கியா' மற்றும் 'சுவசக்தி' ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் நிதி வசதிகளுக்கு மேலதிகமாக, வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி போட்போலியோ வங்கிக்கான குறிப்பான நிதித் திட்டங்களை உள்ளடக்கி இருக்கின்றது.

8,000 பேரைக் கொண்ட வாடிக்கையாளர் தளத்துடன் போட்போலியோ, பால் உற்பத்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரும்பகுதியான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. வங்கி, அவர்களின் தேவைகளை தொடர்ச்சியாக அங்கீகரித்து, உற்பத்தியை அதிகரிக்கவும், சந்தை இடர்களைத் தவிர்க்கவும் கூடிய வகையில் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் வகையில் கடன்களை வழங்குகிறது. 2020 ஆம் ஆண்டில் வங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறைகளுக்கு ரூபா 278.71 மில்லியன் கடனை வழங்கியது. 'சௌபாக்கியா ஊழுஏஐனு-19 மறுமதிப்பீட்டு வசதி' யின் ஒரு பகுதியாக நிதிச் சேர்க்கையானது, கடந்த வருடத்தில் இருந்த ஸ்திரமற்ற சூழலில் கடன்களை வழங்குவதில் உள்ள இடர் அதிகரித்தமையின் காரணமாக, 2019 உடன் ஒப்பிடுகையில், 2020 இல் வழங்கப்பட்ட பெறுமதியில் வீழ்ச்சி காணப்பட்டது.

அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட சுவசக்தி கடன் திட்டத்தின் கீழ் HDFC வங்கி கடந்த வருடங்களில் மொத்தமாக ரூபா 32.20 மில்லியன் கடன் தொகையை வழங்கியது. இத்திட்டத்தின் ஊடாக வங்கி ரூபா 500,000 க்கு குறைந்த கடன் தொகைகளை வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கும், புதிய வியாபார தொடங்குநர்களுக்கும் ரூபா 50,000 மானியத்துடன் கடன் வழங்கப்பட்டது. இந்தத் திட்டங்களின் கீழ் உள்ள பல அனுகூலங்களை வாடிக்கையாளர்களுடன் பங்கிடுவதில் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நுண் அளவிலான முயற்சியாளர்கள் ஆகியோரை மேம்படுத்துவதற்கும் அரச திட்டத்தை நடத்துவதற்கும் பங்களிப்புச் செய்கிறது.

இந்த வருடத்தின் போது இவ்வலகு தோல் பொருட்கள் மற்றும் பாதணி உடன் தொடர்புடைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் (IDB) இணைந்து உதவி வழங்கியுள்ளது. இந்த முயற்சிகள் மூலம் IDB யிடம் இருந்து வாடிக்கையாளர்கள் கைத்தொழில் துறை அனுசரணையைப் பெற்றுக்கொள்வதை இயலச் செய்கின்ற அதேவேளை, IDB யின் பாதணி மற்றும் தோல்பொருள் கைத்தொழில் உறுப்பினர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வங்கி எதிர்பார்த்தது. IDB யின் காப்பகத் திட்டங்கள், சந்தைத் தொடர்புகள் மற்றும் அனுசரணைச் சேவைகள் என்பன தொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்கு மகத்தான சேவையை வழங்கி வருகிறது.

சிறிய அளவிலான கைத்தொழில்கள் மற்றும் உள்ளூர் வர்த்தகங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி தற்போது பத்திக், கைத்தறி மற்றும் ஏனைய அதுபோன்ற வர்த்தகங்களில் ஈடுபடுவோருக்கு உதவி வழங்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. வங்கி கைத்தறி வர்த்தகத்தை வளர்ந்து வரும் துறையாக ஊக்குவிப்பதற்கு சாத்தியமான உள்ளூர் திறமைகளை இனங்காண்பதற்கு பத்திக் அமைச்சுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறது. கலந்துரையாடல்கள் ஒரு குறுகிய காலப் பகுதிக்கு தொடர்வதுடன், இந்த மூலோபாயத்தின் மூலம் திட்டங்கள் நீடிக்கப்படும்.

நிலையான நிதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ஒரு புதிய முயற்சி என்ற அடிப்படையில் வங்கி சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய கைத்தொழில்களுக்கு நிதி ரீதியாக ஆதரவளிக்க 'பசுமை காலநிலை நிதியத்துடன்' பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறது. HDFC தற்போது படிப்படியாக நிலையாதார அடிப்படையிலான நிதியிடலை அதிகரிப்பதிலும், நிலையாதார சக்தி மீதான தேசத்தின் கொள்கைகளிலிலும் கவனம் செலுத்தி வருகிறது. இந்த முயற்சியின் கீழ் வங்கி, பசுமை கட்டடங்கள், கலப்பின வாகனங்கள் என்பவற்றுக்கும் ஏனைய நிலையாதார சூழல் நட்புறவுடனான தீர்வுகளுக்கு நிதி வழங்குவதிலும் அக்கறை காட்டி வருகிறது.

கட்டட நிர்மாணத் துறையில் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றமையினால், எதிர்காலத்தில் இத்திணைக்களம் அத்துறையில் கவனம் செலுத்தவுள்ளது. அண்மைக் காலத்தில் குத்தகை மற்றும் கல்வி தொடர்பான கடன்கள் அதனைத் தொடர்ந்து நுண் நிதி மற்றும் கூட்டுறவு நிதி என்பவற்றில் வங்கி கவனம் செலுத்தியதைத் தொடர்ந்து, வங்கி, வீடமைப்பு சாரா கடன்கள் மற்றும் நிதியிடல் முயற்சிகளில் அக்கறையுடன் கவனம் செலுத்தி வருகிறது.

தயாரிப்பு போட்போலியோ

- கடன்கள்

கெதெல்ல



சொத்து அடைமானத்தின் மீதான வீட்டுக் கடன் திட்டம்.

ஷ்ரம உதான



ஊழியர் சேமலாப நிதிய மீதிக்கு அமைவான ஊழியர் சேமலாப உறுப்பினர்களுக்கான வீட்டுக் கடன்

லைப்ஸ்டைல் லோன்



பரிந்துரைக்கப்பட்ட விநியோகத்தர்கள் ஊடாக வீட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

சிட்டு செவன



உங்கள் வாழ்க்கை முறைக்கு உகந்த வகையிலான பெறுமதி சேர்க்கப்பட்ட ஒரு வீட்டுக் கடன்

கல்விக் கடன்



உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான கடன் திட்டங்கள்

வாகனக் குத்தகை



தனிப்பட்டவர்கள் மற்றும் வர்த்தகங்களுக்கான வாகனக் குத்தகை

சிரிசர வீட்டுக் கடன்



வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத்தரங்களை உயர்த்துவதற்கான மேம்படுத்தப்பட்ட வீட்டுக் கடன்

திரிய அண்ட் விருதிரிய



அரசாங்க ஓய்வூதியக்காரர்களுக்கும், யுத்தத்தினால் இறந்த வீரர்களின் பயனாளிகளுக்கும், பல்வேறு நிதித் தேவைகளுக்கு உதவும் பொருட்டு உருவாக்கப்பட்ட கடன் திட்டம்

தங்கக் கடன்



உடனடி நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தங்கத்தின் பெறுமதிக்கு ஏற்ப வழங்கப்படும் கடன்கள்

கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிதி



சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி மற்றும் சிறிய மற்றும் தொழில் முயற்சிகளுக்கு உதவி வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட தனித்துவமான கடன் திட்டங்கள்

- சேமிப்புகள்



விசேட அனுகூலங்களுடன், நாடு பூராகவுமுள்ள ATM வலையமைப்புகள் ஊடாக பணம் மீளப் பெறுதல், நிகழ்நிலை வங்கி வசதிகள் மற்றும் நடமாடும் வங்கிச் சேவை ஆகிய அனைத்தையும் கொண்ட கிரமமான சேமிப்புக் கணக்கு



நெகிழ்வுத் தன்மையுடைய வைப்புத் தெரிவு மற்றும் சந்தையில் அதிகூடிய சாத்தியமான வட்டி வீதங்களுடன் கூடிய, வெல்ல முடியாத அனுகூலங்களுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு ஓய்வூதியத் திட்டம்



இளைஞர்கள் தங்களின் எதிர்காலத்தைத் திட்டமிட உதவும், செல்வத்தை உருவாக்கும், தனித்துவமான திட்டம். இது, வைப்புகளுக்கான சந்தை விகிதங்களைவிட அதிகமான வட்டியை ஈட்டித் தரும்.



திலின ரெக்கவரண திட்டத்தின் அதே அம்சங்களுடன்கூடிய தமிழ் பேசும் சமூகத்திற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வங்கியின் முதலாவது நிதித் தயாரிப்பு.



சந்தையின் வட்டி வீதங்களைவிட கூடிய வட்டியைப் பெற்றுக்கொடுக்கும் சிரேஷ்ட பிரசைகளுக்கான ஒரு நிலையான வைப்புத் திட்டம்.



சிறுவர்களின் எதிர்கால நிதிப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கான தனித்துவமான முதலீட்டுத் திட்டம்.



அதிகரித்து வரும் சேமிப்பு மீதியுடனான, கவர்ச்சிகரமான, பரிசுத் திட்டங்களுடன் கூடிய சிறுவர் சேமிப்பு




ஓய்வூதியத்திற்கு முன்னரும், ஓய்வூதியத்திற்குப் பின்னரும், கணக்கு வைத்திருப்பவரையும், அவரது குடும்பத்தையும் பாதுகாப்பதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட காப்புறுதியினால் ஆதரவளிக்கப்படும் ஓய்வூதியத் திட்டம்.



குறுகிய காலத்திற்குள் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய விரும்புவர்களுக்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான ஒரு சேமிப்பு

கிளைகளின் விபரம்

1. கொழும்பு
2. ஹோமாகம
3. ஹொரண
4. ஹயிட் பார்க்
5. நுகேகொட
6. பிலியந்தல
7. அவிஸாவளை
8. கம்பஹா
9. ஜா-எல
10. கிரிபத்கொட
11. நிட்டம்புவ
12. பேலியகொட
13. பதுளை
14. மொனராகல
15. திஸ்ஸமஹாராம
16. இரத்தினபுரி
17. அம்பாறை
18. மட்டக்களப்பு
19. நுவரெலியா
20. களுத்துறை
21. அம்பலாங்கொடை
22. காலி
23. மாத்தறை
24. தங்காலை
25. எம்பிலிப்பிட்ய
26. யாழ்ப்பாணம்
27. வவுனியா
28. சிலாபம்
29. குளியாப்பிட்டி
30. நிக்கவரெட்டிய
31. அநுராதபுரம்
32. பொலன்னறுவை
33. திருகோணமலை
34. தம்புள்ள
35. கேகாலை
36. மாத்தளை
37. குருநாகல்
38. கண்டி
39. கம்பஹா



கிளைகளின் எண்ணிக்கை

39

உபாயநுட்ப நுட்ப நோக்கு

வங்கியின் தலைமைத்துவம், 2019 ஆம் ஆண்டிலிருந்து வங்கியின் எதிர்வுகூறப்பட்ட உபாய நுட்பத் திசையுடன் தனது இலக்குகளை ஒத்திசையக்கூடிய செயன்முறையில் ஈடுபடுகிறது. இதனைவிட, சபையின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், வெளியகச் சூழலில் இருக்கக்கூடிய ஏற்ற இறக்கங்கள் மற்றும் தொற்று நோயினால் ஏற்பட்ட பாதிப்புகள் என்பவற்றுடன் வங்கி 2020 இல் வலுவான உபாய நுட்பத் திட்டத்தை வடிவமைக்கத் தீர்மானித்துள்ளது. வங்கியின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு முக்கிய பரிமானங்கள் மீது உருவாக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்படுத்துகையான ரூபா 7.5 பில்லியனை அடைவது அதன் உடனடி இலக்காகும். வங்கியின் மூலதனப் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதன் ஒரு பகுதியாக அமைவதற்கு இது முக்கிய காரணியாகும்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை, 2021-2025 ஆம் ஆண்டுக்கான விரிவான உபாய நுட்பத் திட்டத்தின் கண்ணோட்டத்தைத் தருகிறது.

உபாயநுட்பத் துறை	இலக்கு	செயற்திட்டம்
இலாப வளர்ச்சி	வட்டியல்லாத வருமானம் மற்றும் இலாபத்தன்மையின் அதிகரிப்பு	காப்புறுதிதாரர்கள் மற்றும் தரகர்களை நியமித்த கொள்கைகள் பன்முகப்படுத்தப்பட்ட குறைந்த செலவிலான நிதித் தளம் அதிகரித்த பட்டியல் கொடுப்பனவு சேகரிப்பு அதிகரித்த டிஜிட்டல் கொடுப்பனவுகளும் நிதி மாற்றங்களும்
சந்தை வளர்ச்சி	பன்முகப்படுத்தப்பட்ட கடன் வழங்கு தயாரிப்புகள் மற்றும் தீர்வுகள்	உயர் வருமான வாடிக்கையாளர்களுக்கான தீர்வுகள் நிதியிடல் அபிவிருத்தித் திட்டங்கள் மிதக்கும் விகித தயாரிப்புகள் மேம்படுத்தப்பட்ட கூட்டுறவுக் கடன் செயற்திறன் கொண்ட வாடிக்கையாளர்களுக்கான முன்னுரிமை வட்டிகள் தனிப்பட்ட/குறுக்கு விற்பனை தற்போதுள்ள கடன்களின் பன்முகப்படுத்தல்
	ஆதிகரித்த சில்லறை வைப்பு உள்ளடக்கம்	சிறுவர்களுக்கான சேமிப்புகள் மற்றும் பொதுச் சேமிப்புகளுக்கான கவர்ச்சிகரமான பரிசுகள் தொழில் வல்லுநர்களுக்கான புதிய சேமிப்புக் கணக்குகள் சிறுவர்களின் சேமிப்புகளை ஊக்குவித்தல் அடிக்கடி நடத்தப்படும் சேமிப்பு ஊக்குவிப்பு பிரசாரங்கள்
	சிறுமணி வைப்பு போட்போலியோ	நிலையான வைப்பு போட்போலியோவில் தனித்த வைப்பாளர் செறிவுக்கு வரையறுத்தல்
	அதிகரித்த சந்தை ஊடுருவல்	அதிகரித்த விளம்பரம் கிளை வலையமைப்பை விஸ்தரித்தல் டிஜிட்டல் தொடுகை முனையங்களை விஸ்தரித்தல் கையகக் கணிப்பொறி செயற்பாடுகளை விஸ்தரித்தல்
ஆக்கத் திறன்	செயற்பாட்டு வினைத்திறன்களையும், செயன்முறைகளையும் முன்னேற்றுதல்	பணிப்பாய்வுகளை மீளாய்வு செய்தலும், சிக்கலான நடவடிக்கைகளை அகற்றுதலும்/கடன் செயலாக்கம் மற்றும் நெறிப்படுத்தும் நேரத்தைக் குறைத்தலும் காகிதமற்ற டிஜிட்டல் செயன்முறைகள்
டிஜிட்டல் மயமாக்கல்	டிஜிட்டல் தொடுகை முனையங்களையும், டிஜிட்டல் வங்கிச் சேவைகளையும் அதிகரித்தல்	வங்கி mobile யீ களை அபிவிருத்தி செய்தல் இணை முத்திரை டெபிட் அட்டையை அமுல்படுத்துதல் புதுப்பிக்கப்பட்ட வங்கி இணைய தளம் அதிகரித்த சமூக ஊடக இருப்பு
நியதிச்சட்டத் தேவைப்பாடும் இணக்கமும்	இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்படுத்துகை	குறைந்தபட்ச மூலதனமாக ரூபா 7.5 பில்லியனை அடைதல்
	முன்னேற்றமடையும் மூலதன போதுமை விகிதம்	உயர் இலாப தக்கவைப்பு
	குறைக்கப்பட்ட செயற்திறனற்ற கடன் விகிதம்	குறை இடர் எடை உள்ள சொத்துக்களில் கவனம் செலுத்துதல் உயரிய வருமான வாடிக்கையாளர் தளத்தைக் குறி வைத்தல் புதிய கடன்களின் தரத்தை அதிகரித்தல் கடன் சேகரிப்புகள் மீது உன்னிப்பான பின்தொடரலை ஊக்குவித்தல் DMS ஐ வினைத்திறனாகப் பயன்படுத்துதலும், தொடர்ச்சியான பயிற்சியும், விழிப்புணர்வு உருவாக்கமும் கடன் மதிப்பீடு மீது கவனம் செலுத்தப்படும் பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நிலையான நிறுவனங்களில் இருந்து வரும் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் வாடிக்கையாளர் - வங்கி உறவுகளைத் தொடர்ந்து வலுவூட்டல் நெகிழ்ச்சித் தன்மையுடைய மீள் கொடுப்பனவுத் தெரிவுகள் தலைமை அலுவலக DMS இன் தொடர்ச்சியான மற்றும் வழமையான பின்தொடர்புகள்
பங்குதாராகள்	மேம்படுத்தப்பட்ட பங்குதாரர் ஈடுபாடு	தொடர்ச்சியான உயர் இலாபத்தன்மை புதிய பங்குலாபக் கொள்கை ROA , 1% வருடாந்தம்
பணியாட்கள்	பணியாள் தொகுதி ஆக்கத்திறனையும் ஊக்குவிப்பையும் மேம்படுத்தல்	தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கு வெளிவாரி உள்ளக மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை அளித்தல் அதிகரிக்கப்பட்ட பொறுப்புக்கூறும் தன்மை இடைவெளிகளைக் கண்டறிய திறன் இடைவெளி மதிப்பீடுகள் மென்திறன் அபிவிருத்தி முகாமைத்துப் பயிற்சி ஆட்சேர்ப்பு



கூட்டுறவு செயன்முகமை

தலைவரின் செய்தி




திருமதி வசந்தி மஞ்சநாயக்க

தலைவர்

இத்தொற்று நோய், எமது வாழ்க்கையில் ஒரு முக்கியமான தருணமாகும். அது, தொடர்ந்து வரவிருக்கும் பல ஆண்டுகளில் நாம் எவ்வாறு வாழ்கிறோம், நடந்து கொள்கிறோம் என்பதைத் தீர்மானிக்கும். அதன் தாக்கத்தை எம்மால் முழுமையாக உணர முடியாத போதிலும், எமது பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக, மில்லியன் கணக்கான இலங்கையர்களின் வாழ்வாதாரத்தையும், வியாபாரத்தையும் பாதித்துள்ள அதேவேளை, இத்தொற்று நோய் மற்றும் நாட்டை முடக்குதல் என்பவற்றின் காரணமாக, நாட்டின் பொருளாதாரம் மீது சீர்குலைவு ஏற்பட்டது என்பது உண்மையான விடயமாகும். செயற்பாட்டுச் சூழல் ஏற்ற இறக்கத்துடன் கூடிய ஒன்றாகவும், ஸ்திரமற்ற தன்மையுடையதாகவும் இருந்த போதிலும், வங்கி சகல இடர்களையும் எதிர்கொண்டு, தேசம் பூராகவும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு தனது சேவையை வழங்கியது.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், எமது வரிக்கு முந்திய இலாபம் ரூபா 137 மில்லியனால் அதிகரித்து, ரூபா 1.4 பில்லியனைக் காட்டியது. இந்த வெற்றி, 2020 ஆம் ஆண்டின் அழுத்த மட்டங்கள் மற்றும் கடினமான சூழ்நிலைகளில் அமைந்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். எச்சரிக்கையுடன் கடந்து வந்த 12 மாதங்கள் இருந்த அதேவேளை, இந்தக் காலப்பகுதி எமது பின்னடைவை சோதனை செய்த ஒரு காலமாக அமைந்ததோடு, எமது ஆளுகை மற்றும் இடர் கட்டுப்பாடுகளில் திறன்களையும் அதிகரித்தது. வங்கி, குறுகிய காலப்பகுதியில் செயற்பாட்டுத் தொடர்ச்சியை அடைந்துள்ளதோடு, அர்ப்பணிப்புள்ள எமது பணியாளர் உறுப்பினர்கள் ஊடாக சேவைகளை மீளவும் ஆரம்பித்துள்ளது. வங்கிச் செயற்பாடுகள், ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மீள ஆரம்பிக்கப்பட்டதோடு, எமது நிகழ்நிலைத் தளம், எமது வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிகழ்நிலை வங்கி அனுபவத்தை வழங்கும் பொருட்டு தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டது.

வரிக்கு முந்திய இலாபம் ரூ.மில்



இலங்கையில் தொற்று நோய் தாக்கத்திற்கு முன்னரே ஒரு மூலோபாயக் கண்ணோட்டத்தில் நாம் படிப்படியான நவீன மயமாக்கல் பாதையிலும், உபாயநுட்ப செயற்பாட்டு மாற்றங்களிலும் எம்மை ஈடுபடுத்தி இருந்தோம். 2020 ஆம் ஆண்டில் காலடி வைத்த போது, வங்கி எமது வைப்புகளை அதிகரிப்பதிலும், கடன் தொகையை வளர்ப்பதிலும், சொத்துக்களின் தரத்தை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தியது. அத்துடன், முக்கியமாக, வங்கி எமது சேவைப் போட்போலியோவுக்கு டிஜிட்டல் கருவிகளையும் தகவல் தொழில்நுட்பத்தையும் உட்புகுத்துவதில் அக்கறை காட்டியது.

தலைவரின் செய்தி

தேசத்தைப் பாதுகாத்தல்

2020 மார்ச் 17 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்ட ஆரம்ப முடக்கத்தை அடுத்து, ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ், இலங்கை மத்திய வங்கி மார்ச் 19 ஆம் திகதியில் இருந்து நிதி நிவாரணம், பொருளாதார மீட்பு என்பவற்றுக்காக அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. மார்ச் 24 ஆம் திகதி சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டு, தனிப்பட்டவர்கள் மற்றும் வர்த்தகர்களின் நிதிப் பொறுப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு, பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது முக்கியமாக, குத்தகை மீதான தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட கடன்கள் என்பவற்றுக்கு கடன் தவணை உரிமைகளை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அத்துடன், வர்த்தகங்களுக்கான நிதியுதவியையும் அறிமுகப்படுத்தியது. இங்கு குறிப்பிடப்பட்ட சலுகை வசதிகளை, எதிர்கால மாதங்களிலும் விரிவாக்குவதற்காக, திருத்தப்பட்ட அதேவேளை, இலங்கை மத்திய வங்கி, நிதி வங்கிகளின் போதுமான திரவத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு, விசேட ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

ஒழுங்குபடுத்தல்கள், இருப்புகள் தளர்த்தப்பட்டமையினால் HDFC வங்கி, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ளவர்கள், அரச மற்றும் தனியார் தொழிற்துறை சார்ந்தவர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளோர் ஆகியோரையும், அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் என்பனவற்றையும் பிரதானமாக உள்ளடக்கிய வாடிக்கையாளர்களை உடனடியாக அடையும் பணியை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளை உடனடியாக அறிவிப்பதற்கு, எமது அனைத்து தகுதிவாய்ந்த வாடிக்கையாளர்களும் இந்த ஏற்பாடுகளை பெற்றுக்கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எமது வாடிக்கையாளர்களில் சுமார் 24,000 பேரின் கடன் தவணை உரிமை அனுகூலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் தாழ்மையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், எமது வங்கி, அவர்களின் தகுதி, வர்த்தகப் பிழைப்புக்கான உதவி என்ற அடிப்படையில் சுமார் 70% ஆன சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு நிதியுதவிகளை வழங்கியது.

அரசாங்க அதிகாரிகளினால், பயனாளிகளிடையே 2020 ஆம் ஆண்டு பங்கிடப்பட்ட சமூர்த்தி அடிப்படையிலான வைப்புகளை மீளப் பெற வங்கி வழிவகுத்தது. சிறிய மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்கள், சுய தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் நிதி ரீதியாகப் பாதிக்கப்பட்டோர் ஆகியோர் மீது வலுவான கவனத்தை அளிக்கும் ஒரு விசேட வங்கி என்ற அடிப்படையில் HDFC வங்கி, இந்தப் பலவீனமான காலப்பகுதியில், நிதி ரீதியாகப் பாதிக்கப்பட்ட எமது வாடிக்கையாளர்களை அணுகுவதில் எமது பங்குதாரர்கள் மற்றும் பங்குபற்றுநர்கள் ஆகியோரால் எதிர்பார்க்கப்பட்டவாறு அதன் கடமைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

பகிரப்பட்ட பெறுமதியை வளர்த்தல்

நிதி நிவாரணம் மற்றும் ஏனைய சலுகைகளை நாம் தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். எமது முழுமையான கவனமும், செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதிலும், உபாயநுட்பத் திட்டங்களை விரைவுபடுத்துவதிலும் உறுதியாக இருந்தது. 2020 ஆம் ஆண்டில், கூட்டுறவு முகாமைத்துவத்துடன், சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் திரு. பாலித கமகே அவர்களும் இணைந்து, 2021-2025 ஆம் ஆண்டுக்கான உபாய நுட்பத் திட்டத்தைத் திருத்தி மீள் வடிவமைத்துள்ளனர். இந்தப் புதிய திட்டம் எமது சந்தை மற்றும் நிதி நிலைமைகளை மேம்படுத்துவதில் அதற்கான தொனியையும் வேகத்தையும் அமைத்துள்ளது.

இலங்கையில் தொற்று நோய் தாக்கத்திற்கு முன்னரே ஒரு மூலோபாயக் கண்ணோட்டத்தில் நாம் படிப்படியான நவீன மயமாக்கல் பாதையிலும், உபாயநுட்ப செயற்பாட்டு மாற்றங்களிலும் எம்மை ஈடுபடுத்தி இருந்தோம். 2020 ஆம் ஆண்டில் காலடி வைத்த போது, வங்கி எமது வைப்புகளை அதிகரிப்பதிலும், கடன் தொகையை வளர்ப்பதிலும், சொத்துக்களின் தரத்தை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தியது. அத்துடன், முக்கியமாக, வங்கி எமது சேவைப் போட்போலியோவுக்கு டிஜிட்டல் கருவிகளையும் தகவல் தொழில்நுட்பத்தையும் உட்புகுத்துவதில் அக்கறை காட்டியது. எமது திட்டங்கள், எம்முடைய கூட்டுறவு நிதி மற்றும் அபிவிருத்திப் போட்போலியோ என்பவற்றில் தீவிரமாக பின்தொடர்வதை உள்ளடக்குகின்றது. அத்துடன், நடைமுறைச் சிக்கல்களைக் குறைப்பதிலும் எமது கவனம் தங்கியுள்ளது.

எமது வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கிய நிதித் தாக்கங்களை எதிர்கொள்வதற்கான திசையை மாற்றுவதற்கு, நாம் கட்டாயப்படுத்தப்பட்டதன் காரணமாக, திட்டமிடப்பட்ட உபாயநுட்ப வழிவகைகளில் தாக்கங்கள் ஏற்பட்டன. எவ்வாறாயினும், இந்த நிலைமை, அதிகரித்து வரும் மேம்படுத்தப்பட்ட இடர் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் வினைத்திறனையும், எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற கடன் நிவாரணம் மற்றும் தொழிற்படு மூலதனம் என்பவற்றில் வங்கியின் திரவநிலைமை, சகிப்புத் தன்மைகளின் சிறப்பம்சங்களையும் எடுத்துக்காட்டியது.

சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியில், எமது சில்லறை வைப்புத் தளம், இவ்வருட காலப்பகுதியில் பாராட்டத்தக்க அளவில் வளர்ச்சியடைந்த அதேவேளை, எமது வீட்டுக் கடன் மற்றும் தங்கக் கடன் பிரிவுகள் ஓரளவு அதிகரிப்பைக் காட்டின. இவ்வருடத்தில் ஏற்பட்ட கடன்களும், நெருக்கடிகளும் எமது கடன் போட்போலியோவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் ஒரு குறிப்பிட்டளவு தாக்கத்தை ஏற்படுத்தின. எவ்வாறாயினும், வைப்புத் திரட்டலை மேலும் மேம்படுத்தவும், கடன்களை அங்கீகரிக்கும் போது ஆரோக்கியமான கட்டுப்பாட்டு முறைமைகளைக் கையாள்வதன் மூலம் அதிகரித்த சொத்துத் தரத்துடன் வீட்டுக் கடன்களை வழங்குவதை அதிகரிக்கவும் முடியும் என்ற நம்பிக்கையை தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

வங்கியின் வர்த்தகப் பிரிவை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் மற்றும் கடன் தவணை உரிமைகளோடு சமப்படுத்துகையில், வங்கி வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 1,381 மில்லியனைப் பதிவு செய்து வெற்றியடைந்துள்ளது. இது, 2020 ஆம் ஆண்டில் எமது முகாமைத்துவச் செலவின் மீது எம்முடைய முயற்சிகளின் ஒரு வெளிப்பாடாக இருப்பதோடு, எமது செயற்பாட்டுச் செலவில் ஏற்பட்ட 4மூ குறைப்பின் ஒரு பிரதிபலிப்பாகும். வங்கியின் சில்லறை வியாபாரத்தில் ஏற்பட்ட அசாதாரண வளர்ச்சி, சிறந்த இடர் நடத்தை மற்றும் கடன் அங்கீகாரத்திற்கான ஒழுங்கான அணுகுமுறை என்பனவும் பாராட்டுவதற்குத் தகுதியான விடயங்களாகும்.

2020 ஆம் ஆண்டில் ஒரு பங்கின் விலை ரூபா 36.20 ஆக இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் எமது பங்குதாரர்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதியை எம்மால் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது. மேலும், சவால்களுக்கு மத்தியில் வருமான வரிகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் உள்ளடங்கலாக, ரூபா 747 மில்லியனைச் செலுத்தி, அரசாங்கத்தைப் பயனடையச் செய்துள்ளதோடு, நிதிப் பெறுமதியையும் உருவாக்கியுள்ளோம்.

கூட்டுறவு செயன்முகாமை நிலையாதார அபிவிருத்தி

நான்கு சபை உறுப்பினர்களின் இராஜினாமா மற்றும் ஓய்வு காரணமாக, 2020 ஆம் ஆண்டில் சபை உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து, இவ்வருட காலப்பகுதியில் 4 புதிய உறுப்பினர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டனர். இக்காலப்பகுதியின் போது, எமது ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய ஒரு உபாயநுட்ப முயற்சியாக சபை ஒரு கூட்டுறவு செயன்முகாமைப் பட்டயத்தை ஏற்றது.

இதே காலப்பகுதியின் போது, எமது வாடிக்கையாளர்களுக்கு தொற்று நோயுடன் தொடர்புபட்ட சலுகைகள் தொடர்பாக தெளிவான தொடர்பாடலை மேற்கொள்வதற்கு கூட்டுறவு முகாமைத்துவம் மற்றும் முக்கியமான ஆட்களுடன் தொடர்புகள் பேணப்பட்டன. மேலும், ஒரு

விசேட வங்கி என்ற அடிப்படையில், தற்போதைய உபாய நுட்பத் திசையையும், எமது புதுப்பிக்கப்பட்ட இலக்குகளையும் பிரதிபலிக்கும் வகையில், சபையின் பின்னூட்டல்கள் ஊடாக, எமது வங்கியின் நோக்கு, பணி நோக்கு மற்றும் பெறுமதிக் கூற்றுக்கள் சீரமைக்கப்பட்டன.

ஒழுங்குபடுத்தல் இணக்கத்தின் மீது கவனம் செலுத்தும் வகையில் வங்கி சராசரி மூலதன போதுமான விகிதத்தைவிட ஒரு கூடிய விகிதத்தை 20.67% ஆக (12.5 மில்லியன்) பராமரித்தது. எனினும், ரூபா 5 பில்லியனில் இருந்து ரூபா 7.5 பில்லியனாக மறுசீரமைக்கப்பட்ட குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் மூலதனம் காரணமாக, மேலும் ரூபா 1.5 பில்லியன் தொகையினால் ஒரு பற்றாக்குறை எதிர்கொள்ளப்படுகிறது. தற்போது வங்கி 2022 முடிவின் போது மேலதிக பங்குரிமைகளை அதிகரிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டிருப்பதுடன், அடுத்தடுத்த மாதங்களில் இந்த நடவடிக்கைகள் மேலும் தொடரப்படும்.

செயற்பாட்டு அடிப்படையில் வங்கி செயன்முறைகளை நெறிப்படுத்துவதிலும், தடைகளை அகற்றுவதிலும் கவனம் செலுத்தியது. குறிப்பிடத்தக்க அளவு தடைகளைக் குறைத்த நிகழ்நிலை முறைமைக்கு மாறியதால், கடன் அங்கீகாரச் செயன்முறையை மேம்படுத்துவதில் வங்கி முன்னேற்றம் கண்டது. அத்தகைய மேலதிக மேம்படுத்தல்கள் அடுத்து வரும் ஐந்து வருடங்களில் தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தல்கள் மூலம் அமுல்படுத்தப்படும். அத்துடன், டிஜிட்டல் மயமாக்கல் வாடிக்கையாளருக்கு சௌகரியத்தை ஏற்படுத்துவதோடு கூடிய வினைத்திறனையும் காட்டும்.

மறுசீரமைக்கப்பட்ட வளர்ச்சி

ஐந்து வருட உபாயநுட்பத் திட்டத்தை 2021 இல் அமுல்படுத்துவதற்கு நாம் தொடர்ந்து திட்டமிட்டு கண்காணித்து வருகின்றோம். எமது உபாயநுட்ப இலக்குகளை அடைந்து கொள்வதை நோக்கி நாம் செயற்பட்டு வருவதோடு, பங்குரிமையை ரூபா 11.5 பில்லியனால் அதிகரித்தல், மொத்த சொத்துக்களை ரூபா 116.9 பில்லியனை அடைதல், எமது சில்லறை வைப்பு உள்ளடக்கத்தை 2025 இல் 70% ஆக அதிகரித்தல், செயலுக்கமற்ற கடன் (NPL) விகிதத்தை 6% ஆக குறைத்தல் ஆகிய இறுதி நோக்குகளுடன் எமது வருடாந்த செயற்பாட்டு இலக்குகள் அடைந்து கொள்ளப்பட இருக்கின்றன.

இந்த உபாய நுட்பத்திட்டம், வர்த்தக வளர்ச்சிக்கு ஒரு பாதையை உருவாக்குவதுடன், தற்போதுள்ள வலிமைகளை மேம்படுத்துவதோடு, சந்தை வாய்ப்புகளின் நன்மைகளைப் பெறவும் வழிவகுக்கும். நடுத்தர வருமானம் உடையவர்களுக்கு வீடுகளை வழங்கும் அரசாங்கத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் தொடர்ந்தும் இலங்கையர்களை நிதி ரீதியாக முன்னேற்றுவதில் கவனம் செலுத்தி வருகின்றோம். இது தொடர்பாக வீடு கொள்வனவு செய்பவர்களுக்கு நிதி வழங்குதலின் போது சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அனுகூலங்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

உபாயநுட்பத் திட்டம் அமுல்படுத்தப்படுவதைப் பூர்த்தி செய்வதில் வங்கி குறை இடர் எடையுள்ள சொத்துக்களைப் பின்தொடர்வதோடு, கடன் வழங்குதல் மீது ஆரோக்கியமான மற்றும் விவேகமான கட்டுப்பாடுகளைப் பிரயோகிக்கும். எதிர்வரும் வருடங்களில் இந்த நடவடிக்கைகள் எமது சொத்து தரத்தை அதிகரித்து ஒட்டுமொத்த செயலுக்கமற்ற கடன் (NPL) விகிதத்தைக் குறைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

கடன் தவணை உரிமைகளில் ஏற்படக்கூடிய தாக்கங்களை உறுதியாக அறிந்து கொள்ளாத அதேவேளை, நாம் வங்கி நிதிச் செலவுகள் மீது மேலதிகக் கட்டுப்பாட்டை விதிப்பதோடு, வீடமைப்பு நிதியிடலில் மட்டுப்படுத்தப்பட்ட பன்முகப்படுத்தல் மீது கவனம் செலுத்துதல், படிப்படியான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்திகள் மற்றும் கூட்டுறவு நிதி மீது கவனம் செலுத்தப்படும். எமது தற்போதைய வியாபாரப் பன்முகப்படுத்தல் நுட்பத்தைத் தொடர்ந்து அதிகரித்து வரும் குறைந்த இடர் கடன்கள் மீது கவனம் செலுத்தும் அதேவேளை, எமது இடர் தோற்ற வடிவத்தை குறைக்கும் நோக்கில் வீடமைப்பு நிதியிடலில் கவனம் செலுத்துவதில் குறைந்த அக்கறையைக் காட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் வருடங்களில் மேலும் 15 கிளைகளை விஸ்தரிப்பதன் மூலம் மேலதிக வாடிக்கையாளர்களை அடையும் பொருட்டு, எமது கிளை வலையமைப்பை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், இது, மேலதிக மூலதனத் தேவைப்பாட்டில் தங்கியிருப்பதனால், சவால் மிக்க ஒன்றாக அமையவுள்ளது.


இதேபோன்று, எமது நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் வகையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்ந்தும் மேம்படுத்தப்படும். சேவை மேம்படுத்தலுக்கு மேலதிகமாக, வங்கி புதிய டிஜிட்டல் தீர்வுகள் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை அதிகரித்து வருகிறது. இந்த நோக்கங்களுக்காக வங்கி மேலதிக நிதி வசதிகளை ஒதுக்கும். இது, எமது செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் உதவும். அத்துடன், காகித அடிப்படையிலான தொழிற்பாடுகளில் இருந்து, காகிதமற்ற தொழிற்பாடுகளுக்கு மாறுவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இது, தற்போது எமது கடன் தோற்ற முறைமை, மெய்நிகர் கூட்ட முறைமை என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆவண முகாமைத்துவ முறை மூலம் உயர்த்தப்பட்டு வருகிறது.

எதிர்வரும் மாதங்களில், சபை ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், எமது இலக்குகளை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்பில் உபாயநுட்பத் திட்டம் மீதான முகாமைத்துவப் பணி மீது வழிகாட்டுதல்களையும், வழிமுறைகளையும் தொடாந்து வழங்கும்.

பாராட்டுதல்கள்

வங்கி மற்றும் பணிப்பாளர்கள் சபை சார்பாக முன்னொருபோதும் இல்லாதவாறு வங்கிச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மிகவும் சவால் மிக்க காலப்பகுதியில் வங்கியை வெற்றிகரமாக வழிநடத்திய பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. பாலித்த கமகே அவர்களுக்கு எனது முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எமது பங்குதாரர்களுக்கு அவர்களால் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட ஆதரவிற்கும், எமது ஊழியர்களால் வழங்கப்பட்ட உறுதியான அனுசரணைக்கும், அர்ப்பணிப்புக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - உங்களுடைய அர்ப்பணிப்பு, எமது பலம் பொருந்திய வலிமையாகும். எமது வாடிக்கையாளர்கள் எம்மீது நம்பிக்கை வைத்து, வருடம் முழுவதும் எம்மால் சேவை வழங்குவதற்கு அனுமதி அளித்தமைக்காக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்வரும் ஆண்டு, எல்லாவற்றையும்விட உயர்மட்ட நிச்சயத்தன்மை, இயல்பு வாழ்க்கை மற்றும் செழுமை என்பன அனைவருக்கும் கிடைக்குமென நான் எதிர்பார்க்கின்றேன்.



திருமதி வசந்தி மஞ்சநாயக்க

தலைவர்

பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின்

மீளாய்வு



திரு. பாலித்த கமகே
பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

2020 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் போதே, வங்கி, ஏற்கனவே உபாயநுட்ப வளர்ச்சி இலக்குகளை விரைவுபடுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எண்ணியிருந்தது. தொற்று நோய் ஏற்பட்டமை காரணமாக, நாம் எண்ணிய அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆயினும், இந்தச் சூழ்நிலையில் நிச்சயமற்ற தன்மை மற்றும் இடர்களை மதிப்பீடு செய்ய ஆரம்பிக்கும் போதே, இந்த தொற்று நோய், வியாபாரத் தொடர்ச்சியில் உண்மையில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது வெளிப்படையான உண்மையாகும். அந்நேரத்தில் ஏனைய அனைத்து விடயங்களும் புறந்தள்ளப்பட்டு, எமது வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட அணுகுதலை வழங்குதல் மற்றும் செயற்பாட்டுப் பின்னடைவுகளைப் பலப்படுத்துவதன் மீது எமது கவனம் பதிலீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்வரும் மாதங்களில் நாம் கவனம் செலுத்துகின்ற ஒரு உபாயநுட்பப் பாதை இருந்தது - எமது டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்துவதற்குப் பொருத்தமான நேரம் ஒன்று இருக்கவில்லை.

COVID-19 இன் ஆரம்பத்தை நினைவூட்டுதல்


பொருளாதாரம் முடக்கப்பட்டமை மற்றும் சமூக இடைத்தொடர்புகள் நிறுத்தப்பட்டமையினால் காரணமாக, ஆரம்ப முடக்கலின் பின்னர் நடைபெற்ற எதிர்பாராத ஒரு நிகழ்வாகும். நாட்டின் நிதி முறைமை உடனடி நிவாரண நடவடிக்கைகள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் வர்த்தகங்கள் உயிர் பெற்றன. தற்போது, வங்கி, எமது வாடிக்கையாளர்களுக்கு நிதி நிவாரணங்களை வழங்குவதிலும், கடன் நிவாரணத்திற்கான சலுகைகளை வழங்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறது. நாடு பூராகவுமுள்ள சமூர்த்திப் பயனாளிகளுக்கு, சமூர்த்தி அடிப்படையிலான வைப்புகளை மீளப் பெறுவதற்கு உதவுவதன் மூலம் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியது.

இக்குறிப்பிட்ட செய்தியை எழுதுகின்ற போது, இலங்கையில் COVID-19 நேர்மறை நோயாளி அடையாளம் காணப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகிறது. இந்த வைரஸ் பரவலின் தாக்கம் நாடு பூராகவும் பரவியுள்ள இவ்வேளை, நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளின் அதிகரிப்பு மேம்படுத்தப்பட்ட PCR பரிசோதனைகள், தொற்றாளர்களைக் கண்டுபிடிக்கும் வலையமைப்புத் திட்டம் என்பனவற்றின் காரணமாக நாம் இன்னும் நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

COVID-19 - அதன் பரவுதலைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளின் போதுமற்ற தன்மையை உலகளாவிய அடிப்படையில் வெளிப்படுத்தியது. இந்த நோய் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியது. அத்தருணத்தில், உலக மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான பயம், பேரழிவு என்பவற்றை விதிவிலக்குகள் இன்றிப் பகிர்ந்து கொண்டனர். வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களும், உடல் ஆரோக்கிய முறைமைகளும் கூட அதிகரித்து நோயாளிகளின் எண்ணிக்கை காரணமாக, அச்சமடைந்தன. எனினும், இலங்கையை ஒத்த அதே அளவு சனத்தொகையைக் கொண்ட சில அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை நோய் பரவலை ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளது என்பது மனதிற்குத் திருப்தியாக உள்ளது. எமது சுகாதார தொழில்துறை சார்ந்தவர்களின் சுயநலமற்ற சேவை மற்றும் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றிய செயல் ஆகியவற்றை எண்ணி நாம் பெருமையடைகிறோம்.

தொற்று நோய் மற்றும் நாட்டின் முடக்கம் ஆகியவற்றின் பொருளாதார அழுத்தம் தெளிவற்றவை. தொடக்கத்தில் நிதி இழப்புகளின் செலவில் நோயைக் கட்டுப்படுத்தல் முன்னுரிமை பெற்றது. இருப்பினும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விதிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றிய அதேவேளை, நாட்டின் சுகாதார முறைமைகள் மீது தேவையற்ற துன்பங்களை ஏற்படுத்தின.

மேலும், துரிதமாகப் பரவி வரும் தொற்று நோய், உலகளாவிய பெறுமதி சங்கிலிகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்திய அதேவேளை, கரைகடந்த பயணங்கள் மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் கட்டாயத்தை உருவாக்கின. இதன் விளைவாக, உலகப் பொருளாதாரம் -4.3% ஆல் வீழ்ச்சி அடைந்தது. உள்நாட்டுப் பொருளாதாரமும் -3.6% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. உல்லாசப் பிரயாண நடவடிக்கைகள் உள்ளடங்கலாக, வரையறுக்கப்பட்ட வர்த்தகங்கள், வர்த்தக நடவடிக்கைகள் என்பன பாரதூரமான பின்னடைவுகளை ஏற்படுத்தியதோடு, இது கடுமையாக பல நாடுகள் கடல் கடந்த பயணத்தை கட்டுப்படுத்தும் நிலைக்குத் தள்ளியது.



ஆதாரம்: கூகில் COVID-19 சமூக நடமாட்ட அறிக்கை (தரவுத் தளம் ஹேவர் பகுப்பாய்வு (தரவுத் தளம்) தரவுகளில் எமது உலகம் (தரவுத் தளம்) உலக வங்கி, சர்வதேச பொருளாதார எதிர்பார்ப்புகள் அறிக்கை. ஜனவரி 2021, உலக வங்கிக் குழுமம்.

UNCTAD க்கு அமைவாக, 2020 இல் சேவைத்துறை பாரிய பின்னடைவுகளை எதிர்நோக்கி, சர்வதேச வர்த்தகத்தில் பெருமளவு வீழ்ச்சிகள் காணப்பட்டன. உலக வர்த்தக ஸ்தாபனம், 2020 ஒக்டோபர் மாதத்தில், உலக பொருட்கள் விற்பனை 9.2% க்கு சரிவடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2021 இல் 7.2% ஆக மீள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது - எனினும் இது, நெருக்கடிகளுக்கு முந்திய போக்கை விடக் குறைவாகவே உள்ளது. உலக வங்கிக் குழுமத்தின் உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வளர்ந்து வரும் மற்றும் வளர்சியடைந்த பொருளாதார நாடுகளில் அரசாங்கக் கடன் 9% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, உலகளாவிய கடன் மட்டங்கள் பாரியளவில் அதிகரிக்குமெனவும் கூறப்படுகிறது.

பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிக நெகிழ்வுத் தன்மை மற்றும் செயற்திறன் மிக்க நிதி நடவடிக்கைகள், உண்மையில் உள்ளூரில் நிதிப் பொறுப்புச் சுமைகளைத் தணிப்பதற்கு ஒரு வினை ஊக்கியாக அமைந்தது. தனிப்பட்டவர்களும், வர்த்தகர்களும், வர்த்தகர்கள் மாத்திரம் நிவாரத்தைப் பெறாது நிதி முறைமைக்குள் உள்ள வங்கிகளும், தேவையான நெகிழ்வுகளையும், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் தமது வரையறை மற்றும் மட்டுப்பாடுகளுக்கு அப்பால் சென்று சலுகைகளை வழங்க ஆவண செய்தன. கொள்கை மாற்றங்கள், பாதகமான வலுவூட்டல்களை ஏற்படுத்திய போதிலும், கடன், கடன் மீள் கொடுப்பனவு விரிவாக்கம் என்பவற்றில் குறைக்கப்பட்ட வட்டி வீதங்களினால் ஏற்பட்ட தாக்கம், அதிகரித்த செயலுாக்கமற்ற கடன்கள் (NPL) மற்றும் வலுக்குன்றிய சொத்து தரம் என்பவற்றின் தாக்கத்தை தவணை உரிமை காலத்தை அடுத்தே உறுதிப்படுத்த முடியும்.

பொருளாதார நிவாரணம்

2020 மார்ச் மாதம், பொருளாதார நிலை முடக்கலின் கீழ் சென்றதனாலும், மக்களின் வாழ்வாதாரங்கள் மோசமான பின்னடைவை எதிர்நோக்கி இருந்தமையினாலும், வங்கி பூர்த்தி செய்ய வேண்டிய இரண்டு வகிபங்குகள் காணப்பட்டன. பெரும்பாலான கிராமிய வாடிக்கையாளர்களையும், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்களையும் கொண்ட ஒரு விசேட உரிமம் அளிக்கப்பட்ட வங்கி என்ற அடிப்படையில், வங்கி உடனடியாக கடன் நிவாரணத்தை வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. மேலும், அரசாங்கம் பெரும்பான்மை பங்குதாரராக இருக்கின்ற காரணத்தினால், நாம் பொருளாதார வீழ்ச்சிக்குப் பரந்த அளவில் பங்களிப்புச் செய்யும் நோக்கத்தையும் கொண்டிருந்தோம்.

பொருளாதார வரையறைகளினால் ஏற்கனவே பெரும் சுமையைக் கொண்டிருந்த எமது வாடிக்கையாளர்கள், தொற்று நோய் மோசமடைந்ததன் காரணமாக, அவர்களின் நிதி நிலைமை மேலும் குன்றியது. நிதிச் சேர்க்கைக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் வங்கி என்ற வகையில், எமது வாடிக்கையாளர்களுக்கு எம்மைப் பற்றிப் புரிந்து கொள்ளவும், அதிகமாக உதவி தேவைப்படும் தருணமாகவும் அமைந்திருந்தது.

இதன் விளைவாக, HDFC வங்கியின் சில்லறை வாடிக்கையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி வாடிக்கையாளர்கள், சுயதொழில்களில் ஈடுபடுவோர் ஆகியோர், அப்போதிருந்த கடன்களுக்கு மேலதிகமாக, நெகிழ்வுத் தன்மை கொண்ட கடன் வசதிகள் ஊடாக நிதி உதவி பெற்றுக் கொண்டனர். அதேவேளை, செலுத்தத் தவறிய கடன் கொடுப்பனவுகளில் இருந்து நிபந்தனைகளுடன் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது.

மேலும், எமது பணியாட்களின் ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் முக்கியமான பணி எம்மீது சுமத்தப்பட்டது. இதன் முதல் கட்டமாக, தலைமை அலுவலகத்தின் கிளைகள் சுத்திகரிப்புச் செய்யப்பட்டதோடு, பணியாட்களுக்கு கை சுத்திகரிப்பு நாசினிகள், பாதணி சுத்திகரிப்பு துடைப்பங்கள் மற்றும் முகக் கவசங்களும் வழங்கப்பட்டன. மேலும், பிரதான மார்க்கம் ஊடாக பயணம் செய்யும் பணியாட்களுக்கு, 6 வாகனங்கள் மூலம் போக்குவரத்து வசதி செய்யப்பட்டது. அத்துடன், தனியார் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பணியாட்களுக்கு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஒட்டுமொத்த HDFC வங்கி செயற்பாடுகள் மீதும், சேவை வழங்குவதிலும், குறைந்தபட்ச இடையூறுகளுடன், ஆரோக்கியமான கட்டுப்பாடுகளைச் செலுத்தக் கூடியதாக இருந்தது. தொற்று நோய் ஏற்படுவதற்கு முன்னர், நாம் பூர்த்தி செய்திருந்த வேலைகள், இந்நோயினால் ஆரம்பத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அப்பால் செல்லக்கூடியதாகவும், நீண்டகால உபாயநுட்ப இலக்குகளை இயக்குவதன் மூலமாகவும், எமது குறுகிய கால நுட்பங்களை அடையக்கூடியதாக இருந்தன. 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இறுதி நிதிப் பெறுபேறு, எமது வலிமைமிக்க குழுக்கள், கூட்டுறவு முகாமைத்துவத்தின் அர்ப்பணிப்பு, வாடிக்கையாளர்களின் திறன்கள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும்.

தடை ஏற்படாத அபிவிருத்திகள்

முதல் வருடத்துடன் ஒப்பிடுகையில், ரூபா 55.9 பில்லியனில் இருந்து வங்கியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 5 பில்லியனாக அதிகரித்தது. சவால்மிக்க சூழ்நிலைகள் இருந்த போதிலும், வரிக்குப் பின்னரான இலாபம் 49% ஆல் அதிகரித்து, ரூபா 708 மில்லியனைப் பதிவு செய்தது. அத்துடன், 2020 ஆம் ஆண்டுக்கான வரிக்கு முந்திய இலாபம், ரூபா 1,381 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. கடன் தவணை உரிமையின் பின்னணியில், நிதிச் சலுகைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கிளை செயற்பாடுகள் என்பன வங்கியின் இலாபம் மற்றும் வருவாய் மீதான இலக்குகளைப் பாதித்தன. கடன் தவறுகைக் கட்டண விடுபாடுகள், மறுசீரமைக்கப்பட்ட மீள் கொடுப்பனவுகள், மீளப் பெறுகைகளில் இடைநீக்கங்கள் என்பனவும் வங்கியின் அடித்தளத்தைப் பாதித்தன. மேலும், வங்கிக் கடன்கள், முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் என்பனவற்றுக்கு எதிரான வலுக்குன்றல் கட்டணங்களை ரூபா 326 மில்லியனால் அதிகரித்தமையினால் இது செயற்திறன் அற்ற செயல்களுக்கு வழிவகுத்தது.

2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் தவிர்க்கப்பட, செயலுாக்கமற்ற கடன் (NPL) விகிதம் 13.7% இல் இருந்து 2020 இல் 20.2% ஆக அதிகரித்தது. இது, தொற்று நோயினால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகளின் காரணமான விரிவாக்கப்பட்ட மீள் கொடுப்பனவு வசதிகள், வாடிக்கையாளர்களின் குறைந்த மீள் கொடுப்பனவுத் தகைமைகள் என்பவற்றின் நேரடிப் பெறுபேறாகும். கடன் தவணை உரிமை சூழ்நிலைகளின் பின்னணியில் எமது NPL மட்டத்தின் அடைவான ஈ10% க்கு குறைவான தொகையைப் பேணுவது சவால் மிக்கதாக இருந்தது. அதிகரித்து வரும் கடன் இடர்கள் மற்றும் NPL விகிதங்களுக்கு மத்தியில், கடந்த வருட இறுதியில் வங்கியின் கடன் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 41.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் ரூபா 41.1 பில்லியனைப் பதிவு செய்தது. வங்கியின் விவேகத்தன்மை, கடன் இடர் அதிகரிப்பு மற்றும் செயற்திறன் அற்ற கடன்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் இந்தப் பாதிப்பற்ற வீழ்ச்சியை காட்டியது.

பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம், வங்கி, அதன் சில்லறை வைப்பு போட்போலியோவை 39% ஆல் அதிகரித்தது. இது, கூட்டுறவு வைப்புகளுடன் தொடர்புடைய மீள் எடுப்பை எதிர்கொள்வதற்குத் தேவையான வலுவூட்டல் ஒன்றாகும். கூட்டுறவு மற்றும் ஏனைய நிறுவன ரீதியிலான வைப்புகள் 3% ஆல் குறைவடைந்தது. எனினும், சில்லறை வைப்புகள் 39% ஆல் அதிகரித்து, வைப்புகளின் மொத்த வளர்ச்சியில் 12.8% பங்களிப்பைச் செய்தது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் வைப்பு போட்போலியோ ரூபா 42 பில்லியனில் இருந்து ரூபா 48 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த மொத்தத் தொகையில் ரூபா 27.62 பில்லியன் சில்லறை வைப்பின் மூலமானதாகும்.

வங்கி, கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் மூலம், சிறிய அளவிலான வர்த்தகத் துறைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2020 ஆம் ஆண்டின் போது, வங்கி கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிதிப் பிரிவு வாடிக்கையாளர்களுக்கு ரூபா 1.8 பில்லியனை வழங்கியது. மேலும், நிலையாதார நிதியிடலை நோக்கிய நடவடிக்கைகளில் வங்கி பசுமைக்கால நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. இது, பசுமை வர்த்தக முயற்சிகள் மற்றும் சூழல் நட்பு வர்த்தகத் திட்டங்கள் என்பவற்றுக்கு நிதியளிக்கும் எமது முயற்சித் திட்டங்களாகும். மேலும், 2020 இல் சில்லறை செயற்பாடுகளை மேம்படுத்துவதில் எமது இரண்டு கிளைகளில், கிளை மறுசீரமைப்புக்கள் இடம்பெற்றன. இதில் ஒரு கிளை விசாலமான இடவசதி உள்ள இடத்திற்கு மாற்றப்பட்டதோடு, மற்றைய கிளையின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

டிஜிட்டல் எதிர்காலம்

மேம்படுத்தப்பட்ட செயற்பாட்டு விளைத்திறன்களையும், திறன் அடிப்படையிலான வாடிக்கையாளர் சேவைகளையும் வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, 2019 இல் வங்கி டிஜிட்டல் மயமாக்கலை ஆரம்பித்தது. டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான எமது நுழைவு, ஒப்பீட்டளவில் வளர்ச்சியடையாத போதிலும், எமது நடமாடும் திட்டங்கள், தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான புதிய கண்டுபிடிப்புகள் என்பன மேம்படுத்தப்பட்ட நவீன மயமாக்கல்களை ஒன்றிணைத்தல் மற்றும் முன்னேற்றகரமான அம்சங்களை வழங்குவதற்கு சாத்தியத்தன்மையை ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்பு தொடர்பான கலாசாரம், எமது பணியாட்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் நாம் கையேட்டு செயன்முறைகளில் இருந்து நிகழ்நிலை முறைமைகளுக்கு படிப்படியாக மாற வழிவகுக்கும்.

ஒரு டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் எமது பயணம், வருடம் பூராகவும், புதுமையான விடயங்கள் மீது கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். 2020 ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட

டிஜிட்டல் நிலைமாற்றங்கள், தற்போது உள்ளகச் செயற்பாடுகளில் வினைத்திறனை ஏற்படுத்தியுள்ளதோடு, எமது வாடிக்கையாளர்களுக்கு வசதிகளையும் அளிக்கிறது. இவ்வருடத்தின் போது, வங்கியின் தகவல் தொழில்நுட்பக் குழு வங்கியின் 'HDFC கிளிக' என்ற இலத்திரனியல் வங்கித் தளத்தை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், 'பிரத்திலாப' சேமிப்புக் கணக்கு ஊடாக பாவனைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கு அனுமதி அளிக்கும் வகையில் 'LankaPay' யின் 'துரளவீயல' முறைமையுடன் தொடர்புடுத்தி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தத் தளம், தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து, வங்கிக்கு ஒரு பாரிய போட்டிமிக்க நன்மையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கி 2020 இல் SD-WAN என்ற பரந்தளவிலான பிரதேசங்களை உள்ளடக்கிய வலையமைப்பைக் கொண்ட மென்பொருளை அறிமுகப்படுத்தியது. இந்த வலையமைப்பு, நாடு பூராகவும் உள்ள 31 கிளைகள், தலைமைக் காரியாலயங்களுடன் நேரடியாக இணைந்துகொள்ள வழிவகுக்கும். இந்த வலையமைப்பு, உட்கட்டமைப்பு பாதிப்பு ஏற்படும் போது தானாகவே மீட்கும் முறையைக் கொண்டிருக்கும். அத்துடன், அது, வங்கியின் வியாபாரத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தவும் உதவும்.

சில்லறைத் தொடுகை முனைவுகளை அதிகரிப்பதற்கான எமது திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன், POS பரிவர்த்தனைகளை எளிதாக்கும் எமது டெபிட் அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்கான தயார்படுத்தல்களும் நடைபெறுகின்றன. 2020 களில் ஏற்பட்ட தொற்று நோய் காரணமாக தாமதம் இருந்த போதிலும், 2021 இல் இவ்விடயங்களை முன்னெடுத்துச் செல்ல வங்கி திட்டமிட்டு வருகிறது.

இணக்கம் மற்றும் ஆளுகை

சவால்மிக்க இந்தக் காலப்பகுதியில், வங்கிகளுக்கு உவும் வகையில், மேலதிக மூலதன உட்செலுத்துகையைக் கட்டமைப்பதற்கு மாறுபட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதிக்கும் வகையில், இலங்கை மத்திய வங்கி, குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாட்டிற்கான காலக்கெடுவை 2022 இறுதி வரை திருத்தியமைத்துள்ளது. எனினும், பன்முகப்படுத்தல், சந்தை அபிவிருத்திகள் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சி இலக்குகள் என்பன எமது ஐந்து வருட உபாய நுட்பத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையும் வகையில், அடுத்து வரும் இரண்டு வருடங்களில் வங்கி, ஒரு நிலையான வளர்ச்சித் திட்டத்தைத் தொடரும். இதன் விளைவாக, இலாபத் தன்மையில் ஏற்படும் அதிகரிப்பு, இலாப தக்க வைப்பு ஊடாக குறைந்தபட்ச அடுக்கு 1 மூலதன தேவைப்பாடாக ரூபா 7.5 பில்லியனை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். தலைவரின் செய்தியில் குறிப்பிடப்பட்டது போல, இவ்வருடத்தின் போது பல புதிய நியமனங்களுடன் சபை மீள் குழுமப்படுத்தப்பட்டு, சபையின் பல்வேறு துறைகளில் பல வருட அனுபவம் வாய்ந்தவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மேலும், சவால்மிக்க இவ்வருட காலப்பகுதியில், சபை வியாபார வளர்ச்சி, புதிய நுட்பத் திட்டம், டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான முயற்சிகள் போன்ற முக்கிய விடயங்களை ஆராய்ந்து, அவர்களின் கருத்துக்களையும், பின்னூட்டல்களையும் அங்கீகாரத்தையும் வழங்கினர்.

சபை உறுப்பினர்கள் வெளியக சூழ்நிலைகளைத் தணிக்கும் விடயங்கள், எமது பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நேர்மைத் திறனை விட்டுக்கொடுக்காத வகையில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சரியான நிர்வாக நடைமுறைகளை மேற்பார்வை செய்தன.

விவேகமான இடர் முகாமைத்துவம்

வங்கியின் இடர் முகாமைத்துவச் செயன்முறைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டிலும் தொற்று நோயினால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகளின் பாதிப்புகளினால் ஏற்பட்ட தாக்கங்களின் சகிப்பு மட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக, இடர் முகாமைத்துவச் செயன்முறை மீளாய்வு செய்யப்பட்டது. 2019 இல் வங்கி சிறந்த சொத்து தரத்தை உறுதிப்படுத்தும் விவேகமான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இவை, 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் பின்பற்றப்பட்டன. வங்கி, 2019 ஆம் ஆண்டில் அடுக்கு - 2 மத்திய தரப்படுத்தப்பட்ட கடன் வழங்கு நடவடிக்கையைக் கைக்கொண்டது. இது, தற்போது இடர் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்யும் கடன் நிர்வாக திணைக்களத்தின் அங்கீகாரத்தை தேவைப்படுத்துகிறது. இடர் திணைக்களம் ரூபா 1.5 மில்லினுக்கும் மேற்பட்ட துண்டித்த கடன் மட்டத்திற்கு மேலதிக வேண்டுகோள்களை சுயாதீனமாக மதிப்பிடும் பொறுப்பைக் கொண்டுள்ளது. புதிய தகவல் தொழில்நுட்ப முறைமைகள், தகுதிகாண் அடிப்படைகளுடன் இணங்கி நடக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம், அவை இந்த செயன்முறைக்குள் ஒருங்கிணைக்கப்பட்டது என்பதையும், புதிய கடன்கள் தலைமைக் காரியாலயத்தினால் உன்னிப்பாக மேற்பார்வை செய்யப்படுகின்றன என்பதையும் அவதானிப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்புதிய மறுசீரமைப்பின் மூலம் 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து வழங்கப்பட்ட புதிய கடன்களுக்கான NPL விகிதம் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

முன்னோக்கிச் செல்லும் பாதை

வங்கியின் உடனடியான கவனம், குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் மூலதனத்தைப் பூர்த்தி செய்வதற்கு தேவைப்படுகின்ற மூலதன உட்செலுத்துதலை அடைவதில் தங்கியுள்ளது. 2022 இறுதியில் இதனை அடையும் பொருட்டு, வங்கியின் ஐந்து வருட கால உபாய நுட்பத் திட்டத்தில் இதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன், இது நேரத்திற்கு உட்பட்ட வளர்ச்சி இலக்குகளில் கவனம் செலுத்துகிறது. காலாந்தர மீளாய்வுகள் மற்றும் திருத்தங்களுடன் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துதல், 2021 ஆம் ஆண்டில் முதன்மை இடத்தைப் பெறும். வர்த்தக செயற்பாடுகளின் ஒட்டுமொத்த செயற்திறன் சபைக்கு மாதாந்தம் அறிவிக்கப்படும்.

அதேவேளை, அமுல்படுத்தலின் முன்னேற்றங்கள், வருடத்திற்கு இருமுறை மீளாய்வு செய்யப்படும். ஏனைய விடயங்களை மீளாய்வு செய்தலும், தொடர்பு கொள்வதும் CEO மற்றும் COO ஆகியோரின் பொறுப்பாகும். அடுத்து வரும் ஐந்து வருட காலப்பகுதியில் இத்திட்டம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு மறுசீரமைக்கப்படும்.

பாராட்டுதல்கள்

எமது தலைவரான திருமதி வசந்தி மஞ்சநாயக்க அவர்கள் வழங்கிய உள்ளீடுகள், விவேகமான தலைமைத்துவம் மற்றும் சிறந்த பெறுபேறுகளை அடைவதற்காக எமது பணியாட்களைக் கூர்மைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல் ஆகியவற்றுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். எமது பணிப்பாளர்கள் சபையின் உறுதியின் தொலைநோக்கு, வழிகாட்டல்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் வங்கி ஸ்திரமாகச் செயற்படுவதற்கு வங்கியின் உபாயநுட்ப வழிமுறைகள் மீது வழங்கிய பின்னூட்டல்கள் ஆகியவற்றுக்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

நாட்டின் முடக்கல் நிலைக்கு மத்தியில், வாடிக்கையாளர்களுக்கு தன்னலமற்ற சேவையை வழங்கியமைக்காகவும், எமது செயற்பாடுகளை சரியாக தக்க வைத்துக் கொள்வதற்கும் வழங்கிய ஆதரவுக்காக எமது பணியாட்கள் ஒவ்வொருவரும் பாராட்டத் தகுதியானவர்களாவர். அவர்களின் கடின உழைப்பு பாராட்டுக்குரியதாகும். மேலும், கூட்டுறவு முகாமைத்துவம், பிரிவுத் தலைவர்களினால் புதிய இயல்பு நிலையை ஏற்றுக்கொள்வதற்கும், நிச்சயமற்ற நிலைகளுக்கும் மத்தியில் விவேகமான திட்டமிடல் மூலம் வியாபார தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு அவர்கள் அளித்த பங்களிப்புகளுக்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இதனைவிட வங்கியின் முக்கியமான உறுப்புகளாக உள்ள பிராந்திய முகாமையாளர்கள், கிளைத் தலைவர்கள் ஆகியோர் பொருளாதார சரிவின் போது, அதிகமான உதவி தேவைப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய சேவையை நாம் பாராட்டுகின்றோம்.

HDFC வங்கியை உங்கள் வங்கி கூட்டாளராக ஏற்றுக்கொண்டமைக்காக வாடிக்கையாளர்களுக்கும், வைப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் இறுதி முன்னேற்றமே வங்கியின் வெற்றி என்ற வகையில் தகைமைகளின் அடிப்படையில் எமது ஆதரவை தங்களுக்குத் தொடர்ந்தும் வழங்கவுள்ளோம்.



திரு. பாலித்த கமகே

பொது முகாமையாளர் /
பிரதம நிறைவேற்று அதிகாரி

பணிப்பாளர்கள் சபை



இடமிருந்து வலம் :

திரு. டி.எம்.ஏ.கே.தஸ நாயக்க
பணிப்பாளர்

திரு. பீ.ஏ.எஸ்.ஏ.குமார
பணிப்பாளர்

திருமதி ஆர்.எம். ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர்

திரு. எல்.ஈ.எஸ்.சில்வா
பணிப்பாளர்



இடமிருந்து வலம் :

சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா
பணிப்பாளர்

திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாப்பாக பத்திரண
பணிப்பாளர்

கலாநிதி எஸ். என்.மொராயஸ்
பணிப்பாளர்

சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன
பணிப்பாளர்

பணிப்பாளர்கள் சபையின் சுய விபரங்கள்



திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர் / நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

2020 ஜனவரி 02 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியின் தலைவராகவும், பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

சட்டத்தரணியான இவர், 1984 ஆம் ஆண்டில் இருந்து ஒரு மதிப்பீட்டாளராக தனது தொழில்முறைச் சேவையை உள்நாட்டு இறை வரி திணைக்களத்திற்கு வழங்கி வந்ததோடு, 2014 ஆம் ஆண்டு ஆணையாளர் நாயகமாகப் பதவி உயர்வு செய்யப்பட்டார். அப்போதிலிருந்து அவர் தொழில்முறை ரீதியான நிபுணத்துவத்தை வழங்கியதோடு, நிதியமைச்சில் 2015 முதல் 2019 வரை சிரேஷ்ட வரிக் கொள்கை ஆலோசகராக செயற்பட்டு வந்தார்.

உள்நாட்டு இறை வரி திணைக்களத்தில் சேவையாற்றிய காலத்தின் போது, திட்டப் பணிப்பாளர் என்ற வகையில் RAMIS என்ற திட்டத்தை (தன்னியக்கத் திட்டம்) அமுல்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டார். மேலும், அவர், பல வெளிநாட்டுப் பயிற்சிப் பட்டறைகள், பயிற்சித் திட்டங்கள் என்பவற்றிலும் பற்குபற்றி இருந்தார். அவற்றில் சிங்கப்பூர் இலத்திரனியல், அரசாங்க தலைமைத்துவ மையத்தில் நடைபெற்ற இலத்திரனியல் ஆளுகை நடைமுறை மற்றும் கண்டுபிடிப்பு, ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இடம்பெற்ற வரி மோசடி கணக்காய்வு மற்றும் சேகரிப்புத் தொழில்நுட்பங்கள், மலேசியாவில் நடைபெற்ற வரி சமவாய பேச்சுவார்த்தை தொடர்பான பயிற்சி, டில்லி நாக்பூரில் நடைபெற்ற வரி நிர்வாகம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள், பரிசில் நடைபெற்ற OECD பரிமாற்ற விலையிடல், தாய்லாந்தில் நடைபெற்ற பகிரங்க சேவையின் சிறந்த நடைமுறைகள் பற்றிய பயிற்சி என்பன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

திருமதி மஞ்சநாயக்க, தனது ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்வியை கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் பூர்த்தி செய்து, பின்னர் களனி பல்கலைக்கழகத்தில் கைத்தொழில் முகாமைத்துவத்தில் விசேட படிப்பை மேற்கொண்டு பொருளாதாரம் சம்பந்தமான பட்டத்தைப் பெற்றார். மேலும், அவர், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து வெளிநாட்டு மொழிகள் டிப்ளோமா, ஆங்கில டிப்ளோமா ஆகியவற்றையும் பெற்றுக் கொண்டார். இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணிக்கான தகுகாண் பரீட்சையில் தோற்றிய அதேவேளை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து உயர் தொழில்முறை ஆங்கில டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார். மேலும், 2009 ஆம் ஆண்டு, இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமாவை வழங்கியதோடு, பொது முகாமைத்துவம் தொடர்பாக பட்டப் பின் படிப்பையும் பெற்றுக் கொண்டார்.



சிரேஷ்ட பேராசிரியர் கே. டீ. குணவர்தன
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

சிரேஷ்ட பேராசிரியரான திரு. கே.டி.குணவர்தன, 2019 மார்ச் 14 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இவர், அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தலைவராகப் பணியாற்றி, தனது தொழில்முறைத் திறனாய்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது அவர், சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் (PIM) சபை உறுப்பினராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் (IHRS) ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார். சிரேஷ்ட பேராசிரியர் கென்னடி டீ குணவர்தன அவர்கள், இலங்கை சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுத் திணைக்களத்தின் கணக்கீட்டுத் தகவல் முறைமைகள் பேராசிரியராக தனது சேவைகளை வழங்கி வருகிறார்.

மேலும், பேராசிரியர் அவர்கள், கற்கைகள் சபையின் தலைவராகவும், அதே பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் கலாநிதிக் கற்கைகளின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுகின்றார். அவர், கிரயம் மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு, கணக்கீட்டுத் தகவல் முறைமை, பட்டதாரி மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு கணக்கீடு மற்றும் நிதியியல் தொடர்பான கணக்கீடு மற்றும் ஆய்வு முறையியலுக்கான செயற்கை நரம்பு வலையமைப்பு சம்பந்தமாகவும் போதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

சிரேஷ்ட பேராசிரியர் குணவர்தன, கணக்கீடு மற்றும் பெருநிறுவனத் துறை எதிர்வு கூறல்களுடன் செயற்கை நுண்ணறிவினை இணைத்த முதலாவது இலங்கையராவார். அவர், அதற்காக கணக்கீட்டிற்கான செயற்கை நரம்பு வலையமைப்பு எனும் புதிய கற்கை நெறி அலகினை அபிவிருத்தி செய்தார். இது தற்போது பல்கலைக்கழக மாணவர்களிடையே மிகவும் பிரபல்யமான கற்கை நெறியாகவுள்ளது.

சிரேஷ்ட பேராசிரியர் குணவர்தன, கணக்கீடு, முகாமைத்துவத் தகவல் முறைமைகள் மற்றும் ஆய்வு முறைமை ஆகிய விடயப் பரப்புக்களில் மொறட்டுவை, களனி மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக வியாபார நிருவாக முதுமாணிக் கற்கை நெறிகளுக்கான வருகை தரு பீட உறுப்பினராகப் பணியாற்றுகின்றார். நடுவர் மாநாட்டு வெளியீட்டு நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளுடன், ஏனைய பல ஆய்வுப் பத்திரங்கள், 6 ஆங்கிலப் புத்தகங்கள், 3 சிங்களப் புத்தகங்கள், சர்வதேச புத்தகங்களில் 2 அத்தியாயங்கள் ஆகியன அவரது சான்றுகளின் கீழ் வருகின்றன. சிரேஷ்ட பேராசிரியர் குணவர்தன, கல்வித் துறையில் கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆய்வுகளில் உயர் நிலையில் இருக்கின்றார். தற்போது அவர், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுத் தகவல் முறைமையில் சிரேஷ்ட பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

பணிப்பாளர்கள் சபையின் சுய விபரங்கள்



கலாநிதி எஸ்.நெவிஸ் மொராயஸ்
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

கலாநிதி மொராயஸ், 2019 ஜூன் 28 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

கலாநிதி நெவிஸ் மொராய்ஸ், சர்வதேச பொருளாதார வெளிப்பாடுகளைக் கொண்ட அபிவிருத்தி பொருளாதார நிபுணர் ஆவார். தற்போது இவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் துறைத் தலைவராகக் கடமையாற்றுகிறார். கற்பித்தல், ஆராய்ச்சி, கல்வி நிர்வாகம் மற்றும் தேசிய அபிவிருத்தி எல்லைகளில் அவர் விரிவான அனுபவம் வாய்ந்தவர். பொதுத் துறை, தனியார் துறை மற்றும் உள்நாட்டு, சர்வதேச அரச சாரா நிறுவனங்களின் கொள்கை மேம்பாட்டுப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

போருக்குப் பிந்திய பொருளாதார மறுசீரமைப்பின் பரந்த எல்லையில் பணியாற்றி வரும் இவரது உள்ளீடுகள், 2014 முதல் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் மனித மேம்பாட்டு அறிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில்முறைக் குழுக்களால் சாதகமாகப் பாராட்டப்பட்டுள்ளன. அவர், மேற்கொள்ளக்கூடிய நடைமுறை நடவடிக்கைகளிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். நுண் நிதியியல் திட்டங்கள் மூலம் மக்களை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய அளவிலான மேம்பாட்டு வங்கித் துறையில் வங்கி அதிகாரிகளை மேம்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து ஒரு பெரிய பல்கலைக்கழகத் திட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார். அவர் வடிவமைத்துள்ள ஏனைய திட்டங்களில், ஸ்வீடனில் உள்ள இங்கிலாந்து பல்கலைக்கழகத்துடன் நுண் நிதியியல் ஆராய்ச்சி திட்டமும் குறிப்பிடத்தக்கது. ஐக்கிய இராச்சியம், தென்னாபிரிக்கா, உகண்டா உட்பட ஏனைய நாடுகளில் உலகளாவிய மாநாடுகளில் இலங்கை இளைஞர் மேம்பாட்டுப் பயிற்சி தொடர்பான பிரச்சினைகளிலும் அவர் சர்வதேச அளவில் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

கலாநிதி மொராயஸ், மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, குறிப்பாக, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களில் பணியாற்றுவதில் அனுபவம் பெற்றவர். இது ஒரு அறிவார்ந்த பார்வையில் இருந்து மட்டுமல்லாமல், போரினால் பாதிக்கப்பட்ட நிலைமைகளை அனுபவித்த ஒருவரின் நிலைப்பாட்டிலிருந்தும், நாடு தழுவிய அளவில் ஓரங்கட்டப்பட்டவர்களின் சமூக - பொருளாதார சுமைகளுடன் தொடர்புபடுத்த அவருக்கு உதவுகிறது. பௌதீக மற்றும் பொருள் வளர்ச்சி, ஆன்மீக மற்றும் கலாசார வளர்ச்சிக்கு இடையில் சரியான சமநிலையுடன் மனிதகுலத்தின் முழுமையான வளர்ச்சியில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டவராவார்.

கலாநிதி மொராயஸ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் தாய்லாந்திலுள்ள Asian Institute of Technology இல் கலாநிதிப் பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.



திரு.பீ.ஏ.எஸ்.அத்துல குமார
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

திரு.பீ.ஏ.எஸ்.அத்துல குமார, 2020 மார்ச் 11 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் பழைய மாணவரான இவர், கணக்கியல் மற்றும் நிதியியல் துறைகளில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான வலுவான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் 1991 ஆம் ஆண்டு கணக்காளர் நாயகம் திணைக்களத்தில் கணக்காய்வுப் பரிசோதகராக இணைந்து முதன் முதலில் பகிரங்க சேவையில் தனது பயணத்தை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து பொலன்னறுவையில் உள்ள லங்காபுர பிரதேச செயலகத்திலும், அநுராதபுரத்திலுள்ள தலாவ பிரதேச செயலகத்திலும் 1992 முதல் 1997 வரை கணக்கியலாளராக கடமை புரிந்துள்ளார். 1997 -2005 காலப்பகுதியில், வட மத்திய மாகாணத்தின் விவசாயப் பணிப்பாளர் காரியாலயத்தில் கணக்கியலாளராகக் கடமையாற்றினார். இவர் 2007 ஆம் ஆண்டு வரை மகாவலி அமைச்சு, நீர்ப்பாசன திணைக்களம், பத்தரமுல்லையில் உள்ள ரஜரட்ட அபிவிருத்தி மற்றும் விவசாய திணைக்களம் என்பனவற்றிலும் பணி புரிந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, 2007 ஆம் ஆண்டில் நிதியமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தில் இணைந்து, பல்வேறு உயர் பதவிகளையும் வகித்துள்ளார். தற்போது இவர் பொது நிறுவனங்கள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றி வருகிறார்.

இவர் தற்போது ஹொட்டேல் அபிவிருத்தி லங்கா பிஎல்சி, செலந்திவ பிஎல்சி, டீ லா ரூ லங்கா செக்கியூட்டி பிரின்ட் அன்ட் கரன்ஸி லிமிட்டெட் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சபைப் பணிப்பாளர் பதவிகளையும் வகித்து வருகிறார்.

இவர் கொழும்பு கொமர்ஷியல் பேர்ட்டிலைசர், மாந்தை சோல்ட் லிட்டெட், கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை விவசாயக் கைத்தொழில் நிறுவனம், வரையறுக்கப்பட்ட இலங்கை ஹைற்றோலிக் நிறுவனம், இலங்கை செரமிக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களில் பணிப்பாளர் / சபை உறுப்பினராக இருக்கின்றார். மேலும், இலங்கை போக்குவரத்துச் சபை, தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை உட்பட பல நிறுவனங்களில் நிபுணத்துவக் குழுக்களின் உறுப்பினராக சேவையாற்றி வருகிறார். திரு.குமார, உள்ளூர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக 2012 முதல் 2014 வரை பதவி வகித்துள்ளார்.

திரு. குமார, கணக்கியல், நிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல்வேறு பெறுமதி வாய்ந்த சர்வதேச நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களில் இருந்து கடல் கடந்த பயிற்சிகளையும், அனுபவத்தையும் பெற்றுள்ளார்.

1992 ஆம் ஆண்டு இலங்கை ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தில் இருந்து முகாமைத்துவம் (பொது நிர்வாகம்) (விசேட) B.Sc பட்டத்தைப் பெற்றார். 2015 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வர்த்தக கற்கைகள் துறையில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றார். மேலும், இவர், இலங்கை கணக்கியல் சேவையில் முதலாந்தர அலுவலர் ஆவார். அத்துடன், இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் பட்டய பகிரங்க கணக்கியலாளர் உறுப்பான்மையையும், லண்டன் பொது நிதியியல் மற்றும் கணக்கியல் பட்டய நிறுவனத்தின் உறுப்பினரும் ஆவார்.

பணிப்பாளர்கள் சபையின் சுய விபரங்கள்



திரு. எல்.ஈ. சுசந்த சில்வா
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

திரு சுசந்த சில்வா, 2020 ஓகஸ்ட் 10 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியில் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

உலகளாவிய ரீதியிலும், உள்நாட்டிலும் பல்வேறு தலைமைத்துவப் பதவிகளை வகித்த சுமார் 4 தசாப்தங்களுக்கு மேற்பட்ட அனுபவம் இவருக்குள்ளது. மேலும் இவர், உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில் நிறுவனங்களில் உறுப்புரிமைகளை வகித்து வருகிறார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் (FCA), இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்கியலாளர் நிறுவனம் (FCMA), இலங்கை பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் நிறுவனம் (FCPM) ஆகியவற்றின் உறுப்பினராவார். மேலும், அவுஸ்திரேலியாவின் சான்றுபடுத்தப்பட்ட கணக்கியலாளர் பயிற்சி நிறுவனம் (MCPA), அவுஸ்திரேலியாவின் கணனி சமூக அமைப்பு (MACA) என்பனவற்றின் உறுப்பினருமாவார். இவர் களனி பல்கலைக்கழகத்தில் வர்த்தகமாணி (விசேட) பட்டத்தையும், மலேசிய திறந்த பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிர்வாகத்துறையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. சில்வா, தற்போது BMW இன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் நிறுவனமான பிரஸ்டீஜ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், பணிப்பாளராகவும் கடமையாற்றுகிறார். இதனைவிட, களனி பல்ககலைக்கழகம், பட்டப் பின் கல்விக்கான பாளி நிறுவனம், களனி பல்கலைக்கழகத்தின் பௌத்த கற்கைகள் பிரிவு ஆகியவற்றின் பேரவை உறுப்பினராகவும் உள்ளார். இவர், பல்கலைக்கழகக் கணக்காய்வுக் குழுவின் தலைவராவார். கடந்த காலத்தில் லிற்றோ காஸ் கம்பனியில் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளராகவும், சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். இவர், பல தடவைகள் லிற்றோ காஸ் நிறுவனத்தின் பதில் தலைவராக கடமையாற்றியுள்ளார். அத்துடன், இலங்கையின் அமைச்சரவை நியமிக்கப்பட்ட குழுக்களில் பலதரப்பட்ட பதவிகளையும் வகித்துள்ளார்.

மேலும், பப்புவா நியுகினி பல்கலைக்கழகத்தின் IBS பிரிவில் துணைவேந்தராகவும் / CEO ஆகவும் பதவி வகித்துள்ளார். இப்பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியாவின் சதன் குரோஸ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், ஐக்கிய இராச்சியத்தை அடிப்படையாகக் கொண்ட கம்பனிகள் குழுமங்களுக்கான ஆபிரிக்க வர்த்தக செயற்பாட்டின் பிராந்திய முகாமையாளராகவும் இருந்துள்ளார். மேலும், இலங்கை வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமானத்துறை சேவைகள் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்துள்ளதோடு, 2019 ஆம் ஆண்டில் அதன் கணக்காய்வுக் குழுவில் தலைமை வகித்தார். மேலும் திரு. சில்வா, 2012 ஜூன் மாதம் தொடக்கம் 2015 மே மாதம் வரை HDFC வங்கியின் கணக்காய்வுக் குழுவில் தலைமை வகித்துள்ளார்.

இவர், ஐக்கிய இராச்சியம். ஆபிரிக்கா, மாலைதீவுகள் மற்றும் மத்திய கிழக்கு, பப்புவா நியுகினி ஆகிய நாடுகளிலுள்ள பல்வேறு பன்நாட்டு தேசியக் கம்பனிகளில் சிரேஷ்ட சபைப் பணிப்பாளர் பதவிகளையும் வகித்துள்ளார். தகவல் தொழில்நுட்பத் துறைகளோடு நெருக்கமாக இருந்து பல்வேறு சேவைகளையும் வழங்கியுள்ளார். உதாரணமாக, பப்புனியா நியுகினி கணனி அமைப்பின் தலைவராகவும், உள்ளூர் ஸ்தாபனங்களின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களங்களிலும் தலைவராக இருந்துள்ளார்.

திரு. சில்வா, மனித மூலதன அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருவதோடு, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக இருந்து தொழில்முறை ரீதியான வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்.



சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா, 2020 ஓகஸ்ட் 10 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா, களனி பல்கலைக்கழகத்தில் 35 வருடங்களுக்கும் அதிக காலம் சேவையாற்றி வருகின்றார். இவர், மனிதவள முகாமைத்துவ திணைக்களம், கணக்கியல் திணைக்களம் என்பவற்றின் தலைவராகவும், வணிக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் வர்த்தக நிர்வாக நிகழ்ச்சித் திட்ட முதுமானிப் பட்டப் படிப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். தற்போது இவர் இப்பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியுமாவார்.

2005 ஆம் ஆண்டில் அவர் கலாநிதிப் பட்டப்படிப்புக்காக அவுஸ்திரேலியாவின் சதன் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழம் சென்று, 2010 இல் கலாநிதிப் பட்டம் பெற்றார். இவருடைய கலாநிதி பட்டப் படிப்பு 'இலங்கையின் சிறிய நிதி நிறுவனங்களின் கணக்கியல் மற்றும் நிதி நடைமுறைகள் மற்றும் வினைத்திறன்' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இவரது ஆய்வுகள், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வினைத்திறன் மீது கவனம் செலுத்தியது. அவரது ஆராய்ச்சிகளின் கண்டறிதல்கள், தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் கட்டுரைகளாகவும் பிரசுரிக்கப்பட்டன. மேலும், இவருடைய கண்டறிதல்கள் உலகளாவிய ஆய்வுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பேராசிரியர் ஜயமஹா, இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் ஒரு உறுப்பினராவார். அத்துடன், ஜயமஹா புஷ்பகுமார அன்ட் கம்பனியின் ஒரு பங்குடமையாளராகவும், பயிற்சியாளராகவும் இருந்து வருகிறார். தகுதிபெற்ற பட்டயக் கணக்கியலாளர் என்ற வகையில், இவர், பல்வேறு விரிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆலோசகராகக் கடமையாற்றி, இலங்கையின் தேசியக் கல்வி முறைமையின் கொள்கைசார் விடயங்களுக்கு பங்களிப்புச் செய்துள்ளார். மேலும், இலங்கை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்படுகின்ற இலங்கை பல்கலைக்கழக மற்றும் உயர் நிறுவனங்களில் மீளாய்வாளராகக் கடமையாற்றியுள்ளார். இலங்கை பல்கலைக்கழகங்களின் நிறுவன ரீதியான மீளாய்வுக் குழுவின் ஒரு மீளாய்வாளராகவும், இலங்கையின் கணக்கியல் மற்றும் கணக்கியல் மேற்பார்வை சபையின் பணிப்பாளராகவும், சபை உறுப்பினராகவும் அவர் இருந்து வருகிறார்.

பணிப்பாளர்கள் சபையின் சுய விபரங்கள்



திரு. டி.எம்.ஏ.கே.திசாநாயக்க
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

திரு. டி.எம்.ஏ.கே.திசாநாயக்க, 2020 ஓகஸ்ட் 10 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியில் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

தேயிலை சிறுகைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் தனது தொழில் பயணத்தை ஆரம்பித்த திரு.திசாநாயக்க, உள்நாட்டு வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுறவு பணியாட்கள் ஆணைக்குழுவில் (2005-2015) தலைவர் போன்ற பல முக்கியமான பதவிகளை வகித்துள்ளார். தற்போது இவர், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதித் தலைவராக சேவையாற்றி வருகிறார். சட்டத்தரணியான இவர், NDT நிறுவனத்திலிருந்து தொழில்நுட்பத் துறையில் தேசிய டிப்ளோமா பெற்றுள்ளார்.

பிலிப்பீன்ஸின் மணிலாவில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அபிவிருத்தி ஆலோசகர் (DCAP) என்ற நிறுவனத்தினால் நடத்தப்பட்ட (விரிவாக்கல் அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்' போன்ற பல வெளிநாட்டு, உள்நாட்டுப் பயிற்சி நெறிகளைப் பெற்றுள்ளார். இதனைவிட, ரஷ்யாவிலுள்ள சென்ரோ சோயிஸ் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், இலங்கை அபிவிருத்தி மற்றும் நிர்வாக நிறுவனத்தின் வினைத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (SLIDA) ஆகியவற்றையும், 1991 ஆம் ஆண்டில் தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனங்களினால் நடத்தப்பட்ட 'வினைத் திறன் மேம்படுத்தல்' மற்றும் தேசிய பயிலுனர் சபையினால் நடத்தப்பட்ட பயிர்ச் செய்கைத் திட்டங்களையும் இவர் பூர்த்தி செய்துள்ளார்.



திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாப்பா பத்திரண
நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்

திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாப்பா பத்திரண, 2020 ஓகஸ்ட் 10 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் HDFC வங்கியில் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

பொதுச் சேவைத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள திரு. பத்திரண, தற்போது அவருடைய நிபுணத்துவத்துடன், தொழில் அமைச்சின் செயலாளராகவும், தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் சம்பந்தமான தேசிய நிறுவனத்தின் தலைவராகவும், தொழிற் கற்கைகள் தேசிய நிறுவனத்தின் தலைவராகவும் சேவையாற்றி வருகிறார்.

திரு. பத்திரண, பொதுத் துறையில் விரிவான அனுபவங்களைக் கொண்டிருப்பதோடு, பன்நாட்டு முகவர் நிறுவனங்கள் மற்றும் இருபக்க அபிவிருத்திப் பங்குடமையாளர்கள் ஆகியோருடன் பெறப்பட்ட கடன் நிதியங்களைப் பாதுகாப்பதில் பிரதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவராவார். இவர், இலங்கை அரசாங்கத்தினால் முன்னுரிமை அளிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பொருத்தமான கட்டட நிர்மாண நிறுவனங்களையும், முதலீட்டாளர்களையும் தெரிவு செய்வதில் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பல குழுக்களில் பிரதிநிதித்துவம் செய்துள்ளார். மேலும் இவர், அரசாங்கத்தினால் உரிமை கொள்ளப்பட்ட பொது நிறுவனங்களின் பணிப்பாளர் சபையில் திறைசேரி உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. பத்திரண, இலங்கை நிருவாக சேவைகளில் விசேட தர அலுவலராக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, ஆசிய மற்றும் பசிபிக் வலயத்தில் மிகப் பெரிய பன்நாட்டு அபிவிருத்திக் கூட்டுத்தாபனமான ஆசிய அபிவிருத்தி வங்கியில் சேவையாற்றியுள்ளார். மேலும், இவர், டோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் அமைச்சின் ஆலோசகர் பதவியை வகித்துள்ளார். தொழில் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட முன்னர், பொதுச் சேவையில் பல முக்கிய உயர் பதவிகளை வகித்துள்ளார். அவற்றில், கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் ராஜாங்க அமைச்சின் செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மேலதிகச் செயலாளர் என்பன குறிப்பிடத்தக்கவை. இவர் மேலும், நிதி அமைச்சில் பல்வேறு தகைமைகளில் பதவி வகித்துள்ளார். அத்துடன், வெளிநாட்டு வள திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. பத்திரண, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து தோட்ட முகாமைத்துவ மற்றும் மதிப்பீடு என்ற துறையில் (விசேட பட்டம்) பெற்றுள்ளார். நியூஸீலாந்தின் கென்டபரியிலுள்ள லிங்கோலின் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் வர்த்தக மற்றும் முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து பொருளியல் அபிவிருத்தித் துறையில் பட்டப் பின் டிப்ளோமாவையும், சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தில் இருந்து சர்வதேச விவகாரங்களுக்கான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கூட்டுறவு முகாமைத்துவம்



பாலித கமகே

பிநிஅ/பொது முகாமையாளர் B.Sc (பொறியியல்) கௌரவப் பட்டம் (மொறட்டுவை பல்கலைக்கம்) MBA - Asian Institute of Technology, தாய்லாந்துநியமனத் திகதி: 16 ஆகஸ்ட் 2018

வங்கித் துறையில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவம் வாய்ந்த திரு. பாலித கமகே, 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். திரு. கமகே, தனது வங்கியியல் தொழிலை DFCC வங்கியில் 1987 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். 1987 ஆம் ஆண்டில் DFCC இல் இணைய முன்னர், அவர் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தில் சிவில் பொறியியலாளராகப் பணியாற்றினார்.

DFCC இல், அவர் பெருநிறுவன வங்கியியல், சிறிய நடுத்தர முயற்சியாண்மை வங்கியியல், முதலீட்டு வங்கியியல், திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளில் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளில் பணி புரிந்துள்ளார். அதற்கு மேலதிகமாக, DFCC வர்தன வங்கியின் கூட்டுக் கடன் பிரிவின் தலைவராகவும் அவர் பணியாற்றினார்.

அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளராக வங்கியில் இணையும் போது, அவர் DFCC வங்கியின் நிறைவேற்று உதவித் தலைவர் (ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவம்) / பிரதான இடர் அலுவலர் பதவியை வகித்து வந்தார். அவர், வியாபார முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தின் ஆளுகைச் சபை உறுப்பினராக 2010 முதல் மூன்று வருடங்கள் சேவையாற்றியதுடன், வரையறுக்கப்பட்ட தேசிய சொத்து முகாமைத்துவ நிறுவனத்தில் [NAMAL] நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளராக 2014 ஆம் ஆண்டு முதல் நான்கு வருடங்கள் சேவையாற்றினார். அதற்கு மேலதிகமாக, இரண்டு வருட காலமாக NAMAL இல் சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும், Acuity Securities Ltd நிறுவனத்தின் இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார். திரு. கமகே, தனது தொழில் வாழ்க்கையில் வங்கித்துறை சார்ந்த பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளிலும் பயிற்சிப் பட்டறைகளிலும் பங்குபற்றியுள்ளார்.

திரு. கமகே மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மாணி (பொறியியல்) கௌரவப் பட்டத்தையும், தாய்லாந்தின் Asian Institute of Technology யின் வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தையும் கொண்டுள்ளார்.

அவர், பட்டய முகாமைத்துவக் கணக்காளர் (CIMA), UK இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன் இலங்கைப் பொறியிலாளர் நிறுவகத்தின் பெருநிறுவன உறுப்பினரும் ஆவார்.



திரு. ஏ.ஜே.அத்துகோரல

பிரதம தொழிற்பாட்டு அதிகாரி
நியமனத் திகதி: 01 ஜூலை 2009

திரு. அத்துகோரல, வங்கித் துறையில் 30 வருடங்களுக்கு மேற்பட்ட விரிவான நிர்வாக அனுபவத்தைக் கொண்டுள்ளார். HDFC வங்கியில் இணைந்துகொள்ள முன்னர், செலான் வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றில் 10 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். வங்கித் துறையில் இணைந்துகொள்ள முன்னர் உற்பத்தித் துறையில் சேவையாற்றி வந்துள்ளார்.

இவர், இங்கிலாந்தின் CIMA நிறுவனத்தின் இணை உறுப்பினராவார். மேலும் கொழும்பு பலகலைக்கழகத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இதனைவிட, ஐக்கிய அமெரிக்காவின் தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் 'சான்றுபடுத்தப்பட்ட தகவல் முறைமை கணக்காய்வாளர்' மற்றும் சான்றுபடுத்தப்பட்ட தகவல் பாதுகாப்பு முகாமையாளர் ஆகிய தகைமைகளை வகித்து வருகிறார். மேலும், இலங்கையின் வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவனத்தினால் இவருக்கு கணனி முறைமை வடிவமைப்பில் டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டது.



திருமதி டப்ளியூ. டப்ளியூ டீ. எஸ். சீ. பெரேரா

பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் மற்றும் அறவீடுகள்
அட்டோனி மற்றும் பிரசித்த நொத்தாரிசு
நியமனத் திகதி: 16 நவம்பர் 1992

இவர் HDFC வங்கியில் ஒரு சட்ட அலுவலராக தனது தொழிலை ஆரம்பித்து, 2001 ஆம் ஆண்டில் முகாமையாளர் சட்டம் என்ற பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டார். 2015 ஆம் ஆண்டில் உதவிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவருக்கு வீடமைப்பு நிதி வங்கியில் மற்றும் பிணக்கு தொடர்பான துறைகளில் சட்ட அனுபவத்துடன் கூடிய 31 வருடங்களுக்கும் மேற்பட்ட தொழில் ரீதியான அனுபவம் உள்ளது.



திரு. சீ. ஆர். பீ. பாலசூரிய

பிரதிப் பொது முகாமையாளர் - திறைசேரி மற்றும் கொடுப்பனவு நிதி மற்றும் பொருளியல் துறையில் முதுமாணி, வர்த்தகமானி பட்டம் (விசேட) MAAT நியமனத் திகதி: 22 மார்ச் 2004

இவருக்கு வணிக மற்றும் விசேட வங்கித்துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட தொழில்முறை ரீதியான அனுபவம் உள்ளது.

கூட்டுறவு முகாமைத்துவம்



திரு. மஞ்சுள கித்சிரி திசாநாயக்க

உதவிப் பொது முகாமையாளர் - கடன்கள்
ACA, ADCM (IBSL) நியமனத் திகதி: 18 ஜூன் 2012

இவர், கடன் மற்றும் நிதித்துறையில் 21 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். கடன் அதிகாரியாக HDFC வங்கியில் இணைவதற்கு முன்னர், பல்வேறு தனியார் நிதி நிறுவனங்களில் கணக்கியல் முகாமையாளர், சிரேஷ்ட கணக்கியலாளர், முகாமையாளர், கணக்கியலாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் கடன் மற்றும் தொழிற்பாடுகள் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். இவருக்கு கணக்காய்வு, நிதி முகாமைத்துவம், வரி செயற்பாடுகள் மற்றும் கடன் முகாமைத்துவம் என்பவற்றில் சிறந்த அனுபவம் உள்ளது.



திருமதி கே.ரீ.தர்ஷனி டி டி சில்வா

உதவிப் பொது முகாமையாளர் - மனித வள முகாமையாளர் மற்றும் கம்பனி செயலாளர் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டம் (MBA), சட்ட முதுமாணி (LLM) மற்றும் வங்கி நிதியிடல் மற்றும் காப்புறுதியில் உயர் டிப்ளோமா நியமனத் திகதி : 01 செப்டம்பர் 1999

இவர், HDFC வங்கியில் தனது தொழிலை சட்டத் திணைக்களத்தில் சட்டத்தரணியாக ஆரம்பித்தார். அதன் பின்னர், வங்கியின் சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டார். இவர் சட்டத்தரணி என்ற வகையில் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல், மீட்பு, மனித வளம் ஆகிய துறைகளில் 27 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் பெற்றுள்ளார். இதனைவிட, தற்போது கம்பனியில் செயலாளராக செயற்பட்டு வருகிறார். அவர், தனது தொழிலின் ஆரம்பத்தில் சிவில் சட்டத்தரணி சங்கத்தில் இணைந்திருந்தார். HDFC யில் இணைந்து கொள்ள முன் அலயன்ஸ் நிதிக் கம்பனியில் அவர் பணியாற்றியுள்ளார்.



திரு. எச் ஏ. அருண
பிரதம நிதி அதிகாரி
MBA,PGDM (RJT), B.Sc. Accy (Sp) (USJ), FIPA (Au),FFA(UK), MAAT, Inter. of CA ஸ்ரீலங்கா,
நியமனத் திகதி : 01 ஒக்டோபர் 2004

அவருக்கு வங்கித்துறை, கடன் மீளப்பெறல், நிதி திரட்டுதல், கிளை செயற்பாடுகள், கணக்கீடு, நிதி முகாமைத்துவம், வரியியல், கணக்காய்வு, திறைசேரி முகாமைத்துவம், இணக்கம், பெருநிறுவன நிதி அறிக்கையிடல் மற்றும் ஆண்டறிக்கைகள், பாதீடு மற்றும் நிதித் திட்டமிடல் துறைகளில் இரண்டு தசாப்த கால சேவை அனுபவமுள்ளது.

அவர் தனது கணக்கீட்டுத் தொழில் வாழ்க்கையை, கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் என்பனவற்றில் 1996 ஆம் ஆண்டு ஆரம்பித்து, ஒரு கணக்காய்வாளர் நிறைவேற்று அலுவலர், உதவி முகாமையாளர் தரத்தில் 1998 ஆம் ஆண்டு பிராந்திய அபிவிருத்தி வங்கியில் இணைந்து கொண்டார். HDFC வங்கியில் 2004 இல் கம்பஹாவிற்கான கிளை முகாமையாளராக இணைந்து கொண்டு, 2007 முதல் திறைசேரிக் கணக்காளராக, நிதிக் கணக்காளராக மற்றும் நிதித்துறை சிரேஷ்ட முகாமையாளராக அவர் பணியாற்றினார்.



திருமதி டப்ளியூ. என். டீ. பொதேஜு
யுஉதவிப் பொது முகாமையாளர் - நிர்வாகம்
B.Sc வியாபார நிர்வாகம் (விசேட)
CBA (CA ஸ்ரீலங்கா), CBF
நியமனத் திகதி: 01 ஜூலை 1995

அவருக்கு முகாமைத்துவம், நிதி, மனித வளம் மற்றும் ஏனைய விடயங்களில் தனியார் மற்றும் வங்கித் துறைகளில் 30 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உள்ளது.

HDFC வங்கியில் இணைந்துகொள்ள முன்பு இவர் ஏற்றுமதித் துறையில் ஒரு கணக்கியலாளராகப் பணி புரிந்தார். 1995 ஆம் ஆண்டு HDFC வங்கியில் கடன் அலுவலராக இணைந்து கொண்டார். அப்போதிருந்து திறைசேரி கணக்கியலாளர், கணக்கியல் கட்டுப்பாட்டு முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளங்கள்) மற்றும் பிரதம முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) ஆகிய பதவிகளை வகித்துள்ளதோடு, 2020 ஆம் ஆண்டு உதவிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) என்ற பதவியில் அமர்த்தப்பட்டார்.

கூட்டுறவு முகாமைத்துவம்



திரு. கே. ஆர். எம். அருண பண்டார
உதவிப் பொது முகாமையாளர் - இணக்க அதிகாரி B.Com (விசேட), CBA (CA ஸ்ரீலங்கா), SAT (AAT ஸ்ரீலங்கா), CBF
நியமனத் திகதி: 03 மே 1999

அவருக்கு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 31 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுள்ளது. HDFC வங்கியில் இணைந்து கொள்ள முன்னர் அவர் பகிரங்கக் கூட்டுத்தாபனம் மற்றும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்களில் கணக்காய்வு நடவடிக்கைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுக் காணப்பட்டார். அவர் 2012 ஜனவரி 02 ஆம் திகதி முதல் இணக்கப் பிரிவுக்கான தலைவராக நியமிக்கப்பட்டார்.



திரு. ஏ. எம். நீலச்சந்திர
பிரதம முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம்
Bsc, NIBM, CCPSP நியமனத் திகதி: 01 டிசம்பர் 1997

அவரிடம் வங்கியியல் மற்றும் அரசாங்கத் துறையில் தகவல் தொழில் நிபுணத்துவத்தில் 25 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுள்ளது. UNIX அடிப்படையான முறைமைகளை நிறுவுதல், கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல், தரவுத் தளத்தைக் கட்டமைத்தலும் பராமரித்தலும், வலையமைப்பு நிருவாகம் ஆகிய துறைகளில் அவருக்கு பரந்த அனுபவமுள்ளது. அவர் HDFC இனது அடிப்படை வங்கியியல் நடைமுறைப்படுத்தல் மற்றும் முறைமை மாற்றம் ஆகியவற்றில் கருத்திட்ட முகாமையாளராகப் பணியாற்றினார். அவர் கணணி மற்றும் தொழில்நுட்பப் பேரவையில் இரண்டு வருடங்களாகப் பணியாற்றினார்.



திரு. ஐ. நிஷாந்த
பிரதம முகாமையாளர் - இடர் முகாமைத்துவம்
MBS, Bsc. Business (sp.), AIB, LICA
நியமனத் திகதி: 26 ஜூன் 2000

திரு. நிஷாந்த, இலங்கை வங்கியியல் நிறுவனத்தின் ஒரு இணை உறுப்பினராவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வியாபாரக் கற்கைகளில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ள இவர், 2000 ஆம் ஆண்டில் HDFC வங்கியில் இருந்து வங்கித்துறையில் காலடி எடுத்து வைத்தார். தொடர்ந்து 20 வருடங்களாக 2011 ஆம் ஆண்டு இடர் முகாமைத்துவப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட முன்னர், அறவீடுகள், நிதி, கடன் நிர்வாகம் மற்றும் கிளை செயற்பாடுகள் என்பவற்றில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். இவர், 2017 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட புதிய வங்கியியல் அமுல்படுத்துகை செயன்முறையில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

பிரிவுத் தலைவர்கள்



திரு. ரீ. எச். கே. பீ. டீ சில்வா
பிரதம முகாமையாளர் - தகவல் பாதுகாப்பு



திரு. டீ. என். தர்மரத்ன
பிரதம முகாமையாளர் - கடன்கள்



திரு. டப்ளியூ. டீ. கே. செனவிரத்ன
பிரதம முகாமையாளர் - அறவீடுகள்



திருமதி ஆர். ஆர். குணவர்தன
பிரம முகாமையாளர் - கடன்கள்



திருமதி எம். ஆர். எஸ். பெர்னாண்டோ
பிரதம முகாமையாளர் - சட்டம்



திருமதி எம். யூ. எஸ். டீ கொஸ்தா
சிரேஷ்ட முகாமையாளர் - செயற்பாடுகள்



திரு. டி. எம். ஏ. திசாநாயக்க
சிரேஷ்ட முகாமையாளர் - கூட்றவு மற்றும் அபிவிருத்தி நிதி



திருமதி எல். டீ. எச். எஸ். லியனகே
சிரேஷ்ட முகாமையாளர் - கொடுப்பனவு



திரு. டப்ளியூ. எம். சந்திரசேன
சிரேஷ்ட முகாமையாளர் - மதிப்பீடு



திரு. டீ. என். தர்மரத்ன
முகாமையாளர் - வைப்புகளும் வர்த்தக அபிவிருத்தியும்



திரு. பி. எம்.பீ. பெரேரா
முகாமையாளர் - கடன் நிர்வாகம்



திரு. ரீ. பி. கருணாபந்து
முகாமையாளர் - தங்கக் கடன்கள்



திருமதி கே. எச். டீ. பிரியங்கா
முகாமையாளர் - சந்தைப்படுத்தல்



திருமதி என். எல். விஜேசிரி
முகாமையாளர் - தொழில்நுட்ப மற்றும் வளாகப் பராமரிப்பு



டொக்டர் கே. ஏ. ஏ. நிர்மாலி
முகாமையாளர் - கணக்கியல் கட்டுபாடு

பிராந்திய முகாமையாளர்கள்



திரு. ஆர். ஏ. ஜே. என். ரணசிங்க
பிராந்தியம் 1 - பிராந்திய முகாமையாளர்



திருமதி எல். குணதிலக
பிராந்தியம் 2 - பிராந்திய முகாமையாளர்



திரு. பி. டப்ளியூ. எம். சீ. குமாரசிரி
பிராந்தியம் 3 - பிராந்திய முகாமையாளர்



திரு. ஜி. டப்ளியூ. ஏ. என். காலிந்த
பிராந்தியம் 4 - பிராந்திய முகாமையாளர்



திரு. ஐ. கே. தெவடங்க
பிராந்தியம் 5 - பிராந்திய முகாமையாளர்



திரு. எச். எம். யூ. சமரவீர
பிராந்தியம் 6 - பிராந்திய முகாமையாளர்

கிளை முகாமையாளர்கள்

தொ. இ.	தலைப்பு	பெயர்	கிளை
1	திருமதி	ஏ. ஏ. எஸ். ஐ. ரீ. சோமதிலக	அம்பலாங்கொடை
2	திருமதி	எச். எம். டி. குமாரிஹாமி	அம்பாறை
3	திருமதி	ஆர். ஏ. பிலபிட்டிய	அநுராதபுரம்
4	திரு.	டீ. ஆர். ஜீ. டி. பி. ஜயதிலக	அவிசாவலை
5	திருமதி	எம். ஜி. டீ. பீ. சேனவிரத்ன	பதுளை
6	திரு.	எல். ஜயசங்கர்	மட்டக்களப்பு
7	திரு.	எஸ். ஏச். கே. கமகே	சிலாபம்
8	திரு.	டீ. கே. பீ. டீ சில்வா	கொழும்பு
9	திரு.	டீ. எஸ். ஆர். திசாநாயக்க	தம்புள்ள
10	திரு.	எச். டீ. எஸ். சேனாரத்ன	எம்பிலிப்பிட்டிய
11	திரு.	எஸ். ஏ. ஆர். சீ. பீ. குமார	காலி
12	திருமதி	டப்ளியூ. பி. எம். ஏ. பெர்னாண்டோ	கம்பஹா
13	திருமதி	என். ஏ. ஏ. என். எஸ். நிஸ்ஸங்க	கம்பளை
14	திருமதி	டீ. ரீ. ஏ. ஜயசிங்க	ஹொமாகம
15	திரு.	பீ. ஏ. விராஜ் சம்பத்	ஹொரண
16	திரு.	ஏ. ஐ. கிரியெல்ல	ஹயிட் பார்க்
17	திரு.	கே. ஏ. ஏ. பீ. எஸ். குமார	ஜா-எல
18	திருமதி	எஸ். சுயன்யா	யாழ்ப்பாணம்
19	திருமதி	ஆர். ஏஸ். ஐ. சில்வா	களுத்துறை
20	திரு.	எல். எஸ். பீ. ரத்நாயக்க	கண்டி
21	திரு.	ஆர். ஏ. சீ. எஸ். புஷ்பகுமார	கேகாலை
22	திரு.	எச். ஏ. எஸ். எல். ஹப்பன்கம	கிரிபத்கொட
23	திரு.	ஏ. எம். யூ. எஸ். பீ. அத்தநாயக்க	குளியாப்பிட்டி
24	திருமதி	சீ. ஏ. கே. அபேகோன்	குருநாகல்
25	திரு.	ரீ. ஜீ. ஆர். எம். ஆர். எம். ரத்நாயக்க	மாத்தளை
26	திரு.	பீ. ஏக்கநாயக்க	மாத்தறை
27	திரு.	எம். பீ. டேகம்	மொனராகல
28	திரு.	டீ. ஏ. என். பீ. கே. பியதாச	நிக்கவரட்டிய
29	திருமதி	எஸ். கே. பீ. சமந்தி	நிட்டம்புவ
30	திருமதி	ஏ. யூ. ரீ. பெர்னாண்டோ	நுகேகொட
31	திருமதி	எச். ஆர். எஸ். பீ. சேனாநாயக்க	நுவரெலிய
32	திரு.	ரீ. ஏச். எம். ஏ. ஹேவகே	பேலியகொட
33	திரு.	எச். என். ஜே. பெரேரா	பிலியந்தல
34	திரு.	எச். ஆர். ஏம். தாரக	பொலன்னறுவை
35	திரு.	எஸ். எம். எஸ். கே. பண்டார	இரத்தினபுரி
36	திரு.	எம். ஏ. எஸ். தேசப்பிரிய	தங்காலை
37	திரு.	எம். எல். என். அநுராத	திஸ்ஸமஹாராம
38	திரு.	ஏ. ஜி. ஸ்ரீபன்	திருகோணமலை
39	திரு.	ரீ. வேல்ஸ்குமா	வவுனியா



முகாமைத்துவப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

தொழிற்பாட்டுச் சூழல்


பொருளாதாரச் செயற்திறன்

உலக பொருளாதாரம் 2020 ஆம் ஆண்டில் 3.5% ஒடுக்கத்தை அடைந்தது என மதிப்பீடு செய்யப்பட்டது.[1] தொற்று நோயின் பாரதூரமான விளைவுகள், வறியவர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள், முறைசாராத் தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான வேலை மற்றும் முன்வரிசை வேலைகளில் ஈடுபட்டுள்ளோரினால் பெருமளவு உணரப்பட்டது.

இலங்கையின் சத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்டவாறு, 2019 உடன் ஒப்பிடுகையில், அவ்வாண்டின் 3.6% இல் இருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.3% ஆகச் சுருங்கியது. கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய முக்கிய கைத்தொழில் வலயங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், விசேடமாக ஏப்ரல் மாத நாட்டின் முடக்கம், பொருளாரத்தின் பலதரப்பட்ட துறைகளில் எதிர்மறையான வளாச்சிகளைக் காட்டி, 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் 16.4% பொருளாதார வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், 2020 இறுதிக் காலாண்டில் பொருளாதாரம் 1.3% ஆல் வளர்ச்சி கண்டது.[2]

2019 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இறக்குமதிச் செலவில் சுருக்கம் ஏற்பட்டதன் காரணமாக, 2020 ஜனவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கு இடையில் வர்த்தகப் பற்றாக்குறை குறுகியது. எனினும், அதேகாலப்பகுதியில் ஒப்பீட்டளவில் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களும் வீழ்ச்சியடைந்தன.

வர்த்தக இடைவெளி ஐ.அ டொலர் மில்.



DCS புள்ளிவிபரங்களுக்கு அமைவாக, அனைத்து மூன்று பாரிய பொருளாதாரத் துறைகளும் நேர்மறையான பொருளாதார வளர்ச்சியைக் காட்டியதுடன், கைத்தொழில்துறை மிக மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டது.[3] சேவைத்துறை தொலைத்தொலைபாடல்களின் விரிவாக்கம் காரணமாக (15.4%) ஆல் சாதகமான வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. அதேபோன்று, நிதிச் சேவைகள் (10.9%) சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. கைத்தொழில் துறையில் உணவு மற்றும் மென்பானங்கள் மற்றும் புகையிலை தயாரிப்புகளின் உற்பத்திகள், அத்துடன், இரசாயன பதார்த்தங்களின் தயாரிப்புகள் என்பன 4.4% இனால் விரிவாக்கம் செய்யப்பட்டது.[4] விவசாய நடவடிக்கைகளில், கடல் மீன்பிடி, தேயிலை, காட்டியல் மற்றும் தேயிலை தவிர்ந்த ஏனையவை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தன. தானியங்கள் மற்றும் பானப் பயிர்கள் என்பவற்றின் வளர்ச்சி முறையே 41.3% மற்றும் 21.6% ஆன பாராட்டத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன.[5]

நாணயக் கொள்கை

தொற்று நோய் மற்றும் கட்டாய முடக்கங்கள் என்பவற்றின் பொருளாதார விளைவுகளைக் குறைப்பதற்காக, இலங்கை மத்திய வங்கி 2020 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய நாணயக் கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்தியது. 2020 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில், மத்திய வங்கி, பல தடவைகளில் நிலையியல் வைப்பு வசதி விகிதத்தைக் குறைத்தது. அதேபோன்று, நிலையியல் கடன் வசதி வீதத்தையும் குறைத்துள்ளது. மேலும், தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட அச்சுறுத்தலின் கீழ் பொருளாதார நடவடிக்கைகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் மற்றும் வர்த்தகங்களுக்கும் உதவும் முகமாக SRR இயங்கிக் கொண்டிருக்கிறது. SDFR மற்றும் SLFR என்பவற்றின் ஆகக் குறைந்த குறைப்பு மட்டங்கள் 2020 இல் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி, தொற்று நோயின் ஆரம்பத்தின் போதே, குறைந்த வட்டி வீதக் கொள்கையை அறிமுகப்படுத்திய முதலாவது மத்திய வங்கியாகும். இந்தக் குறைப்புகள், தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட வர்த்தகங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு, நிதி நிவாரணங்களை வழங்கும் பொருட்டு, குறைந்த சந்தைக் கடன் விகிதங்களை வழங்குவதற்காகவே ஏற்படுத்தப்பட்டன.

வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்பு, பொறுப்புகளின் மீது குறைக்கப்பட்ட SRR மூலமாக உந்தப்பட்டு, ரூபா 180 பில்லியன் உள்ளூர் சந்தையில் உட்புகுத்தப்பட்டது. இது, டுஊடீ நிதியங்களின் கிரயங்களைக் குறைப்பது மாத்திரமன்றி, எவ்விதமான எதிர்மறையான சூழ்நிலைகளையும் போதுமான அளவில் எதிர்கொள்ள வழிவகுத்தது. ஆயினும் கூட, இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், முடக்கப்பட்ட பொருளாதார இடர் வெளிப்பாடுகளுக்கு மத்தியில், தனியார் துறைக்கான கடன் பாய்ச்சல், அச்சுறுத்தலான கடன் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இருக்குமென எதிர்பார்த்தவாறு அமையவில்லை.

2020 நடுப்பகுதியில் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகள், திறைசேரி உண்டியல்களின் முதிர்வுகள் மற்றும் மாறுபட்ட மறுகொள்வனவுகள் காரணமாக, திரவத்தன்மை ரூபா 120 பில்லியனாகக் குறைவடைந்தது. மீள் கொடுப்பனவுகளில் இருந்து எழுகின்ற திரவத்தன்மையுடைய உறிஞ்சுதல்கள், பகுதியளவில் ஈடுகடுவதற்கு மத்திய வங்கி உடனடியான தலை கீழ் அமைந்த ஏலவிற்பனைகளை நடத்துகின்ற அதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு முதன்மை சந்தை அரசாங்க பிணையங்களைக் கொள்வனவு செய்து வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்த ஆதரவளித்தது.

1. மூலம் - உலக நாணய நிதியம் (ஜனவரி 2021) உலகப் பொருளாதாரப் பார்வை புதுப்பிப்பு.
2. மூலம் - 2021, இலங்கையின் 4வது காலாண்டு மற்றும் வருடாந்த தேசிய கணக்கியல் மதிப்பீடுகள், சனத்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களம், நிதி அமைச்சு.
3. மூலம் - இலங்கை மத்திய வங்கி (2020) Ch.[1], அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்.
4. மூலம் - 2021, தேசிய கணக்கியல் மதிப்பீடுகள் வருடாந்தம் 2020, இலங்கை சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்.
5. பிரிவு மூலம் இலங்கை மத்திய வங்கி (2020) Ch.[7], நாணயக்கொள்கை, வட்டி வீதங்கள், நாணயம் மற்றும் கடன், பொருளாதார அபிவிருத்திகள்.

தொழிற்பாட்டுச் சூழல்

நிதி நிவாரணம்

மத்திய வங்கியினால் பொருளாதாரத் தாக்கங்களைச் சீர்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தனிப்பட்டவர்கள், சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு உதவும் வகையில் ரூபா 50 பில்லியனை மீள் நிதி வசதியாக அறிமுகப்படுத்தியமையாகும். இதற்கமைய, கடன் தவணை உரிமைகள் மற்றும் 4% வருடாந்தம் தொழிற்படு மூலதனக் கடன் அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிற்படு மூலதனக் கடனுக்கு, தகுதிகாண் வரையறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றில் உல்லாசப் பிரயாணம், ஏற்றுமதி அடிப்படையிலான துறைகள், ஆடைத்தொழில், தகவல் தொழில்நுட்பம், வாசனைத் திரவியங்கள், தேயிலை மற்றும் தளபாடத்துறைகள் என்பன பிரதானவையாகும். இவை, சர்வதேச முடக்கல் மற்றும் மட்டுப்பாடுகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட துறைகளாகும்.

அதேவேளை, தற்போதுள்ள கடன் பெறுநர்களுக்கு பல சலுகைகள் மற்றும் கடன் தவணை உரிமை என்பவற்றின் அனுகூலங்களை வழங்குவதற்காக செயற்பாட்டுக் கடன்கள் மீது மத்திய வங்கியினால் சலுகைகள் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், கடன்கள் மற்றும் முற்பணங்களை மீள் கட்டமைப்பதோடு, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தண்டப்பண வட்டிகள் தள்ளுபடி செய்யப்பட்டதுடன், NPL க்கான தள்ளுபடி வசதிகளும் அறிமுகம் செய்யப்பட்டன. இதேபோன்று நிபந்தனைகளின் அடிப்படையில் தொழிற்பாடு உடைய மற்றும் தொழிற்பாடு அற்ற கடன் உரிமையாளர்களுக்கு முதலீடுகளுக்காக தொழிற்படு மூலதனமும் கடன்களும் வழங்கப்பட்டன.

மத்திய வங்கி, கடன் அட்டைகள், அடகு, தற்காலிக மேலதிகப் பற்றுகள் மற்றும் தண்டப்பண வீதங்களுக்கான வட்டி வீதங்களிலும் குறைப்புகளை ஏற்படுத்தியது. உரிமம் அளிக்கப்பட்ட, வங்கியினால் பெறப்பட்ட மீள் நிதியிடல் கடன் மீதான மூலதன மீள் கொடுப்பனவுகளை ஒத்தி வைப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியது.[6]

வங்கித்துறை

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2020 ஜனவரி - ஆகஸ்ட் வரை சொத்து வளர்ச்சி 10.5% ஆக விரிவடைந்து, ரூபா 13.8 ரில்லியனை அடைந்தது. வைப்புகளும், கடன்களும், இத்துறையின் சொத்து தளத்தற்கு நிதி வழங்கின. கடன் வளர்ச்சி, (வருடா வருடம்) இக்காலப்பகுதியின் இறுதியில் 13.5%ஐ எட்டியது. 2019 ஆம் ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 1.3% இல் இருந்து கடன்கள் மற்றும் முற்பணங்கள் துறை 8.9% ஆல் அதிகரித்துள்ளது. மொத்த அதிகரிப்பில் பெரும்பகுதி அரசாங்க மற்றும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குகின்றன.

இத்துறையில், வருடாந்தம் கடன் வளர்ச்சி 13.5% ஆல் அதிகரித்த அதேவேளை, NPL விகிதம் 5.4% ஆல் வளர்ச்சியடைந்தது. வைப்பு வளர்ச்சி 17.1% ஆகப் பதிவு செய்யப்பட்டது. (வருடாந்தம்) இதே காலப்பகுதியில், மொத்த சொத்துக்களில் 74.8%ஐ வைப்புகளைப் பங்களிப்பு செய்து இத்துறையின் விரிவாக்கத்திற்கு உதவியதை மூலம்: இலங்கை மத்திய வங்கி (2020), Ch 8, நாணயக் கொள்கை வட்டி வீதம், நாணயம் மற்றும் கடன் பொருளாதார அபிவிருத்திகள்.ஸ

பொருளாதாரக் கண்ணோட்டம்

உலக நாணய நிதியத்தின் அறிக்கைக்கு அமைய, உலகளாவிய பொருளாதாரம் முறையே 2021 மற்றும் 2022 இல் 5.5% மற்றும் 4.2% ஆக அதிகரிக்குமென எதிர்வு கூறப்படுகிறது. எனினும், தொற்று நோயின் பாரிய விளைவுகள் பாதிப்பை ஏற்படுத்தி 2022 இல் உலகளாவிய பெறுபேறு 3.8மூ ஆல் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, தொற்று நோயின் பரவல் படிப்படியாகக் குறையுமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மேலும், 2020 இன் பிற்பட்ட காலப்பகுதியில் உள்ள பொருளாதார தரவு முன்னேற்றமான சூழலைக் காட்டுகின்றன.

உலகளாவிய ரீதியில், தடுப்பூசிகளுக்கான நியாயமான அணுகல் உறுதிப்படுத்தப்படும் அதேவேளை, தொற்று நோயின் எதிர்மறை விளைவுகளை எதிர்கொள்ள பன்நாட்டு ஒத்துழைப்பு அவசியமாகும். உலகளாவிய சமூகத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் உதவி, அபிவிருத்தியடைந்து வரும், மற்றும் குறைவான தேசங்களின் உயர் கடன் பொறுப்பைத் தணிக்க உதவும்.[8]

வர்த்தக நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியதனால், 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியை நோக்கி, பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி புதுப்பிக்கப்பட்ட சூழலையை ஏற்படுத்துகிறது.

6. மூலம்: 2020 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சுற்று நிருபம் - இலங்கை மத்திய வங்கி.
7. மூலம்: இலங்கை மத்திய வங்கி (2020), Ch [8], நாணயக் கொள்கை வட்டி வீதம், நாணயம் மற்றும் கடன் பொருளாதார அபிவிருத்திகள்.
8. மூலம் ஜனவரி 2021 உலக பொரளாதார கண்ணோட்டப் புதுப்பிப்பு சர்வதேச நாணய நிதியம்.

மூலதன அறிக்கைகள்

நிதி மூலதனம்



பங்குதாரர்களின் அக்கறைகளை நிலைப்படுத்துவதற்கும், அவர்களின் எதிர்பார்ப்புகளைப் பாதுகாக்கவும், மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் மோசமான பொருளாதாரத் தாக்கங்கள் மற்றும் துண்டிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் இருந்த போதிலும், அது, இலாபம் மிக்க வருடமாக இருந்தது என்பதை HDFC வங்கி பெருமையும் குறிப்பிட விரும்புகிறது.

நிதிச் செயற்திறன்

இலாபத்தன்மை


2020 ஆம் ஆண்டு எதிர்பாராத சவால்களுடன், வங்கியின் நிதிக் குறிகாட்டிகளின் மீது இருந்த இலக்குகளில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்திய நிதியாண்டாகும். ஆறிக்கை முழுவதும், கலந்துரையாடப்பட்ட வகையில், தொற்று நோய் மற்றும் நாட்டின் முடக்கங்கள் என்பன வங்கித்துறை மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும், நிதித் தளத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தொடர்ந்தும் ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள் வழங்கப்பட்டன. குறைக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள், ஒழுங்குபடுத்தல் தேவைகள் என்பனவற்றில் இருந்து சவால்கள் இருந்த போதிலும், HDFC வங்கியின் நிதி அடிமட்டம் அல்லது வரிக்குப் பின்னரான இலாபம், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 475 மில்லியனில் இருந்து 49% ஆல் அதிகரித்து, ரூபா 708 மில்லியனைப் பதிவு செய்தது. மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், கடந்த வருடத்தில் இருந்த வரிக்கு முன்னரான இலாபத் தொகையான ரூபா 1.24 பில்லியனில் இருந்து, 11% ஆக அதிகரித்து ரூபா 1.38 பில்லியனைப் பதிவு செய்தது.

இந்த அதிகரிப்பு, விவேகமான சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் என்பவற்றின் கலவை, கவனமான மற்றும் முன்னேற்றமான இடர் கட்டுப்பாடுகள், செலவுகளின் குறைப்பு என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டது. வெளியகச் சூழலில் இருந்த எதிர்மறையான பொருளாதார செயற்திறன் மற்றும் பாதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட இடர் சூழல் இருந்த போதிலும் இப்போது சாதகமான பெறுபேறுகளைப் பெறக்கூடியதாக உள்ளது.

மூலதன அறிக்கைகள்

நிதி மூலதனம்

நிதி மூலதனம் ரூ. மில்.




வருமானமும் செலவினமும்

வட்டி வருமானம் மற்றும் செலவினம்


கருத்திற் கொள்ளப்பட்ட இக்காலப்பகுதியில், வருமானம் ரூபா 8,090 மில்லியனில் இருந்து 3% ஆல் வீழ்ச்சியடைந்து, ரூபா 7,856 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த வட்டி வருமான வீழ்ச்சிக்குக் காரணம், குறைந்த வட்டி வீதங்கள், கடன் போட்போலியோவின் வளர்ச்சியில் ஏற்பட்ட குறைபாடு, மேலும், மீள் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட சரிவு என்பனவாகும். இவையனைத்தும், இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் தவணை உரிமை மற்றும் கடன் நிவாரண வழிமுறைகள் மூலம் பாதகமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட ரூபா 7.6 பில்லியனுக்கு எதிராக, இவ்வருடம் ரூபா 7.4 பில்லியன் வட்டி வருமானம் பதிவு செய்யப்பட்டது.
இதேவேளை, 2019 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 407 மில்லியனில் இருந்து 2020 இல் ரூபா 399 மில்லியனாக வட்டி அல்லா வருமானம் குறைந்வடைந்தது. ஒட்டுமொத்த வீழ்ச்சி இருந்த போதிலும், ஏனைய வங்கிகளுடன் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட வருமானம் ரூபா 686 மில்லியனில் இருந்து ரூபா 741 மில்லியனாக 2020 இல் அதிகரித்தது. மேலும், மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் வட்டி சூழலைப் பிரதிபலிக்கும் வகையில் அனைத்து புதிய கடன்களும் முறையாக விலையிடப்பட்டன.
வட்டி செலவினம், 2020 இல் ரூபா 4.8 பில்லியனில் இருந்து ரூபா 4.5 பில்லியனாகக் குறைவடைந்தது. ஏனைய கடன் தருநர்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டிகள், கடன் பிணையதாரர்கள் மற்றும் வைப்பாளர்களின் எண்ணிக்கை என்பன இவ்வருடத்தின் போது குறைவடைந்தன. மேலும், வங்கிக்கு வரவேண்டிய தொகைகளும் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

வட்டி வருமானம் மற்றும் செலவினம் ரூ. மில்.



நிகர கட்டண வருமானம் மற்றும் தரகு என்பன 2019 ஆம் ஆண்டில் இருந்து ரூபா 358 மில்லியனுக்கு எதிராக 2020 இல் ரூபா 303 மில்லியனாகக் குறைவடைந்தது. ஆயினும், நிகர வட்டி வருமானம் 2019 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 2.89 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் ஓரளவு அதிகரித்து ரூபா 2.98 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது.

வருமானம் ரூ. மில்.



தொழிற்படு வருமானம் மற்றும் செலவினம்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், ரூபா 2.98 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட வலுக்குன்றலுக்கு பின்னரான நிகர தொழிற்பாட்டு வருமானம், ரூபா 3.1 பில்லியனாக வளர்ச்சியடைந்தது. தொழிற்படு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஏனைய தொழிற்படு வருமான அதிகரிப்புடன் தொடர்புடையது. ஏனைய செலவுகள் தேய்மானம் மற்றும் பதிவழிப்புச் செலவுகள் காரணமாக, தொழிற்பாட்டுச் செலவுகள் ரூபா 66 மில்லியனினால் குறைவடைந்தது.

வைப்புகளும் கடன்களும்

வைப்பு நகர்வு


2020 இல் ஏற்பட்ட நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், வங்கி அதன் வைப்புத் தளத்தை ரூபா 42.5 பில்லியனில் இருந்து, ரூபா 48.0 பில்லியனாக விரிவாக்கியது. வங்கியின் சில்லறை வைப்புகளைக் கவர்ந்தமை காரணமாக 12.81% வளர்ச்சி உந்தப்பட்டது. அவற்றில் நிலையான வைப்புகள் முக்கிய இடம்பெறுகின்றன. ஒட்டுமொத்த துறையில் சேமிப்பு அடிப்படையிலான வைப்புகள், 16% ஐ பிரதிபலிப்பதோடு, மொத்த போட்போலியோவில் 84% நிலையான வைப்புகளினால் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆயினும், மொத்தமாக பார்க்கையில், நிலையான வைப்புத் தளம் மற்றும் சேமிப்பு வைப்புத் தளம் என்பன முறையே 12.72% இருந்து 13.28% ஆக வளர்ச்சியடைந்தது. 2020 நிதியாண்டு முடிவின் போது, மொத்த சேமிப்பு அடிப்படை ரூபா 7,445 மில்லியனாக இருந்த அதேவேளை, 2020 ஆம் ஆண்டுக்கான மொத்த நிலையான வைப்புகள் ரூபா 40.50 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டன.

வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புத் திணைக்களங்களினாலும், ஊக்குவிப்புகள் மற்றும் நடமாடும் வங்கித் தொழிற்பாட்டுப் பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு விற்பனை நடவடிக்கைகள் சேமிப்புகளையும், வைப்புகளையும் அதிகரிக்கப் பங்களிப்புச் செய்தன. இந்த நடவடிக்கைகள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குழுக்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சிறிய நடுத்தர வர்த்தகத் துறைகள் மீது கவனம் செலுத்தின.

கடன் போட்போலியோ

வரையறைக்கு உட்பட்ட கடன் வழங்குகை மற்றும் வேகம் குறைக்கப்பட்ட கடன் பெறுகைகள் என்பவற்றின் மத்தியில், வங்கியின் கடன் புத்தகம், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், ரூபா 42.19 பில்லியனில் இருந்து ரூபா 41.21 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. மொத்த போட்போலியோவில் வீடமைப்புக் கடன்கள் 80.90% ஐ காட்டின. அதனைத் தொடர்ந்து, கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக் கடன்கள் 10.25% ஐ பிரதிநிதித்துவம் செய்தது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் கூட்டுறவுக் கடன்கள் 2% ஆல் வீழ்ச்சியடைந்தன. வங்கியின் மொத்த போட்போலியோவில் பிணைய அடிப்படையிலான கடன் முக்கியத்துவம் பெறுவதோடு, வீட்டு அடைமானக் கடன்கள் 34% ஆகவும் அதனைத் தொடர்ந்து ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான கடன்கள் 28% ஆகவும், தனிப்பட்ட உத்தரவாங்கள் 20% ஆகவும் அமைந்திருந்தன.

கடன் போட்போலியோ ரூ. மில்.



கடன் பெறுவனவுகளும் கூட்டுறவுத் தொகுதிக் கடன்களும்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, தொகுதிக் கடன்கள் மீது செலுத்த வேண்டியிருந்த ரூபா 2.5 பில்லியன் செலுத்தப்பட்டது. இது, 2013 ஆம் ஆண்டு வங்கிக்கு வந்த ரூபா 2,000 மில்லியன் தொகுதிக்கடனுக்கும், அதனைத் தொடர்ந்து 2015 இல் வந்த ரூபா 4,000 மில்லியன் தொகுதிக்கடனுக்கும் அடுத்து இடம்பெறுகிறது. 2013 ஆம் ஆண்டு வந்த தொகுதிக்கடனுக்கான தொகை 2016 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,080 மில்லியன் தொகுதிக்கடனுக்காக செலுத்தப்பட்டது.

செயற்திறனற்ற கடன்கள்

இவ்வருடத்தின் வெளிப்புறத் தடைகளினால் ஏற்படுத்தப்பட்ட மட்டுப்பாடுகள், வங்கியின் கடந்த வருடத்திற்கு எதிராகச் செயற்திறனற்ற கடன் விகிதத்தை முன்னேற்றுவதில் தடைகளை ஏற்படுத்தின. 2021 இல் வங்கிகளின் NPL விகிதம் 20.22% ஆக இருந்தது. இது, ஊழியர் சேமலாப நிதியத்தின் அடிப்படையிலான கடன்களில் இருந்தாகும். அத்தகைய அச்சுறுத்தல்கள், நாட்டின் முடக்கம் மற்றும் நிதிப் பொறுப்புகளை ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் காரணமாக, வாடிக்கையாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட தற்காலிகக் கடன் நிறுத்தம்/மீள் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், செயற்திறனற்ற கடன்கள், ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான கடன் போட்போலியோவில் மிகத் தெளிவாகத் தோன்றுகிறது.

நகர்வு, சமூக மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட தடைகள் என்பன, 2020 இல் வங்கிக்கு மீள் கொடுப்பனவுகளைப் பெறுவதில் சவால்களை ஏற்படுத்திய அதேவேளை, வங்கியின் செயதிறனற்ற கடன் விகிதம், வீடமைப்பு நிதித்துறையில் இருந்து எழுகின்ற குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் வாடிக்கையாளர்களின் வரையறுக்கப்பட்ட கொடுப்பனவுத் தகைமைகளை வெளிப்படுத்தின. எனினும், இத்தகைய சவால்கள் இருந்த போதிலும், வங்கி எதிர்காலத்தில் NPL விகிதம் அதிகரிப்பதைத் தடுக்கும் பொருட்டு, கடன் தர கட்டுப்பாடு தொடர்பான கடுமையான செயன்முறையுடன் விவேகமான இடர் கட்டுப்பாட்டு வழிவகைகளையும் தொடர்ந்து பின்பற்றி வருகிறது.

மேலும், ரூபா 1.5 மில்லியனுக்கு மேற்பட்ட கடன்களை வழங்குவது தொடர்பில் மறுமதிப்பீடு தொடர்பாக இடர் திணைக்களத்தினால் தரப்பட்ட கருத்துக்கள், கடன் அங்கீகார செயன்முறை மீள் கட்டமைக்கப்பட்டமையும், எதிர்காலத்தில் NPL விகிதம் அதிகரிப்பதையும் மட்டுப்படுத்துவதற்கு ஒரு பகுதியளவான காரணியாக அமைகிறது.

சொத்துக்களும் பொறுப்புக்களும்

மொத்த சொத்துக்கள்

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் மொத்த சொத்துக்களின் தொகை ரூபா 61 பில்லியன் ஆகும். வங்கியின் மொத்த சொத்துக்கள், வங்கி இடமாற்றங்களில் ஏற்பட்ட ரூபா 9.9 பில்லியன் அதிகரிப்பு, கடன் மற்றும் ஏனைய கருவிகளில் ஏற்பட்ட ரூபா 7.5 பில்லியன் ஆகியவற்றையும் உள்ளடகுகிறது. மேலும், காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள், வருடத்தின் போது ரூபா 421 மில்லியில் இருந்து ரூபா 305 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது.


மொத்தப் பொறுப்புகள்

வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் வங்கிக்கு நிலுவையாக இருந்த நிதியங்களின் தொகைகளில் ரூபா 953 மில்லியனில் இருந்து ரூபா 2.4 பில்லியனாக அதிகரிக்கப்பட்டமை உள்ளடக்கப்பட்டது. வைப்பாளர்கள் மற்றும் கடன் பெறுநர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் அதிகரிப்பு காணப்பட்டது. வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு, இவ்வருடத்தின் போதான வைப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்குக் காரணமாக அமையலாம். கடன் பிணையங்கள் தொடர்பாக இவ்வருடத்தின் போது வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்கான காரணம், 2020 இல் முதிர்வடையும் 5 வருடகால தொகுதிக்கடனுக்கான தொகை செலுத்தப்பட்டமையாகும். எஞ்சிய தொகுதிக்கடனுக்கான தொகை 2025 இல் செலுத்தப்பட வேண்டும்.


மூலதன அறிக்கைகள்

நிதி மூலதனம்

மொத்தப் பொறுப்புக்கள் ரூ. பில்.



பங்குரிமைகளும் பொறுப்புக்களும்



முதலீட்டுப் போட்போலியோ

வங்கியின் முதலீட்டுப் போட்போலியோ, 2020 களின் இறுதியில் ரூபா 17 பில்லியனால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. ஏனைய வங்கிகளில் மேற்கொள்ளப்படும் நிதி இடமாற்றங்கள், அரசாங்க முறிகள் மற்றும் வர்த்தக ஆவணங்கள் என்பவற்றின் ஊடாக வங்கியின் முதலீடுகள் பன்முகப்படுத்த எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகளினால் தாக்கமடைந்தன. மேலும், வங்கியின் நிதிச் செயற்திறன் மற்றும் கட்டாயமாகப் பேணவேண்டிய திரவச் சொத்து போட்போலியோ நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் (SLAR) மற்றும் திரவக் காப்பு விகிதம் (LCR) என்பவற்றையும் பாதித்தது.

பங்குதாரர் திரும்பல்களும் குறித்து வைக்கப்பட்ட மூலதனமும்

பங்குதாரர்களுக்கு பெறுமதியை உருவாக்குதல்

ஏற்ற இறக்கங்களுடனான வர்த்தகத் தாக்கங்கள், உயர் தாக்கத்தை ஏற்படுத்திய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் ஆகிய சூழ்நிலைகளுக்குள் HDFC வங்கி, பங்குதாரர்களுக்கு அவர்களின் நிதித் திரும்பல்களை மேம்படுத்தும் பொருட்டு, தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஒரு பங்கிற்கான ஆதாயம் (EPS) ரூபா 7.35 இல் இருந்து மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் 49மூ ஆல் அதிகரித்து ரூபா 10.94 ஐப் பெற்றுக் கொடுத்தது. இது, இலாபங்களை மேம்படுத்த பங்களிப்பு செய்தது. மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், பங்குதாரர்களின் நிதியங்கள் 13% ஆல் அதிகரித்து, ரூபா 5,782 மில்லியனாகக் காணப்பட்டது. 2020 இல் ஒரு பங்கிற்கான நிகர சொத்துப் பெறுமதி ரூபா 79.11 இல் இருந்து, ரூபா 89.35 ஆக அதிகரித்து 13% வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதனைவிட, குறித்துரைக்கப்பட்ட மூலதனம் ரூபா 962 மில்லியனாகவே இருந்தது.

பங்குரிமைகளும் பொறுப்புகளும்

கடந்த வருடத்தில் இருந்து மொத்தப் பங்குரிமைகளும், பொறுப்புக்களும் ரூபா 56 பில்லியனில் இருந்து அதிகரித்து ரூபா 61 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலப் பகுதியில் வங்கியின் நிதியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் ரூபா 35 மில்லியனால் அதிகரித்த அதேவேளை, 2020 ஆம் நிதியாண்டு முடிவில் தக்க வைக்கப்பட்ட ஆதாயங்கள் ரூபா 3.6 பில்லியனில் இருந்து ரூபா 4.2 பில்லியனாக உயர்வடைந்தது. மேலும், மொத்த பங்குதாரர்களின் பங்குரிமை ரூபா 5.8 பில்லியனாக இருந்தது.

ஒட்டுமொத்த அடிமட்ட வளர்ச்சியுடன் தொடர்புபடுகையில், சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) 34% அதிகரிப்பைக் காட்டியது. 2019 உடன் ஒப்பிடுகையில் இது 0.90 இல் இருந்து 1.21% ஆகப் பதிவு செய்யப்பட்டது. மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் சராசரி பங்குரிமை (ROAE) குறித்துரைக்கப்பட்ட தொகையான 9.63 இல் இருந்து 12.99 ஆக உயர்ந்து 35% அதிகரிப்பைப் பதிவு செய்தது. 2020 ஆம் நிதியாண்டில் மொத்த சொத்துக்களுக்கான பங்குதாரர்களின் பங்குரிமை 9.15 இல் இருந்து 9.47 ஆக உயர்வடைந்து 0.33% ஓரளவு அதிகரிப்பைக் காட்டியது.

திரவத் தன்மையும் நிதி போதுமான தன்மையும்

திரவத்தன்மை

வங்கி, இவ்வருடத்தின் போது முறையான திரவத் தளத்தை உறுதிப்படுத்துவதற்கு விவேகமான நடவடிக்கைகளைக் கையாண்டுள்ளது. மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், வங்கியின் SLAR (நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் வீதம்) 43% ஆல் அதிகரித்து, ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடான 20% ஐ விட உயர்வாக இருந்தது. இதன் விகிதம் 37.20 ஆகும். மேலும், வங்கி, திரவக் காப்பு விகிதத்தையும் (LCR) 138% ஆல் பேணி, ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாட்டை விட உயர் மட்டத்தில் இருந்தது. வருடம் முழுவதும் நிதி ரீதியாகச் சவால்களை ஏற்படுத்தும் சூழ்நிலைகளுக்கு எதிரான வங்கியின் அழுத்த மட்டங்கள் மதிப்பிடப்பட்டு, அது தொடர்பான அம்சங்கள், சொத்து மற்றும் திரவக் குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டது. வங்கியின் திரவ மட்டங்கள், இலங்கை மத்திய வங்கியினால் கட்டாயமாகத் தேவைப்படுத்தப்படும் வரையறைக்கு அமைவாக உள்ளது எனவும், ஆரோக்கியமான மட்டங்களுக்குள் பேணப்பட்டுள்ளது என்பதையும் இக்குழு உறுதிப்படுத்தியது. COVID-19 இன் காரணமாக, நிறுவனங்களின் வைப்புகளை மீளப் பெறுவதில் சமப்படுத்தல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு வங்கி மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகளும் சிறந்த திரவச் சொத்து போட்போலியோவை 2020 ஆண்டு பூராகவும் தக்க நிலையில் வைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

மூலதன போதுமான தன்மை

இவ்வருடத்தின் போது, குறைந்தபட்ச மூலதன ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டின் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்கு வங்கி, ரூபா 692 மில்லியனை உட்செலுத்தியது. இது, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உட்செலுத்தப்பட்ட ரூபா 1.5 பில்லியனில் இருந்து ரூபா 2.2 பில்லியன் இடைவெளியைக் குறைத்தது. தற்போதுள்ள பங்குக் குறை 2020 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும், ஒரு ஆரோக்கியமான மூலதனத் தேவைப்பாட்டைப் பேணுவதற்கான வங்கியின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதில் வங்கி பொதுவான பங்குரிமை அடுக்கு 1 வீதம் (CET 1), மொத்த அடுக்கு 1 விகிதம் மற்றும் மொத்த மூலதன விகிதம் என்பவற்றை குறைந்தபட்ச வரையறைக்கு மேல் உறுதிப்படுத்தியது. இவை குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடான முறையே 7.00% 8.50% மற்றும் 12.50% ஆகியவற்றுடன் தொடர்புபடுத்துகையில், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 19.34%, 20.20% மற்றும் 20.67% எனப் பதிவு செய்யப்பட்டது.

சமூக மற்றும் தொடர்பு மூலதனம்



தொடர்புகளைப் பாதுகாத்தல்

ஒரு நிதி இடைத்தரகர் என்ற அடிப்படையில், HDFC வங்கி, வங்கி மற்றும் அதன் பங்குதாரர்களின் வளர்ச்சியை உருவாக்கும் அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்குவது அவசியமாகும் என நம்புகிறது. இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதில் வங்கி அதன் பணியாட்களுக்கு ஒழுக்க முறையான நடத்தையைப் பேணுவதை ஊக்கப்படுத்துவதுடன், சவால்மிக்க சூழ்நிலைகளில் அதற்கு முகம் கொடுக்கும் அதேவேளை, அனைத்துப் பங்குதாரர்களுடனான ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் அவர்களுக்கு மதிப்பளிப்பதுடன், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துமாறு பணியாட்களை தேவைப்படுத்துகிறது.

வாடிக்கையாளர்கள்

ஒரு விசேட வங்கி என்ற அடிப்படையில் HDFC வங்கி அதன் வாடிக்கையாளர்களை சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி மேம்படுத்தும் கடமையைக் கொண்டுள்ளது. இந்த எண்ணத்தைக் கருத்திற் கொண்டு, வங்கி எப்போதும் அதன் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு முறையாக செவிசாய்க்கவும், வளர்ச்சியின் அனுகூலங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் சிறந்த முயற்சியை எடுத்து வருகிறது.

கிராமிய சமூகங்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் வங்கியின் அடைவு மற்றும் பெறுமதி, அதன் சமூக மூலதனத்தைத் தொடர்ந்தும் உயர்த்துவதற்கு வழிவகுப்பதுடன், இது, பல முயற்சிகள், நடவடிக்கைகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் இணைப்பின் மூலம் தக்க வைக்கப்பட்டுள்ளது. அடிமட்ட சமூகத்தின் மனதில் இடம்பிடித்து, அதன் பயணத்தை ஆரம்பித்த வங்கி என்ற வகையில், தற்போது HDFC வங்கி, மற்றுமொரு தலைமுறையை உருவாக்குவதற்கு வளமுள்ள வாடிக்கையாளர்களின் குறுக்குப் பிரிவுகளையும், ஒவ்வொருவருடனான புதிய உறவுகளையும் விரிவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

வங்கியின் வைப்பு மற்றும் கடன் வழங்குகை போட்போலியோக்கள் வங்கியின் வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. இது, அனைத்து வாடிக்கையாளர் பிரிவுகளுக்கும் சிறந்த சேவையை வழங்குவதற்கு சாத்தியமான சூழல் ஒன்று உருவாகி வருவதைக் குறித்துக் காட்டுகின்றது.

வங்கி அதன் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு அப்பால், தொடர்ந்து வாடிக்கையாளர்களுடன் உறவுகளை வலுப்படுத்துவதில் பல திறந்த தொடர்பாடல் வழிவகைகளைப் பேணி வருகிறது. இவ்வம்சம் தொடர்பில் வங்கியின் பெறுமதிகள், கிளைகள், சமூக ஊடக பிரசன்னம், இணைய தளம், கையகக் கணிப்பொறி ஊடகங்கள் என்பன அர்த்தமுள்ள உறவுகளை வளர்ப்பதில் வலுச் சேர்க்கின்றன.

மூலதன அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு மூலதனம்

உறவுகளை வளர்ப்பதற்கான பெறுமதி

சமூக மூலதனம் வளர்ச்சியடைவதும், அதன் பெறுமதி மேம்படுதலும் HDFC வங்கியின் பெறுமதிகளுடன் ஆரம்பமாகின்றன. வங்கி வாடிக்கையாளர்களுக்கு மத்தியில், நிதிநிலைத்தன்மை தொடர்பான அறிவை உருவாக்குவதுடன், நேர்மையுடன் பணியாற்றி, நெகிழ்வுத் தன்மை, நட்புறவுடனான சேவை போன்ற விடயங்கள் பற்றி அதன் பணியாட்களுக்கு அடிக்கடி நினைவூட்டுகிறது. வங்கி அதன் வாடிக்கையாளர்களை கிளைகள் அல்லது பல செயற்பாடுகள் ஊடாக எவ்வகையில் அடைந்தாலும், வங்கியின் பணியாட்கள் சவால்மிக்க சூழ்நிலைகளிலும் கூட இப்பெறுமதிகளைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துகின்றனர். இவ்விடயம் COVID-19 தொற்று நோய் ஏற்பட்ட ஆரம்ப காலப்பகுதி, முடக்கல் எற்பட்ட காலப்பகுதிகளில் பணியாட்கள் அர்ப்பணிப்புடன் தமது கடமைகளை எவ்விதமான கோரிக்கைகளும் இன்றி பூர்த்தி செய்தமை மூலம் தெரிய வருகிறது.

புவியியல் ரீதியாக பன்முகப்படுத்தப்பட்ட வலையமைப்பு

புவியியல் ரீதியாகப் பரவலாக்கப்பட்ட 39 கிளைகளுடன் கூடிய வலையமைப்புடன், வங்கி, வாடிக்கையாளர்களுடன் வங்கி நடவடிக்கைகள் ஊடாக நேரடியான தொடர்பைப் பேணி வருகிறது. அத்துடன், வங்கி 2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பிணையங்கள் மற்றும் இலத்திரனியல் அடையாளப் பலகைகள் என்பவற்றின் மூலமாக தகவல்களைப் பரப்பி வருகிறது. வங்கி மேலதிக சந்தைப் பிரிவுகளை அடைவதற்கும், நிதிச் சேர்க்கையை மேம்படுத்துவதற்கும் அதன் கிளை வலையமைப்பை 54 நிலையங்களுக்கு விஸ்தரிக்க உபாய நுட்பத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

வங்கியின் விரிவாக்கம் முக்கிய இடத்தை வகிக்கும் அதேவேளை, வினைத்திறனான, நட்புறவுடனான சேவைகளை வழங்குவதற்காக, தற்போதுள்ள கிளைகளைப் புதுப்பிக்கத் திட்டமிட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் திஸ்ஸமகாராம கிளை உட்பட ஐந்து கிளைகள் மேம்படுத்தப்பட்டன.

HDFC யின் கையகக் கணிப்பொறி வங்கியியல்

104 பேரை உள்ளடக்கிய குழு, கையகக் கணிப்பொறி வங்கி அலுவலர்களை உள்ளடக்கி, 140 நகரங்களுக்கும் மேற்பட்ட பிரதேசங்களை உள்வாங்கி, சில்லறை வாடிக்கையாளர் மற்றும் தொழில் முயற்சி உரிமையாளர்கள் ஆகியோருக்கு வாயிற்படி வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக நாடு பூராகவும் பயணம் செய்கின்றனர். HDFC வங்கியின் கையகக் கணிப்பொறி வங்கி அலகு வங்கியின் நிதிச் சேவைகளுக்குள் வாடிக்கையாளர்களைத் தொடர்புபடுத்தும் முக்கியமான பணியை ஆற்றுகிறது. அவர்களின் நகர்வு காரணமாக, வங்கி வசதிகளை அணுக முடியாமல் சிரங்களை எதிர்கொள்ளும் வாடிக்கையாளர்களிடத்தில் கையகக் கணிப்பொறி வங்கி அலுவலர்கள் செல்கின்றனர்.

புதிய வழங்குகைகளும் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளும்

2020 இல் உத்தரவாதமளிக்கப்படுபவர் அடிப்படையிலான கடன்கள் மற்றும் குத்தகைகள் ஊடாக வங்கி அதன் மிதக்கும் வீத அடிப்படையிலான கடன் போட்போலியோவை விஸ்தரித்தது. மிதக்கும் வீதத் தெரிவை அடிப்படையாகக் கொண்டு கடனைப் பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் தற்போது நிலையான அல்லது மிதக்கும் வீதத்தில் வீட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், வங்கியின் டெபிட் அட்டை ஊடாக POS பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்காக, வங்கியின் முக்கிய வங்கியியல் முறைமை 2020 இல் தரம் உயர்த்தப்பட்டது. இந்த வருடாந்த அறிக்கையை ஒன்று சேர்க்கும் வேளையில், அனைத்து ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தப் புதிய சேவை POS பரிவர்த்தனைகள் மீது பணம் அற்ற கொடுப்பனவுகளைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பினை வாடிக்கையாளருக்கு வழங்குகின்ற அதேவேளை, அதிகரித்த சந்தைப் போட்டித் தன்மையும் எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கி 2019 ஆம் ஆண்டில் மேற்கொண்ட புதிய முயற்சிகளுள் வெளிநாட்டுப் பரிவர்த்தனைகளில் எதிர்கொள்ளப்பட்ட சிக்கல்களை அகற்றுவதில் HDFC வங்கி நடவடிக்கை மேற்கொண்டது என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். வங்கி, டொலர் கணக்குகளைப் பேணுவதற்கு அதிகாரம் கொண்டிருக்காமையால், இந்த இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு முன்னணி வர்த்தக வங்கியுடன் இணைந்து செயற்படுகிறது. இந்த முயற்சி, சர்வதேச பரிவர்த்தனைகளை ஜப்பான், கடன் பணியகம் (JCB), லங்கா கிளியர் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட வங்கியின் சர்வதேச EMV-Chip அடிப்படையிலான ATM அட்டை ஊடாக மேற்கொள்ளலாம். இந்தச் சேவை 2021 இல் ஆரம்பிக்கப்படும்.

மேலும், நிர்வாக சிரமங்களைக் குறைப்பதற்காக, வங்கி கடன் பெறுநர்களுக்கு இணைய அடிப்படையிலான தீர்வுகளை வழங்குவதற்காக காப்புறுதிச் சேவை வழங்குநர்களுடன் இணைந்து செயற்படுகிறது. தற்போது இச்செயற்பாடு காப்புறுதிக் கொள்கைகளையும், காப்புறுதி விலை விபரங்களையும் பெற்றுக்கொள்ள உதவுகிறது. வாடிக்கையாளர்கள் கட்டுப்பணங்களை ஒப்பிட்டு, மேலதிகக் கட்டணம் இன்றி சரியான காப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

தொற்று நோயின் காரணமாக, தலைமைக் காரியாலயத்திற்கும், கிளைகளுக்கும் பரிவர்த்தனைகளுக்காகவும், அதனுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காகவும் வருகை தரும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

அதன் நடைமுறைகளில் ஒன்றாக, வங்கி, கவுன்டர்களைப் பாதுகாப்பதற்காக பொலித்தீன் பாவனை மேற்கொண்டது. அத்துடன், பணியாட்கள் மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் இடங்களில் அவசியமான தூர இடைவெளியைப் பேணியது. மேலும், கிளைக் காரியாலயங்களில் உள்ள முகாமையாளர்களும், தலைமைக் காரியாலய உபகரணங்கள், கதவுகள் மற்றும் ஆட்களின் அடிக்கடி தொடுகின்ற இடங்களுக்கு அப்பால் அலுவலக தலங்களில் முறையாக கிருமி நாசினி தெளிக்கப்பட்டன என்பதை தொடர்ந்து உறுதிப்படுத்தின.

நிதி நிவாரணம்

நிதி உதவி மற்றும் நிவாரணம் அதிகமாகத் தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில், வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற உதவிகளை விஸ்தரிக்கும் முகமாக 2020 இல் வங்கி மக்களை நாணய ஆதாயங்களுக்கு முன்னால் வர இடமளித்தது. தொற்று நோயினால் ஏற்பட்ட நிதித் தாக்கங்களும் கட்டாய முடக்கல்களும் பல எண்ணிக்கையான வாடிக்கையாளர்களுக்கு சவால்மிக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தின.

அரசதுறை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்கள், நாளாந்தக் கூலி பெறுவர்கள் ஆகியோருக்கு பெருமளவு சேவைகளை வழங்கி வரும் HDFC வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய, அனைத்து நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அத்துடன்,

வங்கி முகாமைத்துவம், இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'சௌபாக்கியா' தொழிற்படு மூலதன கடன் திட்டத்தை கௌரவிக்கும் வகையில் 46 வர்த்தகங்களுக்கு தொழிற்படு மூலதனக் கடன்களை அங்கீகரித்தது. அனைத்தையும் தொகுத்துப் பார்க்கையில், வங்கி ஊழியர் சேமலாப நிதி அடிப்படையிலான கடன்களைத் தவிர்த்து 40%க்கு மேற்பட்ட வாடிக்கையாளர் கடன் தவணை உரிமையை வழங்கியது.

ஒழுங்குபடுத்துநரால் குறித்துரைக்கப்பட்ட நிதி நிவாரணத்திற்கு அப்பால், எதிர்மறையாகப் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நிதி நிவாரணம் வழங்கும் வகையில் தவணைக் காலத்தை நீடித்து கடன் வசதிகளை வழங்கி மீள் ஒழுங்குபடுத்தியது. இதனைவிட, 2020 டிசம்பர் 31 க்கு முன்னர் மீளச் செலுத்த வேண்டிய கடன் மற்றும் குத்தகை வசதிகளைப் பெற்ற வாடிக்கையாளர்களுக்கு செலுத்தத் தவறுகைக் கட்டணத்தை வங்கி விடுவித்தது. வங்கியினால் வழங்கப்படுகின்ற நிதிச் சலுகைகள் தொடர்பான விடயங்களை அதன் இணைய தளத்திலும், சமூக வலைத் தளங்களிலும் மற்றும் ஒவ்வொரு கிளைகளிலுமுள்ள டிஜிட்டல் அடையாளப் பலகைகளிலும் வெளிப்படுத்தியது. வாடிக்கையாளர் தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்காக புதிய மின்னஞ்சல் முகவரியும் வழங்கப்பட்டன. இதனைத் தவிர, வாடிக்கையாளர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு, தொடர்பு இலக்கம் ஒன்றும் வழங்கப்பட்டன.


அபிவிருத்திக் கடன்கள்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி என்ற அடிப்படையில், வங்கி வாடிக்கையாளர்களுக்கு புதிய அனுகூலங்களை வழங்குவதற்கான நகர்வில் அடிக்கடி செயற்பட்டு வருகிறது. 2020 இல் HDFC வங்கி, டீ சொய்சா பிளேஸிலுள்ள வீடமைப்புத் திட்டத்தின் வீட்டு அலகு கொள்வனவாளர்களுக்காக வீடமைப்பு வசதிகளை வழங்குவதற்காக, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் (NHDA) பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

இதனைவிட, நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உள்ள மாடிக் குடியிருப்புகளைக் கொள்வனவு செய்பவர்களுக்காக, வீடமைப்புக் கடன் வசதிகளை ஒழுங்கமைப்பதற்காக ருனுயு வின் முகாமைத்துவத்துடன் HDFC வங்கியின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் உயர் முகாமைத்துவம் பேச்சுவார்த்தைகளை நடத்தின. இவ்வரண்டு திட்டங்களும், அரசாங்கத்தினால் 2020 இல் பிரேரிக்கப்பட்ட ஒரு வருடத்திற்கு 7% சலுகைக் கடன் திட்டத்தின் பின்னரேயாகும்.

டிஜிட்டல் நிலை மாற்றங்களை இயக்குதல்

HDFC வங்கியின் டிஜிட்டல் பிரசன்னம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. எனினும், வங்கி ஒப்பீட்டளவில் தாமதமாக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தன்னியக்கத் தீர்வுகளை ஏற்றுக்கொண்டாலும் தற்போது டிஜிட்டல் தொடுகை முனைகளையும், செயற்பாட்டு வினைத்திறன்களையும் அதிகரிக்கும் கவனத்துடன் டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிறது. முன்னணி மற்றும் பின்னிறுதி செயற்பாடுகள் முழுவதும் டிஜிட்டல் நுழைவாயில்களையும், நவீனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளையும் விரிவாக்க முதலீடுகள் அதிகரிக்கப்படும்.



வங்கி, புதிய டிஜிட்டல் தயாரிப்புகள், அட்டை அடிப்படையிலான நிதிக் கருவிகள், நடமாடும் பிரயோகங்கள் மற்றும் தரமுயர்த்தப்பட்ட இலத்திரனியல் வங்கியியல் சேவைகள் என்பவற்றில் முதலீடு செய்ய எத்தணிக்கிறது.

சமூக ஊடகமும் நிகழ்நிலை விளம்பரமும்

HDFC வங்கி, பல்வேறு பகுதிகளிலும் பரந்திருக்கும் வாடிக்கையாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு, பல சமூக வலையமைப்பு தளங்களை பயன்படுத்தி வருகிறது. சமூக ஊடகம், சந்தைப்படுத்தல் கருவி என்ற வகையில் விலைமதிக்க முடியாத பெறுமதியை வழங்குகிறது என்பதை குறிப்பிடுவது அவசியமாகும். அத்துடன், டிஜிட்டல் உலகில் நிலையான பிரசன்னத்தை உருவாக்குவதற்கு இதன் பங்களிப்பு அவசியமாகும். சமூக வலையமைப்பாக்கம் மற்றும் அதன் பயன்பாடு, வாடிக்கையாளர்களின் நடத்தைகளைக் கண்டறிவதற்கும், அவர்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதற்கும் மேலும், அவர்களின் சந்தேகங்கள், முக்கியமான பின்னூட்டல்கள் என்பவற்றுக்குப் பதிலளிப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு கவர்ச்சிகரமான கருவியாகும்.

முகநூலில் 14,000 க்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களுடன் புதிய வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை அளிக்கும் அதேவேளை, அதன் விசுவாசமுள்ள வாடிக்கையாளர்களுடன் ஒரு கிரமமான அடிப்படையில் தொடர்பு கொண்டு வருகிறது. வங்கியிலுள்ள விளம்பர ஊடகங்களுள் வலையமைப்பாக்கத் தளம் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஒன்றாக விளங்குகிறது.

வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பை உருவாக்குவதற்கு, சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் குத்தகைத் தீர்வுகளில், இலத்திரனியல் வர்த்தகத் தளம் ஒன்றுடன் கூட்டாக செயற்படுகிறது. இந்த ஊடகம் 1000 க்கும் மேற்பட்ட விசாரணைகளைக் கொண்ட கணிசமான அளவு உட்பாய்ச்சலை உருவாக்கியுள்ளது.

மூலதன அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு மூலதனம்

மொபைல் கொடுப்பனவு

வங்கி திட்டமிட்டபடி, 2019 ஆம் ஆண்டு JustPay ஊடாக கையடக்கத் தொலைபேசி மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்தும் App ஒன்றில் முதலீடு செய்வதற்கான திட்டங்களை விரைவுபடுத்தியது. HDFC வங்கியின் வாடிக்கையாளர்கள் தற்போது ஏதேனும் கையடக்கக் கருவியில் மேற்கொள்ளப்படும் ஒருசில தொடுகைகள் மூலமாக இந்தப் புதிய டிஜிட்டல் தீர்வு மூலமாக வர்த்தக கணக்குகளுக்கு நிதியங்களை மாற்றவும், பாவனைக் கட்டணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும்.



JustPay முறை ஊடாக உந்தப்பட்டு HDFC வங்கியின் வாடிக்கையாளர்களுடன் JustPay முறையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 14 நடமாடும் App கள் மூலம் வங்கி தொடர்புகொள்ள முடியும். வாடிக்கையாளரின் சேமிப்புக் கணக்கில் இருந்து நேரடியாக வர்த்தகக் கணக்கிற்கு அல்லது பாவனை சேவை வழங்குநருக்கு அதிகபட்சம் ரூபா 10,000 வரையான பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் சில்லறைக் கொடுப்பனவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. HDFC வங்கி யின் வலையமைப்பு தொடர்ந்தும் படிப்படியாக வளர்ச்சியடைந்து, அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு உயர் போட்டிமிக்க மற்றும் அணுகூலம் அளிக்கக்கூடிய டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்கியது.

இணையதளம்

வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் வகையில், மேலதிக தரமுயர்த்தப்பட்ட அம்சங்களை உள்ளடக்கி, வங்கியின் நிகழ்நிலை வங்கியியல் தளம் புதுப்பிக்கப்பட்டது. வங்கியின் இணைய தளம் ஊடாக வாடிக்கையாளர் வைப்புகள், கடன்கள், கிளைகள் மற்றும் ATM அமைவிடங்கள் பற்றி விரிவான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனைவிட, இணைய தளம் அவசியமான விண்ணப்பப் படிவங்கள், வட்டி விகிதங்கள் மற்றும் நிகழ்நிலை இலத்திரனியல் வங்கியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்படுத்துகிறது.

முன்னணி மற்றும் பின்னிறுதி செயற்பாடுகள் முழுவதும் டிஜிட்டல் நுழைவாயில்களையும், நவீன மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளையும் விஸ்தரிக்கும் வகையில் முதலீடுகள் அதிகரிக்கப்படும்.

HDFC கிளிக்

HDFC கிளிக், எனத் தலைப்பிடப்பட்ட இலத்திரனியல் வங்கியியல் தளம், தற்போது அனைத்து இலத்திரனியல் வங்கியியல் வசதிகளையும் வழங்கி, வாடிக்கையாளர்கள் கிளைகளுக்குச் சமூகமளிக்காது அனைத்துப் பரிவர்த்தனைகளையும் முழுமையான வசதிகளுடன் மேற்கொள்ள உதவுகிறது. இத்தளம் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பை மேலும் மெருகூட்டுவதற்காகவும், புதிய செயற்பாட்டு அம்சங்களை வழங்குவதற்காகவும் 2020 இல் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் போது வங்கி CEFT என்பதை ஏற்று எந்தவொரு வங்கிக்கும் நிதிப் பரிவர்த்தனையை மேற்கொள்ள வழிசமைத்துள்ளது.



HDFC கிளிக் இலத்தினியல் வங்கி தளம், தற்போது, பட்யடில் கொடுப்பனவு கணக்கு மீதிகளை அறிந்துகொள்ளவும், கடந்த கால பரிவர்த்தனைகளை அணுகவும் உதவுகிறது.

நுகர்வோர் ஈடுபாடு

ஊடாடு ஊடகம்

HDFC வங்கி, யூ டியூப் DUO பொழுதுபோக்குநருடன் இணைந்து, 'ஜனய் பிரியய' என்ற கவர்ச்சிகரமான விளம்பரக் காணொளியை உருவாக்கியது. இக்காணொளி, பகிரப்படும் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அந்தக் காணொளி அடிப்படையிலான வலையமைப்பில் ஒளிபரப்பு செய்யப்பட்டதில் இருந்து குறிப்பிடத்தக்களவு ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

மிஹிர-HDFC சிறுவர் தினப் போட்டி

உலக சிறுவர் தினத்தையொட்டி 2020 ஆம் ஆண்டில் HDFC வங்கி 11 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கான ஒரு விசேட போட்டியை நடத்தியது. மிஹிர பத்திரிகையில் குறுக்கெடுத்துப் போட்டியைக் கொண்ட கூப்பன் ஒன்று பிரசுரிக்கப்பட்டு, உரிய பதில்களை அனுப்பி வைக்குமாறு சிறுவர்களை வேண்டிக் கொண்டது. வங்கியின் சேமிப்புக் கணக்கின் வியாபாரப் பெயர் பற்றி வினவுகின்ற கேள்விக்கு அப்பால், பொது அறிவு அடிப்படையிலான தீர்வுக் குறிப்புகளையும் இப்புதிர் கொண்டிருந்தது.



மிஹிர புதிர்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

லேக் ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்ற சீட்டிழுப்பின், 03 வெற்றியாளர்களும், 10 ஆறுதல் பரிசு வெற்றியாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் போது பரிசு வழங்கப்பட்டது. வெற்றியாளர்களுக்கு மிதி வண்டிகள் பரிசாக வழங்கப்பட்டன.

வாடிக்கையாளர் வெகுமதிகள்

வங்கி அதன் அதிகரித்த சில்லறை வைப்பு நகர்வை அடையும் பொருட்டு, ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேல் வைப்புச் செய்தவர்களுக்கு ரூபா 5,000 பெறுமதியான பற்றுச் சீட்டுக்களை வழங்கியது. இதன் விளைவாக 2020 இல் வங்கி சில்லறை வைப்புகளில் 39% அதிகரிப்புக் கிடைத்தது.

ஆக்க முயற்சிகளும் வியாபாரப் பெயர் மேம்படுத்தலும்

பல்வேறு ஆக்க முயற்சிகள்

நாடு முழுவதுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவைகளையும், தகவல்களையும் வழங்கும் பொருட்டு, பல வருட காலமாக வங்கி அதன் நடமாடும் வங்கி அலுவலர்களை நிதிச் சேர்க்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளது. 2020 இல் இந்த நடமாடும் அணி, ஆடைத் தொழிற்சாலைகளுக்கு சென்று, அங்குள்ள பணிப் படையினருக்கு, அவர்களின் நிதித் தேவைகளை, விசேடமாக வீடமைப்பு தொடர்பான கடன்களில் கவனம் செலுத்தி, நிதித் தீர்வுகள் மீதான விழிப்புணர்வை தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகிறது.

கிளை ஆக்க முயற்சிகள்

அநுராதபுரத்திலுள்ள வங்கிக் கிளை, 2020 செப்டம்பர் மாதம் சந்தஹிரு சாயாவில் ஒரு விசேட ஊக்குவிப்பு நிகழ்ச்சியை நடத்தியது. பிராந்திய முகாமையாளர், கிளை முகாமையாளர் மற்றும் கிளை பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட அந்த வைபவத்தின் போது, 300 பணியாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இது, முக்கியமாக ஊழியர் சேமலாப நிதி அடிப்படையிலான கடன்கள், உத்தரவாதக் கடன்கள், விஷ்ராம ரெக்கவரண, ஸ்மாட் கோல் மற்றும் பிரத்திலாப சேமிப்புகள் போன்ற வங்கியின் சேமிப்புகள் மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் மீது அமைந்திருந்தன.

ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான கடன்கள் மற்றும் உத்தரவாதக் கடன்களை ஊக்குவிப்பதில், வங்கியின் சந்தைப்படுத்தல் திணைக்களம் பல்வேறு ஊக்குவிப்பு பிரசாரங்களை மேற்கொண்டது. இந்த நிகழ்வு அநுராதபுரம் மற்றும் மொனராகல கிளைகளில் உள்ள கிளை பணியாட்களின் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளுடன் பல கைத்தொழில் வேலை இடங்களில் நடைபெற்றன.

இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளில், வீதி ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மற்றுமொரு அம்சமாகும். 2020 இல் தொடர்புபட்ட கிளை அலுவலர்களின் பங்குபற்றல்களுடன் மாத்தறை, காலி, அம்பலாங்கொடை ஆகிய கிளைகளிலும் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்நிலை ஆக்க முயற்சிகள்

முகநூல் ஈடுபாடுகளை அதிகரிக்கும் வகையில், வங்கி 2020 இல் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் (LPL) T20 போட்டியின் போது கிரிக்கட் ரசிகர்களை மையப்படுத்தி போட்டி ஒன்றை நடத்தியது. இதன்போது, 103 அதிர்ஷ்ட வெற்றியாளர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு பணம் ஏற்றப்பட்டது. வெற்றி பெறும் அணியை சரியாக எதிர்வு கூறிய 7 முன்னணி வெற்றியாளர்களுக்கு புளூடூத் ஒலிபெருக்கிகளும், புளூடூத் பாதணிகளும் பரிசாக வழங்கப்பட்டன.

ஊடகத் தொடர்பாடல்கள்

எமது தயாரிப்புகள், சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக, இலங்கையின் முன்னணி தொலைக்காட்சி ஒளிபரப்பாளரின் முதன்மை செய்தி மணித்தியாலங்களின் போது தொடர்ந்து வரும் விளம்பரங்களுக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனைவிட, 6 மாத காலப்பகுதியில், ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு ஒளிபரப்புச் செய்வதற்காக ஒரு முன்னணி வானொலி செய்தி ஒலிபரப்பாளருடன் விளம்பரத்திற்காக முதலீடு செய்யப்பட்டது. மேலும், வங்கியின் நிதித் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக, ஒரு பிரசித்தி பெற்ற இளைஞர்களுக்கான வானொலி நிலையத்தில் வங்கியின் தலைவர் திருமதி வசந்தி மஞ்சநாயக்க ஒரு நேரடி நிகழ்ச்சியில் விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கண்காட்சிகள்

வங்கியின் சேவைகள் பற்றி பொது மக்களுக்கு ஆண்டு தோறும் விழிப்பூட்டுவதற்காக கண்காட்சிகளில் பங்குபற்றி வருகின்றன. 2020 ஒக்டோபரில் வங்கி 'இலங்கையைக் கட்டியெழுப்புவோம் - வீடமைப்பு மற்றும் நிர்மாண கண்காட்சி' நிகழ்ச்சியில் பற்குபற்றியது. இந்த நிகழ்ச்சியின் போது, வங்கியின் விற்பனையகம் 10,000 க்கும் மேற்பட்ட வருகையாளர்களை அவதானித்தது.

மூலதன அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு மூலதனம்



'இலங்கையைக் கட்டியெழுப்புவோம் 2020 - வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கண்காட்சி' நிகழ்ச்சியில் பங்குபற்றிய HDFC

அழைப்பு மையம்

மேலதிகச் செயற்பாட்டாளர்கள் அதிகரிக்கப்பட்டு, வங்கியின் அழைப்பு மைய நடவடிக்கைகள் இவ்வருடத்தின் போது மேம்படுத்தப்பட்டன. இவ்வழைப்பு மையம் வாடிக்கையாளர்களுக்கு மும்மொழிகளிலும் சேவை வழங்கி வருகிறது.

2020 இல் ஏற்பட்ட வரையறைகள்

தொற்று நோய் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் காரணமாக, நாடும், நாட்டிலுள்ள நிறுவனங்களும் முழுமையான தகைமையுடன் செயற்படவில்லை என்பது யாவரும் அறியாத விடயமல்ல. இந்த விடயம், வங்கியின் மேலதிக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் மற்றும் சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் என்பவற்றில் HDFC வங்கிக்கும் பொருத்தமாக இருக்கும். இச்சவால்கள் எவ்வாறு அமைந்த போதிலும், வங்கி அதன் வியாபார நுட்பங்களை சில நவீன மயப்படுத்தல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான உபாய நுட்பங்களுடன் தொடர்ந்து சீரமைத்தது. அதன் மூலம் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதிகளைச் சேர்ந்தது.

பங்குடமையாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்

HDFC வங்கி, அதன் அனைத்துச் செயற்பாட்டுத் துறைகளிலும், காப்புறுதி சேவை வழங்குநர்கள், விற்பனையாளர்கள், மூன்றாம் திறத்தவ விநியோகத்தர்கள் ஆகியோருடன் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக இணைந்து பணியாற்றியது. 2020 இல் ரூபா 148 மில்லியன் பங்குடமையாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோருக்காக இது உருவாக்கப்பட்டது.

பங்குடமை

காப்புறுதி

வீட்டுக் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகளைப் பெறும் தமது வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதியை வழங்குவதற்காக காப்புறுதிக் கம்பனிகளுடன் HDFC வங்கி தொடர்ந்து பங்காளராகச் செயற்பட்டு வருகிறது. இத்தகைய இயல்புடைய பங்குடமைகள், வாடிக்கையாளர்களின் பெறுமதியை அதிகரிக்கும் அதேவேளை, சமூக மூலதனத்தை அதிகரிக்கும் இரண்டு இலக்குகளை அடைகிறது.

2020 இல் வங்கி காப்புறுதித் தரகுக் கம்பனி ஒன்றுடன் இணைந்து உரித்துக் காப்புறுதியை வழங்கியது. வீட்டுக் கடன் அல்லது குத்தகை வசதிகளைப் பெறும் வாடிக்கையாளர்கள், உரித்துக் காப்புறுதியைப் பெறும் நோக்கத்திற்காக காப்புறுதிக் கம்பனியை அணுகாது நேரடியாக வங்கி ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய காப்புறுதிக் கொள்கைகள், பெறப்பட்ட கடனுக்கு அடைமானமாக வைக்கப்பட்ட வீட்டு உரித்துகளின் குறைபாடுகள் மற்றும் ஒழுங்கீனங்களுக்கு எதிராக வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கிறது.

2019 இல் பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு, அடைமானம் வைக்கப்பட்ட சொத்துகளுக்காக தீ மற்றும் இயற்கை அனர்த்த காப்புறுதி வசதியை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க, பீப்பிள்ஸ் காப்புறுதியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. வாடிக்கையாளர்கள் தற்போது தீ, மின்னல், வெள்ளம், சூறாவளி, நில நடுக்கம், சுனாமி போன்ற ஏனைய இயற்கை அனர்த்தங்களில் இருந்து சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக பீப்பிள்ஸ் காப்புறுதியில் இருந்து காப்புறுதிக் கொள்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மற்றும் வேறு உடன்படிக்கைகள் ஊடாக, ஏனைய காப்புறுதி சேவை வழங்குநர்களுடன் இணைந்து செயற்படும் திட்டங்களை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய பங்குடமையாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு மேலதிகப் பெறுமதியை வழங்குதல் மற்றும் வங்கியின் சந்தைப் போட்டித் தன்மையை அதிகரித்தல் ஆகியவற்றில் போட்டித்தன்மை மிக்க அனுகூலங்களை பெறக்கூடிய அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

அரச நிறுவனங்கள்

வங்கி, ஒவ்வொரு வருடமும் சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை பல நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகிறது. 2020 இல் முதலீட்டு அபிவிருத்தி சபையுடன் இணைந்து தோல் மற்றும் பாதணி அடிப்படையிலான சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு இருக்கக்கூடிய தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் திட்டங்கள் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

மேலும், கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் வங்கி நுண், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் தொழில்முயற்சித் துறைக்கு ஆதரவளிக்கும் இலக்குடன் கூட்டுமுயற்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளின் விளைவாக, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியுதவியை வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் வங்கியின் தொடர்புபட்ட கடன் போட்போலியோவை அதிகரிக்கலாம்.

இதேபோன்று வங்கி, NHDA மற்றும் UDA ஆகிய இரண்டு அரச நிறுவனங்கள் ஊடாக வீடுகளை வாங்குபவர்களுக்கு சலுகைகளை வழங்கும் பொருட்டு பங்குடமை ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு அமைய 7% சலுவை வீதம் வழங்கப்படும்.

விநியோகத்தர்கள்

2020 டிசம்பரில் உள்ளவாறு, பல்வேறு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்காக 323 விநியோகத்தர்களைக் கொண்ட விநியோக வலையமைப்பு ஒன்று உள்ளது.

பரிசோதனை நடைமுறை

வங்கி ஈடுபடுகின்ற விற்பனையாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள், ஒரு விதிமுறையான பரிசோதனை செயன்முறைக்கு அமைய தெரிவு செய்யப்படுகின்றனர். இதன் கீழ் வர்த்தகத் தொடர் திட்டங்களை (BCP) வழங்குவதற்கு அனைத்து விநியோகத்தர்களும் தெரிவு செய்யப்படுவர். இத்தகைய திறத்தவர்கள், தளபாடம் மற்றும் பொருத்துக்கள், தகவல் தொழில்நுட்ப வன்பொருள், அலுவலக காகிதாதிகள் மற்றும் அலுவலகத்துடன் தொடர்புடைய உபகரணங்கள் ஆகியவற்றை பாதுகாப்பு முகாமைத்துவம் மற்றும் சுகாதாரம் ஆகிய சேவைகளைப் பெறுவதற்கு மேலதிகமாக வங்கிக்கு சேவைகளை வழங்குதல் வேண்டும். 2002 இலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் வங்கி விநியோகத்தர்களுடன் தெளிவான தொடர்பாடல்களைப் பேணி வந்துள்ளது. மேலும், ஒவ்வொரு சேவை வழங்குநருடனும் நட்புறவைப் பேணி வந்துள்ளதுடன், அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை மதித்தும் வந்துள்ளது.

2020 இல் வங்கி POS பரிவர்த்தனைகளை எளிதாக்குதவதற்கான அதன் முக்கிய வங்கி முறையையும், இலத்திரனியல் வங்கி முறையையும் வங்கி இணைய தளத்தையும் மேம்படுத்துவதற்கு தொழில்நுட்ப சேவை வழங்குநர்களின் சேவைகளைப் பெற்றுள்ளது.

ஈடுபாடு

HDFC வங்கி, பங்குடமையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணி வருகிறது. வங்கியின் இப்பங்குடமைகள், பொருட்களையும், சேவைகளையும் பெறுவதில் மாத்திரம் தங்கியிராது. ஆயின், வங்கியின் நிதித் தீர்வுகள் பற்றி பொது மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் உள்ள மக்களுக்கு கல்வி ஊட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

HDFC வங்கி சேவைகளைப் பெறும் போது, விநியோகத்தர்களுடனும், ஏனைய மூன்றாம் திறத்தவர் சேவை வழங்குநர்களுடனும் விதிமுறையான தொடர்பாடல்களைப் பேணி வருகிறது. ஏதேனும் விநியோகத்தர் அல்லது சேவை வழங்குநரைத் தெரிவுசெய்ய முன், கேள்விப்பத்திரம் கோரப்படுவதோடு, இச்செயன்முறை விதிமுறையாகவும், வெளிப்படையாகவும் நடைபெறும்.

சமூகங்கள்

வங்கி, பல வருடங்களாக அது பணியாற்றும் சமூகங்களுக்குப் பங்களிப்புச் செய்வதற்காக பல்வேறு விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1984 ஆம் ஆண்டு வங்கி உருவாக்கப்பட்டதில் இருந்து 37 வருடங்களாக எப்போதும் நிதி ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை மேம்படுத்துவது வங்கியின் முக்கிய சேவைகளுள் ஒன்றாக இருந்து வந்துள்ளது.

வீடமைப்பு மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி மீது கவனம் செலுத்தப்பட்டு வரும் விசேட உரிமம் அளிக்கப்பட்ட வங்கி என்ற வகையில், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்கள், கைத்தொழில் துறைகள், சிறிய கைத்தொழில் சமூகங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்தில் விசேட கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக வங்கி இவ்வாடிக்கையாளர்களுக்கு வீடு மற்றும் வியாபார நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. HDFC வங்கி, ஒரு வகையில், நாட்டில் குறைந்த வசதிகளைக் கொண்ட சமூகங்களை உயர்த்துவதிலும், அச்சமூகங்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதிலும், கைத்தொழில்துறை மற்றும் சிறிய அளவு வர்த்தகத் துறைகளையும் அபிவிருத்தி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூகமும், பங்குபற்றுநர்களும் பெரும்பாலும் வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த நடத்தையைக் கோருவதனால், ஒழுங்குபடுத்துநர்களுடனான உறவுகள், சிறந்த கூட்டுறவு நடத்தையையும், நிதி முகாமைத்துவத்தையும் பேணுவதற்கு தெளிவான வழிகாட்டலை வழங்குகின்றன.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான கூட்டுத்திட்டம்

HDFC வங்கி, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தோற்பொருள் உற்பத்தி மற்றும் காலணி கைத்தொழில் அபிவிருத்தி மையத்துடன் இணைந்து, வங்கியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு இருக்கக்கூடிய ஏனைய கடன்கள் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சி நாடு பூராகவும் பல பிரதேசங்களில் தோற்பொருள் மற்றும் பாதணி கைத்தொழிலில் ஈடுபட்டு வரும் 125 தொழில் முயற்சியாளர்களிடையே நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தோற்பொருள் உற்பத்தி மற்றும் காலணி அபிவிருத்தி மையத்தில் நடைபெற்றது.



சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களிடையே தீர்வுகளை ஊக்குவிக்கும் நோக்கில் HDFC வங்கியும், IDB யும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சி

HDFC வங்கியின் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிதித் திணைக்களம், 'சௌபாக்கியா' மற்றும் 'சுவசக்தி' போன்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய கடன் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இத்தகவல்கள், இங்கு குறிப்பிடப்பட்ட கடன் திட்டங்கள் மீதான அறிவுபூர்வமான சமர்ப்பணங்கள் ஊடாக பகிரப்பட்டன. இந்த நிகழ்ச்சி, ஊடாட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டது. பங்குபற்றுநர்கள் தமது சந்தேகங்களை எழுப்பிய போது, அவை கலந்துரையாடப்பட்டு, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட காரியாலயங்களுக்கும், உரிய கிளைகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டன. தமது இருப்பிடத்திற்கு மிக அருகாமையில் உள்ள ஏதேனும் ஒரு கிளைக்கு கடன் தொடர்பான வேண்டுகோள்களை சமர்ப்பிக்குமாறு பங்குபற்றுநர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மூலதன அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு மூலதனம்

அபிவிருத்தித் திட்டங்கள்

HDFC வங்கி, சர்வதேச நிர்வாக சேவைகள் கூட்டுத்தாபனத்துடன் (IESC) இணைந்து செயற்படுகிறது.

தொழில்நுட்ப அனுசரணை மற்றும் பயிற்சித் திட்டங்களை வழங்கும் முயற்சியில் IESC 'சந்தையை மையமாகக் கொண்ட பால் உற்பத்தித் (MOD)' திட்டத்தை அமுல்படுத்தியது. இத்திட்டத்திற்கு, ஐக்கிய அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் நிதியுதவி வழங்கியது. 2019 இல் IESC உடன் இணைந்து HDFC அதன் அனுசரணையுடன் பாற் பண்ணைத் தொழிலில் ஈடுபடும் உள்நாட்டு பால் பண்ணை கைத்தொழிலாளர்களின் நிலையாதார அபிவிருத்திக்கு உதவி வழங்கியது.

MOD பாற் பண்ணை பெறுமதி சங்கிலி அமைப்புக்குள் தர முயர்த்தப்பட்ட ஆக்கத்திறன் மற்றும் தரம் ஊடாக, தூய பால் உற்பத்தியை அதிகரிக்கும் இலக்குடன் செயற்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், உற்பத்தி, ஆக்கத்திறன் என்பவற்றில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், உள்ளீடுகளின் தரத்தை அதிகரிக்கவும், பாற்பண்ணை முகாமைத்துவத்தின் சிறந்த முகாமைத்துவத்தை அமுல்படுத்தவும் உதவுவதோடு, கொள்வனவாளர்களும், விற்பனையாளர்களும் ஒன்றிணைந்து செயற்படவும் உதவுகிறது.

கூட்டுறவு சமூகப் பொறுப்பு முன்னெடுப்புகள் - 'இட்டுகம' வுக்கு பணியாட்களின் அன்பளிப்பு


உலகளாவிய தொற்று நோய் காலப்பகுதியில் அதிகமாக உதவி தேவைப்பட்டவர்களுக்காக HDFC வங்கியின் ஊழியர்களின் ஒரு நாள் சம்பளம் COVID-19 ஐ அடிப்படையாக் கொண்ட உடல் ஆரோக்கிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியமான 'இட்டுகம' வுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டம், மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் அமைக்கப்பட்டது. ஊழியர்கள் அனைவரும் ரூபா 1.2 மில்லியனைச் சேகரித்தனர். இத்தொகை 'இட்டுகம' கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது.



COVID - 19 உடல்நல மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கான அன்பளிப்பு

ஒழுங்குபடுத்துநர்கள்

வங்கி அதன் செயற்பாடுகளில் ஒருங்கிணைக்கப்பட்டவாறு ஒழுங்குபடுத்தல்கள் அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணி வருகிறது. நிதி நிறுவனம் என்ற அடிப்படையில், ஒழுங்குபடுத்துநர்கள் வங்கி எவ்வாறு செயற்படுகிறது என்பதில் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றனர். எனவே, HDFC வங்கி, பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒத்துழைப்பு வழங்குகிறது. சமூகமும், பங்குபற்றுநர்களும் வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த நடத்தையை அதிகமாகக் கோருவதனால், ஒழுங்குபடுத்துநர்களுடனான உறவுகள் சிறந்த கூட்டுறவு நடத்தையையும், நிதி முகாமைத்துவத்தையும் பேணுவதற்கு தெளிவான வழிகாட்டலை வழங்குகிறது.



இறுதியாக, நிலையாதார வர்த்தக வளர்ச்சியை உருவாக்கும் இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கம் தொடர்பான கலாசாரத்தை வங்கிக்குள் உட்புகுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துநர்கள் சரியான வழியை காட்டுகின்றனர். ஒழுங்குபடுத்துநர்களுடனான உறவுகளை மேம்படுத்துகையில், HDFC வங்கி, உரிய நேரத்திலான வெளிப்படுத்தல்கள், காலாந்தர கணக்காய்வுகள் மற்றும் கிரமமான அறிக்கையிடல் என்பவற்றில் ஈடுபட்டு வருவதோடு, வங்கியில் இருந்து தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்குவதற்கு முறையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மனித மூலதனம்



பணியாட்களை வளர்த்தலும், மேம்படுத்துதலும்

வங்கியின் நாளாந்த தொழிற்பாட்டை உண்மையாக்குதலுடன், வங்கியின் உபாயநூட்ப இலக்குகளையும், செயற்பாட்டுக் குறிக்கோள்களையும் ஒழுங்கமைப்பது வங்கியின் பணியாட்களே ஆவர். அறிவு, அனுபவம், திறன்கள், புதுமையான சிந்தனைகள் என்பவற்றின் சேர்க்கையைக் கொண்ட, வங்கியின் ஊழியர்கள் தொடர்ந்து விருத்தி செய்து வருதலே 'மனித மூலதனம்' என அங்கீகரிக்கப்படுகிறது. அவை, வழங்கப்படும் சேவைகளுக்கு சந்தேகமின்றி பெறுமதி சேர்ப்பதுடன், தொடர்புகளைப் பேணுவதற்கும் வலுச் சேர்க்கிறது. அவர்களின் தொழில் தருநர் என்ற அடிப்படையில் அதன் பணியாட்களின் வாழ்க்கையையும், வேலை மீதான அவர்களின் கவனத்தையும் உயர்த்துவதில் வங்கிக்கு அளவில்லாத வகிபங்கு உள்ளது.

2020 ஆம் ஆண்டு, வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கான வங்கி ஊழியர்களின் அர்ப்பணிப்பையும், விரி திறனையும் வெளிப்படுத்திய ஒரு விதிவிலக்கான வருடமாகும். COVID-19 நாடு பூராகவும், அத்துடன், வங்கித் துறைக்குள்ளும் வழங்கப்படும் சேவைகளை இடையூறு செய்த வகையில் வங்கியின் பெரும்பாலான பணியாட்கள் நாட்டின் முடக்கத்தின் போதும், முடக்கத்தின் பின்னரும், பெருமளவு கவனத்தையும் அர்ப்பணிப்பையும் காட்டியுள்ளனர்.

முக்கியமாக, மனித வள அடிப்படையிலான உபாய நூட்ப விடயங்களில், வங்கியின் மனித வள திணைக்களம், முக்கியமாக முதுகெலும்பாக செயற்படுகிறது. அவர்களின் கூட்டு அனுபவமும், தொழில் ஒழுக்க முறையும், தொற்று நோயினால் ஏற்பட்ட எதிர்பாராத சவால்கள் உள்ளடங்கலாக, பல்வேறு தடைகளைத் தாண்டிச் செல்வதற்கு வங்கிக்குப் பெரும் பங்கு வகித்தது. 2020 இல் ஏற்பட்ட வழமைக்கு மாறான சூழ்நிலைகளைக் கடந்து வந்து, வங்கியின் மனித வள திணைக்களம் தொற்று நோய் ஏற்பட முன்னர் திட்டமிட்ட பல செயற்பாடுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தன.

மனித வள திணைக்களம், அனைத்துப் பணியாட்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் ஆண்டு தோறும் பல துறைகளிலும் கவனம் செலுத்தி வருகிறது. இத்துறைகள் மனித வளக் கொள்கைக் கட்டமைப்பு, பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள், அனுகூலங்கள் மற்றும் சம்பளங்கள், அங்கீகாரம் என்பவற்றில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையும், மீளாய்வுகளையும் உள்ளடக்கும். 2020 இல் மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய சிறப்பம்சங்களில் ஒன்றாக, புதிய செயற்திறன் மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டமையைக் குறிப்பிடலாம். வங்கி, அதன் தொழிலாளர் சங்கத்தை வங்கியின் சூழல் முறைமையில் முக்கிய பங்குதாரராகக் கருதுகிறது. ஏனெனில், கூட்டுப் பணிப்படையைப் பிரதிநிதித்துவப்படுதும் தொழிலாளர் சங்கம், நிலையான சிறந்த உறவுகளைப் பேணுவதற்குப் பொறுப்பானதாகும்.

HDFC வங்கியின் பணியாட்கள் - உறவுகளைப் பிணிக்கும் வலையமைப்பாகும்

தலைமைக் காரியாலயம் உட்பட வங்கியின் 39 கிளைகளும், 633 பேரை உள்ளடக்கிய கூட்டு அணி வங்கியின் பணிப்படையாக உள்ளது. அவர்கள், வங்கியின் பொதுவான குறிக்கோள்கள் மற்றும் உபாயநூட்ப இலக்குகளை நோக்கி பணியாற்றி வருகின்றனர். அத்தொகையில், 403 ஆண்களும், 230 பெண்களும் அடங்குவர். இத்தொகையில் 64:36 என்ற அடிப்படையில் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் விகிதங்கள் இருப்பது மொத்த தொகையில் பால் சமத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

மூலதன அறிக்கைகள்

மனித மூலதனம்

நிரந்தர பணியாட்கள் (எண்ணிக்கை)

ஆண்		பெண்	
2019	2020	2019	2020
309	308	230	221

தகுதிகாண் பணியாட்கள் (எண்ணிக்கை)

ஆண்		பெண்	
2019	2020	2019	2020
12	2	2	4

ஒப்பந்த அடிப்படையிலான பணியாட்கள் (எண்ணிக்கை)

ஆண்		பெண்	
2019	2020	2019	2020
54	64	08	05


பயிலுநர் பணியாட்கள் (எண்ணிக்கை)

ஆண்		பெண்	
2019	2020	2019	2020
31	19	01	-

230 பெண் பணியாட்களில், 221 பேர் நிரந்தர பணியாள் தொகுதிக்குள் உள்ளடங்குகின்றனர். இது வங்கியின் மொத்த பெண் பணியாட்கள் தொகையில் 96% ஐ பிரதிபலிக்கிறது. அதேவேளை, நிரந்தர பணியாள் தொகுதிக்குள் 76% ஆண் பணியாட்கள் மாத்திரமே உள்ளனர்.

பணிப்படையை உன்னிப்பாக நோக்குகையில், 56% நிர்வாக மட்டத்திலான தகுதிகள், சிரேஷ்ட மற்றும் உயர் முகாமைத்துவத் தகுதிகள் என்பன பெண் தொழில் வல்லுநர்களால் நிரப்பப்பட்டிருப்பதுடன், வங்கியிலுள்ள சகல துறைகளிலும் முகாமைத்துவ மற்றும் நிர்வாகத்துறைப் பொறுப்புகளில் பெண்கள் முன்னணி வகிக்கின்றனர்.

உள்ளடக்கம்



தொழில் வகை மற்றும் பால் அடிப்படையிலான மொத்த பணியாட்கள்

	2020		2019		2018	
வகை	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
கூட்டுறவு முகாமைத்துவம்	8	3	9	4	8	4
பிரதம / சிரேஷ்ட முகாமையாளர்கள்	9	17	4	8	6	7
பிராந்திய முகாமையாளர்கள்	5		-	5	-	6
நிறைவேற்றுப் பணியாட்கள்	127	152	83	115	85	117
நிறைவேற்று அல்லாத பணியாட்கள்	148	57	171	110	168	110
வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள்	12	1	46	3	46	3
கனிஷ்ட வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள்	22	-	22	-	25	-
வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்கள்	27	-	31	1	53	1
கையகக் கணிப்பொறி உதவியாளர்	45	-	35	-	-	-
மொத்தம்	403	230	406	241	397	243


உயர் தக்கவைப்பு

வங்கி உயர் பணியாட்கள் தக்க வைப்பு விகிதத்தைக் கொண்டுள்ளதுடன், அது, 2020 இல் 97.4% ஆக இருந்தது. இதனைவிட, பணியாட்களின் சராசரி சேவைக்காலப் பகுதி 12 வருடங்களாக இருப்பதோடு, இது, வங்கியின் பணியாட்கள் விருத்தி மற்றும் நலன் தொடர்பான முயற்சிகளில் சாதகமான தாக்கத்தைப் பிரதிபலிப்பதோடு, வங்கிக்குப் பெருமையையும் சேர்க்கிறது. எனினும், பணியாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், சிறந்த செயற்திறனாளர்களை அங்கீகரிப்பதற்கும், வெகுமதியளிப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம், பணியாட்களின் உள்வருகை, வெளிச்செல்லல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பெறுபேறாக 2019 இல் உள்வருகை, வெளிச்செல்கை வீதம் 6.40% இல் இருந்து 4.36 ஆக வீழ்ச்சியடைந்தது.

633
பணியாட்கள்

97.4%
தக்க வைப்பு வீதம்

தக்கவைப்பு வீதம்




ஒரு பன்முக அணி

மக்களை அடிப்படையாகக் கொண்ட நிதி நிறுவனம் என்ற வகையில், HDFC வங்கி ஒரு பணியாட்களின் பன்முக அணியைக் கொண்டு செயற்படுகிறது.


பொது மற்றும் தனியார் துறைகளினால் வங்கியின் உரிமை பிரதிபலிக்கப்படுகின்றமையும், வங்கியின் பணியாட்கள் எவ்வாறு பணி புரிகிறார்கள் என்பதன் மீது ஒரு ஒத்த தீர்வு தாக்கத்தை ஏற்படுத்துகின்றமையும் இங்கு செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தக் கலப்பு அடையாளம் காரணமாக, HDFC வங்கியின் பணியாட்கள், ஸ்திரத்தன்மை மற்றும் தொழில் பாதுகாப்பு என்பனவற்றைப் பெறுவதுடன், அவர்கள் சேவையாற்றும் சந்தையில் நவீனமயமாக்கல் இயக்கத்தை எடுத்துச் செல்வதுடன், போட்டி ரீதியான சேவை மீதும் கவனம் செலுத்துகின்றனர்.

சேவைக்கால அடிப்படையில் பணியாட்கள்



HDFC வங்கியின் பணியாட்கள் தொகுதி, பல்வேறு வயது எல்லையைக் கொண்ட, பலதரப்பட்டவர்களையும் உள்ளடக்குகிறது. 53%ஆன பணியாட்கள் 18 - 35 வயது எல்லைகளுக்குள்ளும், 47%ஆன பணியாட்கள் 36 வயதுக்கும் மேற்பட்டவர்கள். மேலும், HDFC வங்கி, பல தசாப்த கால அனுபவங்களைக் கொண்ட 27% பணியாட்களைக் கொண்டுள்ளது. இந்த பலதரப்பட்ட தலைமுறைகளை உள்ளடக்கிய பணியாட்கள் அணி, பலதரப்பட்ட அனுபவங்கள், கருத்துக்கள், அறிவு என்பவற்றுடன் வங்கியை முன்னெடுத்துச் செல்கிறது.

வயது அடிப்படையில் ஊழியர்கள் - 2020



கொள்கைக் கட்டமைப்பு

HDFC வங்கியின் மனித வள முகாமைத்துவம் தொடர்பான கொள்கைக் கட்டமைப்பு, பணியாட்களின் வளர்ச்சிக்கு பெறுமதி வழங்குவதன் மீது கவனம் செலுத்துகின்ற, நன்கு சமப்படுத்தப்பட்ட கொள்கை பரவலாக்கத்தையும், வங்கியின் வளர்ச்சிக்கு அதிசிறந்த சாத்தியமான சேவைகளைப் பெறுவதையும் மையமாகக் கொண்டுள்ளது. வங்கி, இக்கொள்கைகளை பணியாட்களின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகள், நிறுவன வளர்ச்சி மற்றும் பணியாட்கள் அபிவிருத்தியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வங்கியின் செயற்பாட்டு இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் ஒத்து இணங்கும் வகையில் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

மூலதன அறிக்கைகள்

மனித மூலதனம்

பணியாட்கள் ஆட்சேர்ப்பும் முன்னேற்றமும்

கடந்த வருடங்களில் HDFC வங்கியின் ஆட்சேர்ப்பு, மந்த நிலையில் அதிகரித்தாலும், ஒரு சீராகவே இருந்தன. இதனை, குறைந்த மட்டத்திலான பணியாட்கள் உள்வருகை, வெளிச் செல்கை வீதத்துடன் தொடர்புபடுத்தலாம்.

வெற்றிடங்கள் ஏற்படும் போது, அதனைப் பூர்த்தி செய்வதற்கு தெளிவான ஆட்சேர்ப்புக் கொள்கையை வங்கி பின்பற்றுவதுடன், தேவையுள்ள தகுதியில் சரியானவர்களைச் சேர்த்துக் கொள்வதில் வங்கி வெளிப்படையான செயன்முறையைப் பின்பற்றுகிறது.

இந்தச் செயன்முறையை வங்கியின் உள்ளகக் சுற்றறிக்கை மூலமாக, தேவையான வெற்றிடத்திற்கான விளம்பரத்தைப் பிரசுரிப்பதன் மூலம் ஆரம்பிக்கின்றது. பொருத்தமான விண்ணப்பதாரி ஒருவரை பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து, வெளியக ஆட்சேர்ப்புக்காக பத்திரிகைகளிலும், இணைய தளத்திலும் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படும். 2020 இல் வங்கி அதன் ஆளணிக்கு 17 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டது.

இந்த வருடத்தின் போது, வங்கியின் ஆளணிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை இனங்காணுவதற்கும், சேர்த்துக்கொள்வதற்கும், ஆட்சேர்ப்புக் கொள்கை மீளமைக்கப்பட்டது. இந்தக் கொள்கை, வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளக விண்ணப்பதாரிகளை இனங்காணுதலையும் வெளியக ஆட்சேர்ப்பில் இருந்து சரியான விண்ணப்பதாரியை அங்கீகரித்தலையும் உள்ளடக்கும்.

2020 இல் வங்கி 367 பணியாட்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கியது. இது வங்கி வலையமைப்பில் மொத்த பணியாள் உறுப்பினர்களில் 58% ஆகும். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இந்த முயற்சி, 06 வருட இடைவெளிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை 2020 இல் புதிதாக அமுல்படுத்தப்பட்ட வங்கியின் பணியாட்கள் பதவி உயர்வுக் கொள்கையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இந்த முன்னெடுப்பின் கீழ் தலைமைக் காரியாலயத்தில் 109 பதவி உயர்வுகளும், கிளைகள் மட்டத்தில் 258 பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன.



2020 இல் பதவி உயர்வுகள்

	தலைமை அலுவலகம்	கிளைகள்
கூட்டுறவு முகாமைத்துவம்	9	-
பிரதம / சிரேஷ்ட முகாமையாளர்கள்	13	1
பிராந்திய முகாமையாளர்கள்	-	2
கிளை முகாமையாளர்கள்	-	30
நிறைவேற்றுப் பணியாட்கள	69	108
நிறைவேற்று அல்லாத பணியாட்கள்	18	117
மொத்தம்	109	258


பின்னுரிமைத் திட்டமிடல்

பின்னுரிமைத் திட்டமிடலில் மனித வள திணைக்களம் முக்கிய கவனம் செலுத்துகிறது. இது, சிரேஷ்ட தகுதிகளில் முக்கியமாக முகாமைத்துவத் தரங்களில் வேலைக்கு அமர்த்துவதற்கான சரியான அறிவு மற்றும் தகைமைகளைக் கொண்ட ஆட்களை இனங்கண்டு, வளம் மிக்க விண்ணப்பதாரிகளை நியமித்து உறுதிப்படுத்துகிறது. இந்தப் பின்னுரிமைக் கொள்கையில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஆயின், 2021 இல் இக்கொள்கை புதுப்பிக்கப்படும்.

பணியாள் பயிற்சியும் விருத்தி மற்றும் மேம்பாடும்

தனியாள் மேம்பாட்டின் மீது தவறிழைக்காத தாக்கப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பன உள்ளதை HDFC வங்கி அங்கீகரிக்கிறது. பயிற்சிப் பணியாட்களின் தொழில்நுட்ப அறிவையும், தொழில் தகைமையையும் கூர்மைப்படுத்துவது மாத்திரமன்றி, அவர்களுடன் வேலை மட்டத்தில் குறிப்பிடத்தக்களவு ஈடுபாட்டையும் ஏற்படுத்தி வருகிறது.

முடிவடைந்த நிதியாண்டில், மனித வள திணைக்களம் பல்வேறுபட்ட செயற்பாட்டு தொழில்நுட்ப மற்றும் விற்பனை அடிப்படையிலான துறைகளை உள்ளடக்கிய 42 பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தது.



பயிற்சிக்கு மாத்திரம் வரையறை செய்யாது, வங்கிக்குள் பணியாட்களை மேம்படுத்துவதற்கும், அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுவதற்குமான முயற்சியான பல்வேறு நடவடிக்கைகளையும் வங்கி கொண்டுள்ளது. பன்முகத் திறன்களைக் கொண்ட ஆட்களாக உருவாக்குவதையும், அனைத்து துறைகளிலும் திறமை வாய்ந்தவர்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும், கிளைகளுக்குள் தொழில் சுழற்சி முறை பின்பற்றப்படுகின்றன. உள்ளகப் பணியாட்கள் பதவி உயர்வுகளும், பணியாட்களை மேம்படுத்துவதும், நாளாந்த நடவடிக்கைகளில் உயரிய பொறுப்புகளை வழங்குவதும் இன்னுமொரு உபாயநுட்பப் பாதையாகும்.

வெளியகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத் தலைப்பு	வகை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
கொள்முதல் முகாமைத்துவம் மற்றும் கேள்விப்பத்திர நடபடி முறைகள்	நிர்வாகம்	3
கொள்முதல் முகாமைத்துவம் மற்றும் கேள்விப்பத்திர நடபடி முறைகள்	நிர்வாகம்	3
டிஜிட்டல் வங்கிகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள்	கணக்காய்வு	1
BASEL III இன் அமுலாக்கம்	கணக்காய்வு	1
CRIB மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சி	கிளை	4
இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் கிராமிய அபிவிருத்தியின் முக்கியத்துவம்	கிளை	2
கிளை முகாமையாளர் வகிபங்கின் வினைத்திறனை உயர்த்துதல்	கிளை முகாமையாளர்கள்	2
வங்கியின் பண இயந்திரங்களுக்கான சிறந்த நடைமுறைகள்	காசாளர்கள்	5
நிதி நிறுவனத்திற்கான AML மற்றும் CFT	இணக்கம்	1

வெளியகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத் தலைப்பு	வகை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கான கடன் தகவல் தகவல் பணியகம்	கடன்	2
வாகனச் சாரதிகளின் திறன்களை உயர்த்துதல்	சாரதிகள்	1
வரவு செலவுத் திட்டத் தயாரிப்புகள், அமுல்படுத்துகை மற்றும் மதிப்பீடு	நிதி	1
நடைமுறைப் பிரயோகங்களுடன், அண்மைக்கால வரிச் சீர்திருத்தங்கள் மீதான ஆழமான பகுப்பாய்வு பற்றிய விளக்கம்	நிதி மற்றும் மீள் சமரசம்	3
இடமாற்றங்கள் மற்றும் இரண்டாவது ஒப்பந்தங்கள் மீதான சட்ட விளைவுகள்	மனித வளம்	2
பயிற்சித் தேவை பகுப்பாய்வு மீதான பயிற்சிப் பட்டறை	மனித வளம்	1
கடைக் காரியாலயச் சட்டத்தின் கீழ் பணியிட ஒழுங்கமைப்பு	மனித வளம்	1
பணியாட்கள் பிறள் நடத்தை மற்றும் உள்ளக விசாரணை நடபடி முறைகளை வினைத்திறனாகக் கையாளுதல்	மனித வளம்	2
உங்களுடைய சம்பாத்தியதிற்கு ஏற்ற கொடுப்பனவு	மனிதவளம் மற்றும் நிதி	6
குத்தகை - சவால்மிக்க சூழ்நிலையில் துனிகரமாகச் செயற்படல்	குத்தகை	6

மூலதன அறிக்கைகள்

மனித மூலதனம்

வெளியகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத் தலைப்பு	வகை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
உறுதி எழுதுதல் மற்றும் பணத் தூய்தாக்கல் மீதான மாநாடு	சட்ட அலுவலர்கள்	5
தேசிய சட்ட மாநாடு	சட்ட அலுவலர்கள்	3
AML மற்றும் EFC	தொழிற்பாட்டுப் பணியாட்கள்	2
இலத்திரனியல் பணப் பரிமாற்றங்களில் ஏற்படும் மோசடியைத் தணிப்பதில் வளர்ந்து வரும் போக்குகள்	தொழிற்பாட்டுப் பணியாட்கள்	2
MS Excel இன் உயர்ந்த பணிகள்	இடர்	1
வங்கி ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்தில் டிப்ளோமா	இடர்	1
தொலைபேசித் திறன்களும் முன்புகுதி பணியாட்களுக்கான தகுதிகளும்	தொலைபேசி இயக்குநர்கள்	2


உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத் தலைப்பு	வகை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
அடகு மீதான விசேட பயிற்சி அமர்வு	உதவி முகாமையாளர்கள்	38
வர்த்தகத்துடன் தொடர்புடைய கடன் மதிப்பீடு 2020	கிளை முகாமையாளர்களும் கடன் அலுவலர்களும்	39
செயற்பாட்டு விடயங்கள் மீதான கலந்துரையாடல்	கிளை பணியாட்கள்	48
செயற்பாட்டு விடயங்கள் மீதான கலந்துரையாடல்	கிளை பணியாட்கள்	33
கிளை அலுவலர்களுக்கான திறன் முகாமைத்துவ முறை	கிளை பணியாட்கள்	20
கிளை அலுவலர்களுக்கான திறன் முகாமைத்துவ முறை	கிளை பணியாட்கள்	29
கிளை அலுவலர்களுக்கான திறன் முகாமைத்துவ முறை	கிளை பணியாட்கள்	19
கிளை அலுவலர்களுக்கான திறன் முகாமைத்துவ முறை	கிளை பணியாட்கள்	20
கிளை அலுவலர்களுக்கான திறன் முகாமைத்துவ முறை	கிளை பணியாட்கள்	23
2020 க்கான வரவு செலவுத் திட்டமும் 3 வருட சுழற்சித் திட்டமும்	பிரிவுத் தலைவர்கள்	27
கிளை இலக்கை அடைவதற்கான நுட்பத் திட்டத்தை வகுத்தல்	குத்தகை அலுவலர்கள்	22
வர்த்தக ஊக்குவிப்புக்கான 2002 இலக்குகளை எவ்வாறு அடைதல்	கையகக் கணிப்பொறி இயக்குநர்கள்	30
அடகு மீதான விசேட பயிற்சி அமர்வு	அடகு அலுவலர்கள்	41
மீட்பு அலுவலர்களுக்கான திறன் முகாமைத்துவ முறை	மீட்பு அலுவலர்கள்	48
மீட்பை ஸ்திரமாகவும், வினைத்திறனாகவும் எவ்வாறு மேற்கொள்ளல்	மீட்பு அலுவலர்கள்	28
கடன் தவணை உரிமை சலுகைகள் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	மீட்பு அலுவலர்கள்	30

பணியாட்களின் அபிவிருத்திக்காக 2020 இல் வங்கி ரூபா 5.2 மில்லியனை முதலீடு செய்தது. வங்கியின் 88% பணியாட்கள் தமக்குப் பொருத்தமான தொழில்நுட்பத் துறைகளில் பயிற்சி பெற்றனர். இது, வங்கியின் 633 பேரைக் கொண்ட மொத்த ஆளணியில் 558 பணியாட்களை உள்ளடக்குகிறது.

வங்கி பணியாட்களின் சுய தொழில் விபரத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பணியாட்களுக்காக IPM, CISA ஆகிய தொழில்சார் கல்வி அமைப்புகளுடன் இணைந்துள்ளது. கிளை பணியாட்களுக்கான இணைய அடிப்படையிலான நிகழ்ச்சிகளும் இதிலுள்ளன. இதனைவிட, உள்ளகப் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்காக உள்ளக வளவாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

புதிய பணியாட்களுக்காக ஆரம்ப அறிமுக நிகழ்வு மற்றும் உள்ளகப் பயிற்சி நெறிகள் நடத்தப்படுகின்றன. இது, அவர்களை உள்ளகப் பணிச் சூழலுக்கும், தொழில் பொறுப்புகளுக்கும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள உதவுகிறது.

பயிற்சித் திட்டங்கள்



வகை	நிகழ்ச்சித் திட்டங்கள்
வங்கியியல்	19
சந்தைப்படுத்தல்	2
டிஜிட்டல்/தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம	3
வாடிக்கையாளர் சேவை	2
ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு	-
ஏனைய	16

தனிப்பட்ட வளர்ச்சி

பணியாட்களின் தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும், பணியில் இருக்கும் போது அவர்களின் செயற்திறனை அதிகரிக்கவும், வங்கியின் அனைத்து பணியாட்களுக்கும் 'சிறப்பு மட்டத்திற்கு அப்பால் அடைதல்' எனத் தலைப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்று பத்தரமுல்லையில் உள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹொட்டேலில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் 2,650 க்கும் மேற்பட்ட பயிற்சிப் பட்டறைகளை நடத்திய சந்தைப்படுத்தல் சேவையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட திரு. தம்மிக களப்புகே என்ற பயிற்றுவிப்பாளர் வளவாளராகக் கலந்து கொண்டார்.

சம்பளங்களும் அனுகூலங்களும்

HDFC வங்கி ஒவ்வொரு வருடமும் ஒப்பந்த அடிப்படையிலும், வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்களாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்ட பணியாட்கள் உள்ளடங்கலாக, அனைத்துப் பணியாட்களின் நலன்புரியை உறுதிப்படுத்தும் பொருட்டு, சம்பளம் மற்றும் அனுகூலங்களில் முதலீடு செய்து வருகிறது. இது, சம்பளத் தெரிவுகள், ஊழியர் சேமலாப நிதிய ஏற்பாடு, ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான ஏற்பாடு, பணிக்கொடைக் கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

வங்கிக் கைத்தொழில்துறையில் இருக்கக்கூடிய அதிக போட்டிமிக்க பல்வேறு அனுகூலங்களை பணியாட்களுக்கு வழங்குகிறது. இது, சலுகை வட்டி அடிப்படையிலான பணியாள் கடன்கள், ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், பயன்படுத்தப்படாத விடுமுறை மீதிகளுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்கும். பணியாளர்கள், தங்களுக்கு இயலுமானவற்றில் சிறந்தவற்றை வழங்குவதைத் தூண்டும் பொருட்டு கௌரவக் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

அனுகூலங்கள்	நிரந்தர	தகுதிகாண்	ஒப்பந்தம்	BPT
மருத்துவச் செலவு மீளப்பெறல்	✓	✓	-	-
வீட்டுக் கடன்	✓	-	-	-
இடர் கடன்	✓	-	-	-
உத்தரவாதக் கடன்	✓	✓	-	-
மோட்டார் சைக்கிள் குத்தகை	-	-	-	✓
ஊக்குவிப்புக் கொடுப்பனவு	✓	✓	✓	✓
விடுமுறைக்காலக் கொடுப்பனவு	✓	✓	✓	-
ஜீவன செலவு	✓	✓	✓	✓
இடர் கொடுப்பனவு (காசாளர் மற்றும் கையகக் கணிப்பொறி அலுவார் மாத்திரம்)	✓	✓	✓	✓
தரகு	-	-	-	✓
வாகனக் கடன்	✓	-	-	-
பண்டிகை முற்பணம்	✓	✓	✓	-
கடின பிரதேச கொடுப்பனவு	✓	-	-	-
கௌரவக் கொடுப்பனவு	✓	-	-	-
சாவியைக் கையாளும் கொடுப்பனவு (பாதுகாப்புச் சாவி)	✓	-	-	-
கிளை முகாமையாளர் கொடுப்பனவு	✓	✓	-	-
இரண்டாம் அலுவலர் கொடுப்பனவு	✓	✓	-	-

பணியாட்கள் அபிவிருத்தி மற்றும் சம்பளம் மீதான வங்கியினால் செலவிடப்பட்ட தொகையின் அதிகரிப்பு ஒரு பணியாளுக்குரிய செலவில் அதிகரித்துள்ளமையைக் காட்டுகிறது. இது தொடர்ந்து ஒரு சீராக அதிகரித்து வந்துள்ளது. 2020 முடிவில் ஒரு பணியாளுக்குரிய செலவு ரூபா 1.85 மில்லியனாக இருந்தது.

வருடம்	2017	2018	2019	2020
மொத்த ஊழியர்கள்	647	640	647	633
ஒரு பணியாளுக்குரிய செலவு (ரூ. மில்.)	1.45	1.73	1.81	1.85

வங்கி அதன் ஓய்வு பெறும் பணியாட்கள் பற்றியும் அக்கறை கொண்டுள்ளது. ஒவ்வொரு ஓய்வு பெறும் நபருக்காகவும், அவர்கள் அளித்த சேவைகளைப் பாராட்டி பிரியாவிடை வைபவம் ஏற்பாடு செய்யப்படுகிறது. வங்கியின் நலன்புரி சங்கம் ரூபா 100,000 வழங்கும் அதேவேளை, 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை புரிந்து ஓய்வு பெறும் பணியாட்களுக்கு விசேட பணிக்கொடைக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இது தவிர, ஓய்வு பெறும் பணியாட்கள் தொடர்ந்தும் மருத்துவச் செலவுகளுக்கான கோரிக்கைகளை மீளப் பெறக்கூடிய வசதி ஓய்வு பெற்ற பின்னரும் கிடைக்கிறது.

பணியாள் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

செயற்பாட்டில் மட்டுப்பாடுகள், சவால் மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியில், வாடிக்கையாளர்களுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும், பரிவர்த்தனைகளை எளிதாக்கவும், முடக்கல் காலப்பகுதியின் போதும் பணியாட்கள் தொடர்ந்தும் வேலைக்குச் சமூகமளித்தனர். அனைத்துப் பணியாட்களின் பாதுகாப்புக்காக கிருமி நாசினிகள் உட்பட ஏனைய தேவையான உபகரணங்கள், முகக் கவசங்கள் என்பன அனைத்து கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் வழங்கப்பட்டன. மேலும், பணி முறைப் பட்டியல் ஒன்றை அறிமுகப்படுத்தியதோடு, கட்டுப்பாடற்ற சூழக்கு முகம் கொடுக்காமையை உறுதிப்படுத்தும் பொருட்டு, அனைத்து பணியாட்களுக்கும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன.

இக்காலப் பகுதியின் போது, பணி நேரங்கள் தளர்த்தப்பட்டதுடன், COVID-19 அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் அதிகரித்த வேளைகளில், அருகிலுள்ள கிளைகளுக்குச் சமூகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டன. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாக வீட்டிலிருந்து பணி புரியுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

உடல்நல வழிகாட்டிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் இணங்கி நடக்கும் வகையில் அனைத்துப் பணியாட்களுக்கும் தொடர்ச்சியாக உடல் வெப்பம் பரிசோதிக்கப்பட்டது. இதனைவிட ஒவ்வொரு கிளைக் காரியாலயத்தின் நுழைவாயிலிலும் கைகளைக் கழுவுவதற்கான திரவத்துடன் நீர்த்தொட்டி பொருத்தப்பட்டது. ஒவ்வொரு கிளையிலும் வழமையான கிருமிநாசினிக்கு அப்பால் பாதணிகளை சுத்தப்படுத்தும் துடைப்பங்களும் காரியாலயத்தின் நுழை வாயிலில் வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும், கிளை முகாமையாளர்கள் அல்லது பணியாட்களினால் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

2020 இல் அமுல்படுத்தப்பட்ட கட்டாய உடல் ஆரோக்கியப் பாதுகாப்பு வழிமுறைகள் தவிர, HDFC வங்கி, அனைத்து ஊழியர்களின் ஒட்டுமொத்த நலனையும் கருத்திற் கொண்டு, சரியான நிதிக் கொடுப்பனவுகளை வழங்கியது. மேலும் வங்கி, வைத்தியசாலைக் கட்டணங்கள், வைத்திய ஆலோசனைகள் என்பவற்றுக்காக மருத்துவச் செலவுகளை மீளப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புதிய செயற்பாட்டு மதிப்பீட்டுத் திட்டம்

2020 இல் ஒட்டுமொத்தச் செயற்திறனையும் மதிப்பீடு செய்யும் வகையில் ஒரு புதிய கட்டமைப்புடன் பணியாட்கள் செயற்திறன் மதிப்பீடு மீள அறிமுகப்படுத்தப்பட்டது. இது, அறிவு, செயற்திறன், குறிகாட்டிகள் அடிப்படையில் புதிய முறையை அறிமுகப்படுத்தியது. மேலும், இது, கிளை மட்ட தனியாள் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும். இப்புதிய மதிப்பீட்டு முறைக்கு அமைய, அணி இலக்கு அடைவுக்கு 70% எடையும், எஞ்சிய 30% எடை பணியாளின் தனிப்பட்ட பண்புகளுக்காகவும் வழங்கப்பட்டது. 2020 இல் ஒவ்வொரு வணிக மற்றும் சேவைத் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த மற்றும் உயரிய செயற்திறன் அடிப்படையில் மேலதிக சம்பளக் கொடுப்பனவும் வழங்கப்பட்டன.

மூலதன அறிக்கைகள்

மனித மூலதனம்

அங்கீகாரமும் வெகுமதிகளும்

வங்கி, ஆண்டு தோறும் வருடாந்த பணியாட்கள் வெகுமதி விழாவை ஆடம்பரமாக ஏற்பாடு செய்து வந்துள்ளது. எனினும், COVID-19 அடிப்படையிலான மட்டுப்பாடுகள் மற்றும் அனைவரின் உடல் மற்றும் பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக 2020 ஆம் ஆண்டுக்கான வைபவம் சூழ்நிலைகள் வழமைக்குத் திரும்பும் வரை பிற்போடப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு கலதாரி ஹொட்டேலில் இவ்விழா நடைபெற்றது. நாடு பூராகவும் இருந்து 500 க்கும் மேற்பட்ட பணியாட்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த வைபவத்தில் 57 பணியாட்களுக்கு அவர்களின் 25 வருடங்களுக்கு மேற்பட்ட தலைசிறந்த சேவைகளைப் பாராட்டி அங்கீகரிக்கப்பட்டது. மேலும், பணியாட்கள் அங்கீகாரத்தை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு அத்துடன், பணிக் கடமையை உயர்த்தவும், மேம்படுத்தவும் அவசியம் என்ற வகையில் பணியாட்களுக்கு வங்கி உண்மையான பாராட்டுக்களுக்கு தகுதியானவர்களுக்கு பாராட்டுக் கடிதங்களையும் வழங்கும்.



T

HOW A WOMAN KEPT HDFC BANK RESILIENT DURING THE COVID-19 LOCKDOWN

WITH A WOMAN HEADING THE BANK, SOME FRONTLINE FEMALE STAFF OUTSHONE THEIR MALE COLLEAGUES DURING THE CRISIS

At listed HDFC Bank, the coronavirus lockdown presented an opportunity for women at the bank to prove they are resilient, capable, and brave.

The lockdown caught everyone by surprise. But, HDFC Bank quickly took steps to normalise operations for the benefit of its customers, mostly government sector employees such as health workers and military in the frontlines of the pandemic.

Female team members took the initiative to immerse themselves in the daily operations of the bank during the pandemic. Setting aside the health risks, they stepped up to ensure their customers were served during the lockdown. "Some of the staff were afraid to report to work, concerned with the health risks to themselves and their families," says Rohitha Gamage, Chief Executive and General

force, too, remained protected and healthy.

The bank took immediate steps to implement credit relief schemes introduced by the government to assist people affected by the lockdown. It also reviewed processes and beefed up monitoring measures to contain pressures on liquidity, capital adequacy and earnings.

"Operations had to run efficiently," reflects Gamage. "When the government announced that customers need not pay their loans for three to six months, we had to manage our cash flow so that money was available for anyone making withdrawals. And there was never a shortfall. The fact is, we are a small bank and have a

2020 இல் முடக்கல் காலப்பகுதியின் போது அதிகமான பணியாட்கள் தங்களின் கடமைகளை மிஞ்சி எதிர்த் தெரியும் தன்மையைக் காட்டினர். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், வங்கி அவர்களுக்கு சேவையை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது. அப்பணியாளர்களின் திறன் காரணமாக, முடக்கல் காலப்பகுதியின் போது HDFC வங்கி அதன் சொந்தக்காலில் நிற்கக்கூடியதாக இருந்தது.

தொழிற் சங்கத்துடனான உறவு

HDFC வங்கியின் முகாமைத்துவம், தொழிற்சங்கத்துடன் சுமுகமான உறவுகளைப் பேணி வருகிறது. 2020 இல் வங்கி 2018 ஆம் ஆண்டு கூட்டு உடன்படிக்கையின் கீழ் உடன்பட்டுள்ளமைக்கு அமைய, 3வது மற்றும் இறுதி சம்பள உயர்வுக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. வங்கியின் கூட்டுறவு முகாமைத்துவம் உட்பட நிரந்தர ஆளணியில் 99.7% ஆனவர்கள் இலங்கை வங்கி தொழிலாளர் சங்கத்தில் உறுப்புரையைக் கொண்டுள்ளனர். இது ஒரு வலுவான கூட்டுறவை ஏற்படுத்துகிறது.

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், வங்கி, இலங்கையின் வங்கித் தொழிலாளர் சங்கத்துடன் (CBEU) வங்கியின் தலைமை அலுவலகத்தில் 2018 - 2020 க்கான கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கை, சம்பளம் சாராத அனுகூலங்களை எளிதாக்குகிறது.

பணியாட்களின் வருடாந்த ஒன்றுகூடல்

வங்கியின் நலன்புரிச் சங்கம், கிளை மற்றும் தலைமைக் காரியாலயப் பணியாளர்களுக்காக அவிசாவலையிலுள்ள லெவெனோ காட்ன்ஸ் ஹொட்டேலில் வருடாந்த ஒன்றுகூடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்தச் சுற்றுலா நடனம், போட்டிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள், சிறுவர்களுக்கான போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கியிருந்தது. வங்கியின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் ஆகியோரும் கூட்டுறவு முகாமைத்துவ அணியினரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

புலமைச் சொத்து மூலதனம்



வளர்ச்சிக்கு சக்தியளிக்கும் அறிவு

HDFC வங்கியின் வளர்ச்சியை வலுவூட்டுவதில் கீழே தரப்பட்டுள்ள நிறுவன ரீதியான மற்றும் மௌனமான அறிவு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைகள் உட்பட குறிப்பிடத்தக்க தயாரிப்புகளுக்கு மேலதிகமாக, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் HDFC க்கு வங்கியே விசேடமாக உரிய தனித்துவமான வழங்குகைகள் போன்ற கண்ணுக்குப் புலப்படாத மூலதனத்தின் சேர்க்கையை உள்ளடக்குகிறது. வங்கியின் கண்ணுக்குப் புலப்படாத அறிவு மற்றும் நிறுவனம்சார் மூலதனக் கூட்டு தளம் என்பவற்றின் மூலம், வங்கியின் நவீனமயமாக்கல் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கான தகைமைகள் எளிதாக்கப்படுகின்றன. மேலும், வங்கி, தனது இரட்டைத் தலைமைத்துவக் கலாசாரத்தை வங்கிக்கே உரிய தனித்துவமான ஒன்றாகக் கருதுகிறது.

வீடமைப்பு நிதியியல் நிறுவனம்சார் அறிவு

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கி என்ற வகையிலும், நாட்டிலுள்ள அத்தகைய வங்கிகளுள் அரிதான வங்கி என்ற வகையிலும், குறைந்த ஒப்பீட்டளவில், குறைந்த நிதித் தகைமைகளைக் கொண்ட, தனிப்பட்டவர்களுக்கு நிதியுதவியை வழங்குவதில் HDFC வங்கி கவனம் செலுத்தியுள்ளது. இதன் பெறுபேறாக, HDFC வங்கிக்கே உரித்தான சூழல் முறை செயன்முறைகள், தயாரிப்புகள், சேவைகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் உள்ளூர் வீடமைப்பு சந்தைப்படுத்தல் தொடர்பான அளவிட முடியாத மற்றும் மதிப்பிட முடியாத மட்ட அறிவைக் கொண்ட பணியாட்களுடனான கிளைகளைக் கொண்ட வலையமைப்பினால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த தனித்துவமான வலிமை, பொது மற்றும் தனியார் துறைகள் உட்பட கிராமிய மற்றும் நடுத்தர வருமானப் பிரிவுகள் போன்றவற்றில் இருந்து வரும் ஆயரத்திற்கும் மேற்பட்ட அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதற்குரிய அனுபவத்தையும் நடைமுறைகளையும் வழங்குகிறது.

மூலதன அறிக்கைகள்

புலமைச் சொத்து மூலதனம்

கையகக் கணிப்பொறி வங்கியியல் செயற்பாடு

வாடிக்கையாளர்கள், நாடு பூராகவும் பரந்துள்ளமையால், HDFC வங்கி, நாட்டின் தொலைதூர மற்றும் கிராமியப் பிரதேசங்களில் வாழும் அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு, ஒரு தனித்துவமான சேவையைக் கொண்டுள்ளது. இதன் மூலம், கையகக் கணிப்பொறி வங்கியாளர்கள்/நடமாடும் வங்கியியல் உதவியாளர்கள், வாயிற்படி வங்கி நடவடிக்கைகளை வழங்குகின்றனர். கிளைகளில் இருந்து மிகவும் தொலைவில் வசிக்கும் ஆட்களை இந்த அணி நெருங்குவதுடன், வைப்புகளை ஏற்றுக்கொள்ளல், கடன் கொடுப்பனவுகளைச் சேகரித்தல், பாவனைப் பட்டியல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளல் என்பவற்றையும், கிராமிய சில்லறை வாடிக்கையாளர் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியுதவி பெறுவதற்கான இலகுவான வழிமுறைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இவை அனைத்தும், HDFC கையகக் கணிப்பொறி அலுவலர்களினால் கையடக்கக் கருவிகள் மூலம் பயன்படுத்தப்படும் கையகக் கணிப்பொறி வங்கியில் மென்பொருள் ஊடாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இந்த மென்பொருள், கிராமிய மற்றும் ஏனைய வாடிக்கையாளர்கள், கிளைகளுக்கு வருகை தராது உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதிகளை வழங்குகிறது.

இலங்கை மத்திய வங்கி ஊடாக கிளை நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட கூடிய மையப்படுத்தப்பட்ட மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சேவை மூலம் கிளைகள் இணைக்கப்படுகின்றன. இந்த முறை HDFC வங்கியின் டெபிட் அட்டை ஊடாக POS பரிவர்த்தனைகளை எளிதாக்கும் வகையில் 2020 இல் தரமுயர்த்தப்பட்டது. இச்சேவை 2021 இல் ஆரம்பிக்கப்படும்.

தொழில்நுட்பமும் டிஜிட்டல் மயமாக்கமும்

முக்கிய வங்கியியல் முறை

தொழில்நுட்ப ரீதியாக மையப்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் தீர்வுகளைக் கைக்கொள்வதன் மூலம், வங்கி நிலைமாற்றமடைந்த ஒரு பாதையை நோக்கிச் செல்கிறது. இதன்மூலம், 2017 இல் ரூபா 160 மில்லியன் ஆரம்ப முதலீட்டுடன் வங்கி அதன் முக்கிய வங்கியியல் முறையை ஆரம்பித்தது. தொழில் நுட்ப சேவை வழங்குநர் ஒருவர் மூலமாக அபிவிருத்தி செய்யப்பட்ட முக்கிய வங்கியியல் முறைமை, தற்போது கிளைகள் மற்றும் தலைமைக் காரியாலயங்களை இணைத்து, பணிகளைக் கிரமமாக ஒழுங்குபடுத்துகிறது. கிளை செயற்பாடுகளுக்கு இலங்கை மத்திய வங்கி ஊடாக வழங்கப்பட்ட கூடிய மையப்படுத்தப்பட்ட மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சேவை மூலம் கிளைகள் இணைக்கப்படுகின்றன. இந்த முறை HDFC வங்கியின் டெபிட் அட்டை ஊடாக POS பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்கு 2020 இல் தரமுயர்த்தப்பட்டது. இச்சேவை 2021 இல் ஆரம்பிக்கப்படும். இந்த டெபிட் அட்டைகளை ஆரம்பிக்கும் திட்டங்கள் தொற்று நோய் மற்றும் செயற்பாட்டுச் சூழலில் ஏற்பட்ட சவால்களினால் தடுக்கப்பட்டுள்ளன.

கடன் உருவாக்கமும் கடன் முகாமைத்துவ முறைகளும்

HDFC வங்கியின் கடன் தயாரிப்புகளையும், அதனுடன் தொடர்புடைய செயன்முறை நடைமுறைகளையும் ஒழுங்கமைப்பதற்காக, கடன் உருவாக்கம், கடன் முகாமைத்துவ முறைமைகள் வடிவமைக்கப்பட்டதுடன், அது தற்போது வங்கியின் முக்கிய முறையில் ஒரு பிரதானமான பகுதியாக உள்ளது. 2019 இல் வங்கி ஒரு பிராந்தியத்தில் கடன் உருவாக்கல் முறையை ஒரு பரிசோதனை முறையுடன் புதுப்பித்தது. 2020 இல் இந்த முறை, அனைத்துக் கிளைகளுக்கும் விரிவாக்கப்பட்டன. இதன் மூலம், கடன் அங்கீகார செயன்முறை ஒழுங்கமைக்கப்பட்டதுடன், இம்முறை அலுவலர்கள் அதிக வினைத்திறனுடன் பயன்படுத்தக்கூடியதாகவும், வெளிப்படைத்தன்மையுடன் அணுகக் கூடியதாகவும் இருந்தது.

கடன் உருவாக்க முறைமை தற்போது கடன் கோரிக்கைகளுக்கான நிகழ்நிலை அங்கீகாரத்தை இயலச் செய்கிறது. கிளை அலுவலர்கள், முகாமைத்துவத்தின் மீளாய்வின் அடிப்படையில் அங்கீகாரத்திற்குத் தேவையான ஆவணங்களை டிஜிட்டல் மூலமாக அலகீடு செய்து, ஆவணங்களை பதிவேற்றம் செய்யும் வசதிகளைக் கொண்டுள்ளன. இந்த முறைமை, கிளைகளுக்கு இடையே ஆவணங்கள் பரிமாற்றம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதுடன், செலவுகளையும் அகற்றுகிறது. இம்முறை அறிமுகம் செய்யப்பட முன் 39 கிளைகளிலும் இருந்து தலைமைக் காரியாலயத்திற்கு ஆவணங்களை அனுப்புவதற்குப் பெருமளவு செலவு ஏற்பட்டது.

நெறிபிறள்வு முகாமைத்துவ முறைமை

கடன் தவணைக் கொடுப்பனவு பெறுவதை ஒழுங்குபடுத்துவதற்காகவும், அவற்றைத் திறம்பட ஆவணப்படுத்துவதற்காகவும், 2020 இல் DMS வடிவமைக்கப்பட்ட HDFC வங்கியின் செயற்பாடுகள் ரூபா 9.9 மில்லியன் முதலீட்டில் செயற்படுத்தப்பட்டது. இந்த முறை ஒரு பின் இறுதி - CRM முறை என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. ஆயின், இம்முறை வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவு தொடர்பான பின்னூட்டல்களை அனுப்புவதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு, கொடுப்பனவுகள் செலுத்தத் தவறுதல்களை அனாவசியமாகத் தலையிடுவதைத் தவிர்க்கின்றது.

அனைத்தும் உள்ளடங்கிய தீர்வுகள்

இலங்கையில் விசேடமாக தமிழ் பேசும் மக்களுக்காக ஒரு வைப்பு முறையைத் தயாரித்த முதலாவது உள்ளூர் வங்கி HDFC வங்கியாகும். 'அரும்பு' எனப் பெயரிடப்பட்ட இந்த சேமிப்புத் திட்டம், எதிர்காலத்தில் பிள்ளைகளின் நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு தனித்துவமான முதலீட்டு முன்மொழிவாகும்.

ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான கடன் செயற்பாடுகள்

இலங்கையில் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வங்கிகளுள் HDFC வங்கியும் ஒன்றாகும். விசாலமான வங்கி முறைமைக்குள் இது ஒரு தனித்துவமான அம்சத்தை வழங்குகிறது. அரச மற்றும் தனியார்துறை தொழில் வல்லுநர்களின் வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிராக கடன்களை வழங்கும் ஒரு தனித்துவமான திறனை வங்கிக்கு அளிக்கிறது. தனித்துவமான இந்தச் சேவை காரணமாக, வங்கி HDFC வங்கிக்கே உரித்தான இச்செயற்பாட்டைச் சூழவுள்ள நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளுடன், தனித்துவமான நிறுவன ரீதியான மூலதனத்தை வங்கி கொண்டுள்ளது.

நெறிமுறைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் இணக்கம்

இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் உரிமம் அளிக்கப்பட்ட ஒரு நிதி இடைத் தரகர் என்ற வகையில், HDFC வங்கி, நிதி மற்றும் செயற்பாட்டு வெளிப்படு தன்மையைப் பேணுகின்ற ஒரு கனிசமான அளவு பொறுப்பைக் கொண்டுள்ள அதேவேளை, உயர் தரம் வாய்ந்த, நேர்மைத் திறனையும், நெறிமுறை நடத்தைகளையும் நிலைநாட்டுவதற்கும் பொறுப்பாகவுள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பன வங்கியின் பங்குதாரர்களுக்கும், பங்குபற்றுநர்களுக்கும் நிலையாதாரப் பெறுமதியை உருவாக்குவதற்கும் அவசியமாகிறது.

ஒழுங்குபடுத்தல்கள் ஆளுகை மற்றும் சட்டக் கடப்பாடுகளில் ஒரு பகுதியாக HDFC வங்கி அனைத்துப் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்கிறது. வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் வங்கிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து வழிகாட்டல்களுடனும், விசேட உரிமம் அளிக்கப்பட்ட வங்கி (LSB) என்ற வகையிலும் அதற்குப் பொருத்தமான விடயங்களுடன் இணங்கி நடக்கிறது.

பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நெறிமுறையான நடத்தை என்பவற்றை நிலைநிறுத்துவதில், அனைத்துப் பணியாட்களும், தாம் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, சிறந்த நெறிமுறை நடத்தையைப் பேணவேண்டுமென HDFC வங்கியின் முகாமைத்துவம் எதிர்பார்க்கிறது. கடன் தேவைப்பாடுகளுக்கு அமைய, பொருத்தமான திறத்தவர்களுக்கு, நேரடியாக நிதியங்களை அளிப்பதன் மூலம், வாடிக்கையாளர்கள் வங்கியினால் அளிக்கப்படும் நிதியங்களை உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் வங்கி உறுதிப்படுத்தும்.

வங்கி மற்றும் அதன் கிளைகளில் நடைபெறும் நெறிமுறை அல்லாத நடத்தை மற்றும் நிதி முரண்பாடுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்காக, பணியாட்களை துணிகரமாக செயற்பட வேண்டுமென ஊக்குவிப்பதற்காக, வங்கியும் அதன் முகாமைத்துவமும் இடித்துரைப்பான் கொள்கையைக் கொண்டுள்ளது. உரிய கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் நேரடியாக இணங்கத் தவறுதல் அல்லது ஏதேனும் விலகல்கள் நேரடியாக அறிவிக்கப்பட முடியும். இதற்காக முகாமைத்துவத்தின் பொருத்தமான மட்டம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அத்தகைய கட்டுப்பாடு ஒன்று வங்கியின் நேர்மையையும், நேர்மைத் திறனையும் உறுதிப்படுத்துவதற்கும், வாடிக்கையாளர்கள் எம்மிடம் வைத்துள்ள நிதியத்தின் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்கும், வங்கி அளிக்கக்கூடிய நிதி இடையீட்டின் மீது அவர்கள் வங்கியின் தகைமை மீது கொண்டுள்ள பெறுமதியை மதிப்பது அவசியமாகும். வங்கி, தீர்வுகளை வடிமைக்கும் போதும், செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிக்கும் போதும், இருக்கின்ற வாடிக்கையாளர்கள் மற்றும் புதிய வாடிக்கையாளர்கள் மீது முதன்மையான கவனத்தைச் செலுத்தும். மேலும், வங்கி, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகள் தொடர்பாக தாங்கக்கூடிய, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் முழுமையான தீர்வுகளை வழங்குகின்ற விடயங்களை வடிவமைக்கும் போது தொடர்ந்தும் அவர்களின் தேவைகளையும் சவால்களையும் இனங்காண்கிறது.

வியாபாரப் பெயர் பெறுமதி

1984 ஆம் ஆண்டு தொடக்கம் வங்கி மற்றும் நிதித்துறையில் 30 வருடங்களுக்கும் மேற்பட்ட செயற்பாடுகளை அளித்து வரும் HDFC வங்கி, அது சேவையாற்றும் வாடிக்கையாளர், சேவையாற்றும் பிரிவுகளிடையே ஒரே பொருளுடைய பெயராக இருக்கின்ற வியாபார நற்பெயரை சம்பாதித்துள்ளது. மேலும், வங்கி பன்முகப்படுத்தலைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்ற வகையில், சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்திற்காக டிஜிட்டல் வசதிகளை வழங்குவதற்கும், அதிகரித்த விரைவான சேவையை வழங்குவதற்கும், அதன் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும் வலுவான கவனமளித்து வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு புதிய சேவைகளையும் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளையும் அளிக்கிறது.

வைப்பு மற்றும் கடன் போட்போலியோ முழுவதுமான, இருக்கக்கூடிய சிறப்பான நிதித் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளுக்கு மேலதிகமாக, வங்கி, தனது வர்த்தகப் பெயரை ஒரு புலமைச் சொத்தாகக் கருதுகிறது.

உபாயநுட்ப நோக்கு

வங்கியின் நவீன மயமாக்கல் திட்டங்கள் மற்றும் பன்முகப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி என்பனவற்றுக்கு அமைவாக, ஒரு பரந்த சந்தைப் பங்கை அடையும் பொருட்டும் தற்போதுள்ள நிலையை விட நிதி ரீதியாக வலுவாக வளர்சியடையவும், அதன் செயன்முறைகள், தேவைகள், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளையும் மீள ஒழுங்கு செய்வதில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. இச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, வங்கியின் உயர் முகாமைத்துவம், ஐந்து வருட உபாயநுட்பத் திட்டத்தை வகுத்து அங்கீகரித்துள்ளது. முக்கியமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய முக்கியமான பணிகள், முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பனவற்றை மறுசீரமைக்க முன்னோக்கிய வரைபடம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட மூலதனம்

வளர்ச்சியை ஏற்படுத்தும் சொத்துக்கள்



வளர்ச்சியை ஏற்படுத்தும் சொத்துக்கள்

HDFC வங்கியின் தயாரிக்கப்பட்ட மூலதன ஒன்று சேர்ப்பு, வாடிக்கையாளரை அடைவதற்கும், ஏற்கனவே சேவை வழங்கப்பட்டு வரும் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து நிதிச் சேவைகளை வழங்குவதற்குமான நடவடிக்கைகளுக்கு உதவும் அனைத்து பௌதீக சொத்துக்களையும் உள்ளடக்கும்.

வங்கியின் தயாரிக்கப்பட்ட மூலதனம், தலைமைக் காரியாலயம், கிளை வளாகங்கள், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப முறைமைகள், அருவச் சொத்துக்கள் மற்றும் நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு முக்கியமாக உள்ள ஏனைய விடயங்களையும் உள்ளடக்கும். கடந்த பல வருடங்களாக, வங்கியை சமூகத்திலுள்ள அனைத்து வாடிக்கையாளர்களிடத்தும் நெருக்கமாக எடுத்துச் செல்வதில், தயாரிக்கப்பட்ட மூலதனம், முதன்மைக் கருவியாக இருந்தது. இந்த மூலதனம், நாடு பூராகவும் நடைபெறும் செயற்பாடுகளை தொடர்ந்து வலுவூட்டவும், அணுகுதலை உருவாக்கவும், ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு நிதியுதவியை வழங்கவும் அவர்களை மேம்படுத்தவும் வங்கிக்கு உதவுகிறது.

COVID-19 தொற்றினால் ஏற்பட்ட தடைகளுக்கு மத்தியிலும், HDFC வங்கி 2020 இல் அதன் தயாரிக்கப்பட்ட மூலதனத்திற்கு மேலதிகமாக ரூபா 55.14 மில்லியனை ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீது முதலீடு செய்யும் வகையிலான ஒரு மூலதனச் செலவாகக் காட்டியது. இத்தொகை, தனது செயற்பாடுகளின் முகாமைத்துவத்தின் தகைமையையும் உயர்த்தியது. HDFC வங்கியின் தற்போதைய ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,005 மில்லியன் ஆகும்.

மொத்த *PPE*	மூலதனச் செலவு (2020)
ரூ. 1,005 மில்	ரூ. 55 மில்

ATM களுக்கான அணுகல்	கிளைகளின் எண்ணிக்கை
5,075	39

ஒருங்கிணைந்த கிளை நிலையம் ச.அ.	கட்டடங்களும் காரியாலயங்களும்
105,524	ரூ. 386 மில்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்


கோட்டையில் அமைந்துள்ள தலைமை அலுவலகமும், நாடு முழுவதும் பரந்துள் 39 கிளைகளும், வாடிக்கையாளர்களுக்கு முக்கிய தொடுகை முனையங்களாகவுள்ளன. கடந்த வருடங்களாக வாடிக்கையாளர்களுக்கு அனைத்து மாகாணங்களிலும் நிதிச் சேவைகளை வழங்குவதற்காகவும், பௌதீக பிரசன்னத்தை நிறுவுவதற்காகவும், கிளைக் கட்டடங்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களில் படிப்படியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலக நிலையம் 29,344 சதுர அடி செங்குத்து மற்றும் கிடை மட்ட இடத்தை உள்ளடக்குகிறது. மேலும், வங்கி, 105,524 சதுர அடி கூட்டு கிளை இடத்தை முகாமைத்துவம் செய்கிறது.

மீளாய்வுக்கு உட்பட்ட இந்த நிதியாண்டில், வாடிக்கையாளர்களுக்கு இடவசதி உள்ள கிளை அலுவலகத்தில் இருந்து சேவைகளை வழங்குவதற்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. இதனைவிட, திஸ்ஸமகாராம கிளை, அதிநவீன மற்றும் மேம்பட்ட வசதிகளுடன், வாடிக்கையாளர்களுக்குச் சேவைகளை வழங்கும் பொருட்டு புதுப்பிக்கப்பட்டு மீளத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2020 இல் வங்கி, உபகரணங்கள் மீது ஏற்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக, கிளைகளைப் புதுப்பிப்பதற்காக மொத்தமாக ரூபா 1.1 மில்லியன் செலவிடப்பட்டது.

மேலும், எதிர்காலத்தில், கிளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வங்கி திட்டமிட்டு வருகிறது. எனினும், கடந்த காலங்களில் வங்கி சில சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஏனைய வருமானத்தை அதிகரிக்கும் அதேவேளை, வர்த்தக வளர்ச்சி மற்றும் குறைக்கப்படும் தொழிற்பாட்டுச் செலவுகள் என்பவற்றின் மூலம் அச்சவால்களை எதிர்கொள்ள எதிர்பார்க்கின்றது. வங்கியின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 9.7 மில்லியன் பெறுமதியான இறையற்ற சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

கடந்த வருடங்களாக வங்கி விவேகமாக முதலீடு செய்து வந்துள்ளதுடன், தொடர்ந்தும் காரியாலயம் தொடர்பான கருவிகள் மற்றும் உபகரணங்கள், இயந்திரங்கள், தகவல் தொழில்நுட்ப வன்பொருள், தளபாடம் மற்றும் பொருத்துக்கள் போன்ற சொத்துக்களின் மீது செலவுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள் மீது சுமார் ரூபா 33 மில்லியன் முதலீடு செய்யப்பட்டமைக்கு மேலதிகமாக, காரியாலய உபகரணம் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மீது ரூபா 22 மில்லியனை வங்கி செலவு செய்துள்ளது.

வருடாந்த தேய்மானம் ரூ. மில்.



தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

வங்கியின் நவீன மயமாக்கல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சிக்குப் பின்னால் உள்ள முக்கியமான கலையாக இருக்கக்கூடிய நவீன SD-WAN (மென்பொருள் - வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு) என்ற தொழில்நுட்பத்திற்கு மாறியது. இந்த மாற்றத்தை அடைந்ததில் இருந்து கிளை இணைப்பு உகந்த நிலையில் இருப்பதுடன், 39 கிளைகளையும் தலைமைக் காரியாலயத்துடன் இணைக்கிறது. இத்தொழில்நுட்பம், தற்போது பாரிய தரவுத் தொகுதிகளின் பரிமாற்றங்களை நிகழ் நேரத்திற்குள் அனுமதிக்கின்றது. வியாபாரத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில், இத்தொழில்நுட்பத்தின் அமுலாக்கம், மீட்பு முறையில் ஏற்படும் இடையூறுகளையும் இயல்பாகவே சீர் செய்கிறது.

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்கான வருடாந்த பராமரிப்புச் செலவு, வன்பொருள் மற்றும் மென்பொருள் அம்சங்களை உள்ளடக்குவதுடன், 2020 இல் அதன் பெறுமதி ரூபா 65 மில்லியன் ஆகும். இது, வங்கி தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றோடொன்று தொடர்புபட்ட ஏற்பாடுகளை நோக்கிப் பரிமாற்றம் அடைய முதலீட்டு ஒதுக்கல்களில் அதிகரிப்பை ஏற்படுத்துவதை எடுத்துக் காட்டுகிறது. 2020 காலப்பகுதியின் போது, வங்கி கணனி வன்பொருள் மற்றும் கணனி மென்பொருளுக்காக ரூபா 40 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையைச் செலவிட்டது.

தன்னியக்க பண இயந்திரங்கள்

வாடிக்கையாளர்கள், வங்கியின் ATM அட்டைகளைப் பயன்படுத்தி, நாடு பூராகவும் பரந்துபட்டுள்ள 5,075 ATM இயந்திரங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்களைத் தயாரிக்கப்பட்ட மூலதனம் என வகைப்படுத்த முடியாத போதிலும், மென்பொருள் மற்றும் நிகழ்நிலைத் தளங்கள் வங்கியின் நிதித் தயாரிப்புகளைச் செயன்முறைப்படுத்துவதில் முக்கிய இடம்பெற்று, உள்ளக மற்றும் வெளியக வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குகிறது.

முன்னிறுதி மற்றும் பின்னிறுதி நடவடிக்கைகளை நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சியில் HDFC வங்கி, வங்கியின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மென்பொருளில் மூலோபாய அடிப்படையில் முதலீடு செய்கிறது. கைத்தொழில் நவீனமயமாக்கலுக்கு அமைவாக இருப்பதற்காக வங்கி தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து பெறப்பட்ட மென்பொருளில் முதலீடு செய்யும் அதேவேளை, உயர்ந்தபட்ச தரவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பு வழிகாட்டிகளுடன் இணங்கிச் செயற்படுகிறது.

மூலதன அறிக்கைகள்

இயற்கை மூலதனம்



சுற்றாடல் மீது அதன் தாக்கம் பற்றி அலட்சியமாக இருந்தாலும், இந்த அறிக்கை, இயற்கை சுற்றாடல் மீது ஏற்பட்ட ஓரளவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை இவ்வறிக்கை எடுத்துக் காட்டுகிறது. சமூகங்களை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் வங்கி என்ற வகையில், நிலையாதார வர்த்தக நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல் என்பன தொடர்பில் ஒரு கணிசமான பொறுப்பு உண்டு என்பதையும் உணர்கிறது.

HDFC வங்கி, சுற்றாடல் மீது அது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைக் குறைப்பதற்காக, வங்கியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளில் படிப்படியான கவனத்தைச் செலுத்துகிறது. இத்திசையை நோக்கிய ஒரு முக்கிய நடவடிக்கையாக, வங்கி நிலையாதார வங்கியியல் எண்ணக்கருவில் (SBP) கைச்சாத்திட்டது. 2015 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியாளர்கள் சங்கம் அபிவிருத்திக்குச் சாதகமான பங்களிப்பை வங்கி வழங்குவதுடன், நிலையாதார பொருளாதார அபிவிருத்தியை அதன் முக்கிய நோக்கமாகக் கொண்டும், சமூகங்களையும், சுற்றாடலையும் பாதுகாப்பதற்காகவும் 2015 இல் SBPஐ உருவாக்கியது.

கழிவு மீள் சுழற்சியும் முகாமைத்துவமும்

வங்கி அதன் புதினத்தாள்கள், பயன்படுத்தப்பட்ட காகிதங்கள், அச்சு இயந்திரக் கழிவுகள் என்பனவற்றை மீள் சுழற்சி செய்து, இந்த வளங்கள் முறையாக அகற்றப்பட்டன மற்றும் மீளப் பயன்படுத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்துகிறது. வங்கி 'சபை PAC' ஊடாக, இலத்திரனியல் கூட்ட முகாமைத்துவ முறையைக் கையாள்வதன் மூலம், காகிதப் பயன்பாட்டின் அளவைக் குறைத்துள்ளது. மேலும், தேவையான அங்கீகாரங்கள், மின்னஞ்சல்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு பக்கம் மாத்திரம் பயன்படுத்தப்பட்ட காகிதங்கள், உள்ளகத் தேவைகளுக்காக மீளப் பயன்படுத்தப்படுகின்றன.

சக்தி பாதுகாப்பும், வினைத்திறனான மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியும்

பொறுப்புள்ள கூட்டுறவுப் பிரசை என்ற அடிப்படையில், சக்தியைப் பாதுகாப்பதற்கு சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை வங்கி எடுத்துள்ளது. இது, ஓரளவுக்கு சக்தி வினைத்திறன் பயன்பாட்டை மேம்படுத்துகிறது. கோட்டையில் உள்ள தலைமை அலுலவகத்தில் தனிப்பட்ட கணனிகள், மின் விளக்குகள், குளிரூட்டிகள் என்பனவற்றின் சக்தி நுகர்வைக் குறைப்பதற்கு, மத்திய தரப்படுத்தப்பட்ட, தள அடிப்படையிலான மின்சாரப் பயன்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அது, காரியாலய நேரங்களின் பின்னர், தானாகவே அலுவலக உபகரணங்களின் செயற்பாட்டை நிறுத்துகிறது. இச்செயற்பாடு, எதிர்காலத்தில் சக்தி பயன்பாட்டையும், வினைத்திறனையும் அதிகரிப்பதற்கான மூலோபாயத்தை உருவாக்குகிறது.

குளிரூட்டிகள், 24 உயர் மட்ட அளவில் செயற்பட்டு, சக்தி பயன்பாட்டின் அளவைக் குறைப்பதுடன், சக்தி வினைத்திறனையும் அதிகரிக்கிறது. சக்தியையும், செலவையும், அதிகபட்சம் சேமிப்பதற்கான அனைத்து மின் குமிழ்களும் LED மின் குமிழ்களாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், வங்கி, அலுவலக வாகனங்கள் மூலம் பிரயாணம் செய்வதைக் குறைத்து, எரிபொருள் பயன்பாட்டின் பாவனையைக் கட்டுப்படுத்தியுள்ளது. 2020 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன் உருவாக்க முறை, ஆவணங்கள், வாகனங்கள் மூலம் அனுப்பப்படுவதையும், தபால் மூலம் அனுப்பப்படுவதையும் நீக்கியுள்ளது. இது நேரடியான பங்களிப்பை அளிக்கா விட்டாலும், ஆவணங்களைத் தேவையற்ற வகையில் அனுப்புவதைக் குறைத்து காபன் வெளியேற்றத்தையும் குறைக்கிறது.

வங்கி 84 சோலார் முறைகளில் முதலீடு செய்துள்ளது. முதலாவது சோலார் முறை ஹைட் பார்க் கிளையில் பொருத்தப்பட்டது. இவை, 100% கிளை செயற்பாடுகளுக்கு தற்போது வலுவூட்டுகிறது. பரிசோதனை அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் வெற்றி, ஏனைய கிளைகளிலும் பதிலீடு செய்யப்பட்டன. 2021 இல் களுத்துறை மற்றும் அம்பாறை கிளைகளில் பதிலீடு செய்யப்பட்டுள்ளன.

இயற்கையை வளர்த்தல்

ஏண்ணிக்கையில் கணிசமான அளவு குறைவாக இருந்தாலும், வங்கியின் கிளைகள் வாடிக்கையாளர்கள் மத்தியில் மரங்களைப் பங்கிட்டு, இயற்கை அன்னையைப் பாதுகாக்க சிறிய அளவில் உதவுகிறது.

கூட்டுறவு ஆளுகை மற்றும் இடர்

இணக்கம் தொடர்பான தலைவரின் கூற்று

2020 ஆம் ஆண்டிற்கான எமது கூட்டுறவு ஆளுகை அறிக்கையை பெரும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

எமது அணுகுமுறை

நிறுவனத்தின் விவகாரங்கள் மீதான பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை, வங்கியின் கூட்டுறவு ஆளுகை நடைமுறைகளின் வெளிப்பாடுகளை விஸ்தரிப்பதற்காக விரிவாக்கப்பட்டன. கூட்டுறவு ஆளுகை மீதான விரிவான அறிக்கை, வங்கியினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரதான அங்கமாக இருப்பதோடு, அவை வருடாந்த அறிக்கையிலும் சேர்க்கப்பட்டுள்ளன. சபையினால் பிரயோகிக்கப்பட்ட பணிச் சூழல், வங்கி பூராகவும் பொறுப்புக்கூறும் தன்மை, நியாயமான தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதில் கூட்டுறவு ஆளுகையில் உயரிய தரங்களை நிலைநிறுத்துவதைத் தேவைப்படுத்துகிறது. வங்கியின் கூட்டுறவு ஆளுகைக் கட்டமைப்பு வலுவாக இருக்கின்றது என்பதையும், ஒரு உயரிய ஒழுங்கமைக்கப்பட்ட கைத்தொழில் துறையிலும், சவால்மிக்க வர்த்தகச் சூழலிலும் பொருத்தமாக இருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறது. கைத்தொழில்துறை ஒழுங்கு விதிகளும், உள்ளகக் கொள்கைகளும், ஆளுகைக் கட்டமைப்பின் ஆணிவேராகும். இவை, உள்ளக அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு எதிரான அளவுகோல்கள் என்பவற்றைக் கையாள்வதற்குரிய வகையில் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டன.

அறிக்கையிடல்


இதற்கமைய, HDFC வங்கி, கட்டாய அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட விசேட உரிமம் அளிக்கப்பட்ட, வங்கிகளுக்குப் பொருத்தமான, 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (அதன் பின்னர் திருத்தப்பட்டவாறான) வங்கியியல் சட்ட வழிகாட்டியை பின்பற்றியது. எமது இணக்க அந்தஸ்து கூட்டுறவு ஆளுகை அறிக்கையின் முதலாவது பகுதியில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதனைவிட, வங்கி, இலங்கை பங்குப் பரிவர்தனைகள் ஆணைக்குழு மற்றும் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் என்பனவற்றினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவையை 2017 இல் பின்பற்றியது. இது தொடர்பான எமது இணக்க அந்தஸ்து கூட்டுறவு ஆளுகை அறிக்கையின் இரண்டாவது பகுதியில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலும், CSE பட்டியல்படுத்தும் விதிகளுக்கான (பிரிவு 7.10 இன் கீழான) எமது இணக்க அந்தஸ்து கூட்டுறவு ஆளுகை அறிக்கையின் மூன்றாவது பகுதியில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுயாதீன உறுதிப்பாடு

மேலும், மத்திய வங்கியின் கூட்டுறவு ஆளுகை வழிகாட்டிகளுடன் வங்கி இணக்கத்துடன் தொடர்பான வெளியகக் கணக்காய்வாளரின் கண்டறிதல்களை அறிக்கையிட்டுள்ளோம். 'தொடர்புடைய சேவைகள் நடைமுறைக் கூற்று 4400 உடன் தொடர்பான இலங்கை தர நிலையின் கீழ் வழங்கப்பட்ட கணக்காய்வாளர்களின் நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் அறிக்கை இந்த அறிக்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.



திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர்

2021 மே 21
கொழும்பு, இலங்கை

கூட்டுறவு ஆளுகை

HDFC வங்கி, வங்கியின் நிலையாதாரத் தன்மைக்கும், சிறந்த கூட்டுறவு நடத்தை விழிப்புணர்ச்சி மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறது. அது, விசேட உரிமம் அளிக்கப்பட்ட வங்கி என்ற வகையில், இலங்கை மத்திய வங்கியினால் ஆணையிடப்பட்ட ஆளுகை வழிகாட்டிகளுடன் இணங்கி நடக்கின்றது. பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனம் என்ற வகையில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம், பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு என்பனவற்றினால் வழங்கப்படும் வழிகாட்டிகளுடன் இணங்கி நடக்கும் கடமையும், கடப்பாடும் வங்கிக்கு உள்ளது. 2020 இல் இவை அனைத்தையும் வங்கி பின்பற்றியது.

ஆளுகைக் கட்டமைப்பைப் பின்பற்றுவதன் மூலம், அனைத்து ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளையும், அக்கறைகளையும் மதிக்கும் தீர்மானங்களை வங்கி எடுக்கக்கூடியதாக உள்ளது. பொது மக்களின் நிதியங்கள் மற்றும் நிதி அக்கறைகளைப் பாதுகாப்பதற்குப் பொறுப்புடைய ஒரு நிதி நிறுவனம் என்ற வகையில், HDFC வங்கியின் பொது மக்கள் நம்பிக்கையை நிறுவுவதில் வலுவான ஆளுகை நடைமுறைகள் முக்கிய வழிவகைகளுள் ஒன்றாகும்.

வங்கியின் சபையும், உப குழுக்களும் ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் வழிகாட்டிகளுடன் இணங்கி நடப்பதனால், சபையும், உப குழுக்களும், அத்தகைய ஒழுங்கு விதிகளை கிரமமாக மீளாய்வு செய்கின்றன. கூட்டுறவு ஆளுகைக் கட்டமைப்பும், ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடும் நிலைநிறுத்தப்படுவதுடன், நெறிமுறையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இருப்பதற்கான பொறுமதிகளினால் வழிநடத்தப்படுகின்றன. இத்தகைய பொறுப்பு வாய்ந்த கூட்டு ஆளுகை நடைமுறைகளை மதித்து ஒழுகி நடப்பதானது, வங்கியின் செயற்பாடுகளையும், வியாபார இலக்குகளையும் முகாமைத்துவம் செய்வதில் இருக்கக்கூடிய முக்கியமான துறைகள் மீது விவேகமான தீர்மானங்களை எடுக்க உதவுகிறது.

(ஒவ்வொரு பொருத்தமான பகுதிக்கும், உரிய ஒழுங்குபடுத்தல்கள், இணக்கம் என்ற பகுதியில் 89 தொடக்கம் 118 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன)


ஆளுகை சிறப்பம்சங்கள்

சபையின் பட்டயம்

வங்கி, 2020 ஜனவரி 29 ஆம் திகதி சபையின் பட்டயத்தை ஏற்றுக்கொண்டது. இந்தப் பட்டயம், சபை உப குழுக்கள், முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரின் பொறுப்புக்கள் மற்றும் அதிகார மட்டங்கள் பற்றி தெளிவான விளக்கங்களை வழங்குகிறது. இப்பட்டயம், சமப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு, தரமுயர்த்தப்பட்ட ஆளையின் பின்னணியை அமைத்தல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பன பற்றிய வழிகாட்டிகளை வழங்குகிறது. மேலும், இப்பட்டயம், தலைவர், சபை உப குழுக்களுக்குப் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, சபையின் பொறுப்புக்களையும், எல்லைகளையும் எடுத்துரைக்கிறது. மேலும், இப்பட்டயம், முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பொறுப்புகள் பின்னுரித்து, சம்பளங்கள் மற்றும் சபை கையளிக்கப்பட்ட பணிகள் ஆகியன பற்றிய விபரங்களையும் வழங்குகிறது.

ஆளுகைக் கட்டமைப்பு

வங்கியின் செயற்பாடுகளுக்கு நீண்டகால நிலைத்தன்மையை வழங்கும் வகையில், சபைப் பட்டயம் வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பைத் தெளிவாக இனங்காணுகிறது. அது பின்வருமாறு:.




வங்கியின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் மீதான ஒட்டுமொத்த மேற்பார்வையும் பணிப்பாளர்கள் சபையிடமே உள்ளது. வங்கியின் மூலோபாய முக்கியத்துவத்தின் மீதான விடயங்கள் மீது மேற்பார்வையையும், வழிகாட்டலையும் வழங்குகின்ற ஐந்து உப குழுக்களில் சபை உறுப்பினர்களும் ஒரு பகுதியாக உள்ளனர்.

கூட்டுறவு ஆளுகை

ஆளுகைக் கட்டமைப்பு

வங்கி அதன் பங்குதாரர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் உள்ளக மற்றும் வெளியக ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புகள், தரங்கள், கோவைகள் என்பவற்றுடன் இணங்கி நடக்கிறது. உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கி என்ற வகையில், வங்கி கீழே தரப்பட்டுள்ள சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் பின்பற்றுமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சபையின் பட்டயம் வெளியகச் சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் மதிப்பதுடன் எவ்வகையிலும் அச்சட்டங்கள் ஒழுங்கு விதிகள் நியதிச் சட்டங்கள் வழிகாட்டிகளுடன் முரண்படாது.



ஏனைய நியதிச் சட்டங்களுடனான இணக்கம்

வங்கி, நிதி, கணக்கியல் மற்றும் நாணயப் பரிவர்த்தனைகள் தொடர்பாக, பின்வரும் சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் பின்பற்றுகிறது.

- 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தானச் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க திருத்தச் சட்டங்கள்)
- 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயச் சட்டம்
- 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமச் சட்டம்
- பண தூய்தாக்கலைத் தடுக்கும் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டம்
- பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்கும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம்
- 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்
- 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம்
- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டம்
- 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
- 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டங்களும் அவற்றுக்கான திருத்தங்களும்


சபை உள்ளடக்கம்

HDFC வங்கியின் சபை நிர்வாகம் சாராத பணிப்பாளர்களைத் தனித்து உள்ளடக்குவதுடன், அது, 2020 டிசம்பர் 20 இல் உள்ளவாறு ஏழு பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. சபைப் பணிப்பாளர்கள், தமது கடமைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான அறிவு, திறன்கள், அனுபவங்களை போதியளவு கொண்ட உயர் தகுதிவாய்ந்த தொழில்வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவாகும்.

பால் நிலை பகுப்பாய்வு



அனுபவ ரீதியான பன்முகத்தன்மை %



பயிற்சி

2020 ஆண்டு காலப்பகுதியின் போது, பணிப்பாளர் சபை, இலங்கை மத்திய வங்கியினால் (இலங்கையின் நிதி புலனாய்வு பிரிவினால்) ஏற்பாடு செய்யப்பட்ட உரிமம்

அளிக்கப்பட்ட வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கான AMI / CFT கடப்பாடுகள் மீதான ஒரு பயிற்சிப்பட்டறை ஊடாக பயிற்சியைப் பெற்றுக் கொண்டது.

1. திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க (தலைவர்)
2. சிரேஷ்ட பேராசிரியர் கே. டீ. குணவர்தன
3. கலாநிதி எஸ். என். மொறாயஸ்
4. திரு. பீ. ஏ. எஸ். ஏ. குமார
5. திரு. எல்.ஈ. சுசந்த சில்வா
6. திரு. டீ. எம். ஏ. கே. திசாநாயக்க

சபைக் கூட்டங்கள்

முக்கியமான விடயங்கள் பற்றிய விசேட கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படாத சந்தர்ப்பங்கள் தவிர, சபைக் கூட்டம், ஒவ்வொரு மாதமும் நடைபெறும். 2020 இல் 17 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் 14 நாட்களுக்கு முன்னர் முன்னறிவித்தல் வழங்கப்படும். விசேட அல்லது அவசரக் கூட்டங்கள் தொடர்பில் இந்தக் கால எல்லையை விடுவிக்க சபை உடன்படலாம். ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் கலந்துரையாடப்படும் நிகழ்ச்சி நிரல் கூட்டத்திற்கு முன்னர் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

'Board PAC' என அழைக்கப்படும் விசேட புதிய இலத்திரனியல் கூட்ட முகாமைத்துவ முறை 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறையின் கீழ், ஆவணங்களும், பின்னூட்டல்களும் - வசதிக்காகவும், பாதுகாப்பு நோக்கங்களுக்காவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன. இதன் கீழ், தரவுகள் உயர் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்புக் கொள்கைகளும் கடைப்பிடிக்கப்படுகிறது. 'வோட் பக்'கின் கீழ் விரைவாக தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியதாக உள்ள அதேவேளை, ஆவணங்கள் தொடர்பான பணிகள், கையடக்க உபகரணங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதால் ஆவணங்களின் பகிர்வுக் காலம் குறைக்கப்படுகிறது.

சபை மற்றும் உப குழுக் கூட்டங்களிலான சமூகம் (சமூகம் / தகுதி)

பெயர்கள்	31.12.2020 இல் பணிப்பாளர் அந்தஸ்து	பங்குபற்றிய சபைக் கூட்டங்கள்	தெரிவுக் குழுக் கூட்டம்	மனித வளம் / சம்பளக் குழு	ஒருங்கிணைக்கப்பட இடர் முகாமைத்துவக் குழு	சபை கணக்காய்வுக் குழு	தொடர்புபட்ட தீர்த்தவர்களுக்கான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் குழு
திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர் ∴ சபைத் தலைவர்	16/16	05/05	04/04	01/01	-	05/05
சிரேஷ்ட பேராசிரியர் கே. டீ. குணவர்தன	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	17/17	01/01	04/04	-	06/06	-
கலாநிதி எஸ். என். மொறாயஸ்	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	15/17	01/01	01/01	03/04	05/06	01/02
திரு. பீ. ஏ. எஸ். ஏ. குமார	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	12/12	04/04	03/03	02/02	04/04	-
திரு. எல்.ஈ. சுசந்த சில்வா	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	09/09	02/02	01/01	02/02	02/02	01/01
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	09/09	01/01	03/03	02/02	02/02	01/01
திரு. டீ. எம். ஏ. கே. திசாநாயக்க	நிர்வாகம் சாராத சுயாதீனமற்ற பணிப்பாளர்	08/09	-	-	-	-	03/03
திரு. டீ. எம். எஸ். அபயகுணவர்தன (ஓய்வு பெற்ற)	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	03/03	-	-	-	-	-
திரு. ரொஹான் டி சில்வா (ஓய்வு பெற்ற)	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	02/03	-	-	-	-	-
திரு. என். விஜயநாதன் (ஓய்வு பெற்ற)	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	05/06	-	-	02/02	-	-
திருமதி ஆர். ஏ. சூலானந்த (ஓய்வு பெற்ற)	நிர்வாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்	08/08	02/02	01/01	-	01/02	02/02

கூட்டுறவு ஆளுகை

சபையின் பொறுப்புகள்

வலுவான ஆளுகையையும், வங்கியின் செயற்பாடுகளையும் பலப்படுத்தும் வகையில், சபை வங்கியின் உபாயநுட்ப இலக்குகளையும், கூட்டுறவுப் பெறுமதிகளையும் மேற்பார்வை செய்து அங்கீகரிக்கிறது.

- சபை, குறைந்தபட்சம் மூன்று வருட காலப்பகுதிக்கு, வங்கியின் ஒட்டுமொத்த இடர் கொள்கை மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் /பொறிமுறைகள் மற்றும் அளவிடப்படக்கூடிய இலக்குகள் உள்ளடங்கலாக வங்கியின் வியாபார நுட்பத்தைத் தீர்மானிக்கும்.
- சபை, அதன் உறுப்பினர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் வரையறை செய்யும்.
- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமை என்பவற்றின் போதுமான தன்மையையும், நேர்மைத் திறனையும் மீளாய்வு செய்யும் பொறுப்பை சபை கொண்டுள்ளது.
- இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு அமைவாக, முக்கிய முகாமைத்துவ ஆட்களை இனங்காண்பதற்கும், அவர்களுக்கு உள்ள பணியை ஒதுக்குவதற்குமான பொறுப்பும், மேற்பார்வை செய்யும் அதிகாரமும் சபைக்கு உள்ளன.
- சபையின் கொள்கைக்கு அமைவாக, வங்கியின் விவகாரங்களை முக்கிய முகாமைத்துவ ஆட்கள் சீராக மேற்பார்வை செய்யப்படுவதை சபை உறுதிப்படுத்தும்.
- கொள்கைகளை மீளாய்வு செய்யவும், தொடர்பாடல் வரிசைகளை ஸ்தாபிக்கவும், இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும் சபை கிரமமாகக் கூடும்.

தெரிவுகளும் நியமனங்களும்

புதிய பணிப்பாளர்களின் தெரிவு மற்றும் நியமனம் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் அமுல்படுத்தப்படுவதை தெரிவுக்குழு மேற்பார்வை செய்யும்.

அதேபோன்று, பிரதம நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரின் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் என்பவற்றுக்குத் தேவையான அளவு கோல்களையும், பண்புக் கூறுகளையும், நியமனக் குழு உருவாக்கும். மேலும், இக்குழு ஓய்வு பெறும் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ ஆட்கள் தொடர்பாக அடுத்து வரும் திட்டங்கள் மற்றும் புதிய அல்லது நிபுணத்துவத்துடன் கூடிய ஆட்களைத் தெரிவு செய்ய காலத்திற்குக் காலம் பரிந்துரை செய்யும்.

மீள் தெரிவு

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க HDFC சட்டத்திற்கு அமைவாகவும், பொருத்தமான அளவு கோல்களுக்கு அமையவும், பணியிலுள்ள பணிப்பார்களை மீள் தெரிவு செய்வதற்கு உகந்த பரிந்துரைகளை தெரிவுக்குழு வழங்கும். இதற்குத் தகுதியானவர்களின் விடயங்கள் விவேகமாக மதிப்பீடு செய்யப்படுவதுடன், இச்செயன்முறை வெளிப்படையாக நடைபெறும். இதன்போது, தெரிவுக்குழு, பணிப்பாளர்களினால் கடமைகளை நிறைவேற்றும் போது இருந்த அவர்களின் செயற்திறனையும் பங்களிப்புக்களையும் கருத்திற்கொள்ளும்.

பிரகடனம்

HDFC சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் உள்ள சில விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு பணிப்பாளரும் தமது கடமைகளை ஏற்றுக்கொள்ள முன்னர், வங்கி மற்றும் அதன் விடயங்கள் தொடர்பாக இரகசியத் தன்மையைப் பேணுவதாகவும், வங்கியின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய ஏதேனும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட மாட்டாது எனவும் உறுதிமொழி அளிக்கும் பிரடனம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும்.

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள்

ஆளுகையை வலுப்படுத்துவதற்காகவும், குழுவுக்குரிய விசேட விடயங்களைக் கையாள்வதற்காகவும், ஐந்து சபை உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் கிரமமாகக் கூடுவதுடன், சபைக்கு நேரடியாக அறிக்கையிடும். இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு அமைய, இந்தக் குழுக்கள் குறிப்பு விதிகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

- கணக்காய்வுக் குழு
- மனிதவள மற்றும் சம்பளக் குழு
- ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குகு
- தெரிவுக் குழு
- தொடர்புடைய திறத்தவர்களுடனான கொடுக்கல் வாங்கல் மற்றும் மீளாய்வுக் குழு

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வகிபங்கு

கூட்டுறவு ஆளுகையில் உள்ள சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பின்பற்றுவதில், அதிகாரத்தின் சரியான சமப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வகிபங்குகள் பிரிக்கப்பட்டுள்ளன. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்புகளும், பணிகளும், இலங்கை வங்கியின் வழிகாட்டிகள், HDFC வங்கிச் சட்டம் மற்றும் சபையின் பட்டயம் என்பவற்றுக்கு அமைவாக உள்ளது.

சபை பட்டத்திற்கு அமைவாக, HDFC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகத்தின் நாளாந்தம் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உயர் நிர்வாக அதிகாரி ஆவார். வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் பொது முகாமையாளராகவும் பணியாற்றுவார். சுபை, தனது பொறுப்புகளையும், பணிகளையும் திறம்பட மேற்கொள்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு வங்கியின் தலைவர் தலைமைத்துவதை வழங்குவார்.

கம்பனியின் செயலாளர்

சபையினால் நியமிக்கப்பட்ட கம்பனியின் செயலாளர் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி சேவையாற்றுவார். சபையினால் நியமிக்கப்பட்ட கம்பனியின் செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சபைக் கூட்டக் குறிப்புகளைப் பேணி வருவார். கூட்டுறவு ஆளுகை மீதான இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு அமைய, கம்பனியின் செயலாளர், சபைக்கும், பங்குதாரர் கூட்டங்களுக்கும், செயலாளர் சார்ந்த சேவைகளை வழங்குதுடன், நியதிச்சட்ட ஒழுங்கு விதிகளினால் ஆணையிடப்பட்ட பணிகளையும் நிறைவேற்றுவார். அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் செயலாளரின் தொழில் சார்ந்த அறிவுரைகளையும், சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கான அணுகல் முறை உள்ளது. கடந்த கால கூட்டக் குறிப்புகள் மற்றும் சபை தொடர்பான ஆவணங்கள் என்பவற்றை பணிப்பாளர்கள் அணுகக்கூடிய வகையில் செயலாளர் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

ஏற்புடைய ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள் மற்றும் சபைப் பட்டயத்திற்கு அமைய, வருடாந்தப் பொதுக் கூட்டம் மற்றும் அவசர பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு தலைவருக்கு உதவி வழங்குவதன் மூலம், கூட்டுறவு ஆளுகை தொடர்பான அம்சங்களில் அனுசரணை வழங்குவதில் ஒரு மிக முக்கிய பங்கினை கம்பனி செயலாளர் பூத்தி செய்கிறார். செயலாளர் ஒழுங்குபடுத்துநர்களுடன் தொடர்பாடலைப் பேணுவதற்கும் பொறுப்புடையவராவார்.

இணக்க மீளாய்வு

இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பவற்றுடன் தொடர்புடைய, கூட்டுறவு ஆளுகைக் கட்டமைப்பு தொடர்பான HDFC வங்கியின் 2020 ஆம் நிதியாண்டு இணக்க அந்தஸ்து கீழே வரையறுக்கப்பட்டுள்ளது.

பகுதி 1

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான, இலங்கை மத்திய வங்கியின் கூட்டுறவு ஆளுகை வழிகாட்டிகளுடனான இணக்கம்

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(1)	**சபையின் பொறுப்புகள்**	
3(1)(i)	வங்கியின் பாதுகாப்பு மற்றும் வலுத்தன்மையை சபை பலப்படுத்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகள்	
a)	வங்கியின் உபாயநுட்ப இலக்குகள் மற்றும் கூட்டுறவுப் பெறுமதிகளுக்கான சபையின் அங்கீகாரம்	**இணங்கி நடக்கப்பட்டது** 2017 - 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டத்தில் உபாயநுட்ப இலக்குகளும், பெறுமதிகளும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், கூட்டுறவுத் திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதுடன், இவ்விரண்டும் ஆராயப்பட்டு, வங்கி பூராகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், 2021 - 2025 ஆம் ஆண்டுக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட உபாய நுட்பத் திட்டம் இருப்பதுடன், இது 2020 இல் அங்கீகரிக்கப்பட்டது.
b)	வங்கியின் ஒட்டுமொத்த உபாயநுட்பத்திற்கான சபை அங்கீகாரம் வங்கியின் ஒட்டுமொத்த உபாய நுட்பம், ஒட்டுமொத்த இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன், அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த வர்த்தக உபாய நுட்பம், குறைந்த பட்சம் அடுத்த 3 வருடங்களுக்கான அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** 2017 - 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான ஒட்டுமொத்த உபாய நுட்பக் கொள்கையை உள்ளடக்கிய சபையின் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டம் உள்ளது. மேலும், 2021 க்கான செயற்பாட்டுத் திட்டம், சபையினால் 2020 மார்ச் 31 இல் அங்கீகரிக்கப்பட்டது. உள்ளக மூலதன போதுமான மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) இடர் கொள்கை, இடர் அவசியக் கட்டமைப்பு என்பன கூட்டுறவுத் திட்டத்திற்கு அமைய சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
c)	சபையினால் அடையாளம் காணக்கூடிய இடர்களைக் கையாளுவதில் உள்ள பொருத்தமான முறைகள் விவேகமாக இருப்பதுடன், அவை, கிரமமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.	**இணங்கி நடக்கப்பட்டது** இடர் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு என்பன உருவாக்கப்பட்டதுடன், இடர் கொள்கை குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு முதன்மையான இடர்களை அமுல்படுத்தவும், மேற்பார்வை செய்யவும், முகாமைத்துவம் செய்யவும், ஆளுகைக் கட்டமைப்பை உருவாக்குகிறது.
d)	வைப்பாளர்கள், கடன்தாரர்கள், பங்குதாரர்கள், கடன் பெறுநர்கள் உள்ளடங்கலாக, அனைத்து பங்குதாரர்களுடனும் இருக்கக்கூடிய தொடர்பாடல் கொள்கை, சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.	**இணங்கி நடக்கப்பட வேண்டும்** சபையின் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கை ஒன்று இல்லை. எனினும், வங்கி பல்வேறுபட்ட பங்குதாரர்களுடன் தொடர்புகொள்ள, இணைய தளம் மற்றும் ஏனைய தொடர்பாடல் வழிவகைகளைக் கொண்டுள்ளது.
e)	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறை ஆகியவற்றின் போதுமான தன்மையையும், நேர்மைத் தன்மையையும் சபை மீளாய்வு செய்தது.	**இணங்கி நடக்கப்பட்டது** உள்ளகக் கணக்காய்வு, காலாந்தர அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவும் சபையும் மீளாய்வு செய்தது. இவ்வறிக்கை உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும், முகாமைத்துவ தகவல் முறையையும் மற்றும் கண்டறிதல்களை நிவர்த்தி செய்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் விளக்குகிறது.
f)	இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலில் வரையறை செய்யப்பட்டவாறு சபை முக்கிய முகாமைத்துவ ஆட்கள் என்ற தகுதிக்குள் இருக்க வேண்டியவர்களை இனங்கண்டுள்ளது. அவற்றில் (i) கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்தக் கூடிய கொள்கை (ii) நேரடியான நடவடிக்கைகள் மற்றும் (iii) வர்த்தக நடவடிக்கைகள், கோட்பாடுகள், இடர் முகாமைத்துவம் என்பவற்றின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்குகிறது.	**இணங்கி நடக்கப்பட்டது** இலங்கை கணக்கியல் நியமங்களில் வரையறை செய்யப்பட்டவாறு, சபை, முக்கிய முகாமைத்துவ ஆட்களை இனங்கண்டு, அவர்களுக்கு உரிய தர நிலைகளை வழங்கியது.
g)	வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தொடர்பான விவகாரங்களை சபை மேற்பார்வை செய்துள்ளதுடன், அவை, சபைக் கொள்கையோடு ஒருசீராக அமைந்துள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** செயற்திறன் அறிக்கைகள் சபை மட்டத்தில் கவனத்திற் கொள்ளப்பட்டதோடு, தேவையான மேம்படுத்தல்களுக்காக, காலத்திற்குக் காலம் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டுறவு ஆளுகை

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
	h) சபை, அதன் உறுப்பினர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் அதிகார எல்லைகளையும், முக்கியமான பொறுப்புகளையும் வரையறுத்துள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** கூட்டுத்தாபனத்தின் நிர்வாகமும், முகாமைத்துவமும் HDFC சட்டத்திற்கு அமைய பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, சபை, இது தொடர்பாக கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பைக் கொண்டுள்ளது. முக்கிய முகாமைத்துவ ஆட்களின் அடைவு எல்லைகள், ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட அடைவு மற்றும் தொடர்புடைய திணைக்கள அடைவுகள் என்பவற்றுடன் தொடர்புபட்டவை. இதற்கமைய, 2020 ஆம் ஆண்டுக்கான அனைத்து முக்கிய முகாமைத்துவ ஆட்களின் KPI களும் உள்ளன. மேலும், ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின், முக்கிய முகாமைத்துவ ஆட்கள் சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவர். முக்கிய முகாமைத்துவ ஆட்களின் பிரதான பொறுப்புகள், அவர்களின் தொழில் விபரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களின் பொறுப்புகள் கையளிப்பு அதிகார வரம்புகளின் கீழ் வரையறை செய்யப்பட்டுள்ளன.
	i) சபை காலத்திற்குக் காலம் சபையின் பணிப்பாளர்களின் சொந்த ஆளுகை நடைமுறைகளின் வினைத்திறனை காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்யும். அவற்றுடன் பின்வரும் விடயங்களும் உள்ளடக்கப்படும். (i) பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் தெரிவு, பெயர் குறித்துரைப்பு மற்றும் நியமனம் (ii) அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் (iii) பலவீனங்களைத் தீர்மானித்தலும் தேவையான இடங்களில் மாற்றங்களை மேற்கொள்ளுதலும்.	**இணங்கி நடக்கப்பட்டது** சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அது, சபை பணிப்பாளர்களின் சொந்த ஆளுமை நடைமுறைகளின் மதிப்பீட்டையும் உள்ளடக்கும். 2020 ஆம் ஆண்டுக்கான சுயமதிப்பீடு 2021 இல் நடத்தப்பட்டன. மீளாய்வுக்காகவும், பலவீனங்களை ஆராயவும் தேவையான இடங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கவும் இந்த மதிப்பீட்டின் சாராம்சம் 2021 பெப்ரவரி 24 இல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2019 இல் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் உட்பட பணியாட்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான கொள்கை ஏற்கப்பட்டது.
	j) முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்காக சபை ஒரு பின்னுறுதித் திட்டத்தைக் கொண்டுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** அங்கீகரிக்கப்பட்ட பின்னுறுதித் திட்டம் ஒன்று சபையிடம் உள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான பின்னுறுதித் திட்டத்தை சபை 2019 பெப்ரவரி 14 ஆம் திகதி அங்கீகரித்தது. இத்திட்டம் 21.10.2019 இல் திருத்தப்பட்டது.
	k) சபையின் கொள்கைகளை மீளாய்வு செய்யவும், தொடர்பாடல் வரிசைகளை ஸ்தாபிக்கவும், கூட்டுறவு இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை மேற்பார்வை செய்யவும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் சபை கிரமான கூட்டங்களை நடத்தி வருகிறது.	**இணங்கி நடக்கப்பட்டது** அங்கீகரிக்கப்பட்ட பின்னுறுதித் திட்டம் ஒன்று சபையிடம் உள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான பின்னுறுதித் திட்டத்தை சபை 2019 பெப்ரவரி 14 ஆம் திகதி அங்கீகரித்தது. இத்திட்டம் 21.10.2019 இல் திருத்தப்பட்டது.
	l) ஒழுங்குபடுத்தல் சூழலை விளங்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும், செயன் முறைகளையும் சபை மேற்கொண்டுள்ளது. மேலும், ஒழுங்குபடுத்துநர்களுடன் வங்கி பேணி வரும் உறவுகளையும் சபை மேற்பார்வை செய்கிறது.	**இணங்கி நடக்கப்பட்டது** ஒழுங்குபடுத்தல் சூழலை விளங்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும், செயன் முறைகளையும் சபை மேற்கொண்டுள்ளது. மேலும், ஒழுங்குபடுத்துநர்களுடன் வங்கி பேணி வரும் உறவுகளையும் சபை மேற்பார்வை செய்கிறது.
	m) வெளியகக் கணக்காய்வாளர்களைப் பணிக்கு அமர்த்தவும், மேற்பார்வை செய்யவும் சபை ஒரு நடைமுறையை கொண்டுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** இலங்கை அரசியலமைப்பு மற்றும் HDFC சட்டத்திற்கு அமைய, HDFC யின் உரிமை 51% க்கு மேல் அரசினால் உரிமை கொள்ளப்படுவதனால், கணக்காய்வாளர் நாயகம் வெளியகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றுவார்.
3(1)(ii)	சபை வங்கியின் தலைவரையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும் நியமித்துள்ளது. தலைவர் மற்றும் பி.நி.அ ஆகியோரின் பணிகளும், பொறுப்புகளும் வழிகாட்டி 3(5)க்கு அமைவாக இருக்கும்.	**இணங்கி நடக்கப்பட்டது** அதிகாரத்தைச் சமப்படுத்துவதற்காக HDFC சட்டம் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் தகுதிகளை தனித்தனியாகப் பிரித்துள்ளது. தலைவர், HDFC சட்டத்திற்கு அமைவாகவும், பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சபையினாலும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பணிகளும், பெறுப்புக்களும் HDFC சட்டத்தின் கீழ் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. சபை 2020 ஜனவரி 29 ஆம் திகதி சபைப் பட்டயத்தை உருவாக்கியது. இப்பட்டயம் HDFC யின் ஆளுகைக் கட்டமைப்பை வரையறை செய்கிறது.
3(1)(iii)	சராசரி மாத இடைவெளிகளுடன், ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 12 கூட்டங்களை சபை கிரமமாக நடத்தியுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறும் அதேவேளை, சேவை அடிப்படையில் விசேட கூட்டங்களும் நடைபெறும். 2020 ஆம் ஆண்டில் 17 கூட்டங்கள் நடைபெற்றன.

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(1)(iv)	வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் வங்கியின் இடர் முகாமைத்துவத்தை முகாமை செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய அத்தகைய விடயங்களையும், முன்மொழிவுகளையும் கிரமமான சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்குவதற்கு அனைத்து பணிப்பாளர்களுக்கும் வாய்ப்பளிக்கும் நடைமுறை ஒன்றை சபை கொண்டுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்குமாறு தலைவர், செயலாளரை அறிவுறுத்தியுள்ளார். அத்துடன், தலைவர் மற்றும் செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர், அனைத்து பணிப்பாளர்களும் தமது விடயங்களை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்க சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
3(1)(v)	கூட்டங்களில் சமூகமளிக்க வாய்ப்பளிக்கும் வகையில் அனைத்து பணிப்பாளர்களுக்கும் கிரமமான சபைக் கூட்டத்திற்கு குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** கூட்ட அறிவித்தல், நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டங்களுக்கான சபை ஆவணங்கள் என்பன குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
3(1)(vi)	12 மாத காலத்தில் நடைபெற்ற கூட்டங்களில் அடுத்தடுத்த அல்லது உடனடுத்து வரும் மூன்று கூட்டங்களில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத பணிப்பாளர்கள் மீது தேவைப்படுத்தப்பட்ட நடவடிக்கையை சபை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பதில் பணிப்பாளர் ஒருவர் கூட்டங்களில் சமூகமளிப்பது பங்குபற்றாத பணிப்பாளரின் சமூகமாக ஏற்றுக் கொள்ளப்படும்.	**இணங்கி நடக்கப்பட்டது** 2020 வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளவாறு, தேவைப்படுத்தப்பட்ட கூட்டங்களில் அனைத்துப் பணிப்பாளர்களும் பங்குபற்றியுள்ளனர்.
3(1)(vii)	கம்பனியின் செயலாளர் ஒருவரை சபை நியமித்துள்ளது. அவர், 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 43 இன் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்தியுள்ளார். இதற்கமைய, சபை மற்றும் பங்குதாரர் கூட்டங்களுக்கு செயலாளர் சார்ந்த சேவைகளை வழங்குவதும், நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளின் கீழ் உள்ள ஏனைய பணிகளைப் பூர்த்தி செய்வதும் அவரது முதன்மைப் பொறுப்புகளாகும்.	**இணங்கி நடக்கப்பட்டது** 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 43 இன் ஏற்பாடுகளுக்கு அமைய, பொருத்தமான தகுதிகளைக் கொண்ட சட்டத்தரணி ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளின் கீழ், குறித்துரைக்கப்பட்ட பணிகளையும் சபையின் செயலாளர்சார் சேவைகளையும் வழங்க அவர் பொறுப்புடையவர். மேலும், செயலாளர் கடமைகளுக்கு மேலதிகமாக, 2020 டிசம்பர் 24 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மனிதவள பிரிவின் உதவிப் பொது முகாமையாளராகவும் சபை நியமித்துள்ளது.
3(1)(viii)	கம்பனி செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் பெற பணிப்பாளர்கள் அனைவருக்கும் செயன்முறை ஒன்று உள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் அனைத்துப் பணிப்பாளர்களும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
3(1)(ix)	கம்பனியின் செயலாளர் சபைக் கூட்டக் குறிப்புகளைப் பேணி வருவார். அத்துடன், இக்குறிப்புகளை மேற்பார்வையிடக் கூடிய செயன்முறை ஒன்று பணிப்பாளர்களுக்கு உள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** அனைத்து அறிக்கைகளும், கம்பனி செயலாளரிடம் உள்ளது. அத்துடன், கடந்தகால சபை ஆவணங்களையும், கூட்டக் குறிப்புகளையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
3(1)(x)	சபைக் கூட்டக் குறிப்புகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கும். (a) சபை அதன் விவாதங்களில் பயன்படுத்திய தரவுகள் மற்றும் தகவலின் சாராம்சம (b) சபையினால் கருத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள் (c) சபை தனது கடமைகளை கவனத்துடனும் விவேகத்துடனும் நடத்துகின்றதா என்பதை விளக்குகின்ற நிகழ்வுகளைக் கண்டறியும் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதத்திற்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்குரிய விடயங்கள். (d) சபையின் உபாயநூட்பங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்கி நடப்பதை குறிப்பிடுகின்ற விடயங்களும், பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்கப்படும் விடயங்களும். (e) வங்கி எதிர்கொண்ட இடர்கள் பற்றிய புரிதல்களும், ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ வழிமுறைகளின் கண்ணோட்டமும். மற்றும் (f) சபையின் தீர்மானங்களும் முடிவுகளும்.	**இணங்கி நடக்கப்பட்டது** பின்வரும் விடயங்கள் போன்ற தேவையான தகவல்கள் சபைக் கூட்டக் குறிப்பில் தரப்பட்டுள்ளன. (i). குறிப்பான விடயதானங்கள் மீது எடுக்கப்பட்ட வர்த்தகத் தீர்மானங்கள். (ii). குறிப்பிட்ட விடயதானங்கள் மீது சபை மேற்கொண்ட முடிவுகள் (iii). சபை உப குழுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் (iv). விடயங்கள் மற்றும் செயற்திறன் மீளாய்வு பற்றிய கொள்கைத் தீர்மானங்கள்.
3(1)(xi)	பொருத்தமான சூழ்நிலைகளில், நியாயமான வேண்டுகோளுக்கு அமைய வங்கியின் செலவில் தொழில்முறை ரீதியான சுயாதீன அறிவுரைகளை பணிப்பாளர்கள் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் உள்ளன.	**இணங்கி நடக்கப்பட்டது** தேவை அடிப்படையில் சுயாதீன தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள சபைக்கு சுதந்திரம் உள்ளது.

கூட்டுறவு ஆளுகை

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(1)(xii)	அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தவிர்க்க அல்லது அக்கறைகளுக்கிடையிலான முரண்பாடுகள் இருப்பதாக தோன்றுமிடத்து, அவற்றைத் தீர்மானிக்க, அறிக்கையிட, சமரசம் செய்ய மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடைமுறை ஒன்று உள்ளது. பணிப்பாளர் ஒருவருக்கு கணிசமான அளவு அக்கறை உடைய அல்லது அக்கறை இருக்கின்ற விடயம் தொடர்பில் அல்லது அவருடைய அல்லது அவளுடைய நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அக்கறை உள்ளவிடத்து அவ்விடயம் தொடர்பான ஏதேனும் சபைத் தீர்மானம் மீது வாக்களிப்பதில் இருந்து பணிப்பாளர் விலகியிருக்கின்றாரா என்பதை பரீட்சித்தல். சபைக் கூட்டத்தின் பொருத்தமான நிகழ்ச்சி நிரல் விடயத்திற்கான கூட்ட நடப்பெண்ணில் அவர் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளரா என்பதை அவதானித்தல்.	**இணங்கி நடக்கப்பட்டது**
3(1)(xiii)	வங்கியின் அதிகாரம் மற்றும் திசை என்பன அதன் அதிகாரத்தின் கீழ் உறுதி உள்ளது என்பதை இனங்காண்பதற்கான தீர்மானத்திற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட ஒரு விதிமுறையான விடயங்களைக் கொண்ட நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** ஆரம்பத்தில் 26.07.2013 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகார வரை சட்டம் ஒன்று உள்ளது.
3(1)(xiv)	வங்கி அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாதவிடத்து அல்லது அவ்வாறான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு உள்ள போது அல்லது வங்குரோத்து நிலையை அடையும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கும் போது அல்லது வைப்பாளர்கள் ஏனைய கடன்தாரர்கள் கொடுப்பனவுகளை நிறுத்துகின்ற போது வங்கி அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் அல்லது நடவடிக்கை எடுக்க முன்னர் அத்தகைய நடைமுறைகளை இனங்காண அவசியம் உள்ளவிடத்து, வங்கி மேற்பார்வை தொடர்பான பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.	**இணங்கி நடக்கப்பட்டது** வங்கி வங்குரோத்து நிலையை அடையும் என்ற சந்தேகத்தை எழுப்பக்கூடிய எந்தவொரு சூழ்நிலையும் ஏற்படவில்லை. வங்கியின் நிலையை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த நிதிக் கூற்றுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
3(1)(xv)	நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்ட மட்டங்களில் சபை, வங்கியின் மூலதனத்தைக் கொண்டுள்ளது.	**பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.** மூலதன போதுமான விகிதங்கள் வங்கியினால் பூர்த்தி செய்யப்பட்டன. வங்கி, அதன் குறைந்தபட்ச மூலதன மட்டமான ரூபா 5 பில்லியனைக் கொண்டுள்ளது. எனினும், 2017 ஒக்டோபரில், 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் உள்ள வழிகாட்டிகளுக்கு அமைய, வங்கி, 31.12.2020 இல், குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூபா 7.5 பில்லியனைப் பூர்த்தி செய்ய வேண்டும். எனினும், இது, 2022 இறுதி வரை நீடிக்கப்பட்டது.
3(1)(xvi)	இவ்வழிகாட்டிகளின் கீழ், வழிகாட்டி 3 க்கு அமைய, சபை, வங்கியின் வருடாந்தக் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் வழிகாட்டி 3 தொடர்பான இணக்கம் பற்றி எடுத்துக் கூறும்.	**இணங்கி நடக்கப்பட்டது** இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டியின் தேவைப்பாட்டிற்கு அமைய, வருடாந்த அறிக்கை இணக்கத் தேவைப்பாட்டை உள்ளடக்கிய கூட்டுறவு ஆளுகை அறிக்கையைக் கொண்டுள்ளது.
3(1)(xvii)	சபை ஒவ்வொரு பணிப்பாளரையும் வருடாந்தம் சுயமதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளது. அத்தகைய மதிப்பீடுகளின் பதிவுகளை பேணிப் பாதுகாத்து வருகிறது.	**இணங்கி நடக்கப்பட்டது** 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி சுயமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன், வங்கி பணிப்பாளர்களை சுய மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளதுடன், சபையின் செயலாளர் அனைத்து பணிப்பாளர்களிடமிருந்தும் வருடாந்தம் மதிப்பீட்டுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வார்.
3(2)	**சபை உள்ளடக்கம்**	
3(2)(i)	சபை 7 பேருக்குக் குறையாத, 13 பேருக்கு மேற்படாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.	**பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டுள்ளது.** 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது, சபை 7 பேருக்குக் குறையாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. எனினும், 2020 ஜூலை வரை குறிப்பிட்ட தேவைப்பாடு வங்கியினால் பூர்த்தி செய்யப்படவில்லை.
3(2)(ii)	(a) பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியை வகிக்கும் பணிப்பாளர் தவிர, ஏனைய பணிப்பாளர்களின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களுக்கு மேற்படலாகாது.	**இணங்கி நடக்கப்பட்டது** 2020 இறுதியில் உள்ளவாறு எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடகால சேவைகளை விஞ்சவில்லை.
	(b) எவரேனும் பணிப்பாளர் ஒருவர், 9 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் சேவையாற்றி இருப்பின், இடைக்கால விதிகள் பின்பற்றப்பட்டனவா என்பதைப் பரீட்சித்தல்.	**இணங்கி நடக்கப்பட்டது** இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாட்டிற்கு அமைய, எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடங்களுக்கும் அதிகமாக சேவையாற்றவில்லை.
3(2)(iii)	பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட நிர்வாகப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை, சபை பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகரிக்கப்படல் ஆகாது.	**இணங்கி நடக்கப்பட்டது** சபையில் எந்தவொரு நிறைவேற்றுப் பணிப்பாளரும் இல்லை.

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(2)(iv)	சபை குறைந்தபட்சம் மூன்று சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை அல்லது மொத்தப் பணிப்பாளர்களில் மூன்றில் ஒரு பகுதியில் எது அதிகமானதோ அதனைக் கொண்டிருத்தல் வேண்டும். நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் பின்வரும் சூழ்நிலைகளில் சுயாதீனமானவர்களா என்பதை பரீட்சித்தல்.	**இணங்கி நடக்கப்பட்டது** 31.12.2020 இல் உள்ளவாறு, சபை 7 பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. நடப்பு வருடத்தின் போது, வழிகாட்டிகளுக்கு அமைய, சபை போதுமான அளவில் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.
	a) வங்கியின் பங்குரிமைகளில் 1 க்கு மேற்பட்ட நேரடி அல்லது மறைமுகப் பங்குகளைக் கொண்டிருத்தல்.	**எழவில்லை.**
	b) அவர் அல்லது அவள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை உடனடுத்த இரண்டு வருட காலப்பகுதியின் போது அல்லது தற்போது இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்பட்ட வழிகாட்டி 3(7) இல் உள்ளவாறு வங்கியின் ஏதேனும் வர்த்தகப் பரிவர்த்தனைகளில் வங்கியுடைய ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10 க்கு அதிகமாகக் கொண்டிருத்தல்.	**எழவில்லை.**
	c) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை உடனடுத்த இரண்டு வருட காலப் பகுதியின் போது, வங்கியினால் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருத்தல்.	**எழவில்லை.**
	d) பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ ஆட்களில் ஒருவர், வங்கியின் அல்லது ஏனைய வங்கியினுடைய முக்கியமான பங்குதாரர் போன்ற பதவிகளில் நெருங்கிய உறவினர் ஒருவர் இருத்தல் (இங்கு குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக 'நெருங்கிய உறவினர்' என்பது வாழ்க்கைத்துணை அல்லது நிதி ரீதியாக தங்கியிருக்கும் பிள்ளை எனப் பொருள்படும்).	**எழவில்லை.**
	e) வங்கியின் ஒரு குறிப்பான பங்குதாரரைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.	**எழவில்லை.**
	f) அவர் அல்லது அவள் கம்பனி அல்லது வர்த்தக நிறுவனம் ஒன்றில் ஒரு பணியாளராக அல்லது ஒரு பணிப்பாளராக அல்லது முக்கியமான பங்குதாரராக இருந்து, அந்தக் கம்பனி அல்லது நிறுவனம், I. இந்த வழிகாட்டிகளின் 3(7) இல் வரையறை செய்யப்பட்டவாறு, வங்கியுடன் தற்போது பரிவர்த்தனை ஒன்று இருந்து அது வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10 வீதத்திற்கு அதிகமாக உள்ள போது அல்லது II. வங்கியின் பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பணி புரிகின்றவிடத்து அல்லது பணிப்பாளர்களாக இருக்கின்றவிடத்து அல்லது முக்கிய பங்குதாரர்களாக இருக்கின்றவிடத்து அல்லது III. வழிகாட்டி 3(7) இல் வரையறை செய்யப்பட்டவாறு வங்கியின் ஏனைய பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பரிவர்த்தனை ஒன்றை மேற்கொண்டு அது வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10 வீதத்திற்கு அதிகமாக இருக்கின்ற விடத்து	**எழவில்லை.**
3(2)(v)	சுயாதீன பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்த பதில் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் போது, அவ்வாறு நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சுயாதீன பணிப்பாளருக்கு பிரயோகிக்கக்கூடிய தகுதிகளைப் பூர்த்தி செய்கிறாரா என்பதைப் பரீட்சித்தல்.	**எழவில்லை.** அத்தகை பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை.
3(2)(vi)	சுயாதீன பணிப்பாளர்களை நியமிக்கும் செயன்முறை ஒன்றை வங்கி கொண்டுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** வங்கியின் அனைத்துப் பணிப்பாளர்களும், நிர்வாகம் சாராதவர்கள்.
3(2)(vii)	வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நடப்பு எண், பணிப்பாளர்களின் 50% க்கு மேற்பட்டவர்களை உள்ளடக்கும். அத்துடன், இந்த நடப்பு எண்ணில் 50மூ க்கு மேற்பட்டவர்கள் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்க வேண்டும்.	**இணங்கி நடக்கப்பட்டது** வங்கியின் அனைத்துப் பணிப்பாளர்களும், நிர்வாகம் சாராதவர்கள்.
3(2)(viii)	வங்கி, அதன் வருடாந்தக் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் தலைவர், நிறைவேற்று அதிகாரிகள், நிர்வாகப் பணிப்பாளர்கள், நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக, பணிப்பாளர்களின் வகை அடிப்படையில் சபை உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும்.	**இணங்கி நடக்கப்பட்டது** சபை உள்ளடக்கம் மற்றும் அதன் விபரங்கள் 2020 வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.
3(2)(ix)	புதிய பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பான நடைமுறை	**இணங்கி நடக்கப்பட்டது** HDFC வங்கி சட்டத்தின் பிரிவு 03 க்கு அமைவாக, சபை நியமனங்கள் மேற்கொள்ளப்படும். மேலும், சபை பட்டயமும் இது தொடர்பில் பிரயோகிக்கப்படும்.

கூட்டுறவு ஆளுகை

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(2)(x)	இடைவரவான வெற்றிடத்தை நிரப்புவதற்கான அனைத்துப் பணிப்பாளர்களின் நியமனங்களும், அவர்களின் நியமனத்தின் பின்னர் வருகின்ற முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் தெரிவுக்கு அமைவாக இருக்கும்.	**எழவில்லை** அத்தகைய ஒரு சூழ்நிலை எழவில்லை
3(2)(xi)	பணிப்பாளர் ஒருவர் ராஜினாமாச் செய்தால் அல்லது அவர் தனது பதவியில் இருந்து அகற்றப்பட்டால், சபை : (a) அத்தகைய பணிப்பாளரின் ராஜினாமா அல்லது அகற்றலை அத்தகைய நீக்குதல் அல்லது ராஜினாமா செய்தமைக்கான காரணங்களை பொருத்தமான பணிப்பாளரின் வங்கியுடனான முரண்பாட்டுடன் தொடர்புபட்ட தகவல்கள் ஏதேனும் இருப்பின் அது உள்ளடங்கலாக ஆயின், அதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாத காரணங்களை அறிவிக்கும். அத்துடன், (b) பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டிய ஏதேனும் விடயங்கள் உள்ளனவா அல்லவா என்பதை உறுதிப்படுத்திய கூற்று ஒன்றை வழங்கும்.	**இணங்கி நடக்கப்பட்டது** இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கு பொது அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.
3(2)(xii)	பணிப்பாளர் ஒருவர் அல்லது வங்கி ஒன்றின் பணியாளர் இன்னுமொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கபட்டுள்ளரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளாரா என்பதை இனங்காண செயன்முறை ஒன்று உள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது** ஆண்டு தோறும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகுதியான மற்றும் முறையான பிரகடனங்களின் அடிப்படையில், பணிப்பாளர் ஒருவர் வேறு ஒரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளாரா என்பதை இனங்காண செயன்முறை ஒன்று உள்ளது. மேலும், இலங்கை மத்திய வங்கி பணிப்பாளர்களின் தகுதி மற்றும் தகுதி உடைமைகளை மதிப்பீடு செய்யும்.
3(3)	**பணிப்பாளர்களின் தகுதி மற்றும் தகுதி உடைமைகளை மதிப்பீடு செய்வதற்கான அளவு கோல்கள்**	
3(3)(i)	பணிப்பாளராகக் கடமையாற்றும் ஒருவரின் வயது 70 வருடங்களை விட அதிகரிக்கவில்லை என்பதைப் பரீட்சித்தல். (A) இடைக்கால ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளன.	**இணங்கி நடக்கப்பட்டது** 70 வருடங்களுக்கு மேற்பட்ட எந்தவொரு பணிப்பாளரும் இல்லை. **எழவில்லை** அத்தகைய சூழ்நிலை ஒன்று தோன்றவில்லை.
3(3)(ii)	நபர் ஒருவர் வங்கியின் இணைக் கம்பனிகள் அல்லது துணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கு மேற்பட்ட கம்பனிகள் / நிறுவனங்கள் / முயச்சியான்மைகள் என்பவற்றில் பணிப்பாளராக இருத்தல்.	பணிப்பாளர்கள் வழங்கிய பிரகடனங்களில் உள்ளவாறு, எந்தவொரு பணிப்பாளரும் 20 க்கு மேற்பட்ட கம்பனிகளில் பணிப்பாளர் தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை.
3(3) (iii)	இலங்கையில் உள்ள உரிமம் அளிக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து விலகியதில் இருந்து 06 மாத காலப்பகுதி முடிவடைய முன்பு, இலங்கையில் செயற்படும் உரிமம் அளிக்கப்பட்ட வங்கி ஒன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கையில் செயற்படும் இன்னுமொரு உரிமம் அளிக்கப்பட்ட வங்கியில் பணிப்பாளராக அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதைப் பரீட்சித்தல்.	கம்பனியின் செயலாளர் இத்தேவைப்பாட்டை மேற்பாவை செய்வதுடன், வேறு வங்கியில் இருந்து எந்தவொரு பணிப்பாளரோ அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியோ 2020 ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் போது நியமிக்கப்படவில்லை.
3(4)	**சபையினால் கையளிக்கப்பட்ட முகாமைத்துவப் பணிகள்**	
3(4)(i)	கையளிப்பு ஏற்பாடுகள் சபையினால் அங்கீகரிக்கபட்டுள்ளன.	**இணங்கி நடக்கப்பட்டது**
3(4)(ii)	வழிகாட்டி 3(1)(i) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய சூழ்நிலைகளில் கையளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சபை பொறுப்பேற்றுள்ளது.	**இணங்கி நடக்கப்பட்டது**
3(4)(iii)	நடைமுறையில் உள்ள கையளிப்பு செயன்முறை வங்கியின் தேவைகளுக்கு பொருத்தமாக உள்ளது என்பதை உறுதிப்படுத்த, சபை அதனை மீளாய்வு செய்யும்.	**இணங்கி நடக்கப்பட்டது** கையளிப்பு அதிகாரங்களை சபை காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யும்.
3(5)	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**	
3(5)(i)	தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வகி பங்குகள் வெவ்வேறாக இருப்பதுடன் ஒரே நபரினால் பணிகள் ஆற்றப்பட மாட்டாது.	**இணங்கி நடக்கப்பட்டது** HDFC சட்டம், தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் தகுதி நிலைகளை வெவ்வேறாக குறித்துக்காட்டுகிறது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் பணிகள் இரண்டு நபர்களினால் புரியப்படல் வேண்டும்.
3(5)(ii)	தலைவர் நிர்வாகம் சாராத பணிப்பாளராவார். தலைவர் சுயாதீனப் பணிப்பாளராக இல்லாதவிடத்து, பொருத்தமாக ஆவணப்படுத்தப்பட்ட குறிப்பு விதிகளின் படி சுயாதீனப் பணிப்பாளர் ஒருவர் சிரேஷ்ட பணிப்பாளராக சபை குறித்துரைப்பதைப் பரீட்சித்தல்.	**இணங்கி நடக்கப்பட்டது** தலைவர் ஒரு நிர்வாகம் சாராத சுயாதீன பணிப்பாளர் ஆவார். அத்துடன், வங்கி எந்தவொரு பணிப்பாளரையும் சிரேஷ்ட பணிப்பாளராகக் குறித்துரைக்கவில்லை.

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(5)(iii)	தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சபை உறுப்பினர்களிடையே ஏதேனும் உறவு (நிதி, வர்த்தக, குடும்ப, ஏனைய முக்கிய/பொருத்தமான உறவுகள்) இருப்பின் அதனையும், உறவு முறையின் தன்மையையும் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் இனங்காணவும், வெளிப்படுத்தவும் செயன்முறை ஒன்றை சபை கொண்டுள்ளது. அது, வருடாந்த அறிக்கைகளின் ஒரு பகுதியாக அமையும்.	**இணங்கி நடக்கப்பட்டது** பிரகடனங்களுக்கு அமைவாக, அத்தகைய உறவுகளை இனங்காண முடியும். அத்துடன், அவ்வெளிப்படுத்தல்கள் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3(5)(iv)	சபை பின்வரும் சந்தர்ப்பங்களில் சுயமதிப்பீட்டு அறிக்கையைக் கொண்டிருக்கும். தலைவர், (a) சபைக்குத் தலைமைத்துவத்தை வழங்கும் போது, (b) சபை வினைத்திறனாகப் பணியாற்றுவதுடன், தனது கடமைகளைப் பூர்த்தி செய்கின்றது என்பதை உறுதிப்படுத்தல் மற்றும், (c) முக்கியமான அனைத்து மற்றும் பொருத்தமான விடயங்கள், சபையினால் உரிய நேரத்தில் கலந்துரையாடப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல்.	**இணங்கி நடக்கப்பட்டது** சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. தலைவர் சபைக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதுடன், சபையின் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் வினைத்திறனாக செயற்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல்.
3(5)(v)	தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறையான நிகழ்ச்சி நிரல், கம்பனியின் செயலாளரினால் பகிர்ந்தளிக்கப்பட்டன.	**இணங்கி நடக்கப்பட்டது** தலைவரினால் நிகழ்ச்சி நிரல் செயலாளருடன் வாய்மூலமாக கலந்தாராயப்பட்டு, கூட்டத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது.
3(5)(vi)	சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் பற்றி உரிய நேரத்திலான சமர்ப்பனங்கள் ஊடாக அனைத்து பணிப்பாளர்களும் முறையாக தெளிவுபடுத்தப் பட்டாகள் என்பதை தலைவர் உறுதிப்படுத்துதல்.	**இணங்கி நடக்கப்பட்டது** சபைக் கூட்டங்களில் எழும் விடயங்கள் மீது அனைத்துப் பணிப்பாளர்களும் முறையாகத் தெளிவுபடுத்தப்பட்டனர் என்பதை தலைவர் உறுதிப்படுத்தினார். நிகழ்ச்சி நிரலும், சபை ஆவணங்களும், போதுமான கால நேரத்தை வழங்கி, பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. கடந்த மாத சபைக் கூட்டக் குறிப்புகள், சபை உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், திருத்தங்களுக்காக அல்லது அங்கீகாரத்திற்காக அடுத்து வரும் சபைக் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.
3(5)(vii)	சபை விவகாரங்கள் மீது முழுமையான மற்றும் துடிப்பான பங்களிப்பை அனைத்துப் பணிப்பாளர்களும் வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில், சுயமதிப்பீட்டு செயன்முறை ஒன்றை சபை கொண்டுள்ளதுடன், வங்கியின் சிறந்த நலனுக்காக தலைவர் தலைமைத்துவத்தை மேற்கொண்டு செயற்படுவார்.	**இணங்கி நடக்கப்பட்டது** சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது.
3(5)(viii)	சபை, சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அச்செயன்முறை, நிர்வாகம் சாராத பணிப்பாளர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்யும்.	**இணங்கி நடக்கப்பட்டது** சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது.
3(5)(ix)	முக்கிய முகாமைத்துவ ஆட்களின் நேரடியான தலையீட்டைக் கொண்டுள்ள விடயங்கள் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கடமைகள் எதுவாக இருப்பினும், அவற்றில் தலைவர் ஈடுபடுவார்.	**இணங்கி நடக்கப்பட்டது** முக்கிய முகாமைத்துவ ஆட்களின் நேரடியான தலையீட்டைக் கொண்டுள்ள விடயங்கள் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கடமைகள் எதுவாக இருப்பினும், அவற்றில் தலைவர் ஈடுபடமாட்டார்.
3(5)(x)	பங்குதாரர்களுடன் வினைத்திறனான தொடர்பாடலைப் பேணுவதற்குரிய செயன்முறை ஒன்றுள்ளது. அத்துடன், பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்குத் தெரிவிக்கப்படும்.	**இணங்கி நடக்கப்பட்டது** பங்குதாரர்களின் விடயங்களை ஆராய்வதற்கான இடமாக வருடாந்தப் பொதுக் கூட்டம் கருதப்படுகிறது.
3(5)(xi)	வங்கியின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் வர்த்தக விடயங்களை முகாமைத்துவம் செய்யும் தலைமை நிர்வாக உயர் அதிகாரி, பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார்.	**இணங்கி நடக்கப்பட்டது** HDFC சட்டத்திற்கு அமைய, வங்கியின் செயற்பாடுகளின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி இருக்கின்றார்.
3(6)	**சபை நியமிக்கப்பட்ட குழுக்கள்**	
3(6)(i)	இந்த வழிகாட்டிகளின் கீழ் உள்ள, வழிகாட்டிகள் 3(6) (ii), 3(6) (iii), 3(6) (iv) மற்றும் 3(6) (v) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, வங்கி குறைந்தபட்சம் நான்கு சபைக் குழுக்களை ஸ்தாபித்துள்ளது. ஒவ்வொரு சபைக் குழுவின் அறிக்கையும் நேரடியாக சபைக்கு முகவரி இடப்பட்டுள்ளது என்பதை பரீட்சித்தல். சபை அதன் வருடாந்த அறிக்கையில் ஒவ்வொரு குழுவினுடைய கடமைகள், வகிபாகங்கள் மற்றும் செயல்களை அறிக்கையிடும்.	**இணங்கி நடக்கப்பட்டது** இந்த வழிகாட்டிகளின் கீழ் உள்ள வழிகாட்டிகள் 3(6) (ii), 3(6) (iii), 3(6) (iv) மற்றும் 3(6) (v) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, வங்கி பின்வரும் ஐந்து குழுக்களை ஸ்தாபித்துள்ளது. அவை சபைக்கு நேரடியாக அறிக்கையிடும். (i) சபை மனிதவள மற்றும் சம்பளக் குழு (ii) சபை தெரிவுக்குழு (iii) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (iv) சபை தொடர்புடைய திறத்தவருடனான பரிவர்த்தனைக் குழு (v) சபை கணக்காய்வுக் குழு குழுக்களின் கூட்ட அறிக்கைகள், சபைக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுவதுடன், ஒவ்வொரு குழுவினது அறிக்கையும் வருடாந்த அறிக்கையில் காட்டப்படும்.

கூட்டுறவு ஆளுகை

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
3(6)(ii)	**கணக்காய்வுக் குழு**	
a)	குழுவின் தலைவர் நிருவாகம் சாராத பணிப்பாளராக இருப்பதோடு, அவர், தேவையான தகுதிகளையும் அனுபவங்களையும் கொண்டுள்ளார்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** 2019 மார்ச் 14 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராக சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளரை நியமித்துள்ளது. அத்துடன், இப்பணிப்பாளர், தனது சுய விபரங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வகையில் தேவையான தகுதிகளைக் கொண்டுள்ளார்.
b)	குழுவின் சகல உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களாவர்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** அனைத்துப் பணிப்பாளர்களும் நிர்வாகம் சாராதவர்கள். 2020 ஆம் ஆண்டுக் காலப்பகுதி முழுவதும் குழு ஐந்து நிர்வாகம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.
c)	குழு பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்ட பரிந்துரைகளை வழங்கியது. (i) பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்காய்வுச் சேவைகளுக்காக வெளியகக் கணக்காய்வாளரை நியமித்தல். (ii) காத்திற்குக் காலம், இலங்கை மத்திய வங்கியினால் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டிகளை அமுல்படுத்துதல (iii) பொருத்தமான கணக்கியல் நியமங்களைப் பிரயோகித்தல் (iv) கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம், மற்றும் ஏதேனும் ராஜினாமா அல்லது நீக்கம், இவை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. கணக்காய்வுப் பங்காளரின் சேவைகள் ஐந்து வருடத்திற்கு மேல் இருத்தலாகாது, அத்துடன், கணக்காய்வுப் பங்காளரின் முன்னைய சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்ட திகதியில் இருந்து 3 வருடம் பூர்த்தியாக முன்னர் சேவையில் அமர்த்தலாகாது.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(2) க்கு அமைவாக, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார். **இணங்கி நடக்கப்பட்டுள்ளது** மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கணக்காய்வாளர்களுக்கான வழிகாட்டிகளின் அமுல்படுத்துகையுடன் தொடர்புடைய விடயங்கள் மீது குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. **பொருத்தமற்றது** நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, கணக்காய்வாளர் நாயகம், வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார். ஆகவே, வெளியகக் கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பெறுவது தொடர்பில் வங்கிக்கு எவ்வித பங்கும் கிடையாது.
d)	கணக்காய்வு SLAuS இற்கு அமைவாக நடத்தப்பட்டது என்பதையும், கணக்காய்வாளர்களின் சுயாதீனத் தன்மை தொடர்பாகவும் வெளியகக் கணக்காய்வாளர்களிடம் இருந்து பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக்கொள்ளல்.	**பொருத்தமற்றது** ஏனெனில், கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனத் தன்மையும், வினைத்திறனும், நாட்டின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறது.
e)	பொருத்தமான ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, கணக்காய்வு அல்லாத சேவைகளை வழங்குவதற்கு, வெளியகக் கணக்காய்வாளரின் சேவை தொடர்பாக குழு கொள்கை ஒன்றை அமுல்படுத்துதல்.	**பொருத்தமற்றது** கணக்காய்வாளர் நாயகம், வங்கியின் கணக்காய்வாளர் நாயகமாக இருப்பதனால் இவ்விடயம் எழவில்லை.
f)	SLAuS இற்கு அமைவாக கணக்காய்வு ஆரம்பிக்கப்பட முன்னர், வெளியகக் கணக்காய்வாளருடன் கணக்காய்வின் இயல்பு மற்றும் எல்லை என்பனவற்றை குழு ஆராய்ந்து முடிவு செய்தல்.	**பொருத்தமற்றது** 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 இன் உப பிரிவுகள் (3) மற்றும் (4) என்பன கணக்காய்வின் எல்லைகளைத் தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளருக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகிறது.
g)	வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வருடாந்த அறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் என்பவற்றின் நேர்மைத் திறனை மேற்பார்வை செய்வதற்கு வங்கியின் நிதித் தகவலை மீளாய்வு செய்யும் செயன் முறையை குழு கொண்டிருத்தல். அத்துடன், பின்வரும் விடயங்களை பிரதம நிதி அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை ஒன்றும் உள்ளது. (i). முக்கியமான தீர்ப்புத் துறைகள், (ii). கணக்கியல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள், (iii) நிறுவன தொடர்ச்சி ஊகம், மற்றும (iv) பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல். மற்றும், (v) வருடாந்த நிதிக் கூற்றுக்களில் இருந்து எழுகின்ற முக்கியமான சீர்படுத்தல்கள் தொடர்பான விடயங்கள்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் நிதித் தகவல்களையும், வருடாந்த நிதிக் கூற்றுக்களையும் குழு மீளாய்வு செய்யும். சபை கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பிரத நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோர் பங்குபற்றுவதனால், இவ்விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
h)	கணக்காய்வு தொடர்பான நிர்வாக முகாமைத்துவம் இல்லாத சந்தர்ப்பங்களில் ஏதேனும் விடயங்கள் தொடர்பாக குழு வெளியகக் கணக்காய்வாளர்களைக் கொண்டிருத்தல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி, வங்கியில் இருப்பதால், குழு கிரமமாக அவர்களை சந்திக்கும். அத்துடன், அழைப்பின் பேரில் கணக்காய்வாளரின் பிரதிநிதி சபை கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் சமூகமளித்திருப்பார்.

பிரிவு		கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
	i)	கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவக் கடிதத்தையும், அதற்குரிய முகாமைத்துவப் பதிலையும் குழு மீளாய்வு செய்தல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** 2019 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கடிதத்தை குழு மீளாய்வு செய்து அதற்கு பதிலளித்துள்ளது.
	j)	வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பணி தொடர்பில் குழு பின்வரும் படிமுறைகளை மேற்கொள்ளல்.	
		I. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் எல்லை, பணிகள் மற்றும் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்தல். அத்துடன், அதன் பணியை மேற்கொள்ளத் தேவையான அதிகாரம் அத்திணைக்களத்திற்கு உள்ளது என்பது பற்றி திருப்தியுறல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், எல்லை மற்றும் வள தேவைப்பாடுகளை உள்ளடக்குகிறது. இத்திட்டம் கூட்டக் குறிப்பு இல. AC/20/01/07 இன் கீழ் 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் மீளாய்வு செய்யப்பட்டது.
		II. உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், அத்துடன், தேவையான இடங்களில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தமையை உறுதிப்படுத்தல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கை, உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை உள்ளடக்கி இருக்கிறது. அது, கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன், 2020 ஆம் ஆண்டுக்கான அறிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும்.
		III. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பணியாட்களின் செயற்திறன் மதிப்பீட்டை மீளாய்வு செய்தல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** 2019 ஆம் ஆண்டுக்கான பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டு அறிக்கை, கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. 2020 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு - நிலுவையிலுள்ளது.
		IV. உள்ளகக் கணக்காய்வுப் பணிக்காக, வெளியக சேவை வழங்குநர்கள், தலைவர், சிரேஷ்ட பணியாட்கள் தொடர்பான ஏதேனும் நியமனம் அல்லது முடிவுறுத்தல	
		V. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணியாட்களின் ராஜினாமாக்களை குழு மதிப்பீடு செய்துள்ளது என்பதைப் பரீட்சித்தலும், சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் வெளியக சேவை வழங்குநர்களின் ராஜினாமாக்களுக்கான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் அளித்தலும்.	
		VI. உள்ளகக் கணக்காய்வுப் பணி சுயாதீனமானது என்பதைப் பரீட்சித்தல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் சுயாதீனமாக இருப்பதுடன், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், சபை கணக்காய்வுக் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடும்.
	k)	உள்ளக விசாரணைகளின் பிரதான கண்டறிதல்களை குழு கவனத்திற் கொண்டுள்ளதா என்பதையும், அதற்குரிய முகாமைத்துவப் பதில்கள் அளிக்கப்பட்டனவா என்பதையும் தீர்மானித்தலுக்கான கூட்டக் குறிப்புகள்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** பிரதான உள்ளக் கணக்காய்வுக் கண்டறிதல்களும் முகாமைத்துவப் பதில்களும், கணக்காய்வுக் குழுவினால் கலந்தாலோசிக்கப்பட்டு, தேவையான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
	l)	நிர்வாகப் பணிப்பாளர்களின் சமூகம் இன்றி, வெளியகக் கணக்காய்வாளர்களுடன் குழு குறைந்தபட்சம் இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளதா?	சபையில் நிர்வாகப் பணிப்பாளர்கள் இன்மையால் இது பொருத்தமற்றது.
	m)	குழுவின் குறிப்பு விதிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும். (i) அதன் குறிப்பு விதி எல்லைகளுக்குள் ஏதேனும் விடயங்களை விசாரணை செய்வதற்கான வெளிப்படையான அதிகாரம் (ii) அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவையான வளங்கள் (iii) தகவல்களுக்கான முழுமையான அணுகல் (iv) வெளியக தொழில்முறை அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரமும், தேவையான இடங்களில் பொருத்தமான அனுபவத்தைக் கொண்டுள்ள வெளியாட்களை அழைத்தலும்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது**
	n)	குழு குறைந்தபட்சம் நான்கு தடவைகள் சந்தித்து கூட்டக் குறிப்புகளைப் பேணுதல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது, 6 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன், கூட்டக் குறிப்புகளும் பேணப்பட்டன.

கூட்டுறவு ஆளுகை

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
	o) சபை, அதன் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் (i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கை தொடர்பான விபரங்கள் (ii) வருடத்தின் போது நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை. மற்றும், (iii) அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரினதும் வருகை தொடர்பான விபரங்கள்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** 2020 வருடாந்த அறிக்கையின் கணக்காய்வுக்குழு அறிக்கையில் இந்த விபரங்கள் தரப்பட்டுள்ளன.
	p) குழுவின் செயலாளர், கம்பனி செயலாளராக அல்லது உள்ளகக் கணக்காய்வுப் பணியின் தலைவராவார்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைவர், கணக்காய்வுக் குழுவின் செயலாளராகச் செயற்பட்டார்.
	q) பின்வரும் விடயங்களை இடித்துரைப்பான் கொள்கை உள்ளடக்கியுள்ளது என்பதைப் பரீட்சித்தல். (i) நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களில் முறைகேடுகள் (ii) அத்தகைய விடயங்கள் தொடர்பாக நியாயமான மற்றும் சுதந்திரமான விசாரணை நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஏற்பாடுகளை குழு உறுதிப்படுத்தல். அத்துடன், (iii) பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** இடித்துரைப்புக் கொள்கை - 2017 - 13.10.2017 இல் (08/53/HR/2017) ஏற்கப்பட்டது. அத்துடன், இந்தக் கொள்கை 21.10.2019 இல் திருத்தப்பட்டது. இந்தத் தேவைப்பாட்டை எளிதாக்கும் வகையில், இடித்துரைப்பு தகவல்களைப் பெற்றுக்கொள்ள பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், ஒரு அலுவலராகப் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளார்.
3(6)(iii)	பின்வரும் விதிகள் மனிதவள மற்றும் சம்பளக் குழு தொடர்பில் பிரயோகிக்கப்படுமா?	
	a) குறிப்பு விதிகள் மற்றும் கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம், வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் ஊதியங்களை (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானிக்க குழு கொள்கை ஒன்றை அமுல்படுத்தியது.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** நிதியமைச்சினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டிகளின் அடிப்படையில், பணிப்பாளர்களின் ஊதியங்கள் தீர்மானிக்கப்படும். பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் ஊதியங்கள் கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் மனித வளங்கள் / சம்பளக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.
	b) பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரின் இலக்குகளும், அடைவு எல்லைகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** பணிப்பாளர்கள், நிர்வாகம் சாராதவர்களாக இருப்பதன் காரணமாக, நிர்வாகப் பணிப்பாளர்கள் போன்று தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் தலையிட மாட்டார்கள். முக்கிய முகாமைத்துவ ஆட்கள், வரவு - செலவு அடைவு எல்லைகளுக்குப் பொறுப்பாவர். எனினும், முக்கிய முகாமைத்துவ ஆட்களின் இலக்குகளும், அடைவு எல்லைகளும் ஆவணப்படுத்தப்பட்டன.
	c) குறித்துரைக்கப்பட்ட மற்றும் அடைவு எல்லைகளுக்கு எதிராக பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் செயற்திறன் மதிப்பீடுகளை, காலாந்தர அடிப்படையில் குழு கவனத்திற் கொண்டுள்ளது. இவை ஊதியங்கள், அணுகூலங்கள் மற்றும் ஏனைய செயற்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பனவற்றைப் புதுப்பிக்க அடிப்படையாகக் கொள்ளப்படும்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது**
	d) குறிப்பு விதிகள் பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்களை கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் கலந்தாலோசிக்கும் சந்தர்ப்பங்களில் குழுக் கூட்டங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி சமூகமளிக்க மாட்டார் எனக் குறிப்பிடுகிறது.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** மனித வள குழுவின் குறிப்பு விதி, இத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்கிறது.
3(6)(iv)	தெரிவுக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையனவா?	
	a) புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரைத் தெரிவு செய்ய / நியமிக்க குழு நடைமுறை ஒன்றை அமுல்படுத்துதல்.	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது** சபைக்குரிய நியமனங்கள் HDFC சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடைபெற வேண்டும். சபை பட்டயமும் இதற்கு ஏற்புடையதாகும். ஆட்சேர்ப்புக் கொள்கைகளின் அடிப்படையில், ர்னுகுஊ சட்டத்தின் பகுதி III இன் பிரிவு 14(1) க்கு அமைய பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான தெரிவு நடைமுறை உள்ளது.
	b) குழு நடப்பு பணிப்பாளர்களை மீள் தெரிவு செய்தலை கருத்திற்கொண்டு பரிந்துரை செய்துள்ளது. (அல்லது பரிந்துரை செய்யவில்லை)	**இணங்கி நடக்கப்பட்டுள்ளது**

பிரிவு		கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
	c)	தொழில் விவரணங்களை மீளாய்வு செய்வதன் ஊடாக, குழு பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் நியமனம் அல்லது பதவி உயர்வுக்குத் தேவையான தகுதிகள், அனுபவம், முக்கியமான பண்புகள் என்பவற்றை குறித்துரைத்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது
	d)	வழிகாட்டி 3(3) க்கு அமைவாகவும், நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி, மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களிடமிருந்து தமது பதவிகளை வகிக்க தகுதியான மற்றும் முறையான ஆட்கள் என்பதை உறுதிப்படுத்தி கையொப்பமிடப்பட்ட பிரடனங்களை அவர்களிடமிருந்து பெற்றுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை ஊடாக பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரகடனங்கள், இலங்கை மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
	e)	குழு, ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்காக ஒரு விதிமுறையான பின்தொடர் திட்டத்தைக் கவனத்திற் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கான பின்தொடர் திட்டம் ஒன்று உள்ளது. இது 21.10.2019 இல் புதுப்பிக்கப்பட்டது.
	f)	குழு, சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. அது, பெரும்பான்மை சுயாதீனப் பணிப்பாளர்களினால் உருவாக்கப்படுவது முக்கியமாகும். அழைப்பின் பேரில் பிரதம நிறைவேற்று அதிகாரி கூட்டத்திற்கு வருகை தரலாம்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது நிர்வாகம் சாராத இரண்டு சுயாதீனப் பணிப்பாளர்கள் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கினர். பிரதம நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரிலேயே பங்குபற்றுவார். எனினும், அவர் அனைத்துக் கூட்டங்களிலும் பங்குபற்றியுள்ளார்.
3(6)(v)		ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு (IRMC) பின்வரும் விதிகள் ஏற்புடையதாகுமா?	
	a)	குழு, குறைந்தபட்சம் மூன்று நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பரந்தளவான இடர் வகைகளை மேற்பார்வை செய்யும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரை உள்ளடக்கும். அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் என்பனவாகும். அத்துடன், அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்புக்குள் செயற்படுவதோடு, குழுவினால் வழங்கப்படும் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு, நிர்வாகம் சாராத மூன்று பணிப்பாளர்கள் மற்றும் CEO, COO, CFO, CIA, இணக்க அதிகாரி, திறைசேரியின் தலைவர், கடன் பிரிவின் தலைவர் மற்றும் இடர் அதிகாரி போன்ற வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆட்களை உள்ளடக்கியுள்ளது.
	b)	குழு, அனைத்து இடர்களையும் மதிப்பிடும் செயன்முறையைக் கொண்டுள்ளது. அதாவது, பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் ஊடாக மாதாந்த அடிப்படையில் வங்கிக்குரிய கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல். துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் தொடர்பில், இடர் முகாமைத்துவம், வங்கி மற்றும் குழு ஆகிய இரண்டு அடிப்படைகளிலும் மேற்கொள்ள வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது
	c)	கடன் குழு மற்றும் சொத்து - பொறுப்புக் குழுக்கள் போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்காக, விசேட அளவீட்டு மற்றும் தர அடிப்படையிலான இடர் வரையறைகளை குழு மீளாய்வு செய்வதோடு, ஏதேனும் இடர் குறிகாட்டிகள் இருப்பின் அவற்றை காலாந்தர அடிப்படையில் அறிக்கையிடும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது முகாமைத்துவ மட்டக் குழுவின் கூட்டுக் குறிப்புகள், குழுவின் வினைத்திறனையும், போதுமான தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில், IRMC யினால் மீளாய்வு செய்யப்படவில்லை.
	d)	விசேட அளவீட்டு மற்றும் தர அடிப்படையிலான இடர் எல்லைகளுக்கு அப்பால் சென்றுள்ள அனைத்து இடர் குறிகாட்டிகளையும் குழு, மீளாய்வு செய்து கவனத்திற் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது இடர் தேவைக் கட்டமைப்பை அமுல்படுத்துவதன் மூலம், சகிப்பு மட்டங்களுக்கு அப்பால் சென்றுள்ள அனைத்து இடர்களும் மீளாய்வு செய்யப்பட்டன.
	e)	ஒரு காலாண்டில் குறைந்தபட்சம் குழு எத்தனை தடவைகள் சந்தித்துள்ளது?	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு காலாண்டு அடிப்படையில் கூடுவதுடன், 2020 ஆம் நிதியாண்டுக் காலப்பகுதியின் போது BIRMC நான்கு (4) தடவைகள் சந்தித்துள்ளன.
	f)	விசேட இடர்களை இனங்காணத் தவறும் பொறுப்பான அதிகாரிகள் தொடர்பாக, ஒரு விதிமுறையான ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை நடைமுறை ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், குழு அதனை மீளாய்வு செய்தல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது விதிமுறையான ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை இருக்கின்றது. அது, BHRRC என்ற பிரத்தியேகமான சபை உப குழுவினால் கையாளப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் மூன்று (03) ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டன.
	g)	ஒவ்வொரு கூட்டம் நடைபெற்றதை அடுத்து வரும் ஒரு வாரத்திற்குள் குழு, சபையின் கருத்துக்களையும், ஒத்திசைவு /மற்றும் அல்லது விசேட வழிகாட்டிகளைப் பெற்றுக் கொள்வதற்காக குழு இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை சபைக்கு சமர்ப்பிக்கும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழுக்கூட்டம் நடைபெற்றதை உடனடுத்து கூட்டக் குறிப்பு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

கூட்டுறவு ஆளுகை

பிரிவு	கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு	இணக்க மட்டம்
BIRMC வங்கி முழுவதும் இடர் முகாமைத்துவக் கொள்கைகளை வகுக்கும் பணியைக் கொண்டுள்ளது. இக்குழு, இடர் தொடர்பான தகவல்களையும், வங்கியின் இடர் வெளிப்பாடுகளையும் மீளாய்வு செய்வதற்கு ஒவ்வொரு காலாண்டிலும் கூடும். வங்கியின் இடர் தொடர்பான ஒட்டுமொத்த பகுப்பாய்வு அறிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுவதுடன், வங்கியின் மூலதனம், இடர் தேவைப்பாடுகள், இடர் வரையறைகள், அழுத்தப் பரீட்சைகள் மற்றும் வங்கியினால் எதிர்கொள்ளப்படும் ஏதேனும் முக்கியமான இடர்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்படும். மேலும், அத்தகைய அறிக்கைகள், கடன் இடர், சந்தை இடர், திரவ இடர், தொழிற்பாட்டு இடர், தகவல் முறை பாதுகாப்பு இடர் மற்றும் இணக்க இடர் போன்றன முக்கியமான இடர் துறைகள் பற்றி தகவல்களை வழங்கும்.

இடர் தேவை

இடர் தேவைகளையும். சகிப்பு மட்டங்களையும் இனங்காணுவதன் மூலம், வங்கி துரிதமாக வேறுபடுகின்ற மற்றும் ஏற்ற இறக்கங்களுடனான வெளியக சூழலில் ஏற்படுகின்ற திடீர் அதிர்ச்சிகள் மற்றும் மாற்றங்களுடன் எவ்வாறு எதிர்த்து நிற்கும் என்ற தகைமையை மதிப்பிட உதவியளிக்கின்றது.

இடர் தேவை என்பது, வங்கி, வெளிப்படுத்தத் தயாராகவும், விருப்பமாகவும் இருக்கின்ற இடர் மட்டத்தின் அளவு ஆகும். இது விசேடமாக, வங்கியின் மூலோபாய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் தொடர்புபடுகிறது. ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக, அனைத்து வகையான பாரிய இடர்கள் முழுவதும் வங்கி பொறுப்படுக்கத் தயாராக இருக்கின்ற இடர் மட்டத்தை இது இனங்காணுகிறது. வங்கியின் இடர் மட்டத் தேவையைத் தீர்மானிக்கும் போது, நியதிச் சட்டத் தேவைப்பாடுகள், கடன் பெறு ஒப்பந்தங்கள், வங்கியின் தொழிற்பாட்டு எல்லைகள் மற்றும் வெளிப்புற வகைகள் என்பன கருத்திற் கொள்ளப்படுகின்றன. வங்கியின் தெளிவாக வரையறுக்கப்பட்ட கட்டமைப்புக்குள், வங்கி, ஒவ்வொரு இடர் துறைகளின் கீழும் இடர் தேவைகளையும், சகிப்பு மட்டங்களையும் இனங்கண்டுள்ளது. மேலும், வங்கி வெளியகச் சூழலில் ஏற்படுகின்ற அதிர்ச்சிகள் மற்றும் உள்ளகச் சூழலில் இருந்து ஏற்படுகின்ற மாற்றங்கள் என்பவற்றைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியை உறுதிப்படுத்த அழுத்தப் பரீட்சையை மேற்கொள்ளும். இடர் சகிப்பு மட்டத்தின் குறைந்தபட்ச அளவு சமரசம் செய்யப்படுகின்ற அல்லது வங்கியினால் விரும்பத்தகாததாக உள்ள போது, உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் இடர்களைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் அத்தகைய இடர் மட்டங்களை சகிப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்பிற்குள் கொண்டு வருவதற்கு அமுல்படுத்தப்படும்.

இடர் முகாமைத்துவ அறிக்கை

அழுத்தப் பரீட்சை

அழுத்தப் பரீட்சையானது, வங்கியின் வெளிப்பாடு மற்றும் சாத்தியமான, பாதகமான சூழ்நிலைகளில் இருந்து எழக்கூடிய பாதிப்புகளை மதிப்பீடு செய்வதற்கு ஒரு அடிப்படையானதும், முக்கியமானதுமான கருவியாகும். வர்த்தகத்திற்கு முக்கியமாக அமையக்கூடிய, காலாண்டு அடிப்படையில் நடைபெறும் போட்போலியோ சார்ந்த அழுத்தப் பரீட்சைக்கு மேலதிகமாக, அனைத்து பாரிய இடர் துறைகள் மீதும் காலாண்டு அடிப்படையில் அழுத்தப் பரீட்சை நடைபெறும். அத்தகைய அணுகுமுறைகளும், துறைகளும், கடன், திரவத்தன்மை மற்றும் வட்டியைப் பொறுத்துக் கொள்ளும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கும். அழுத்தப் பரீட்சையின் முடிவுகள், இடர் தேவைகள் மற்றும் சகிப்பு மட்டங்களை மீட்டெடுப்பதற்கும், அவற்றின் குறைந்தபட்ச எல்லைகளைச் சீர்திருத்துவதற்குமான ஒரு அளவு கோலாக செயற்படுகிறது. மூலதன போதுமான தன்மையைப் பரீட்சிப்பதற்கு, உள்ளகக் கட்டுப்பாட்டு போதுமான மதிப்பீட்டு செயன்முறையுடன் (ICAAP) இணைந்து கிரமமான அழுத்தப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. அழுத்தப் பரீட்சைகளின் பெறுபேறுகள், விரிவாகப் பதிவு செய்யப்பட்ட, மாறுபட்ட இடர்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுடன் பதிவு செய்யப்படுகிறது. அதனையடுத்து விரிவான அறிக்கை முகாமைத்துவக் குழுக்களுக்கும், சபைக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இடர் விவரணையாக்கம்


இடர் விவரணையாக்கமானது, வங்கியின் உள்ளக மற்றும் வெளியக இடர் சூழலுக்குப் பொருத்தமான இடர்களைத் தணிக்க உதவுகிறது. ஒவ்வொரு இடர் காரணியின் பாதகமான தன்மை மற்றும் அதிர்வெண் ஆகியவற்றை வெளிப்படுத்திய விவரணம் ஒன்று தயாரிக்கப்பட்டு, முகாமைத்துவத்திற்கு வழங்கப்படும். இவ்விவரணம், மேலும், இடர்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்குரிய அவசியமான தூண்டுதல்களையும் எடுத்துக் காட்டும். விவரணையாக்கம் மூலம் வங்கி இடர்களின் முழுமையான பார்வை ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும், அதனை முகாமைத்துவம் செய்யக்கூடிய விளக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

வங்கியுடன் இணைந்துள்ள இடர்களைத் தணிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளில் இடர் விவரணம் ஒவ்வொரு இடர் காரணி பற்றிய ஆபத்தையும், அதிர்வெண்ணையும் எடுத்துக்காட்டும். இது, இடர்களுடன் இணைந்துள்ள விரிவான பார்வை ஒன்றை முகாமைத்துவத்திற்கு வழங்குவதுடன், இடர்களின் முகாமைத்துவம் சிறந்த வகையில் கையாளக்கூடியதாகவும் இருக்கும். இடர் விவரணையாக்கம் ஏற்றுக்கொள்ளல், பரிமாற்றம், தவிர்ப்பு மற்றும் இடர் குறைப்பு ஆகியவற்றில் தெரிவுகளை மேற்கொள்வதன் மூலம், கம்பனி இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டுமொத்த விளக்கத்தை அளிக்கின்றது.

முக்கிய இடர்கள்

வளர்ச்சியடையும் தகைமை மற்றும் நிலையாதார அபிவிருத்தி என்பவற்றைப் பாதிக்கக்கூடிய, சாத்தியமான இடர்களை வங்கி பகுப்பாய்வு செய்து வரையறை செய்துள்ளது. இடர் முகாமைத்துவ மூலோபாயத்தை வகுத்தலிலும், முகாமைத்துவம் செய்வதிலும் இவ்விடர்கள் தூண்களாக அமைந்துள்ளன. மேற்பார்வைகள் மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் முழுமையான இடர் முகாமைத்துவக் கட்டமைப்புடன் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் ஒருங்கிணைக்கப்படுவதோடு, இவ்விடர்கள் அடிக்கடி ஆராயப்படுகின்றன.

வங்கிக் கடன் மற்றும் கடன் போட்போலியோ இடர், திரவ இடர், வட்டி மற்றும் சந்தை இடர், தொழிற்பாட்டு இடர்கள் மற்றும் வங்குரோத்து மற்றும் மூலதனம் மீதான இடர் என்பன முக்கியமான இணைந்த இடர் வகைகளாக இனங்காணப்படுகின்றன. வங்கியின் தொழிற்பாட்டுக் கட்டமைப்புக்கு அமைவாக, முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் மற்றும் முக்கிய இடர் காரணிகள் என்பவற்றுடன் இவ்விடர் துறைகள் இணைக்கப்பட்டுள்ளன.




சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடும் இடர்களின் எல்லையும் முக்கிய உள்ளடக்கமும்.

இடர்	எல்லை
ஒட்டுமொத்த இடர்	உள்ளக மூலதன போதுமான மதிப்பீட்டுச் செயன்முறை மீளாய்வு (ICAAP)
	ஒழுங்குபடுத்தல் மூலதன போதுமான நிலைமையும், வரையறைகளுடன் ஒப்பிடப்பட்ட போக்குகளும்
	ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆலோசனைசார்/உள்ளக வரையறைகள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த இடர் மட்டுப்பாட்டு முறை
	முதன்மையான மற்றும் வளர்ந்து வரும் மூலோபாய மற்றும் ஒட்டுமொத்த இடர் பகுப்பாய்வு மீதான முக்கிய இடர்களின் அழுத்தப் பரீட்சையும், ஒட்டுமொத்த வெளிப்பாடுகளும்
மூலதன இடர்	ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்
	மூலதன போதுமான விகிதத்தை மேற்பார்வை செய்தலும் அறிக்கையிடலும்
கடன் இடர்	முன்னரான கடன் இடர் முகாமைத்துவம்
	ரூபா 1.5 மில்லியனுக்கு மேற்பட்ட அனைத்து கடன்களுக்கான உள்ளகக் கடன் இடர் மதிப்பீடு
	கடன் இடர் கொள்கைகளும் அதிகாரக் கையளிப்பும்
	கடன் இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்தல்
	பணியாட்கள் பயிற்சியும் அறிவுப் பகிர்தலுக்கான அமர்வுகளும்
	கடன் நிர்வாக பிரிவின் கீழ் விநியோக மையப்படுத்தல்
	பின்னரான கடன் இடர் முகாமைத்துவம்
	கடன் மதிப்பீட்டு மாதிரிகளின் கடன் மீளாய்வுப் பொறிமுறை சீராக்கம்
	இடர் தேவை வரையறை மேற்பார்வை
	கண்காணிப்புப் பட்டியலை மீளாய்வு செய்தல்
	இடர் அடிப்படையிலான விலையிடல் பொறிமுறையை அமுல்படுத்துதல்
சந்தை மற்றும் திரவ இடர்	திரவ மற்றும் சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்தலும் புதுப்பித்தலும்
	திரவ மற்றும் திறைசேரி சந்தை இடர் பகுப்பாய்வு இடர் அறிக்கைகள்
	திறைசேரி மத்திய அலுவலகம் மற்றும் ஏதேனும் வரையறைகளை மீளாய்வு செய்தல்
	BASEL III தேவைப்பாடுகள் மீதான திரவ இடர் மீளாய்வு
	ALCO வினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை மீளாய்வு செய்தல்
தொடர்பாட்டு இடர்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் முறைமைகள் பாதுகாப்பு இடர்	வர்த்தக தொடர்ச்சித் திட்டம் மற்றும் பேரழிவு மீட்பு பயிற்சிகள் மீதான அறிக்கைகள், தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்தலும் புதுப்பித்தலும்
	முக்கிய இடர் குறிகாட்டிகளின் அறிக்கை இடர்களை கண்காணித்தல்
	உள்ளக இழப்பு சம்பவங்களையும், வெளியக சம்பவங்களில் இருந்து எழுகின்ற இடர்களையும் பகுப்பாய்வு செய்தல்.
	தகவல் தொழில்நுட்ப முறை இடர்கள், சட்ட இடர்கள், ஆட்கள் இடர்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல்
இணக்க இடர்	விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் வங்கியின் இணக்க அந்தஸ்து
	பொறுப்பெடுக்கப்பட்ட இணக்கப் பரீட்சைகளின் பெறுபேறுகளும், இடர் மட்டங்களின் இணக்க மதிப்பீடுகளும்
	புதிய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் மீதான அறிக்கை
	இணக்கத்துடன் தொடர்புபட்ட கொள்கைகளையும், நடைமுறைகளையும் மீளாய்வு செய்தல்

மூலதன போதுமான தன்மை

உள்ளக ரீதியாக ஈட்டப்பட்ட இலாபம் மற்றும் நிரந்தர அரசாங்க முறி தொகையான ரூபா 250 மில்லியனில் இருந்து பெறப்பட்ட மேலதிக அடுக்கு 1 மூலதனம் என்பவற்றின் ஊடாக முறையே 2019 மற்றும் 2020 களில் குறைந்த ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்தமையோடு தற்போது HDFC வங்கிக்கு நியதிச்சட்ட மூலதன குறைந்தபட்ச தேவைப்பாடாக ரூபா 7.5 பில்லியனை அடைவதற்கு மேலதிகமாக ரூபா 1.5 பில்லியன் தேவைப்படுகிறது. உள்ளக ரீதியாக ஈட்டப்படுகின்ற இலாபங்கள், தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் ஊடாக இத்தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்ய வங்கிக்கு 2022 வரை கால அவகாசம் உள்ளது

2022 வரை வங்கியின் மூலதன உட்செலுத்துகைத் திட்டம்



மூலதனத்தில் இருக்கின்ற இடைவெளியை அடைவதற்கும், துரிதமான வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், பலதரப்பட்ட கோணங்களில் உள்ள இலக்குகளைப் பார்த்து, ஐந்தாண்டு உபாயநுட்பத் திட்டம் ஒன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், குறிப்பிட்ட வளர்ச்சியை அடைவதற்கு வருவாய் வளர்ச்சி மற்றும் இலாப அதிகரிப்பு, சந்தை மற்றும் தயாரிப்பு பன்முகப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இது, அடுத்த வருடத்திற்குள் தேவையான மூலதனத்தை உட்செலுத்த வழிவகுக்கும். வங்கி, 2020 இல் குறைந்த பட்ச தேவைப்பாடான 12.5% ஐ விட சிறந்த மூலதன போதுமான விகிதத்தைப் பேணியது. இது, 20.67% ஆகும். இந்த வெளிப்பாடு, வலுவான CARஐ வங்கி பேணுகின்ற அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுவதுடன், எதிர்வரும் வருடங்களிலும் இந்நிலைமை நிலைத்திருக்கும். BASEL III மூலதனக் கூட்டமைப்பு செயன்முறையின் மேற்பார்வை மீளாய்வை பின்பற்றுவதன் அடிப்படையில் வங்கி உள்ளக மூலதனப் போதுமான மதிப்பீட்டு செயன்முறையை வலுப்படுத்தியுள்ளது. உள்ளக மற்றும் வெளியக அதிர்ச்சிகளை உள்வாங்குவதோடு, இணைந்து ஒவ்வொரு இடரையும் கருத்திற்கொண்டு வங்கியின் மூலதன போதுமான தன்மையை மதிப்பீடு செய்வதற்கு ICAAP பொறிமுறை ஒன்றை வழங்குகிறது.

பணிப்பாளர்களின் அறிக்கை

HDFC வங்கியின் பணிப்பாளர்கள் சபை, 2020 ஆம் ஆண்டின் நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட காலத்திற்கான கணக்காய்வாளர் அறிக்கை ஆகியவற்றுடன், தனது பங்குதாரர்களுக்கு வருடாந்த அறிக்கையை மிகுந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது.

01. பொதுவானவை

என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு பகிரங்க பட்டியல்படுத்தப்பட்ட உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கியாகும். 2019 டிசம்பர் 10 ஆம் திகதி வரை வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் கீழ் செயல்பட்டு, அதன் பின்னர் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, வருடாந்த அறிக்கை 2020 நிதியாண்டை (ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை) உள்ளடக்கியது, மேலும், நியதிச் சட்ட, ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் நடைமுறையில் உள்ள சிறந்த கணக்கியல் நடைமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வருடாந்த அறிக்கை, 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் (திருத்தங்கள்), 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் (பொருந்தும் இடத்தில்), 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல்படுத்தப்பட்ட விதிகள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.

பங்குதாரர்கள் மற்றும் வங்கியின் சிறந்த ஆர்வத்தை உறுதிப்படுத்துகின்ற அனைத்து தேவையான மற்றும் முக்கியமான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன், பொருத்தமான நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டிருப்பதோடு, அவை சபையினால் அங்கீரிக்கப்பட்டுள்ளது.

02. முதன்மைச் செயற்பாடுகள

வங்கியின் ஆணையில் எந்தவொரு மாற்றமுமின்றி வீடமைப்பு மற்றும் வீடமைப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதை வங்கியின் முதன்மை வர்த்தகமாகக் கொண்டுள்ளது. மேலும், வங்கிச் சட்டத்தின் அட்டவணை (iv) இல் தரப்பட்டுள்ள வர்த்தக செயற்பாடுகளில் வங்கி ஈடுபடுகிறது. மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருட காலப்பகுதியின் போது முதன்மை செயற்பாடுகளின் தன்மையில் எவ்விதமான முக்கிய மாற்றங்களும் ஏற்படவில்லை.

03. வர்த்தக மீளாய்வு

வங்கியின் நோக்கு மற்றும் பணி நோக்கு பற்றிய கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் 12 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

தலைவரின் செய்தி (30 முதல் 33 வரையிலான பக்கங்கள்) மற்றும் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு (34 ஆம் பக்கம் முதல் 37 ஆம் பக்கம் வரை) என்பன ஒட்டுமொத்த நிதி நிலைமை, செயலாற்றல், விவகாரங்களின் நிலைமை, மீளாய்வு காலப்பகுதியில் வங்கியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் என்பன பற்றிக் கலந்துரையாடுகின்றன.

04. எதிர்கால முன்னேற்றங்கள்

வங்கியின் எதிர்கால முன்னேற்றங்கள், மேற்கூறிய HDFC சட்டம் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கான அரசின் கொள்கைத் தீர்மானங்களுடன் இணங்கியதாக இருக்கும். மேலதிக விவரங்களுக்கு, தயவுசெய்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைவரின் செய்தி மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வைப் பார்க்கவும்.

05. நிதிக் கூற்றுக்கள்

நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இன்றியமையாத பாகமாகும்.

வங்கியின் நிதிக்கூற்றுக்கள் இந்த ஆண்டறிக்கையின் 152 முதல் 191 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

06. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வுக்குரிய ஆண்டில் பின்பற்றப்பட்ட விசேட கணக்கீட்டுக் கொள்கைகள், ஆண்டறிக்கையின் 157 ஆம் பக்கம் முதல் 166 ஆம் பக்கம் வரையில் தரப்பட்டுள்ளன. பங்குரிமை மாற்றங்களில் ஏற்பட்ட தாக்கம், வருடாந்த அறிக்கையில் 156வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

07. கணக்காய்வாளர்களின் அறிக்கை

HDFC வங்கியின் கணக்காய்வாளராகிய இலங்கைக் கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் மீளாய்வுக்குரிய ஆண்டில் HDFC வங்கியின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்துள்ளதுடன், குறித்த கணக்காய்வாளரின் அறிக்கையானது ஆண்டறிக்கையின் 145 முதல் 151 வரையிலான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

08. நிறுவனத் தொடர்ச்சி

HDFC வங்கியானது, எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகளைத் தொடருவதற்குப் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது. ஆகவே, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

09. வருமானம்

2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வருமானமானது, ரூபா 7,856 மில்லியன்களாகும். வருமானத்தின் பகுப்பாய்வு ஒன்று நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் 1 தொடக்கம் 2 மற்றும் 5 தொடக்கம் 7 வரை தரப்பட்டுள்ளன.

10. இலாபமும் ஒதுக்கீடும்

2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வருமானத்திற்கு முன்னரான இலாபம், வரி மற்றும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கை வரி என்பன ரூபா 1,381 மில்லியனாகும். அத்துடன், 2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபமானது ரூபா 708 மில்லியன்களாகும்.

2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	2019 ரூபா மில்.	2020 ரூபா மில்.
நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி, சேர்பெறுமதி வரி, DRL மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி	470	313
வரிக்கான ஏற்பாடு	299	360
வரிக்குப் பின்னரான சாதாரண நடவடிக்கைகள் மீதான இலாபம்	476	708
தக்க வைக்கப்பட்ட இலாபம் (திரண்ட நட்டங்கள்) மு.கொ.செ	3,275	3,680
ஒதுக்கீட்டிற்குள்ள இலாபம்	476	708
முன்மொழியப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதிப் பங்குலாபத்திற்கான ஒதுக்கம்	-	16
ஒதுக்க நிதிகளுக்கு மாற்றுதல்	71	106
முன்கொண்டு செல்லப்பட்ட தக்க வைக்கப்பட்ட இலாபம்	3,680	4,266

11. ஒதுக்கங்கள்

2020 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு மொத்த ஒதுக்கங்கள் ரூபா 4,820 மில்லியன்களாகும். இது தொடர்பான விபரங்கள் நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பு 35 தொடக்கம் 37 வரை தரப்பட்டுள்ளது.

12. நன்கொடைகள்

மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கி எந்தவொரு நன்கொடையையும் வழங்கியிருக்கவில்லை.

13. நியதிச் சட்டரீதியான கொடுப்பனவுகள்

அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில், அரசாங்கம் மற்றும் ஊழியர்கள் தொடர்பான சட்டரீதியான கொடுப்பனவுகளும், உரிய திகதிக்கு முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர்.

14. வரிக்கான ஏற்பாடு

வங்கியின் செயற்பாடுகளிலிருந்து எழும் வரி, செலுத்த வேண்டிய வருமானத்தில் 28மூ வருமான வரியாக 2020 ஆம் ஆண்டிற்கு ஏற்பாடு செய்துள்ளதுடன், ஆண்டறிக்கையின் 171 பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 13 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

15. பங்குலாபம்

2020 ஆம் ஆண்டுக்கு ஒரு பங்கிற்கு பங்குலாபக் கொடுப்பனவாக இருபத்தைந்து சதத்தை (ரூபா 0.25) (இறுதி) பணிப்பாளர்கள் பரிந்துரை செய்வதுடன், (கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெறப்படுகின்ற நொடிப்பில்லா நிலை சான்றிதழுக்கு அமைவாக) வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குலாபக் கொடுப்பனவுக்கான பங்குதாரர்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமெனவும் பரிந்துரை செய்கின்றனர். பங்குலாபத்திற்குரிய செலவு (சுமார்) ரூபா 16,178 மில்லியன் ஆகும்.

16. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், இறையற்ற சொத்து

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான மூலதனச் செலவு ரூபா 55 மில்லியனாக இருப்பதோடு, இது தொடர்பான விபரங்கள் 176-178 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 20 இல் தரப்பட்டுள்ளது.

17. இறையற்ற சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

இறையற்ற சொத்துக்களின் சந்தைப் பெறுமதி தொடர்பான விபரங்கள் 178வது பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20.2 இல் தரப்பட்டுள்ளது.

18. நிதி நிலைமைக் கூற்று திகதிக்குப் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்களை தேவைப்படுத்துகின்ற எவ்விதமான முக்கிய நிகழ்வுகளும் நிதிநிலைக் கூற்று திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

19. வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வங்கியின் வெளிப்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா 962 பில்லியன்களாவதுடன், இது 64,710,520 சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது.

20. பங்குகள் தொடர்பான தகவல்களும் தொகுதிக்கடன்களும

பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்கள் தொடர்பான விபரங்கள், இவ்வறிக்கையின் 198 முதல் 200 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

21. சகல பங்குதாரர்களையும் நியாயமாக நடத்துதல்

சகல பங்குதாரர்களுக்கும் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நியதிகளுக்கு அமைவாக, அவர்கள் நியாயமாக நடத்தப்பட்டுள்ளனர்.

22. பணிப்பாளர் சபை

நடப்பு பணிப்பாளர் சபையின் முழு அட்டவணையையும், அவர்களின் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய விபரங்களுக்காக 38 தொடக்கம் 47 வரையான பக்கங்களில் உள்ள பணிப்பாளர் சபையின் பொருத்தமான அத்தியாயத்தைப் பார்க்க.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நியமனங்களும் இராஜினாமாக்களும்.

இல.	பெயர்	மீளாய்வுக் காலப்பகுதியிலான நியமனங்கள்	மீளாய்வுக் காலப்பகுதியிலான இராஜினாமாக்கள
01.	திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க	02.01.2020 (சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்)	-
02.	திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார	11/03/2020	-
03.	திரு. எல். ஈ. சுசந்த சில்வா	10/08/2020	-
04.	சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா	10/08/2020	-

பணிப்பாளர்களின் அறிக்கை

இல.	பெயர்	மீளாய்வுக் காலப்பகுதியிலான நியமனங்கள்	மீளாய்வுக் காலப்பகுதியிலான இராஜினாமாக்கள
05.	திரு. டீ. எம். ஏ. கே. திசாநாயக்க	10/08/2020	-
06.	திரு. டீ.எம்.எஸ். அபயகுணவர்தன	11/02/2020	14/08/2020
07.	திருமதி என். ஆர். அனீஸ்	-	06/01/2020
08.	திரு. ரொஹான் டி சில்வா	-	01/03/2020
09.	திரு. என். விஜயநாதன்	-	29/06/2020
10.	திருமதி ஆர்.ஏ. சூலானந்த	-	13/08/2020

23. சபை உப குழுக்கள்

இலங்கை மத்திய வங்கி, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றின் கூட்டுறவு ஆளுகை வழிகாட்டல்களில் கூறப்பட்டவாறு, குறித்த உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி உப குழுக்களினது உறுப்பாண்மை, கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் செயலாற்றலானது, ஆண்டறிக்கையின் 134 முதல் 141 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

24. பணிப்பாளர் கூட்டங்கள்

91வது பக்கத்திலுள்ள சபை மற்றும் சபை உப குழுக்களின் கூட்டங்களுக்கான சமூகமளிப்பு பகுதியைப் பார்க்க.

25. நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர் பொறுப்பு

பங்குதாரர்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய ஒப்பந்தம் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை ஒன்று இல்லை என்பதை பணிப்பாளர்கள் வெளிப்படுத்தியமைக்கு மேலதிகமாக, பணிப்பாளர்களின் அக்கறை பற்றி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேவையான பிரகடனங்கள் 190வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் தமக்கு அக்கறையுள்ள கலந்துரையாடல்களில் அல்லது அங்கீகாரம் அளிக்கும் செயன்முறையில் பங்குபற்றுவதில் அல்லது அத்தகைய விடயங்கள் அல்லது ஒப்பந்தங்களுக்கு வாக்களிப்பதில் இருந்து தவிர்த்திருக்கின்றனர்.

பணிப்பாளர்கள் தமக்கு அக்கறையுள்ள ஏதேனும் வியடங்களில் (ஏதேனும் இருப்பின்) வாக்களிப்பதில் இருந்து தவிர்த்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருந்தனர்.

26. பணிப்பாளரின் அக்கறை

பங்குதாரர்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய ஒப்பந்தம் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை ஒன்று இல்லை என்பதை பணிப்பாளர்கள் வெளிப்படுத்தியமைக்கு மேலதிகமாக, பணிப்பாளர்களின் அக்கறை பற்றி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேவையான பிரகடனங்கள் 190வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் தமக்கு அக்கறையுள்ள கலந்துரையாடல்களில் அல்லது அங்கீகாரம் அளிக்கும் செயன்முறையில் பங்குபற்றுவதில் அல்லது அத்தகைய விடயங்கள் அல்லது ஒப்பந்தங்களுக்கு வாக்களிப்பதில் இருந்து தவிர்த்திருக்கின்றனர்.

27. பங்காண்மை மீதான பணிப்பாளர்களின் அக்கறை

பணிப்பாளர்களின் பங்காண்மைகள் பின்வருமாறு:

	31/12/2020	01/01/2020
திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க	இல்லை	இல்லை
சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன	1,000	1,000
கலாநிதி எஸ்.என்.மொராயஸ்	1,000	1,000
திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார	இல்லை	இல்லை
திரு. எல். ஈ. சுசந்த சில்வா	1,000	இல்லை
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா	1,000	இல்லை
திரு. டீ.எம்.ஏ.கே. தசநாயக்க	இல்லை	இல்லை
மொத்தம்	4,000	2,000

28. தொகுதிக்கடன் மீதான பணிப்பாளர்களின் அக்கறைகள்

பணிப்பாளர்கள் கொண்டுள்ள தனிப்பட்ட தொகுதிக்கடன்களின் விபரங்கள் பின்வருமாறு:

2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2020	
	தொகுதிக் கடன்களின் எண்ணிக்கை	ஏயடரந (சுள.)
திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க	இல்லை	இல்லை
சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன	இல்லை	இல்லை
கலாநிதி எஸ்.என்.மொராயஸ்	இல்லை	இல்லை
திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார	இல்லை	இல்லை
திரு. எல். ஈ. சுசந்த சில்வா	இல்லை	இல்லை
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா	இல்லை	இல்லை
திரு. டீ.எம்.ஏ.கே. தசநாயக்க	இல்லை	இல்லை
மொத்தம்		

29. தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள்

தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீதான இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் விதிகளுடன் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வங்கி இணங்கி நடந்துள்ளது என்பதை சபை பிரகடனப்படுத்த விரும்புகிறது. தொடர்புடைய முக்கியமான திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளின் விபரங்கள் வருடாந்த அறிக்கையின் 190வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

30. பணிப்பாளர்களின் ஊதியம்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் ஊதியமானது, 170 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 11 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

31. சூழல் பாதுகாப்பு

பணிப்பாளர் சபையின் அறிவுக்கெட்டிய வகையில், வங்கியானது பொருத்தமான சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடந்துள்ளது. அத்துடன், வங்கி சுற்றாடலுக்கு தீங்கு அல்லது அபாத்தை ஏற்படுத்தும் எவ்விதமான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

32. இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளும்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, வங்கியின் இடர் திணைக்களம் மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) மற்றும் சபை ஆகியன, இடர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய, பொருத்தமான முன்னெடுப்புகளை மேற்கொண்டன. 119 தொடக்கம் 123 வரையான பக்கங்களில் இடர் மதிப்பீட்டு அறிக்கையைப் பார்க்கலாம்.

மேலும், மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, சபை கணக்காய்வுக் குழு (BAC), உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை கிரமமாக மீளாய்வு செய்தது. IRMC மற்றும் BAC என்பன, தமது கூட்டக் குறிப்புகளை சபைக்கு நேரடியாக சமர்ப்பிக்கும்.

139வது பக்கத்திலுள்ள சபை கணக்காய்வுக் குழு அறிக்கையையும், 130 தொடக்கம் 131 வரையுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையையும் தயவு செய்து பார்க்க.

33. கூட்டுறவு ஆளுகை

ஊரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டல்களை 4,400 (SLSRS) இன் கீழ் கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட "உண்மை கண்டறிதல்கள் அறிக்கை"களுடன் கூடிய 89 முதல் 118 வரையிலான பக்கங்களிலுள்ள கூட்டுநிறுவன ஆளுகை அறிக்கையைத் தயவு செய்து பார்க்கவும்.

34. ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல்

இடர் முகாமைத்துவ ஒழுங்கு விதியை (IRMC), ஆளும் சட்டங்கள் தொடர்பான வங்கியின் இணக்க அந்தஸ்தை வங்கியின் இணக்க அதிகாரி நேரடியாக IRMC க்கு அறிக்கையிடுவார். பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கெட்டிய வகையில், எந்தவொரு அதிகார வரம்பிலும் நேரடி அல்லது மறைமுகமாக சட்டங்கள் அல்லது விதிமுறைகளை மீறவில்லை என்பதையும் வங்கியின் முக்கியமான நிதி விளைவை ஏற்படுத்தக்கூடிய பணிப்பாளர்களின் முகாமைத்துவதை தலையிட்டுள்ள எவ்விதமான முறைகேடுகளும் இல்லை என்பதையும் வெளிப்படுத்த வங்கி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க HDFC சட்டம் (திருத்தங்கள்), 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம், வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் தீர்மானங்கள், 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயச் சட்டம், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தராதரங்கள் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குவதற்கான சமவாயச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல்படுத்துவதற்கான விதிகள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் ஆணைக்குழுச் சட்டம், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் மற்றும் அத்தகைய நியதிச் சட்டங்களுக்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக, வங்கிக்கு ஏற்புடைய நிதிச் சட்ட ஏற்பாடுகளில் இருந்து எழுகின்ற ஒழுங்குபடுத்தல் மற்றும் விவேகமான ஏற்பாடுகள் அனைத்துடனும் இணங்கி நடந்துள்ளது.

35. கணக்காய்வாளர்களின் நியமனம்

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க HDFC சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறும், இலங்கை அரசியலமைப்புக்கு அமைவாகவும், வங்கியின் கணக்காய்வாளராக தொடர்ந்தும் கணக்காய்வாளர் நாயகமே இருப்பார்.

36. கணக்காய்வாளர் ஊதியமும் வங்கியுடன் உள்ள ஒப்பந்தத்தின் மீதான அக்கறையும்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் வங்கியினால் கணக்காய்வாளர்களுக்கு ரூபா 2.2 மில்லியன் கணக்காய்வுக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளருக்கு வங்கியுடன் எந்தவிதமான உறவுகளோ அல்லது வங்கியுடனான ஒப்பந்தில் எவ்விதமான அக்கறையும் கிடையாது.

பணிப்பாளர்களின் அறிவுக்கு எட்டிய வகையில், மேலே வெளிப்படுத்தப்பட்டவைக்கு மேலதிகமாக, கணக்காய்வாளர்களுக்கு வங்கியுடன் எவ்விதமான உறவுகளோ அல்லது அக்கறையோ கிடையாது.


37. கணக்காய்வுக் குழு

இந்த ஆண்டறிக்கையின் 139 ஆம் பக்கத்தில் கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கமும், அவர்களது அறிக்கையும் தரப்பட்டுள்ளன.

38. கூட்ட அறிவிப்பு

வங்கியின் 36 வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க HDFC சட்டத்தின் 35 ஆம் பிரிவின்படி, 2020 ஆம் நிதியாண்டு முடிவடைந்து 9 மாதங்களுக்குள் நடைபெறுவதுடன், பங்குதாரர்களுக்கு உரிய நேரத்தில் கூட்டம் சம்பந்தமான அறிவிப்பு வழங்கப்படும்.

பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கிணங்க கையொப்பமிடப்பட்டுள்ளது.



திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர்



திருமதி கே டி டி டீ சில்வா
நிறுவனத்தின் செயலாளர்

21 மே 2021

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று

பொறுப்பு

இவ்வறிக்கையானது, 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டிகளுக்கு அமைவாக 3(8)(ii)(ஆ) விலுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு மீதான இவ்வறிக்கையை பணிப்பாளர் சபை சமர்ப்பிக்கிறது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி பிஎல்சி (வங்கி) யின் போதுமான மற்றும் வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை ஒன்று இருப்பதற்கு பணிப்பாளர் சபை (சபை) பொறுப்புடையது. அத்தகைய போதுமான தன்மை மற்றும் வினைத்திறனைக் கவனத்திற் கொள்கையில், சபை வங்கியின் வர்த்தகம் முகாமைத்துவம் செய்யக்கூடிய அடிப்படையில் இடருடன் வெகுமதி சமப்படுத்தப்படல் வேண்டும் என்பதை அங்கீகரிப்பதன் காரணமாக, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பிரதானமாக வங்கியினுடைய இடர் தேவைப்பாட்டை உள்ளடக்கியிருக்கின்ற குறிகாட்டிகள் மற்றும் இடர் வரையறைகளில் இருந்து ஏற்படக்கூடிய ஏதேனும் விலகல்கள் என்பவற்றை எடுத்துக்காட்டக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், உள்ளகக் கட்டுப்பாட்டு முறை, நியாயமான ஆயின் முழுமையற்ற முக்கியமான நிதித் தகல்வகள் தொடர்பான பிறள் கூற்றுக்கு எதிரான மற்றும் பதிவுகள் அல்லது நிதி நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கு எதிரான உறுதிப்பாட்டை மாத்திரம் தரும்.

சபையானது வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற குறிப்பிடத்தக்க இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தலுக்கான தொடர்ந்து செல்லும் செயன்முறையொன்றை உருவாக்கியுள்ளது. அத்துடன், இச்செயன்முறை, வர்த்தக சூழல் அல்லது ஒழுங்குபடுத்தல் ஒழுங்கு விதிகளுக்கு எங்கு, எப்போது மாற்றங்கள் ஏற்படுகிறதோ அவ்வகையில் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்துவதை உள்ளடக்கும். இந்தச் செயன்முறை, இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான 'வங்கி பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்' என்பதற்கு அமைவாக, சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகிறது. இந்த வழிகாட்டியில் தரப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மதிப்பீடு செய்தல் தொடர்பான கணக்கியல் எண்ணக்கருக்களை கருத்திற் கொண்டு, நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டை சபை மதிப்பீடு செய்துள்ளது.

நிதி அறிக்கையிடலின் உண்மைத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டைத் தருகின்ற வலுவான மற்றும் போதுமான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் அமைந்துள்ளன என சபை கருதுகிறது. அத்துடன், வெளியக நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள், பொருத்தமான கணக்கியல் எண்ணக்கருக்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக இருக்கின்றன.

வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்களை இனங்காணுவதன் மூலமும், மதிப்பிடுவதன் மூலமும் முகாமைத்துவம் சபையின் இடர் மீதான கொள்கைகளையும், நடைமுறைகளையும் அமுல்படுத்துவதற்கு உதவுகின்றது. மேலும், இத்தகைய இடர்களைக் கட்டுப்படுத்தவும், தணிக்கவும் கூடிய பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், செயற்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றிலும் முகாமைத்துவம் உதவுகிறது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை பிரயோகிப்பதிலும், மீளாய்வு செய்வதிலும் கைக்கொள்ளப்பட்ட செயன்முறையின் முக்கியமான அம்சங்கள்.

நிதி அறிக்கையிடல் தொடர்பில் இருக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் போதுமான தன்மையையும், நேர்மைத்திறனையும் மீளாய்வு செய்வதில் உருவாக்கப்பட்ட முக்கியமான செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- வங்கியின் நாளாந்த செயற்பாடுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு, சபைக்கு உதவக்கூடிய வகையில் பல்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன், வங்கி செயற்பாடுகள், கூட்டுறவு இலக்குகள் மற்றும் உபாய நுட்பங்களுக்கு அமைவாக இருப்பதுடன், வருடாந்த வரவு செலவுத் திட்டம், கொள்கைகள் மற்றும் வர்த்தக வழிகாட்டிகள் என்பன அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், அதன் கணக்காய்வுச் செயன்முறையின் போது, உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் நடைமுறைகளும், வினைத்திறனும், கொள்கைகளுடன் இணங்கிச் செல்கின்றதா என்பதைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் பரீட்சிக்கும். சபை கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் அடிப்படையில், அனைத்துக் கிளைகளிலும் மற்றும் திணைக்களங்களிலும் கணக்காய்வு நடைபெறும். கணக்காய்வுக் குழு பூர்த்தி செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வுக் கண்டறிதல்களை மீளாய்வு செய்வதுடன், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை தொடர்பான மதிப்பீட்டையும் மீளாய்வு செய்யும். மேலும், குழு, அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் போதுமான காப்பு எல்லை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் மீதான புதுப்பித்தல்கள் மற்றும் கணக்காய்வுத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் என்பனவற்றை மீளாய்வு செய்யும். அத்துடன், திருப்திகரமற்ற கணக்காய்வுகள் மீது விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன், இக்குறைபாடுகளை நிவர்த்திக்கக்கூடிய செயற்திட்டங்களையும், அமுல்படுத்துகை தொடர்பான நிலைமையையும் மீளாய்வு செய்யும்.
- சபை கணக்காய்வுக் குழு, வெளியகக் கணக்காய்வாளர் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகள், முகாமைத்துவம், என்பனவற்றினால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளையும் மீளாய்வு செய்யும். மேலும், இக்குழு இடர் முகாமைத்துவ மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளைப் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனையும் மதிப்பீடு செய்யும். அத்துடன், இடர் மதிப்பீடு, கணக்காய்வுகளின் எல்லை மற்றும் உள்ளக கணக்காய்வுகளின் தரம் என்பனவற்றுக்கு விசேட கவனம் அளித்து இக்குழு உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மீளாய்வு செய்யும். சபை கணக்காய்வுக் குழுவின் கூட்டக் குறிப்புகள், காலாந்தர அடிப்படையில் வங்கி பணிப்பாளர் சபை கூட்டங்களில் முன்வைக்கப்படும். வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்கள் 139வது பக்கத்திலுள்ள 'சபை கணக்காய்வுக் குழு அறிக்கை' யில் தரப்பட்டுள்ளது.

- நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மதிப்பிடும் போது, வங்கியினால் இனங்காணப்பட்ட அதிகாரிகள், முக்கியமான கணக்குகள் மற்றும் வங்கியின் நிதி நிலைமை தொடர்பான வெளிப்படுத்தல்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட அனைத்து நடைமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் ஒன்று சேர்த்துள்ளனர். இவை அனைத்தும் வடிவமைப்பின் பொருத்தமான தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றுக்காக உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தினால் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் அவதானிக்கப்பட்டு, பரீட்சிக்கப்படுகின்றது. இவ்வருடத்தின் போது, நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக வெளியகக் கணக்காய்வாளர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்களும், பரிந்துரைகளும் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மேலும் வலுப்படுத்துவதில் கருத்திற் கொள்ளப்படும்.
- சபை, 'நிதிக்கருவிகள்' மீதான இலங்கை கணக்கியல் நியமம் SLFRS 9 உடைய தேவைப்பாடுகளை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டது. தேவைப்படுத்தப்பட்ட மாதிரிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், செயன்முறைகளும், கட்டுப்பாடுகளும் வடிவமைக்கப்பட்டன. சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் உள்ளடங்கலாக, அனைத்து பங்குதாரர்களுக்கும் போதுமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன. சபை இந்தச் செயன்முறைகளையும், முகாமைத்துவத் தகவல்களுடன் சூழ்ந்துள்ள கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து வலுப்படுத்துவதுடன், இடர் முகாமைத்துவம் தொடர்பான SLFRS 9 மற்றும் நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள் என்பவற்றுக்கு அமைவாக சரிபார்த்தல் மற்றும் இணக்கம் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்.
- 2020 இல் நிதி அறிக்கையிடலில் வட்டி வருமானம் மற்றும் வலுக்குறைப்பு ஏற்பாடுகள் மீதான COVID-19 கடன் தவணை உரிமையுடைய தாக்கம் சரியான முறையில் வெளிப்படுத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்கு வங்கி அதன் உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை மேலும் வலுப்படுத்தியது. அத்துடன், முடக்கல் காலப்பகுதிகளின் போது, எவ்விதமான இடையூறுகளும் இன்றி அனைத்து முக்கியமான மீள் இணக்கங்களும் நிறைவேற்றப்பட்டன என்பதை முகாமைத்துவம் உறுதி செய்தது.

உறுதிப்படுத்தல்

மேற்படி செய்முறையின் அடிப்படையில், பணிப்பாளர் சபையானது, வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வெளிவாரி நோக்கங்களுக்கு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கமைத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றது.

வெளிவாரிக் கணக்காய்வாளர் கூற்றின் மீதான மீளாய்வு

2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான மேலே தரப்பட்ட பணிப்பாளர்களின் கூற்று, வெளியக கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் நாயகத்தினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன், அவர்கள் வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டினுடைய வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்கு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகள் அவர்களின் புரிந்து கொள்ளல்களுக்கு அமைவாக தரப்பட்டுள்ள கூற்றுக்களுடன் முரண்பாட்டைக் கொண்டிருக்கக் கூடிய எவ்விடயமும் தமது கவனத்திற்கு வரவில்லை என சபைக்கு அறிவித்துள்ளனர். உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான அவர்களின் சுயாதீனமான உத்தரவாத அறிக்கை, இவ்வறிக்கையின் 30 தொடக்கம் 31 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபை கட்டளைக்கு இணங்க

திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர்
2021 மே 21

சிரேஷ்ட பேராசிரியர் கே.டி.குணவர்தன
கணக்காளாய்வுக் குழுத் தலைவர
2021 மே 21

திரு பாலித கமகே
பிரதம நிறைவேற்று அதிகாரி
2021 மே 21

கொழும்பு

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/ 01/C/HDFC/1/20/25

මඟෙ අංකය / உமது இல. / Your No.

RECEIVED 19 MAY 2021 HDFC / CHMD

දිනය / திகதி / Date 10 May 2021

தலைவர்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான கணக்காய்வாளர் தலைமை நாயகத்தின் உத்தரவாத அறிக்கை

அறிமுகம்

இவ்வறிக்கையானது, 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடந்த ஆண்டிற்குரிய இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி அறிக்கையிடல் ("கூற்று") மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக உத்தரவாத அறிக்கையைத் தருகிறது.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் வழிகாட்டல் இல. 12 இன் 3(8)(ii)(ஆ) இற்கிணங்க, வெளியிடப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக, வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்களுக்கு" இணங்க, கூற்றினைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருக்கும்.

இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமம் (SLSAE) 3050 மீதான எனது பொறுப்பும் இணக்கமும்

புரியப்பட்ட பணி தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையொன்றை வழங்குவது எனது பொறுப்பாகும். நான் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட, இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமம் (SLSAE) 3050 - உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கைக்கிணங்க எனது ஈடுபாட்டை நான் மேற்கொண்டுள்ளேன்.

புரியப்பட்ட பணி தொடர்பான சுருக்கம்

கூற்றானது, தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் அல்லது பணிப்பாளர்கள் சார்பாக ஆதரிக்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதுடன், வங்கியின் நிதி அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாடு மீதான முறைமையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய முறைமை சரியாகப் பிரதிபலிக்கப்படுகின்றதா என்பதையும் மதிப்பீடு செய்வதற்காக நான் எனது ஈடுபாட்டை மேற்கொண்டுள்ளேன்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் முதன்மையாக வங்கி ஊழியர்களின் விசாரணைகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயல்முறையின் மாதிரி அடிப்படையிலான ஆவணங்களின் இருப்பு ஆகியவற்றுக்கு வரையறுக்கப்பட்டன.

இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமமானது (SLSAE) 3050 கூற்றுக்கள் சகல இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றனவா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை. இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமமானது (SLSAE) 3050 ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு குறிப்பிடத்தக்க பிரச்சினைக்கும் உண்மையில் தீர்வைக் கொண்டு வருவதற்கான முக்கிய உள்ளகக் கட்டுபாட்டு அம்சம் பற்றி செயன்முறைகளில் விபரிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவுமில்லை.

என்னுடைய தீர்ப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் வங்கியின் தன்மை தொடர்பாக என்னுடைய புரிதல், தயாரிக்கப்பட்ட கூற்று, தொடர்பாக உள்ள நிகழ்வு அல்லது பரிவர்த்தனையுடன் தொடர்புபடுகிறது. என்னுடைய முடிவுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய என்னால் பெறப்பட்ட சான்றுகள் போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

முடிவு

புரியப்பட்ட செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது, வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுபாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்காக பணிப்பாளர் சபை பின்பற்றிய செயன்முறை தொடர்பான எனது புரிதலின்படி, எத்தகைய முரண்பாடுகளையும் தோற்றுவிக்கும் எந்தவொரு விடயமும் என்னால் அவதானிக்கப்படவில்லை.

டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAF/ 01/C/HDFC/1/20/25

මඔබ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 10 May 2021

RECEIVED
19 MAY 2021
HDFC / CHMD

தலைவர்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர் சபைக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டறவு ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு மீதான உண்மையைக் கண்டறிதல் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2020 டிசம்பர் 31

இலங்கை மத்திய வங்கியினால் (இமவ) வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக, பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆளுகை அறிக்கையின் பிரகாரம், இவ்வறிக்கையின் இணைப்பு - 01 இல் குறித்துரைக்கப்பட்டவாறு சென்முறைகளை நான் மேற்கொண்டுள்ளேன். இச்செயற்பாடானது, தொடர்புடைய சேவைகளுக்கான இலங்கை நியமம் 4400 (SLSRS 4400) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணக்கருக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி செயற்பாட்டைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக மாத்திரமே இந்நடைமுறைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வறிக்கையின் இணைப்பு - 01 இல் எனது கண்டறிதல்களை நான் அறிக்கையிடுகின்றேன்.

ஏனெனில், மேற்படி செயன்முறைகளானவை, இலங்கை கணக்காய்வு நியமங்கள் அல்லது மீளாய்வுச் செயற்பாடுகள் மீதான இலங்கை நியமங்களின் பிரகாரம், ஒரு கணக்காய்வு அல்லது மீளாய்வினை உள்ளடக்கவில்லை. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு மீதான எனது உத்தரவாதத்தினை நான் வெளிப்படுத்தவில்லை.

நான் மேலதிக செயன்முறைகளை அல்லது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் அல்லது மீளாய்வுச் செயற்பாடுகள் மீதான இலங்கை நியமங்களின் பிரகாரம், ஆளுகை அறிக்கை மீது ஒரு கணக்காய்வு அல்லது மீளாய்வினை மேற்கொண்டிருப்பின் அல்லது, தங்களுக்கு அறிக்கையிட வேண்டுமென எனது அவதானத்திற்குட்பட்ட ஏனைய விடயங்கள் இருப்பின் அவற்றைத் தங்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பேன்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

எனது அறிக்கையானது, முற்றிலும் இவ்வறிக்கையின் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காவும், தங்களுக்கு தகவல் வழங்குவதற்குமானதாவதுடன், இது வேறேதேனும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவோ அல்லது வேறு எவரேனும் தரப்பினருக்கு விநியோகிக்கப்படவோ ஆகாது.

இவ்வறிக்கையானது, மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் மாத்திரம் தொடர்புபட்டதுடன், முழுமையாக இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் (HDFC) எந்தவொரு நிதிக் கூற்றுக்களுக்கும் விரிவுபடுத்தப்படலாகாது.

டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

சபை உப குழுக்களின் அறிக்கை

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

உள்ளடக்கமும் கூட்டங்களும்

இக்குழு பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும். குழு உறுப்பினர்கள் மனித வளம், நிதி போன்ற துறைகளில் அனுபவத்தையும், அறிவையும் கொண்டுள்ளனர்.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் குழு நான்கு முறை (04) கூடியது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர்கள், மனித வள மற்றும் ஊதியங்கள் குழுவில் பணியாற்றி வருகின்றனர் ∴ பணியாற்றியுள்ளனர்.

2020 இல் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களும் அவர்களுடைய சமூகமளித்தல் தொடர்பான விபரங்களும்:

பணிப்பாளர்	காலப்பகுதி (குழுவில்)	சமூகமளிப்பதற்கான தகுதி	சமூகம்
திருமதி ஆர்.எம். ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க - குழுவின் தலைவர் (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	2020 ஜனவரி 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	4	4
சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	2019 ஜூலை 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	4	4
திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	3	3
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	3	3
திருமதி ஆர்.ஏ. சூலானந்த (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	2019 செப்டம்பர் 26 ஆம் திகதி நியமிக்கப்பட்டு, 2020 ஆகஸ்ட 13 இல் ஓய்வு பெற்றார்.	1	1
திரு. எல். ஈ. சுசந்த சில்வா (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	1	1
கலாநிதி எஸ்.என். மொராயஸ் (நிருவாகம் சாராத, சுயாதீன பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	1	1

பணிப்பாளர்களின் சுய விபரங்களின் சுருக்கம் 40 தொடக்கம் 47 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

அழைப்பின் பேரில் கிரமமாக பங்குபற்றியவர்கள்

பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்பான அதிகாரியாவார். அத்துடன், பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்புபட்ட விடயங்கள் குழுவில் ஆராயப்படும் சந்தர்ப்பங்கள் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி அனைத்துக் கூட்டங்களிலும் பங்குபற்ற வேண்டும்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் குழுவின் செயலாளராகவும் பணியாற்றுவார். மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு ஏற்றுக்கொண்ட குறிப்பு விதிகளுக்கு அமைய பணி புரிவதுடன், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை ஆகிய எண்ணக்கருக்களுடன் கடமையாற்ற வேண்டும். மேலும், ஊதியக் கட்டமைப்புகள் சமத்துவ அடிப்படையில் உள்ளது என்பதையும், கைத்தொழில், வங்கியின் செயற்திறன் மற்றும் வங்கி மற்றும் அதன் பங்குதாரர்களின் நீண்டகால அக்கறைகளுடன் இணங்கிச் செல்ல வேண்டும்.

கொள்கை

BHRRC வங்கியின் வினைத்திறனான மனித வள முகாமைத்துவத்திற்கான மனித வளங்களையும், ஊதியக் கொள்கைகளையும் உருவாக்குவதோடு, அதற்குரிய உபாய நுட்பங்களை வகுத்தல் வேண்டும்.

இதற்கமைய, பின்வரும் விடயங்களுக்கு மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு பொறுப்புடையது.

01. பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தொடர்பான ஊதியக் கொள்கையை (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானித்தல் வேண்டும்.
02. குழு, பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கான இலக்குகளையும், அடைவு எல்லைகளையும் வகுத்தல் வேண்டும்.
03. இங்கு குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் அடைவு எல்லைகளுக்கு எதிராக பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் செயற்திறனை குழு காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்வதுடன், அதன் அடிப்படையில் ஊதியங்கள், அனுகூலங்கள் மற்றும் செயற்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பனவற்றைத் திருத்த வேண்டும்.
04. பதவி நிலை தலைப்புகளை மாற்ற வேண்டும்.
05. வங்கியின் பணியாட்கள் அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளிலும், கடல் கடந்த செயலமர்வுகளிலும் பங்குபற்ற வேண்டும்.
06. பணியாட்களின் சேவை நீடிப்பு
07. ஒழுக்காற்று விடயங்கள் மீது தீர்மானம் மேற்கொள்ளுதல் / அல்லது மேன்முறையீடுகளைத் தீர்மானத்தல் (வங்கியின் ஒழுக்காற்றுக் கோவையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டால்)
08. பணியாட்களின் ஏதேனும் குறைகள் தொடர்பான மேன்முறையீடுகளைத் தீர்மானித்தல்.
09. முகாமைத்துவ அதிகார மட்டத்திற்கு அப்பாற்பட்ட அனைத்து பணியாட்களுடன் தொடர்புபட்ட விடயங்கள் (சபை அதிகாரத்தின் கீழ் உள்ள குறிப்பிட்ட விடயங்கள் தவிர)
10. குழுவுக்குப் பொருத்தமான குறிப்பு விதிகளை உருவாக்குதலும் மீளாய்வு செய்தலும் / திருத்துதலும்.

சபைக்குரிய பரிந்துரைகள்

ஏதேனும் விடயங்கள் தொடர்பாக, குறிப்பாக, பின்வரும் விடயங்கள் தொடர்பில் குழு ஆராய்ந்து சபைக்குப் பொருத்தமான பரிந்துரைகளை மேற்கொள்ள வேண்டும்.

01. CBEU உடன் வங்கியின் கூட்டு ஒப்பந்தம்
02. வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு
03. தேவையான பணிநிலை ஆட்சேர்ப்புகள், பணிநிலை ஆட்சேர்ப்புத் திட்டங்கள் (SOR)
04. புதிய பதவிகள் அல்லது பதவி நிலைகள், இடங்கள், பணிநிலை மற்றும் பணிநிலை வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றை உருவாக்குதல்.
05. மனித வள விடயங்கள் தொடர்பான பொருத்தமான கொள்கைகள்.
06. ஒழுக்காற்று விடங்கள் மீதான தீர்மானங்கள் / மேன்முறைகள் பற்றி சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளல். (வங்கியின் ஒழுங்காற்றுக் கோவையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டால்)
07. முகாமைத்துவ மற்றும் மனித வள குழு அதிகார மட்டங்களுக்கு அப்பாற்பட்ட அனைத்து பணியாட்களுடன் தொடர்புபட்ட விடயங்கள்.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, குழு தனக்குப் பொருத்தமான பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், பணியாட்களுடன் தொடர்புடைய பல முக்கியமான கொள்கைகளைப் பிரேரணை செய்வதிலும் வெற்றியடைந்தது.

2020 இல் அமுல்படுத்தப்பட்ட முக்கிய முன்னெடுப்புகள்

- சம்பளம் சாராத அனுகூலங்களுக்காக CBEU உடன் கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் குழு, சபைக்குத் தேவையான பரிந்துரைகளை மேற்கொண்டது.
- பணியாட்களுக்குரிய பயிற்சித் திட்டங்களைப் பரிந்துரை செய்து அமுல்படுத்தியது.
- பதவி உயர்வு தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொண்டது.

தொழில் தொடர்பான அறிக்கை

வருட ஆரம்பத்தின் போது, வரையறை செய்யப்பட்ட முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளின் அடிப்படையில், பணியாட்களுக்கு புதிய செயற்திறன் மதிப்பீட்டு முறையொன்றை வங்கி அமுல்படுத்தியது. இப்புதிய முறை செயற்திறன் சார்ந்த அடைவு எல்லைகளை நோக்கிப் பணியாற்றுவதற்கு, அனைத்துப் பணியாளர்களையும் ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.


2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் அறிக்கையை பின்வரும் அட்டவணை பிரதிபலிக்கிறது:

வகை	31 டிசம்பரில் உள்ளவாறு மொத்தம்
கூட்டுறவு முகாமைத்துவம்	11
பிரதம/சிரேஷ்ட முகாமையாளர்கள்	26
பிராந்திய முகாமையாளர்கள்	5
நிர்வாகப் பணியாட்கள்	279
நிருவாகம் சாராத பணியாட்கள் (செயலாளர்கள், வங்கி உதவியாளர்கள், பொது நோக்கத்திற்கான பணியாட்கள், அலுவலக உதவியாட்கள், சாரதிகள், வர்த்தக ஊக்குவிப்பு உதவியாட்கள், கனிஷ்ட வர்த்தக ஊக்குவிப்பு உதவியாட்கள், வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்கள், கையகக் கணிப்பொறி உதவியாளர்கள்).	312
மொத்தம்	**633**


(எமது பணிப்படையில் 37% பெண்களும் 63% ஆண்களும் உள்ளனர்)

முடிவு

வங்கி மனித வளக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதிலும், வலுப்படுத்துவதிலும் தொடர்ந்து கவனம் செலுத்தும்.



திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர்



திருமதி கே.ரீ.டீ.டீ. டி சில்வா
கம்பனியின் செயலாளர்

2021 மே 21
கொழும்பு.

சபை உப குழுக்களின் அறிக்கை

சபை தெரிவுக்குழு

உள்ளடக்கமும் கூட்டங்களும்

இக்குழு, சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுவதோடு, பெரும்பான்மை சுயாதீன பணிப்பாளர்களினால் அமைக்கப்படும்.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் குழு ஐந்து முறை (05) கூடியுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர்கள் மனித வள மற்றும் ஊதிய குழுவில் பணியாற்றி வருகின்றனர் / பணியாற்றியுள்ளனர்.

2020 இல் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களும், அவர்களின் சமூகமளித்தல் தொடர்பான விபரங்களும்:

பணிப்பளர்	காலப்பகுதி (குழுவில்)	சமூகமளிப்பதற்கான தகுதி	சமூகம்
திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க - குழுவின் தலைவர் (நிருவாகம் சாராத, சுயாதீனப் பணிப்பாளர்)	2020 ஜனவரி 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	5	5
திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார (நிருவாகம் சாராத, சுயாதீனப் பணிப்பாளர்)	2019 செப்டம்பர் 26 ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன், 2020 ஆகஸ்ட 13 இல் ஓய்வு பெற்றார்.	4	4
திரு. எல். ஈ. சுசந்த சில்வா (நிருவாகம் சாராத, சுயாதீனப் பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	2	2
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிருவாகம் சாராத, சுயாதீனப் பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	2	2
சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன (நிருவாகம் சாராத, சுயாதீனப் பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	1	1
சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன (நிருவாகம் சாராத, சுயாதீனப் பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	1	1

பணிப்பாளர்களின் சுய விபரங்களின் சுருக்கம் 40 தொடக்கம் 47 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளரே குழுவின் செயலாளருக்கான கடமைகளையும் புரிந்து வருகிறார்.

குழுவின் பொறுப்புகள


தெரிவுக்குழு பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்குப் பொருத்தமான கொள்கைகளை வகுப்பதற்கு பிரதானமாக பொறுப்பைக் கொண்டுள்ளது. அத்துடன், பின்வரும் விடயங்களுக்கும் அது பொறுப்பாக உள்ளது.

01. 1.புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களைத் தெரிவு செய்தல் / நியமித்தல் ஆகியவற்றுக்கான நடபடி முறையை அமுல்படுத்துதல்.
2. சபையின் ஒட்டுமொத்தக் கடமைகளையும் புரிவதில் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு மற்றும் அவர்களின் செயற்திறன் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, நடப்பு பணிப்பாளர்களை மீளத் தெரிவு செய்வதற்கு பரிந்துரைகளை மேற்கொள்ளல்.
3. பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவத் தகுதிகளுக்கு ஆட்களை நியமித்தல் அல்லது பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான அத்தகைய தகுதிகள், அனுபவம் மற்றும் முக்கிய பண்புகள் போன்ற பொருத்தமான அளவுகோல்களை ஏற்றுக்கொள்ளல்.
4. வழிகாட்டி 3(3) இல் தரப்பட்டுள்ளவாறும், நியதிச் சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டவாறும், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தமது பதவிகளை வகிப்பதற்கு தகுதியானவர்களாகவும், பொருத்தமான ஆட்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகின்ற பொருத்தமான முறை ஒன்றை ஏற்றுக்கொள்ளல்.
5. ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்காக பின்னுரித்து ஏற்பாடுகளையும் மேலதிக / புதிய நிபுணத்துவம் தொடர்பான ஒருமைப்பாடுகளையும் (காலத்திற்குக் காலம்) பரிந்துரை செய்தல்.பணிப்பாளர்களின் சுய விபரங்களின் சுருக்கம் 40 தொடக்கம் 47 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலப்பகுதியின் போது, மேலே தரப்பட்ட தெரிவுக்குழுவின் ஆணைகளுக்கு அமைய, குழு தேவையான முன்னெடுப்புகளை மேற்கொண்டது.

2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள

- 2020 காலப்பகுதியின் போது, கீழே தரப்பட்டுள்ள புதிய பணிப்பாளர்களின் நியமனங்களை குழு பரிந்துரை செய்துள்ளது.
- திரு. டீ.எம்.சரத் அபேகுணவர்தன (தொழில் பிரதிநிதி), நிருவாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர், திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார (திறைசேரிப் பிரதிநிதி) நிருவாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர், திரு. எல். ஈ. சுசந்த சில்வா (நிறைவேற்று சாராத சுயாதீனப் பணிப்பாளர்), சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று சாராத சுயாதீனப் பணிப்பாளர்), திரு. டீ. எம். ஏ. கே. திசாநாயக்க (நிருவாகம் சாராத சுயதீனமற்ற பணிப்பாளர்).
- பணிப்பாளர் சபை மற்றும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் வருடாந்த தகுதி சத்தியக் கடதாசி தொடர்பாக தேவையான பரிந்துரைகளை குழு சபைக்கு மேற்கொண்டது.
- முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தொடர்பான பதவி உயர்வு கொள்கை அமுல்படுத்துகையுடன் தொடர்புபட்ட தேவையான பரிந்துரைகளை குழு சபைக்கு மேற்கொண்டது.



திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க
தலைவர்



திருமதி கே.ரீ.டீ.டீ. டி சில்வா
கம்பனியின் செயலாளர்

2021 மே 21
கொழும்பு.

சபை தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீளாய்வுக்குழு

உள்ளடக்கமும் கூட்டங்களும்

இக்குழு பெரும்பான்மையான நிருவாகம் சாராத சுயாதீனப் பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. ஒரு சுயாதீன நிருவாகம் சாராத பணிப்பாளர், குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். 'சுயாதீனம்' என்பதை வரையறை செய்வதில் எடுக்கப்படும் அளவுகோல், பட்டியல்படுத்தப்பட்ட விதிகளின் விதி (CSE பட்டியல்படுத்தப்பட்ட விதி - 9.2.2.) 7.10.4 இல் குறித்துரைக்கப்பட்ட அதே விதியாகும்.

கீழே தரப்பட்ட பணிப்பாளர்கள் சபை தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள், மீளாய்வுக்குழுவில் (சீவுஆஊ) சேவையாற்றுகின்றனர் / சேவையாற்றியுள்ளனர். மேலும், மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் குழு ஐந்து (05) தடவைகள் கூடியுள்ளது.

2020 இல் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களும், அவர்களின் சமூகமளித்தல் தொடர்பான விபரங்களும்.

பணிப்பாளர்	காலப்பகுதி (குழுவில்)	சமூகமளிப்பதற்கான தகுதி	சமூகம்
மஞ்சநாயக்க குழுவின் தலைவர் (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2020 ஜனவரி 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	5	5
திரு. டீ.எம்.ஏ.கே. தசநாயக்க (நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)	2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	3	3
கலாநிதி எஸ்.என். மொராயஸ் (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2019 செப்டம்பர் 26 தொடக்கம் 2020 ஆகஸ்ட் 30 வரை (குழு மீளமைக்கப்பட்டது)	2	1
திரு. எல். ஈ. சுசந்த சில்வா (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2020 டிசம்பர் 16 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	1	1
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2020 டிசம்பர் 16 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	1	1
திருமதி ஆர்.ஏ. சூலானந்த (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2019 செப்டம்பர் 26 ஆம் திகதி நியமிக்கப்பட்டு, 2020 ஆகஸ்ட 13 இல் ஓய்வு பெற்றார்.	2	2

பணிப்பாளர்களின் சுய விபரங்களின் சுருக்கம் 40 தொடக்கம் 47 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் குழுவின் செயலாளருக்கான கடமைகளை மேற்கொண்டு வருகிறார்.

திறத்தவர்களுடனான, சபை தொடர்பான பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு, காலத்திற்குக் காலம் வங்கியின் ஒழுங்குபடுத்துநர்களான (பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் ஆணைக்குழு, (SEC) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் (CSE) மற்றும் மத்திய வங்கி (CBSL) ஆகியவற்றினால் குறித்துரைக்கப்பட்ட தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளுடன் தொடர்புடைய கொள்கையும் குறிப்பு விதிகளும்

தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீளாய்வுக்கு, சபை அங்கீகாரத்துடன் தொடர்புடைய திறத்தவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை நெறிப்படுத்துவதற்கு ஒரு தொடர்புடைய திறத்தவர் கொள்கை மற்றும் குறிப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய திறத்தவர்களுக்கு வங்கி எவ்விதமான சாதகமான சலுகைகளையும் வழங்காது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீது ஆழ்ந்த எண்ணக்கரு பயன்படுத்தப்படுகிறது. மேலும், இது, தொடர்புடைய திறத்தவருடன் எவ்வித, சாதகமான நடத்துகையும் இன்றி வங்கி தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளைப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும் எடுத்துக்கூறுகிறது. மேலும், குழு, தற்போதுள்ள கொள்கைகளையும், குறிப்பு விதிகளையும் தேவை அடிப்படையில் மீளாய்வு செய்தல் வேண்டும். இதற்கமைய, பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

எல்லை மற்றும் கடமை

- நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்துநர்களின் வழிகாட்டிகளில் குறிப்பிட்டவாறு தொடர்புடைய திறத்தவர்களின் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து எழக்கூடிய ஏதேனும் அக்கறைகளுக்கிடையிலான முரண்பாடுகளை நிருவகிக்கும் பொறுப்பு குழுவுக்கு உள்ளது.
- வங்கியின் சிறந்த அக்கறைக்காக, வங்கியின் ஈடுபாடுகள் அமைந்தன என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்துடன், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர்கள், முக்கிய முகாமைத்துவம் அல்லது கணிசமான பங்குதாரர்கள் தமது பதவிகளைப் பயன்படுத்தி, அனுகூலங்களைப் பெறுவதில் இருந்து தடுப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- இதற்கமைய குழு தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளைக் கையாளுகையில், 'ஆம்லெந்த்' எண்ணக்கரு அடிப்படையில் மேற்கொள்ளும் பொறுப்பையும், அத்துடன் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC கோவை) மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையம் (CSE விதிகள்) ஆகியவற்றின் ஏற்பாடுகளுடன் சீராக அமைதல் வேண்டும்.
- ஆகவே, HDFC வங்கியின் திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளை வரையறை செய்வதற்காக தொடர்புடைய திறத்தவர்களுடனான கொள்கை மற்றும் அதன் குறிப்பு விதிகளை குழு தயாரித்துள்ளது. தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளில் ஈடுபடும் போது, அத்திறத்தவர்களுக்கான சாதகமான நடாத்துகை இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்துவதுடன், அக்கறைகளுக்கிடையிலான முரண்பாடுகள் ஏதேனும் இருப்பின் அதனை நீக்கும்.


சபை உப குழுக்களின் அறிக்கை

சபை தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீளாய்வுக்குழு

- மேலும், குழு மீளாய்வுக்கு உட்பட்ட வருட காலப்பகுதியின் போது, தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளுடன் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் ∴ அவதானிப்புகளை சபைக்கு அறிவித்தது.
- இதனைவிட குழுவின் ஆணை CSE பட்டியல்படுத்தப்பட்ட விதியின் (CSE விதிகள்) 9வது பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு வருடாந்த அறிக்கையில் தொடர்புடைய திறத்தவர்களுடனான கொடுக்கல் வாங்கல் தொடர்பான முறையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக சபைக்கு அறிவுரை வழங்கும் கடமையையும் உள்ளடக்கும்.
- மேலும், திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீதான பொருத்தமான தகவல்களைக் கண்டுபிடிப்பதற்கும், ஊட்டுவதற்கும் கண்காணிப்பு முறைகள் உள்ளன. இம்முறை வங்கியின் தரவு சேகரிப்பு முறைக்குள் முக்கிய முகாமைத்துவ ஆட்கள், பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்பான தகவல்களையும் உள்ளடக்குவதுடன், அத்தகைய தகவலின் உண்மைத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

2020 இல் தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள்

- மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது நடைபெற்ற தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் பற்றிய விபரங்களுக்கு நிதிக் கூற்றின் 40வது குறிப்பை பார்க்க.
- குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டிய எவ்விதமான திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளிலும் வங்கி ஈடுபடவில்லை (பட்டியல்படுத்தப்பட்ட விதிகளின் பிரிவு 9.3.2 இல் குறித்துரைக்கப்பட்டவாறு ஏதேனும் திரும்ப நிகழாத பரிவர்த்தனைகள் அல்லது திரும்ப நிகழ்கின்ற பரிவர்த்தனைகள்)



திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க

தலைவர்



திருமதி கே.ரீ.டீ.டீ. டி சில்வா

கம்பனியின் செயலாளர்

2021 மே 21

கொழும்பு.

சபை கணக்காய்வுக் குழு அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் கூட்டுறவு ஆளுகை வழிகாட்டிகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் 'பட்டியல்படுத்தப்பட்ட விதிகள்' என்பவற்றுக்கு அமைவாக இணங்கி நடக்கின்ற வகையில் 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்காக கணக்காய்வுக் குழு இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்கின்றது. மேலும், இவ்வறிக்கை இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் மற்றும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைக்குழு ஆகியன இணைந்து கூட்டாக வெளிப்படுத்திய 'கூட்டுறவு ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகளுடனும் இவ்வறிக்கை இணங்குகிறது.

வருட இறுதியில் இக்குழு ஐந்து (05) நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.

- சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன
- சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா
- கலாநிதி எஸ்.என்.மொராயஸ்
- திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார
- திரு. எல். ஈ. சுசந்த சில்வா

கணக்காய்வுக் குழுகுக் கூட்டங்கள்

2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டின் போது ஆறு (06) கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. குழு உறுப்பினர்களின் சமூகமளிப்பு தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையின் கூட்டுறவு ஆளுகை பகுதியில் தரப்பட்டுள்ளன. உள்ளகக் கணக்காய்வாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியும், கிரமமான அடிப்படையில் கூட்டங்களுக்கு சமூகமளித்துள்ளனர். பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், குழுவின் செயலாளராகச் செயற்பட்டுள்ளார். பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய அலுவலர்கள், தேவை அடிப்படையில் கூட்டங்களில் சமூகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இருந்து ஒரு பிரதிநிதி (வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்) கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் அதன் கூட்டங்களுக்கு சமூகமளித்துள்ளார்.

இவ்வருடத்தின் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம்

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தின் போது, குழு பின்வரும் முக்கியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

- நிதி அறிக்கையிடல்


  குழு, வருடாந்த மற்றும் இடைக்காலக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் நேர்மைத் திறன் மற்றும் முக்கியமான நிதி அறிக்கையிடல் விடயங்களைக் கண்காணிப்பதன் மூலம், நிதி செயற்திறன் தொடர்பான ஏனைய விதிமுறையான அறிவிப்புகள், கணக்கியல் கொள்கைகள், நடைமுறைகள் எனபவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பான ஏனைய பொருத்தமான விடயங்கள் ஆகிய அனைத்தின் நேர்மைத் திறனையும் உறுதிப்படுத்தியுள்ளன.
- உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவ முறைகள் மற்றும் இணக்கத் தேவைப்பாடுகள்
- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளும், இடர் முகாமைத்துவ முறைகளும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இருக்கின்ற நடைமுறைகள் போதுமானவை என்பதை உறுதிப்படுத்வதற்கு குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. அத்துடன், வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற அனைத்து முக்கியமான இடர்களையும் இனங்கண்டு முகாமைத்துவம் செய்துள்ளது.
- உள்ளகக் கணக்காய்வுப் பணி

  வங்கியின் ஒட்டுமொத்த முகாமைத்துவ சூழலில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் எல்லை, பணிகள் மற்றும் வளங்கள் என்பவற்றின் போதுமான தன்மையை குழு மீளாய்வு செய்துள்ளது. கணக்காய்வுக் குழு, அதன் கணக்காய்வுகளில் இருந்து உள்ளகக் கணக்காய்வுப் பணி சுயாதீனமானது என்பதை உறுதிப்படுத்துகிறது. கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்து அங்கீகரித்துள்ளது. நியதிச் சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் முகமாக, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பணியாட்களின் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.
- வெளியகக் கணக்காய்வும் ஏனைய நிதியதிச் சட்டக் கணக்காய்வுகளும்
- இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட நியதிச் சட்டப் பரீட்சைகளையும், வெளியகக் கணக்காய்வாளர்களின் கண்டறிதல்களையும் குழு மீளாய்வு செய்துள்ளது, மேலும், வெளிப்படையான மீறல்கள், மோசடிகள் மற்றும் பிழைகள் என்பன தொடர்பாக முன்னேற்றமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கூட்டுறவு முகாமைத்துவத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

  நியதிச் சட்டப் பரிசோதனை அறிக்கை - 2019 இல், இலங்கை மத்திய வங்கியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் முகாமைத்துவக் கடிதம் 2019 இல் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும், இவ்வாண்டின் போது முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட சீரமைத்தல் நடவடிக்கைகளைக் குழு பின்தொடர்ந்தது.

உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள், கணக்கியல் நடைமுறைகள் மற்றும் வங்கி நிதிக் கூற்றுக்கள்

வங்கியின் உத்தரவாத வழங்குநர்களின் பணிகளின் அடிப்படையில், உண்மைத்தன்மை அற்ற வருடாந்த நிதிக் கூற்றுகளுக்கு அடிப்படையை வழங்கும் எந்தவிதமான வங்கியின் உள்ளக நிதிக் கட்டுப்பாட்டு முறை மற்றும் கணக்கியல் நடைமுறை என்பவற்றைக் குறித்துக் காட்டும் விடயங்கள் எதுவும் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. வங்கியின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் அனைத்து முக்கியமான விடயங்கள் தொடர்பாக சரியாக அமைவதுடன், கம்பனிகள் சட்டம், இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் சபையின் அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என குழு திருப்தியடைகிறது.



சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. குணவர்தன

தலைவர்

சபையின் கணக்காய்வுக் குழு

2021 ஏப்ரல் 05

சபை உப குழுக்களின் அறிக்கை

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை

உள்ளடக்கமும் கூட்டங்களும்

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருட காலப்பகுதியின் போது, திரு. சுசந்த சில்வா (BIRMC யின் தற்போதைய தலைவர்) மற்றும் திரு. என். விஜயநாதன் (2020 ஜூன் 29 ஆம் திகதி சபையிலிருந்து ஓய்வு பெற்றார்) ஆகியோர் BIRMC க்குத் தலைமை வகித்தனர். இவர்கள் இருவரும், சுயாதீன நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களாவர். இதனைவிட, மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலப்பகுதியில் சேவையாற்றிய எஞ்சிய உறுப்பினர்கள் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்களாக இருந்தனர்.

குழு இவ்வருடத்தில் நான்கு (04) முறை கூடியது.

2020 இல் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களும் அவர்களின் சமூகமளித்தல் தொடர்பான விபரங்களும்:

பணிப்பாளர்	காலப்பகுதி (குழுவில்)	சமூகமளிப்பதற்கான தகுதி	சமூகம்
திரு. எல். ஈ. சுசந்த சில்வா, குழுவின் தலைவர் (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	02	02
திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2020 மார்ச் 11 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	02	02
கலாநிதி எஸ்.என். மொராயஸ் (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2019 ஜூன் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	04	03
சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.	02	02
மஞ்சநாயக்க குழுவின் தலைவர் (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)	அழைப்பின் பேரில்	01	01
திரு. என். விஜயநாதன் (நிறைவேற்று அல்லாத சுயாதீனப் பணிப்பாளர்) அவர் ஓய்வு பெறும் வரை குழுவின் தலைவராக செயற்பட்டார்.	2017 ஜூன் 30 ஆம் திகதி நியமிக்கப்பட்டு, 2020 ஜூன் 29 இல் ஓய்வு பெற்றார்.	02	02

பணிப்பாளர்களின் சுய விபரங்களின் சுருக்கம் 40 தொடக்கம் 47 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளரே குழுவின் செயலாளருக்கான கடமைகளை மேற்கொண்டு வருகிறார்.

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் முதன்மைப் பொறுப்புகள்

குழுவின் பிரதான பொறுப்புகள் பின்வருமாறு:

1. 1.குழு முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் மிக நெருக்கமாகப் பணி புரிவதுடன், குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்புக்குள் இருந்து சபை சார்பாக தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும், தீர்மானங்களை எடுக்கும் போது, அதற்குப் பெருத்தமான பொறுப்புகளையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.
2. பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் என்பவற்றின் ஊடாக மாதாந்த அடிப்படையில் வங்கியின் அனைத்து இடர்களையும் (கடன், சந்தை, திரவம், செயற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள்) குழு மதிப்பீடு செய்ய வேண்டும்.
3. குறிப்பான இடர்களை நிவர்த்தி செய்வதற்கு, கடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களின் போதுமான தன்மையையும், வினைத்திறனையும் மதிப்பீடு செய்ய வேண்டும். மேலும், குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வகையில், அளவீட்டு மற்றும் தர அடிப்படையிலான இடர் வரையறைக்குள் இருந்து மேலே குறிப்பிட்ட இடர்களைக் கையாளப்பட வேண்டும்.
4. வங்கியின் கொள்கைகள், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகள், வழிகாட்டிகள் மற்றும் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் இருந்து அத்தகைய இடர்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விவேகமான மட்டங்களுக்கு அப்பால் இருக்கும் போது, குழு, குறிப்பான இடர்களின் விளைவுகளைத் தணிப்பதற்கு துரித சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொளள வேண்டும்.
5. புதுப்பிக்கப்பட்ட வர்த்தக தொடர்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக, இடர்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் தணித்தல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்ய, குழு குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில் கூடுதல் வேண்டும்.
6. சபை பொதிகள் (இலத்திரனியல் கூட்ட முறையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டது) ஊடாக, உரிய நேரத்திலான அறிக்கைகளை குழு பெற்றுக்கொள்ள வேண்டும்.
7. குழு குறிப்பான இடர்களை இனங்காணவும், அத்தகைய இடர்கள் தொடர்பாக குழு மற்றும் அல்லது மத்திய வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் வழங்கப்பட்ட வகையில் துரித சீராக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் அலுவலர்களை பொறுப்புக்கு உள்ளாக்குவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
8. ஒவ்வொரு கூட்டம் நடைபெற்று ஒரு வார காலத்திற்குள், இடர் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பான கருத்துக்கள், ஒருங்கிணைக்கும் மற்றும் அல்லது விசேட வழிகாட்டிகள் பற்றிய பரிந்துரைகளை வழங்குமாறு சபைக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

9. வங்கி சட்டங்கள், ஒழுங்கு விதிகள், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வர்த்தக செயற்பாடு தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் இணங்கி நடந்துள்ளதா என்பதை மதிப்பீடு செய்ய குழு இணக்கப் பணியை உருவாக்குதல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆட்களினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் இணக்க அதிகாரி, இணக்கப் பணிகளைப் புரிவதுடன், காலாந்தர அடிப்படையில் குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

10. BIRMC இணக்க விடயங்கள் தொடர்பாக சபை மேற்பார்வை செய்வதற்கும், அதன் பொறுப்புகளை நிறைவேற்றவும் உதவுகிறது. இதற்கமைய, குழு, இணக்க நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துவதை மீளாய்வு செய்வதுடன், இவை வங்கியின் ஒழுங்குபடுத்தல் இடர்கள் மற்றும் பல்வேறுபட்ட இணக்கத் தேவைப்பாடுகளுக்கு பதிலளிக்க அவசியமாகும்.

11. சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட முக்கியமான விடயங்கள் அல்லது சபையின் கவனத்திற்கு முக்கியமாகக் கொண்டுவரப்பட்ட விடயங்கள் என்பன வங்கியின் நெறிமுறையான இடர்களில் பாதிப்பை ஏற்படுத்தும் போது, அத்தகைய கண்டறிதல்களைப் புறந்தள்ளிவிடும் தெளிவான நோக்கில் அல்லது தோன்றி வருகின்ற இடர்களை முகாமைத்துவம் செய்வதற்காக அவற்றை மீளாய்வு செய்து, சபையின் ஏதேனும் உப குழு ஒன்றின் நடவடிக்கைக்காக அனுப்பப்படுதல் வேண்டும்.

12. வங்கியின் இடர் தணிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர் வெளிப்பாடு தொடர்பான விடயங்களில் முகாமைத்துவத்திற்கும், உப குழுக்களுக்கும் வழிகாட்டிகளை வழங்குதல்.

2020 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம்

1. வங்கி மற்றும் வாடிக்கையாளர்களின் அக்கறைகளுக்கு இடையில் சமநிலை ஒன்றைப் பேணுவதன் மூலம் ஊழுஏஐனு-19 தொற்று நோய்க்கு மத்தியில் வங்கியை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான முன்னெடுப்புகளை மேற்கொண்டது.

2. வங்கியின் தற்போதுள்ள உள்ளக மூலதன போதுமான மதிப்பீட்டு செயன்முறைக்கு (ICAAP) விரிவான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

3. வங்கியின் இடர் தேவையை நிர்வகிப்பதற்கும், வகுக்க மற்றும் மீளாய்வு செய்ய, சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஒன்றை உருவாக்கியது. அத்துடன், கைத்தொழில் அளவுகோல்களுக்குள் இடர் கண்காணிப்பு வரையறைகளை வைத்துக்கொள்வதற்கு கட்டமைப்பு ஒன்று வகுக்கப்பட்டது.

4. அழுத்தப் பரீட்சை இருக்கக்கூடிய மூலதனத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும், தேவைப்படுத்தப்பட்ட மேலதிக மூலதனத்தில் ஏற்பட்ட தாக்கத்தையும் கருத்திற் கொண்டு அழுத்தப் பரீட்சைக்கான கால எல்லைகளை விரிவாக்குவதன் மூலம் ஒட்டுமொத்த அழுத்தப் பரீட்சைக் கட்டமைப்பு மேற்படுத்தப்பட்டது.

5. தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளுடன் தொடர்புடைய இடர்கள் உள்ளடங்கலாக, கடன், செயற்பாட்டு மூலோபாய நிதி மற்றும் திரவ இடர்கள் என்பவற்றை உள்ளடக்கிய மேம்படுத்தப்பட்ட இடர் இனங்காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் அளவீடு செய்தல்.

6. தற்போதுள்ள இடர் கட்டமைப்பை நெறிப்படுத்தி மற்றும் ஒரு தொகையான புதிய நடைமுறை மாற்றங்களை அறிமுகப்படுத்தி இடர் முகாமைத்துவப் பணி வலுப்படுத்தப்பட்டது.

7. கடன் இடர் மதிப்பீட்டு வரம்பைக் குறைப்பதன் மூலம் கடன் இடர் முகாமைத்துவத்தை வலுப்படுத்தலாம். உள்ளகக் கட்டுப்பாடுகள் மீளாய்வு செய்யப்படுகிறது, LRM மதிப்பீட்டின் நோக்கம் மற்றும் பரப்பெல்லையை மேம்படுத்துதல்.

8. கடன் அங்கீகாரத்தை நெறிப்படுத்தவும், அதற்கான நேரத்தைக் குறைக்கவும், காகிதங்களின் பயன்பாட்டை கணிசமான அளவு குறைக்கவும் கூடிய எதிர்பார்ப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட இடர் தணிப்பு பணிகள்.

9. முக்கியமான இடர் குறிகாட்டிகளை மெருகூட்டுவதன் மூலம் டேஷ்போட்ஸ் ஊடாக மேம்படுத்தப்பட்ட இடர் கண்காணிப்பு அத்துடன் இக்கண்காணிப்பு BIRMC ஊடாக காலாந்தர அடிப்படையில் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.

BIRMC யின் சுருக்கம்

வங்கியின் வலுவான இடர் கலாசாரத்தை உருவாக்குவதற்காக, பொருத்தமான இடர் மதிப்பீடுகள், கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை ஆதரிக்கும் வகையில் BIRMC ஒரு இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக்கியது. வங்கியின் உள்ளக இடர் கொள்கை வழிகாட்டிகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைத் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு அமைவாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை மத்திய வங்கியின், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் குறித்துக் காட்டப்படுகின்ற மத்திய வங்கியின் வழிகாட்டிகள் மற்றும் நாணய சபையினால் கூறப்பட்ட வழிகாட்டிகள் அல்லது ஒழுங்குபடுத்தல்கள் அல்லது மேற்பார்வை விடயங்கள் அல்லது வங்கியின் இடர் முகாமைத்துவத்தின் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை என்பதை குழு சுட்டிக்காட்டுகிறது. அவ்வாறு ஏதும் இருப்பின், அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு வங்கி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுடன் அவை பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும்.



திரு. எல். ஈ. சுசந்த சில்வா

தலைவர்



திருமதி கே ரீ டி டி டீ சில்வா

நிறுவனத்தின் செயலாளர்

21 மே 2021

கொழும்பு.



நிதி அறிக்கைகள்

நிதி அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள்

1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க HDFC சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினதும், 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தினதும் திருத்தங்கள்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, வங்கியின் நிதித்துறை அறிக்கைகள் தயாரிக்கப்படுவது பணிப்பாளர்களின் பொறுப்பாகும். இதன் விபரங்கள் கீழே உள்ள அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

நிதித்துறை அறிக்கைகள் சம்பந்தமாக, வெளிவாரி கணக்காய்வாளரின் பொறுப்புக்கள், ஆண்டறிக்கையில் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதி ஆண்டிற்குமான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, அவற்றைப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். 2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்தவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, பங்கு மூலதன மாற்றங்களுக்கான கூற்று மற்றும் முடிவடைந்த வருடத்திற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அவை தொடர்பான குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன.

வங்கியின் நிதித்துறை அறிக்கையில் கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பான உண்மையான, நியாயமான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

1. 2020 டிசம்பர் 31 இல் வங்கி நடவடிக்கைகளின் நிலைமை, மற்றும்
2. முடிவடைந்த நிதியாண்டின் இலாபம் அல்லது நட்டத்தின் விபரங்கள்.

இத்தகைய நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், கீழ்க்குறிப்பிட்ட விபரங்களை நிச்சயிக்கும்படி பணிப்பாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

1. பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு, ஒழுங்கான அடிப்படையில் நடைமுறைக்கிடப்பட்டுள்ளன. பௌதீக ரீதியிலான வேறுபாடுகள் (இருந்தால்) அவை வெளியிடப்பட்டதோடு, விளக்கமளிக்கப்பட்டுள்ளன.
2. நியாயமானதும், நம்பகமானதுமான தீர்வுகள், மதிப்பீடுகள் என்பன தயாரிக்கப்பட்டு பொருத்தமான சகல கணக்கியல் தரங்களும் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளன.
3. பொருத்தமானது எனக் கருதப்பட்ட நடைமுறைக்கிடக்கூடிய கணக்கியல் தரங்கள் அனைத்தும் இணங்கப்பட்டுள்ளன.

நடவடிக்கைகளை வங்கி தொடர்ந்து மேற்கொள்வதற்கு போதிய வளங்களை அது கொண்டுள்ளது என்பதை நிச்சயிக்கும்படி பணிப்பாளர்கள் கோரப்பட்டுள்ளதோடு, நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் நிறுவனம் என்பதைக் கருத்திற் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு மேலதிகமாக, வங்கியின் நிதி நிலைமை சம்பந்தமாக நியாயமான, சரியான தன்மையை வெளிப்படுத்துவதற்கான போதியளவு கணக்கியல் பதிவேடுகளை வங்கி பேணி வருகிறது என்பதை நிச்சயிக்கும் பொறுப்பும் பணிப்பாளர்களுக்கு உண்டு.

இந்த அறிக்கையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகள் 2012 ஜனவரி 01 ஆந் திகதி நடைமுறைக்கு வந்த புதிய இலங்கை கணக்கியல் தரங்களின் (SLFRS) அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் கணக்கியல் பதிவேடுகளோடு ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் அமைந்துள்ளதாகவும், இலங்கை கணக்கியல் தரங்கள், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு 15 ஆம் இலக்க தரங்கள், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் இவற்றுக்கான திருத்தங்கள், இலங்கையில் அனுமதி பெற்ற விசேட வங்கிகளின் கூட்டிணைப்பு ஆளுமை பற்றிய 2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பணிப்புரை (காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டது), கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் குறிப்பிடப்பட்ட சட்டங்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் பாதுகாப்புப் பிணையங்கள் மற்றும் நாணயப் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) என்பனவற்றின் தேவைகளோடு இணங்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் உள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக, அனுமதிபெற்ற விசேட வங்கிகளின் வருடாந்த அறிக்கைகளினது தயாரிப்பில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட குறிப்பிடப்பட்ட மாதிரியோடு இந்த நிதி அறிக்கைகள் இணங்குகின்றன.

வருடம் முழுவதிலும் வங்கியினால் எதிர்நோக்கப்படும் முக்கிய இடர்களை உள்ளக ரீதியில் கட்டுப்படுத்தி, இனங்கண்டு, பதிவு செய்து, மதிப்பீடு செய்து, முகாமைத்துவம் செய்வதில் ஆக்கபூர்வமான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை பணிப்பாளர்கள் நடைமுறைக்கிட்டுள்ளனர். இவையனைத்தும் ஒழுங்கான அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றில், உள்ளக மீளாய்வுகள், உள்ளகக் கணக்காய்வுகள், நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள், வங்கி நடவடிக்கைகளை ஒழுங்கான அடிப்படையில் மேற்கொள்வதற்குத் தேவையான நிதித்துறை மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள், அதன் சொத்துக்களைப் பாதுகாத்தல், மோசடிகள் மற்றும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டுபிடித்து தடுத்தல், பதிவேடுகளின் நம்பகத்தன்மையையும், சரியான தன்மையையும் இயன்றளவு பெற்றுக்கொள்ளல் என்பன அடங்கியுள்ளன.

2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் இடம்பெற்ற இத்தகைய மீளாய்வுகளின் பெறுபேறுகள் ஆண்டறிக்கையின் 'உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான பணிப்பாளர் அறிக்கையின;' 128 ஆம் 129 ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான பணிப்பாளர் அறிக்கையின் வெளிவாரி கணக்காய்வாளரின் உறுதிப்பாட்டு அறிக்கை, ஆண்டறிக்கையின் 130ஆம் 131ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

நிதி அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள்

வங்கியின் கணக்குகள் சம்பந்தமாக சரியான பதிவேடுகளை வங்கி கொண்டுள்ளது என்பது சம்பந்தமாகவும், சபையின் கணக்காய்வுக் குழுவின் ஒழுங்கான கூட்டங்களின் போதும், நிதி அறிக்கையிடல் சம்பந்தமாக மீளாய்வு செய்யப்படுவது பற்றியும் நிச்சயிப்பதற்கு பணிப்பாளர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்ட குழுவின் அறிக்கை 139ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இவையனைத்தும் வெளியிடப்படுவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையினர் இடைக்கால நிதி அறிக்கைகளை அங்கீகரிப்பது வழக்கமாகும்.


இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் நடுநிலைமை மற்றும் இலச்சியம் என்பனவற்றுக்கான பொறுப்பை, பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கிறது. நிதி அறிக்கைகளை பணிப்பாளர்கள் தயாரித்து, வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர், இலங்கை கணக்காய்வாளர் அதிபதி ஆகியோருக்குச் சமர்ப்பிப்பது அவசியம். குறிப்பிட்ட நிதி அறிக்கைகள் சம்பந்தமாக, சுயாதீன கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றை வெளியிடுவதற்கு பொருத்தமானதும், அவசியமானதும் என அவர்கள் கருதக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளில் தேவையான மீளாய்வுகளையும், பரிசீலனைகளையும் மேற்கொள்வதற்கான சகல வசதிகளையும் பணிப்பாளர்கள் வழங்குவது அவசியம்.

கம்பனிகள் சட்டத்தின் 150(1)(b) பிரிவுகளினால் கோரப்பட்ட பிரகாரம் வங்கியின் நிதி அறிக்கைகள் பிரதம நிதித்துறை அதிகாரி மற்றும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் அறிக்கை தயாரிப்புக்கு பொறுப்பான இரண்டு அதிகாரிகள் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் தங்களது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் நிதித்துறை அறிக்கைகள் தினத்தில் தயாரிக்கப்பட்ட, வங்கியினால் செலுத்தப்பட வேண்டியிருந்த சகல சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்பு மற்றும் ஸ்தாபக அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளன மற்றும் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையிட்டு அவர்கள் மனநிறைவு தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவாறு தங்களது பொறுப்புகள் அனைத்தையும் தாங்கள் பூர்த்தி செய்துள்ளனர் என்ற அபிப்பிராயத்தை அவர்கள் இத்தால் வெளியிட்டுள்ளனர்.

சபையின் உத்தரவின் பிரகாரம்



திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ.மஞ்சநாயக்க
தலைவர்

கொழும்பு
2021 மே 21

கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAF/ 01/C/HDFC/1/20/25

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 10 May 2021

RECEIVED
10 MAY 2021
HDFC / CHMD

தலைவர்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்தின் படியிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் ('வங்கி') 2020 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிய வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கலான முக்கிய கணக்கியல் கொள்கைகள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பிரகாரம், எனது வழிகாட்டலுக்கு கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்தின்படி, ஒன்று சேர்க்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வங்கியின் நிதிநிலை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருவதுடன், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்திறன் மற்றும் நிதிப் பாய்ச்சல்கள், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக உள்ளன.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

கணக்காய்வாளரின் அறிக்கை

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க (SLAuSs) நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழ், எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. என்னால் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகள், எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைய போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பது, ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது, வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்வுக்கு மிக முக்கியமாக அமைந்த மற்றும் எனது தொழில்முறை ரீதியான தீர்ப்பை வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்தவையாகும். இவ்விடயங்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுச் சூழலில் முழுமையாகக் கருத்திற் கொள்ளப்பட்டதுடன், அவற்றின் மீது இருந்த என்னுடைய கணக்காய்வு அபிப்பிராயம் உருவாகியது. அத்துடன், இவ்விடயங்கள் தொடர்பில் நான் பிரத்தியேகமான அபிப்பிராயம் ஒன்றை வழங்கவில்லை.

முக்கிய கணக்காய்வு விடயம்	முக்கிய கணக்காய்வு விடயம் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டது
பதிவழிப்புச் செலவில் கொண்டுவரப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வலுக்குறைப்புக் கொடுப்பனவு 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, வங்கியின் மொத்த சொத்துக்களில் கடன்களும், முற்பணங்களும் ரூபா 41,192 மில்லியன் (குறிப்பு 18), ரூபா 1,445 மில்லியன் (குறிப்பு 18) வலுக்குறைப்புக் கொடுப்பனவின் நிகர தொகையாக அமைவதோடு, இது, 67.5 சதவீதத்தைப் பிரதிபலிக்கிறது. பதிவழிப்புச் செலவில் கொண்டு வரப்பட்ட அத்தகைய நிதிச் சொத்துக்கள் மீதான குறிப்பு 3.B யில் விபரிக்கப்பட்ட வலுக்குறைப்புக் கொடுப்பனவு, இலங்கை கணக்கியல் நியமமம் - SLFRS 9 நிதிக்கருவிகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது. இது முக்கியமான கணக்காய்வு விடயமாக அமைவதற்கு காரணம் - • கடன் வலுக்குறைப்புக்காக அறிக்கையிடப்பட்ட ஏற்பாடுகளின் பொருள் தன்மை குழப்பமான கணக்கீடுகளை உள்ளடக்கியது, மற்றும் • இந்தக் கணக்கீடுகளுடன் ஊகங்களின் அளவு, தீர்ப்புகள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயத் தன்மை என்பன இணைந்திருந்தன. வலுக்குறைப்புக் கொடுப்பனவை மதிப்பீடு செய்வதில் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கியமான தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களின் முக்கிய பரப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. • COVID-19 இன் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்துறை பதில்கள் (உதாரணம் - அரசாங்கத்தின் தூண்டல் பொதிகள் மற்றும் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தவணை உரிமை நிவாரண வழிமுறைகள்)	எனது அறிக்கை தயாரிக்கப்பட்ட திகதி வரையுள்ள சிறந்த தகவல்களின் அடிப்படையில் இருந்து COVID-19 இன் தாக்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்துறை பதில்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு ளுடுகுசுளு 9 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கி, வங்கியின் வலுக்குறைப்பு கணக்கீடுகள் மற்றும் அதற்கு அடிப்படையாக அமைந்த முறைகள் என்பனவற்றை மதிப்பீடு செய்தேன். என்னுடைய கணக்காய்வு நடைமுறைகள், ஏனைய விடயங்கள் உள்ளடங்கலாக பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கியிருந்தன. வலுக்குறைப்புக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான மதிப்பீடுகளை, பொருத்தமான இடங்களில் அவற்றின் வடிவமைப்பு, அமுல்படுத்துகை மற்றும் கட்டுப்பாடுகளின் செயற்பாட்டு வினைத்திறன் என்பனவற்றை மதிப்பீடு செய்தேன். இவை, சபை கணக்காய்வுக் குழு மற்றும் முகாமைத்துவத்தினால் மதிப்பிடப்பட்ட மேற்பார்வை அளவு, மீளாய்வு மற்றும் வலுக்குறைப்புக் கொள்கைகளின் அங்கீகாரம் என்பனவற்றை உள்ளடக்கியது. • மூல ஆவணங்கள் மற்றும் கணக்கியல் பதிவுகள் என்பனவற்றின் முக்கியமான விபரங்களுடன் உடன்பட்டு, கணக்கீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட அடிப்படைத் தரவுகளின் பூரணத்துவத்தையும், சரியான தன்மையையும் நான் பரீட்சித்துள்ளேன் • என்னுடைய சோதனையில், அடிப்படைக் கணக்கீடுகள் பரீட்சிக்கப்பட்டன. • மேலே தரப்பட்டுள்ளவற்றுக்கு மேலதிகமாக, பின்வரும் முக்கியமான நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

முக்கிய கணக்காய்வு விடயம்	முக்கிய கணக்காய்வு விடயம் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டது
• COVID-19 உடன் தொடர்புடைய இத்தகைய தூண்டுதல்கள் மற்றும் வழங்கப்பட்ட நிவாரண வழிவகைகள் காரணமாக, வாடிக்கையாளரின் ஒப்பந்தங்கள் கணிசமான அளவு மெருகூட்டப்பட்டதா என்பதைத் தீர்மானித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானத் தொகை மீதான தொடர்புடைய பாதிப்புகளைத் தீர்மானித்தல், மற்றும், • முன்னோக்கிப் பார்க்கின்ற அபிவிருத்தியடைகின்ற மற்றும் கூட்டிணைக்கப்படுகின்ற பாரிய பொருளாதார சூழ்நிலைகள் உள்ளடங்கலாக, பாரிய பொருளாதாரக் காரணிகள், பரந்தளவிலான சாத்தியமான பொருளாதார பெறுபேறுகளை வழங்கியதுடன், COVID-19 இன் காரணமாக ஏற்பட்ட தாக்கங்கள் எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.	வலுக்குறைப்புக்காக கடன்கள் மற்றும் முற்பணங்களின் மாதிரி ஒன்று தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டது. • வலுக்குறைப்புக்கான ஏதேனும் குறிகாட்டிகள் உள்ளனவா என்பதைத் தீர்மானிப்பதற்கு, முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட அளவுகோலின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல், மற்றும், • COVID-19 இன் தாக்கம் மீது கைத்தொழில்துறை மீது ஏற்பட்ட தாக்கம், மூலோபாயப் பதில்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பிணையங்களின் பெறுமதிகள், எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் பெறுமதி மற்றும் காலநேரம் என்பனவற்றுக்கு விசேட கவனம் செலுத்தியது. அதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் நியாயமான தன்மையை மதிப்பீடு செய்தல். வலுக்குறைப்புக்காக கூட்டாக மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்காக- • முன்னோக்கிய பார்வைத் தகவல் மற்றும் சூழல்களின் நியாயத்தன்மை உள்ளடங்கலாக முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல். • பொருத்தமான வகையில் COVID-19 பெருந்தொற்றின் சாத்தியமான தாக்கங்களைக் கருத்திற் கொள்கையில், சீர்படுத்தல்களைத் தீர்மானித்தலில் முகாமைத்துவம் பயன்படுத்திய தரவுகளையும், அடிப்படைகளையும் மதிப்பிடுதல். மற்றும், அரசாங்க தூண்டுதல்கள் மற்றும் கடன் தவணை உரிமை நிவாரண வழிமுறைகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்காக - • தீர்ப்புகளின் சரியான தன்மை, வாடிக்கையாளர்களின் ஒப்பந்தங்கள், கணிசமான அளவு மெருகூட்டப்பட்டனவா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கும், அதன் விளைவாக ஏற்படும் கணக்கியல் விளைவுகளைத் தீர்மானிப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட தரவு மற்றும் கணக்கீடுகளின் நியாயத் தன்மையை மதிப்பீடு செய்தல். • அத்தகைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானத்தின் நியாயத் தன்மையை மதிப்பிடு செய்தல். • குறிப்புகள் 3.B, 3.C.vi, 8 மற்றும் 18 என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, தொடர்புடைய நிதிக் கூற்று வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மையை நான் வெளிப்படுத்தியுள்ளேன்.

1.4 வங்கியின் 2020 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

வங்கியின் 2020 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள், அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், நிதிக் கூற்றுக்களையும், என்னுடைய கணக்காய்வு அறிக்கையையும் அது உள்ளடக்காது. இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் அவ்விடயங்கள் உள்ளடக்கப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையது.

கணக்காய்வாளரின் அறிக்கை

நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய அபிப்பிராயம், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன், அவற்றின் மீது எந்தவிதமான உத்தரவாத முடிவுகளையும் நான் வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னுடைய கணக்காய்வுடன் தொடர்புபடுகையில், மேலே கூறப்பட்ட ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுகின்ற போது, அவற்றை வாசிப்பதற்கு நான் பொறுப்புடையவனாகின்றேன். மற்றும் அவ்வாறு வாசிக்கப்படும் போது, அத்தகைய ஏனைய தகவல், நிதிக் கூற்றுக்களுடன் பொருளளவில் முரண்படுகின்தா என்பதை அல்லது கணக்காய்வு தொடர்பான என்னுடைய அறிவு அல்லது வேறு வகையில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை நான் கருத்திற் கொள்வேன்.

2020 ஆம் ஆண்டுக்கான கம்பனியின் வருடாந்த அறிக்கையை நான் வாசிக்கையில், முக்கியமான பிறள் கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் முடிவு செய்வேனாயின், அவற்றைச் சீர்திருத்துவதற்காக, இவ்விடயங்கள் பற்றி ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு அறிக்கையிடுமாறு நான் தேவைப்படுத்தப்பட்டுள்ளேன்.

முக்கியமான மேலதிக திருத்தப்படாத பிறள் கூற்றுக்கள் இருக்குமாயின், அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கையில் உள்ளடக்கப்படுவதுடன், உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்குப் பொறுப்பானவர்களின் பொறுப்பு

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் தீர்மானித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அவை மோசடி அல்லது பிழை காரணமாக முக்கியமான பிறழ் கூற்றுக்களில் இருந்து தீவிர்க்கப்பட்டுள்ளது என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், முகாமைத்துவம், வங்கியின் தொடர்ந்து செல்லும் தகைமை, வெளிப்படுத்தல், ஏற்புடைய இடங்களில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு என்பவற்றை மதிப்பிடுவதற்குப் பொறுப்புடையதாகும். மேலும், முகாமைத்துவம், வங்கியைக் கலைப்பதற்கோ அல்லது செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கோ அல்லது மேற்கொள்வதைத் தவிர வேறு வழிகள் இல்லை போன்ற சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய வேளைகளில் கணக்கியல் நோக்கங்களுக்காக தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்த வேண்டும்.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள், வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்யும் கடப்பாட்டை உடையவர்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(1) க்கு அமைவாக வங்கியின் வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு வங்கி அதன் வருமான, செலவு, சொத்துக்கள் மற்றும் அனைத்துப் பொறுப்புக்கள் என்பனவற்றுடன் தொடர்புடைய முறையான புத்தகங்களையும், பதிவுகளையும் பேண வேண்டும் எனத் தேவைப்படுத்துகிறது.

1.6 நிதிக் கூற்றுக்களைக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக எழுகின்ற முக்கியமான பிறழ் கூற்றில் இருந்து நிதிக் கூற்றுக்கள் முழுமையாக தவிர்க்கப்பட்டுள்ளதா என்பது பற்றி நியாயமான உத்தரவாதம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதும் அத்துடன், எனது கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குவதும் எனது இலக்காகும். நியாயமான உத்தரவாதம் என்பது, உயர்மட்ட அடிப்படையிலான உத்தரவாதமாக அமையும். எனினும், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நடத்தப்பட்ட கணக்காய்வு, எப்போதும் ஒரு முக்கியமான பிறழ் கூற்றைக் கண்டுபிடிக்கும் என்ற உத்த்தரவாதத்தை வழங்க முடியாது. மோசடி அல்லது தவறின் தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்குக் காரணமாக, அளவு ரீதியான, தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார ரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என நியாயமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும், துல்லியமாகவும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய முக்கியமான பிறழ் கூற்று தொடர்பான இடர்களை அடையாளங் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், அத்தகைய இடர்களுக்குப் பதிலளிக்கின்ற கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்தலும், நிறைவேற்றுதலும் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைந்த போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடி காரணமாக, எழுகின்ற ஒரு முக்கியமான பிறழ்கூற்றைக் கண்டறியாமல் விடுவது, தவறு காரணமாக எழுகின்ற பிறழ் கூற்றைவிட அபாயகரமானதாகும். ஏனெனில், மோசடி, கூட்டுச் சதி, மோசடி வேண்டுமென்றே மேற்கொள்ளும் செய்யாமைகள், பிழையான பிரதிநிதித்துவங்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக அமையலாம்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் தயாரிப்பதற்காக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முன்மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல்.

- பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலும், கணக்கியல் தொடர்பாக நிறுவன தொடர்ச்சி அடிப்படையை முகாமைத்துவம் பயன்படுத்தியதன் பொருத்தப்பாட்டின் மீது வங்கியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு மீது குறிப்பிடத்தக்களவு சந்தேகம் எழக்கூடிய நிலைமைகள் அல்லது அத்தகைய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய தொடர்புபட்ட சம்பவங்களில் ஒரு முக்கியமான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறதா என்பது பற்றி முடிவு செய்தல். முக்கியமான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமற்றவையாக இருப்பின், என்னுடைய அபிப்பிராயத்தை மெருகூட்ட வேண்டும். என்னுடைய முடிவுகள் எனது கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் அல்லது நிலைமைகள், நிறுவன தொடர்ச்சிக் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் வங்கியைப் பாதிக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பிடல், அத்துடன், நிதிக் கூற்றுக்கள் நியாயமான சமர்ப்பணத்தை அடையக்கூடிய வகையில் அடிப்படையான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றதா என்பதைத் தீர்மானித்தல்.

என்னுடைய கணக்காய்வின் போது, என்னால் கண்டறியப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஏதேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக, ஏனைய விடயங்களுடன் முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்களை ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(a) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, நான் கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும், விளக்கங்களையும் பெற்றுக் கொண்டதுடன், எனது கணக்காய்வில் இருந்து தோன்றுகின்ற வகையில் வங்கியினால் முறையான கணக்கியல் பதிவுகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்படி, சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்படி, கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அனைத்துப் பரிந்துரைகளும் அடங்கியுள்ளன.


2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், முக்கியமான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை:

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது வங்கியின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்ட வேறுதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளது என வெளிப்படுத்துதல்,

